CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருவாவடுதுறை ஆதீன வரலாறு



திருவாவடுதுறையிலே பசுபூ
சைபண்ணுகிறது யிடம்

ச. கிருஷ்ணமூர்த்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Thiruvāvaduthurai Adheena Varalāru
Subject	:	History of Thiruvāvaduthurai Mutt.
Author	:	S. Krishnamoorthy, M.A., (Tamil), M.A., (History), B.Ed.,Dip. in. Epgy. and Arch.
Publisher	:	A. Unnamalai
Copyright	:	Unnamalai Pathippagam, 12/1, Pudupet North Street, Chidambaram - 608 001. Cuddalore Dist.
Edition	:	First
Date of Publication	:	December - 1999
Proof Reader	:	K. Masilamani., B.Pharm
Pages	:	222 + xviii = 240
Size of the book	:	1/8 Crown
Paper Used	:	10.5 Seshasayee
Printing type used	:	Offset Printing
Price	:	Rs. 50/-
Printed at	:	Sabanayagam Printers 73-A, East Car Street, Chidambaram - 608 001. ✆ : 23020, 23040

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காணிக்கை

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

- திருக்குறள்.

வறுமையின் கொடுமையால் பள்ளிக் கல்வியுடன் வேலைக்குச் செல்ல இருந்த என்னை, உயர்கல்வி வரை படிக்கவைத்து ஆளாக்கிய என் தாய் பூமாது அம்மாளின் திருவடிகளில் இந்நூலைக் காணிக்கை ஆக்குகிறேன்.

ச. கிருஷ்ணமூர்த்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருளடக்கம்

		பக்க எண்
	பதிப்புரை	v
	வாழ்த்துரைகள்	vii
	என்னுரை	x
1.	நமசிவாய தேசிகர்	1
2.	மறைஞான தேசிகர்	12
3.	அம்பலவாண தேசிகர்	14
4.	உருத்திரகோடி தேசிகர்	16
5.	வேலப்ப தேசிகர்	24
6.	முற்குமாரசாமி தேசிகர்	26
7.	பிற்குமாரசாமி தேசிகர்	27
8.	மாசிலாமணி தேசிகர்	29
9.	இராமலிங்க தேசிகர்	33
10.	வேலப்ப தேசிகர்	37
11.	பின்வேலப்ப தேசிகர்	43
12.	திருச்சிற்றம்பல தேசிகர்	51
13.	அம்பலவாண தேசிகர்	87
14.	வேளூர் சுப்பிரமணிய தேசிகர்	97
15.	அம்பலவாண தேசிகர்	110
16.	மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்	114
17.	அம்பலவாண தேசிகர்	140
18.	சுப்பிரமணிய தேசிகர்	143
19.	வைத்தியலிங்க தேசிகர்	144
20.	அம்பலவாண தேசிகர்	152
21.	சுப்பிரமணிய தேசிகர்	157
22.	அம்பலவாண தேசிகர்	162
23.	சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர்	166
	சொல்லடைவு	216

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதிப்புரை

தமிழகத்தில் உள்ள தொன்மையான மடங்களில் ஒன்றான திருவாவடுதுறை ஆதீனம், மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் நெடுஞ்சாலையில் திருவாலங்காடு அருகேயுள்ள திருவாவடுதுறையில் அமைந்துள்ளது. இந்த ஆதீனம் மெய்கண்டார் சந்தான மரபில் வந்த ஆதீனமாகக் கருதப்படுகிறது.

நமசிவாய தேசிகர் திருவாவடுதுறை மடத்தின் முதல் தேசிகராவார். தற்போதுள்ள சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் இருபத்து மூன்றாவது தேசிகர் ஆவார். குருபரம்பரை விளக்கம் என்ற நூலும் வேறு சில நூல்களும் ஆதீனத்தின் வரலாற்றை இலக்கியம் மற்றும் செவிவழிச் செய்திகளின் அடிப்படையில் விளக்கியுள்ளன. கல்வெட்டு, செப்பேடு, இலக்கிய அடிப்படையில் திருவாவடுதுறை ஆதீனத்தின் வரலாறு தற்போது வெளியிடப்படுகிறது. 'விக்கிரம சிங்கபுர உலா' என்ற எமது நிறுவன வெளியீட்டில் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகரின் வரலாறு கோடிட்டுக் காட்டப்பட்டது. இந்த நூலில் அவருடைய வரலாறு விரிவாக எழுதப் பட்டுள்ளது.

'தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்'

என்ற இளங்கோவடிகளின் கருத்திற்கேற்ப இறைவனை வழி படுவதுடன் இறைவனைச் சதா நினைத்துக்கொண்டிருக்கும் துறவியரையும் நாம் போற்ற வேண்டும். இரமண மகரிஷி, காஞ்சி சங்கராச்சாரியார், சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் போன்றவர்கள் மக்களுக்குக் கண்கண்ட தெய்வங்களாக விளங்கி வந்துள்ளார்கள். தற்போதும் பல்வேறு ஆதீனத் தலைவர்கள் மக்களால் போற்றப்பட்டு வருகின்றார்கள். அவர்களுள் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகரும் ஒருவர் ஆவார். எளிமையின் சின்னமாக விளங்கும் இவர் குடத்தில் இட்ட விளக்காக இன்றிக் குன்றிலிட்ட விளக்காகத் திகழ வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒவ்வொரு ஆதீனத்திலும் ஏதாவதொரு பிரச்சனை எப்போதாவது வருவதுண்டு. பின் பிரச்சனை முடிவதுண்டு. எனவே இதை வைத்துக்கொண்டு ஆதீனத்தைக் குறை சொல்லி விடக் கூடாது.

அம்மன் பசு வடிவில் இறைவனை வழிபட்ட மேலட்டை ஓவியமும் மயில் வடிவில் வழிபட்ட பின்னட்டை ஓவியமும் சிதம்பரம் சிவகாமி அம்மன் கோயில் விதானத்தில் ஓவியங்களாக உள்ளன. காலம் 18ஆம் நூற்றாண்டு. நிழற்படம் எடுப்பதில் உதவிய சிதம்பரம் டாக்டர் க. நடராசன் அவர்களுக்கு நன்றி. ஆவணங்களின் அடிப்படையில் இந்நூல் வெளிவரு வதற்குப் பல வகையிலும் உதவி புரிந்ததுடன் வாழ்த்துரையும் வழங்கிய திருவாவடுதுறை ஆதீன குருமகானை மனம், மெய், மொழிகளால் வணங்குகிறோம்.

வாழ்த்துரை வேண்டி நின்ற போது உடனே வழங்கிய திருப்பனந்தாள் காசிமடத்தின் எஜமான் சுவாமிகள் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல் வெளிவர பாடுபட்ட அனைவருக்கும் அன்பு கலந்த நன்றியினைக் கூறிக்கொள்கிறோம். தமிழ்மக்கள் இந்த நூலை வாங்கிப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில் வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
திருச்சிற்றம்பலம்

ஆதீன கர்த்தர் அவர்கள்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை - 609 803
(நாகை மாவட்டம்)

நாள் : 25.11.99

வாழ்த்துரை

வரலாற்றுச் செய்திகளை முறையாக ஆராய்ந்து தெரிவிப்பது சிறந்த பணியாகும். இத்துறையில், பல ஆண்டுகளாக அரிய பணி புரிந்துவரும் நமது ஆசிக்குரிய தொல்லியல் அலுவலர் சிதம்பரம் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, ஓலைச்சுவடி, பட்டயம், கல்வெட்டு, சிற்பம், ஓவியம், கட்டிடம் ஆகியவற்றை வரலாற்றுக் கண்ணொடு ஆய்ந்து கண்ட முடிவுகளைக் கட்டுரைகளாகவும், நூல்களாகவும் வெளியிட்டு வருகின்றவர். இவரது கட்டுரைகள் பல நமது ஆதீனத்தின் மெய்கண்டார் இதழ்களிலும் பிரசுரமாகி வருகின்றன.

இவர் இயற்றிய திருவோத்தூர் வரலாறு (செய்யாறு) என்ற நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான விருதினைப் பெற்றுத் தந்துள்ளது. ஆதீன விழாவிலும் இவருடைய ஆய்வு நூலொன்று வெளியிடப் பெற்றுச் சிறப்பிக்கப் பெற்றது. பன்னிரண்டு நூல்களுக்கும் மேல் இயற்றிய அன்பர் சிவபக்தி, குருபக்தியாற் சிறந்து யாவரிடத்தும் இனிது பழகும் நல் இயல்பினர். பழமையும் வரலாற்றுச் சிறப்புமுடைய நமது ஆதீனக் கிளைமடங் களைப் பற்றிய ஆய்வு உண்மைகளைத் தாம் இயற்றிய நூல்களில் இடம்பெறச் செய்துள்ளமை இவர்க்கு ஆதீனத்தில் இருக்கும் பக்தியைப் புலப்படுத்துகின்றது.

நமது ஆதீன வரலாற்றைச் செப்பேடுகள், கல்வெட்டுகள் துணைகொண்டு வரலாற்றுச் சுவையோடு யாவரும் இனிது அறிந்து மகிழும் வண்ணம் இந்நூலைப் படைத்துள்ளார். பாராட்டு கின்றோம். இவருடைய பணிகள் தொடர்ந்து சிறந்து விளங்கவும், நலன்கள் நிறைந்த நீடுவாழ்வில் இவர் மகிழவும் நம் ஆன்மார்த்த மூர்த்தி அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவ சிவ

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி
முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
அதிபர், காசித்திருமடம்

திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)

நாள் : 4.12.99

வாழ்த்துரை

திருவாவடுதுறை ஆதீன வரலாற்றை எழுதியுள்ள அன்பர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, 1979ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத் தொல்லியல் அலுவலராகப் பணியாற்றிய காலத்தில் நம் மடத்திற்கு வந்து ஓலைச் சுவடிகள் ஆய்வு செய்து தம்பிரான்களின் உருவங்களை மர அலமாரியில் கண்டறிந்துள்ளார். முன்னாள் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமியுடன் நம் மடத்திற்குப் பல முறை வந்த, அன்பர் ச. கிருஷ்ணமூர்த்தி, பல்வேறு மடங்களை ஆய்வு செய்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தின் செப்பேடுகள் மற்றும் கல்வெட்டுகள் தொடர் பாக மெய்கண்டார் இதழ்களில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருகின்றார்கள்.

தமிழ்வளர்ச்சித்துறையின் சிறந்த நூலுக்கான பரிசினை இவர் பெற்றுள்ளார். இவர் எழுதிய சிவகீதையும் சித்தாந்த மரபும் என்ற நூல் 1999 ஜனவரியில் நமசிவாய தேசிகர் மகரத்தலைநாள் விழாவின்போது ஆதீனத்தில் வெளியிடப் பட்டது. திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளை மடங்கள் பலவற்றிற்கும் சென்று ஆய்வு செய்துள்ள ஆசிரியர் இதுவரை 12 புத்தகங்கள் எழுதியுள்ளார். இவருடைய திருக்குறள் பழைய உரையைத் தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தற்போது திருவாவடுதுறை ஆதீன வரலாற்றை எழுதியுள்ளார். 'என்னுரை' என்ற பகுதியில் தாம் சென்றிருந்த மடங்களைக் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டுகள், செப்பேடுகள் அடிப்படையில் இந்நூலினை எழுதியுள்ளார். தற்போதுள்ள துறைசை ஆதீனத்தலைவரின் வரலாற்றை உணர்ச்சிப் பூர்வமாக எழுதியுள்ளார். திருவாவடுமுறை ஆதீனத்தலைவர் மற்ற ஆதீனங்கள் குறித்துக் குறிப்பிட்ட கருத்துக்களையும் நூலாசிரியர் இந்நூலில் எழுதியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானத்தின் நல்லாசியுடன் வெளியிடுவது சாலச்சிறப்புடையது. நூலாசிரியருக்கும் வெளியீட்டாளர் உண்ணாமலை பதிப்பகத்திற்கும் இந்நூலைப் பயில்பவருக்கும் எல்லா நலன்களும், வளங்களும் பெருகச் செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

– சிவ சிவ.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்னுரை

தமிழகத்தில் உள்ள சைவ மடங்களில் திருவாவடுதுறை ஆதீனம் தொன்மையான மடம்மட்டுமன்று; தமிழ் வளர்க்கும்; மடமுமாகும். ஏனைய மடங்களைக் காட்டிலும் மிகுதியான கிளைமடங்களையும் நிலங்களையும் கொண்டுள்ள திருவாவடுதுறை ஆதீனம், கைலாயப் பரம்பரையில் வந்த ஆதீனமாகக் கருதப்படுகிறது. குருபரம்பரை விளக்கம் என்ற நூலில் இலக்கியம் மற்றும் செவிவழிச் செய்திகளின் அடிப்படையில் திருவாவடுதுறை ஆதீனத்தின் வரலாறு கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு, செப்பேடுகளின் அடிப்படையில் இதுவரை இம்மடத்தின் வரலாற்றினை யாரும் எழுதவில்லை. அடியேன் இப்பணியைத் தொடங்கி வைக்கிறேன். இப்பணியைச் செய்ய எனக்கும் ஓரளவு தகுதி இருப்பதாகவே நம்புகிறேன்.

தஞ்சை மாவட்டத் தொல்லியல் அலுவலராக 1978 இறுதியில் பொறுப்பேற்றுக் கொண்ட நான் 1979 தொடக்கத்தில் மேல்சித்தாமூர் ஜினகாஞ்சிமடம் என்ற சமணர்களின் தலைமை மடத்திற்குச் சென்று ஒருவாரம் தங்கியிருந்து ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்தேன். மடத்தின் தலைவர் நல்ல ஒத்துழைப்பு தந்தார். என் தந்தையாரின் பூர்வீக ஊருக்கு அருகில் உள்ள ஊரில் மடாதிபதி பிறந்தவர் என்பதாலும் எனக்கு அவரிடம் ஈடுபாடு ஏற்பட்டது. தமிழ், வடமொழி, கன்னடம், ஆங்கிலம் எனப் பன்மொழி வித்தகராகவும் சுவடி படிப்பதில் புலமையுடையவராகவும் இருந்த அவர் 60 வயதிற்கு மேற்பட்டவராக அப்போது இருந்ததால் 30 வயது கொண்டிருந்த என்னை 'வாப்பா போப்பா' என்றே செல்லமாக அ்ஜழத்தார். பெயரிட்டும் அழைத்தார். இரண்டாம் முறை மேல்சித்தாமூர் மடம் மட்டுமில்லாமல் தென்னார்க்காட்டில் உள்ள பல சமண மடங்களுக்கும் சென்று ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்துள்ளேன். அரசிற்காகப் பல ஓலைச்சுவடிகளை நன்கொடையாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாங்கியுள்ளேன். மேல்சித்தாமூர் சமண மடத்தின் தலைவர் முத்தியடைந்தபின் உப்பு வேலூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மடத்தின் தலைவர் ஆனார். மூன்றாவது முறையாக நிழற்படக்காரர் ஒருவருடன் சென்று இங்குள்ள கல்வெட்டு களை ஆய்வு செய்துள்ளேன். ஊர் மக்களுடன் இளைஞரான மடாதிபதி, நாங்கள் சென்ற அன்று வாய்ச்சண்டையில் ஈடுபட்டிருந்தார். இருப்பினும் என் ஆய்வுக்கு உதவி புரிந்தார். மடத்தின் தலைவர் குளிக்கும் இடத்தில் உள்ள ஒரு பலகைக்கல்லில் சைவக்கோயில் குறித்த கல்வெட்டிருந்தது பார்க்கப்பட்டது. மீண்டும் ஒரு முறை இம்மடத்திற்குச் சென்றபோது வயதில் மூத்த வேறொருவர் மடாதிபதியாக இருந்தார். அவரே தற்போதும் இருக்கிறார். இவரும் என்னுடைய ஆய்வுக்கு நல்லாதரவு நல்கினார். எனினும் முதலில் நான் சந்தித்த மடாதிபதி போன்று இவர்களிடம் எனக்கு ஈடுபாடு ஏற்படவில்லை.

1979ஆம் ஆண்டில் கும்பகோணம் சங்கர மடத்தில் இருந்த 2000-க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளையும் அப்போது நூலகராக இருந்த வடமொழியறிஞர் இராம மூர்த்தி என்பவரின் துணையுடன் பட்டியலிட்டேன். பத்துச் சுவடிகளே தமிழ்ச் சுவடிகளாக இருந்தன. 'சீதாலட்சுமி ஞான உலா' என்ற சுவடியை மட்டும் ஆய்வுக்காகப் பெற்றுச் சென்று நகல் செய்த பின் மீண்டும் வழங்கிவிட்டேன். இம்மடத்திற்கும் பலமுறை வந்துள்ளேன். மறைந்த காஞ்சிப் பெரியவரையும் காஞ்சியில் இரண்டுமுறை தரிசித்திருக் கிறேன். தற்போதுள்ள புதுப்பெரியவரையும் இளைய வரையும் சந்தித்து ஸ்ரீ சங்கர மடத்தில் 57ஆவது பட்டத்தில் இருந்த பரமசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள் வடமொழியில் எழுதிய 'சிவகீதாதாத்பரிய பிரகாசிகை' என்ற நூல் அவர் காலத்திலேயே அவருடைய சீடர் தியாகராஜ சாஸ்திரிகளால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட விவரத்தையும் கூறி அந்தக் கீதையை ஓலைச் சுவடியிலிருந்து நகல் செய்து வைத்திருப் பதையும் குறிப்பிட்டேன். இரு சுவாமிகளும் ஆசிர்வாதம் செய்தார்கள். 1998இல் இந்நூல் அச்சிடப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சங்கரமடத்தில் உள்ள செப்பேடுகள் பன்மொழிகளில் கூடியவை. ஏற்கனவே ஆய்வாளர்களால் படிக்கப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன. காஞ்சி மடத்தின் வரலாறு பலராலும் எழுதப்பட்டுள்ளன. ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பாரதநாட்டுக்கே ஆன்மீக குருவாக இருந்து வருகிறார்.

தமிழ்ப்புலவர் வகுப்புகளை நன்முறையில் தொடங்கிய மடம் திருப்பனந்தாள் காசிமடமாகும். இங்குப் பயின்ற புலவர் ஈரோடு இராசு, காலம் சென்ற பேராசிரியர் வேங்கடராமையா போன்றோர் இம்மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். 1999இல் புலவர் இராசு, இம்மடத்தில் உள்ள செப்பேடுகள் குறித்து நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இந்தத் திருப்பனந்தாள் காசி மடத்திற்கு 1980இல் நான் ஆய்வுக்காகச் சென்று, ஓலைச் சுவடிகள் வைத்திருந்த மர அலமாரியில் மடத்தின் தம்பிரான்களின் உருவங்கள் பெயர்களுடன் வண்ண ஓவியங்களாக இருப் பதைக் கண்டறிந்து வெளிப்படுத்தியதுடன் சுவடிகளையும் ஆய்வு செய்துள்ளேன். அப்போது எம்துறை இயக்குநராக இருந்த டாக்டர். இரா. நாகசாமியை ஒருநாள் மடத்திற்கு அழைத்துச் சென்று ஓவியங்களைக் காட்டினேன். அச்சமயம் கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற கங்கை கொண்ட சோழன் விழாவில் காசி மடாதிபதி முத்துக்குமாரத் தம்பிரானும் பங்கு கொண்டார். அதன் பிறகு சிலமுறை காசி மடத்திற்குச் சென்றுள்ளேன். சுவாமிகளிடம் என் கண்டு பிடிப்புகளைக் கூறியதுடன் நான் எழுதிய நூல்களையும் வழங்கியுள்ளேன்.

மிகப்பெரிய சைவ மடங்களில் ஒன்றான தருமபுரம் ஆதீனத்திற்குச் சுவடிகள் ஆய்வுக்காகச் சிலமுறை சென்றுள்ளேன். சுவாமிகள் சிதம்பரம் வருகை புரியும் போதெல்லாம் சந்தித்து ஆசிர்வாதம் பெற்று வருகிறேன். என்னுடைய 'திருவோத்தூர் வரலாறு' என்ற நூல் குறித்தே ஒருமுறை நீண்டநேரம் சுவாமிகள் வினாக்கள் தொடுத்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என் புலமையைச் சோதித்ததுண்டு. எம்துறை அலுவலர்கள் மிகுதியாகப் பங்கேற்கும் வகையில் சைவ சித்தாந்த கருத்தரங்கு ஒன்றையும் தருமபுர மடத்திலேயே சுவாமிகள் நடத்தியுள்ளார். அக்கருத்தரங்கிலும் அடியேன் பங்கு கொண்டுள்ளேன். அடியார்களை அல்லது அன்பர்களை நீண்ட நேரம் வெளியில் காக்க வைத்தாலும் சந்திக்கும்போது நீண்ட நேரம் உரையாடும் வழக்கம் கொண்ட சுவாமிகள் பொதுக்கூட்டங்களிலும் மணிக்கணக்காகப் பேசுவார்கள். மேற்கண்ட சுவாமிகளின் அருளாசி அடியேனுக்குக் கிட்டி யுள்ளது.

விருத்தாசலம் குமாரதேவர் மடத்திற்குப் பலமுறை சென்று இங்குள்ள ஓலைச்சுவடிகளையும் செப்பேடு ஒன்றை யும் கல்வெட்டுகளையும் ஆய்வு செய்துள்ள அடியேன் மீது, மடத்தின் தலைவர் சீர்வளர் சீர் கல்யாண சுந்தர தேசிகர் அவர்கள் மிகுந்த அன்பு கொண்டுள்ளார். இங்குள்ள செப்பேடு குறித்து 'வரலாறு' என்ற அரையாண்டிதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன்.

சூரியனார்கோவில் ஆதீனத்திற்கும் அடியேன் சென்று சுவடிகளை ஆய்வு செய்ததுடன் அரசிற்காக 1979இல் சுவடிகளை நன்கொடையாகப் பெற்றுச் சென்றுள்ளேன். தற்போதுள்ள மடாதிபதியும் என்மீது அன்பு செலுத்தி வருகிறார்.

சிதம்பரம் மௌனகுருசுவாமிகள் மடத்திற்கு அடிக் கடிச் சென்று வருகிறேன். மிக எளிமையாக வாழ்ந்து வரும் சுவாமிகள் முறையாகத் தமிழ் பயின்றவர் என்பதால் மிகச் சிறப்பாக உரையாற்றுவார். இம்மடத்தில் உள்ள சுவடி களையும் ஆய்ந்துள்ளேன். வீரசைவம் தொடர்பாகப் பல விவரங்களைச் சுவாமிகள் குறிப்பிடுவார்கள். காய்கறித் தோட்டம் வைப்பதில் ஈடுபாடு கொண்டுள்ள இவரைக் 'காய்கறித் தோட்டச் சுவாமிகள்' என்றே என் குடும்பம் அழைத்து வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேலே குறிப்பிடப்பட்ட மடங்கள் தவிர சிறிய மடங்கள் சிலவற்றிற்கும் அடியேன் சென்றிருந்தாலும் மதுரை திருஞானசம்பந்தர் மடத்திற்கு மட்டும் சென்ற தில்லை. எனினும் கல்லிடைக்குறிச்சியில் இம்மடத்தின் கிளைமடம் முற்காலத்தில் இருந்ததை ஒரு கட்டுரையாக என்னுடைய 'கல்லிடைக் குறிச்சிக் கலைக்கோயில்கள்' என்ற நூலில் எழுதியுள்ளேன். ஆதீனங்கள் மட்டுமின்றி ஆன்மீகப் பெரியவர்கள் பலரையும் சந்தித்து வழிபட்டுள்ளேன்.

பல்வேறு மடங்கள் குறித்து ஆய்வு செய்துள்ள அடியேன் திருவாவடுதுறை ஆதீனம் குறித்தும் ஆய்வு செய்துள்ளேன். தொடக்கத்தில் ஆதீனத்தில் உள்ள ஓலைச் சுவடிகளை ஆய்வு செய்த அடியேன் மடத்துக்குச் சொந்த மான பல்வேறு கோயில்களையும் கிளைமடங்களையும் பின்னர் ஆய்வு செய்துள்ளேன். மடத்தில் உள்ள செப்பேடு கள் தொடர்பாகப் பல கட்டுரைகளை எழுதியுள்ளேன். திருவாவடுதுறை ஆதீனத்தில் தமிழ்க்கல்வி பயின்றவரும் கும்பகோணம் கலைக்கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவருமான தியாகராச செட்டியார், அன்பர் ஒருவரின் விருப்பத்திற்காக வேண்டி திருவாசகத்திற்கு உரை எழுத, கடைசிவரை மறுத்தே வந்துள்ளார். தம்மால் திருவாசகத்திற்கு இழுக்கு வந்து விடக்கூடாது என்று அவர் கருதி வந்துள்ளார். ஆயின் அவர் உரை எழுதி யிருந்தால் பலருக்கும் பயன்பட்டிருக்கும். திருவாவடுதுறை ஆதீனத்தின் வரலாற்றினை எழுத முதலில் எனக்கும் தயக்க மாகவே இருந்தது. மடத்தின் சம்பிரதாயங்களுக்கு மாறாக எழுதிவிட்டால் என்ற எண்ணமே காரணமாகும். திருவா வடுதுறை ஆதீனம் குறித்து எம்.பில். போன்ற ஆய்வுகள் மேற்கொண்ட சிலர் கல்வெட்டு மற்றும் செப்பேடுகள் இன்றி மேற்கொண்டனர். எனவே அவைகளில் பயிற்சி உடைய அடியேன் வரலாறு எழுதுவது பொருத்தம் என்று சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் குறிப்பிட்டதால் கடந்த இரண்டாண்டுகளாக ஆய்வு செய்து பின் எழுதிமுடித்தேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுவாமிகள் ஒருமுறை படித்து முடித்த பின்னரே கையெழுத்துப் பிரதியினை அச்சகத்திற்கு வழங்கினேன்.

திருப்பனந்தாள் காசிமடத்தின் வரலாறு தமிழ், இந்தி, ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் தனித் தனி நூல்களாக வெளி வந்துள்ளன. திருவாவடுதுறை ஆதீனத்தின் வரலாறும் மேற்கண்டவாறு மூன்று மொழிகளிலும் வெளிவர வேண்டும் என்பது அடியேன் விருப்பமாகும். முதலில் தமிழில் வருகிறது. இறை அருள் கூடின் பிறமொழிகளில் பின்னர் இந்நூல் வெளிவரும்.

திருவாவடுதுறை ஆதீனத்தைத் தமிழ் வளர்க்கும் ஆதீனமாகக் குறிப்பிடலாம். ஆம். தமிழ் ஆதீனத்தை வளர்த் துள்ளது. தமிழை ஆதீனமும் வளர்த்து வருகிறது. சங்க நூற்களை வெளியிட்ட உ.வே. சாமிநாதர் இங்கே பயின்றவர். அதிகமான நூல்களைப் பாடிய திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆதீனத்தின் புலவராவார். திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட தமிழ் நூல்கள் எண்ணற்றவையாகும். இயற்றமிழ்ப் புலவர்களையும் இசைத்தமிழ் வல்லுநர் களையும் இம்மடம் ஆதரித்து வந்துள்ளது. இம்மடத்தின் புலவர் என்றோ கலைஞர் என்றோ கூறும்போது பெருமதிப்பு கிட்டுகிறது.

சாதி சமய வேறுபாடின்றிச் சைவசித்தாந்தத்தை யார் வேண்டுமானாலும் அறிந்து கொள்ளலாம் என்று கூறி 1991இல் பயிற்சிமையம் ஒன்றைத் திருவிடை மருதூரில் திருவாவடுதுறை ஆதீன குருமகான் தொடங்கி வைத்தார். மூன்றாண்டுப் பயிற்சியாக இது விளங்குகிறது. இப்பயிற்சி யில் 4943 பேர் இதுவரை பங்கு கொண்டுள்ளனர். தற்போது 36 கிளை மையங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகரால் தமிழும் வளர்கிறது. சைவ சமயமும் எழுச்சி பெறுகிறது.

இருபத்து மூன்று தேசிகர்களின் வரலாற்றில் ஒருசிலர் வரலாறு மிகவும் சுருங்கியும் ஒருசிலர் வரலாறு விரிவாகவும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எழுதியுள்ளேன். சீர்வளர்சீர் சிவப்பிரகாசர் வரலாறு சமகால வரலாறு என்பதால் மிக விரிவாகவே எழுதியுள்ளேன். காசி கண்ணப்பசாமி மடம், மதுரை தானகோனேரியப்பன் மடம், பாபநாசம் ஈசானமடம், சிவந்திபுரமடம், கல்லிடைக் குறிச்சித் தளிகைமடம், நெல்லை ஈசான மடம், சுசீந்திர மடம், சங்கரங்கோயில்மடம், முரப்பநாடுமடம், திருப்புடைமருதூர், திருவீழிமிழலை கோயில்கள் எனப் பல கிளை மடங்களையும் ஆதீனக் கோயில்களையும் மெய்கண்டார் இதழ்களில் அடியேன் கட்டுரைகள் எழுதி யிருப்பதால் இந்நூலில் கிளை மடங்கள் குறித்து ஓரிரு செய்திகள் மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். ஆதீனத்தின் கோயில்கள் பலவும் தலவரலாறு நூல்களாக வெளி வந்துள்ளன. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள் என்ற நூல் விரைவில் வெளிவர உள்ளதால் செப்பேடுகள் குறித்து இந்நூலில் விரிவாக ஆய்வு செய்யவில்லை. ஆதீனத்தின் மரபுக்கு விரோதமாக என்னையும் மீறி ஏதாவது குறிப் பிட்டிருந்தாலும், முக்கிய செய்திகள் விட்டிருந்தாலும் அன்பர்கள் சுட்டிக்காட்டினால் அடுத்த பதிப்பில் சரி செய்து கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர் ஆணைக் கிணங்க தேவையான குறிப்புகளையும் நூல்களையும், நிழற்படங்களையும் வழங்கிய மடத்தின் பணியாளர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கையெழுத்துப் பிரதியை நகல் செய்து தந்த என்னுடைய மகள். கி. மான்விழியைப் பாராட்டுகிறேன். இந்த நூலினை எழுத அனுமதித்த எம்துறை இயக்குநர். திரு. கு. தாமோதரன் அவர்களுக்கு என் நன்றி.

ஒன்றுக்கும் பற்றாத அடியேனுக்கு நல்வழிக் காட்டிய சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகரை மனம், மெய், மொழிகளால் வணங்குகிறேன். வாழ்க தமிழ். வளர்க சைவ சமயம்.

அன்பன்

ச. கிருஷ்ண மூர்த்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt



சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர்
23ஆவது குருமகா சந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை
ஆதீனம் குருமுதல்வர்
அருள்திரு நமசிவாய மூர்த்திகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நமசிவாய தேசிகர்

முதலாவது பட்டம் - பதினாறாம் நூற்றாண்டு

திருவாவடுதுறை ஆதீனம் என்றும் துறைசை ஆதீனம் என்றும் வழங்கப்படும் திருவாவடுதுறை மடம், மெய்கண்டார் மரபில் வந்த சைவ மடமாகும். இம்மடம் கி.பி. 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோற்று விக்கப்பட்டது. மடத்தின் முதல் தேசிகராகிய நமசிவாய தேசிகர் மயிலாடுதுறைக்கு மேற்கேயுள்ள மூவலூரில் பிறந்தவர் ஆவார். இவருடைய பிள்ளைத் திருநாமம் வைத்தியநாதன் என்பதாகும். சிறுவயது முதற்கொண்டே வைத்தீஸ்வரன் கோயில் இறைவனை இவர் வழிபட்டு வந்துள்ளார்.

சித்தர் சிவப்பிரகாசர்

மெய்கண்டார் சந்தான மரபில் வந்த சித்தர் சிவப்பிரகாசரால், வைத்தியநாதன் மூவலூரில் ஆட்கொள்ளப்பட்டார். சித்தர் சிவப்பிரகாசருடன் திருவாவடுதுறை சென்ற இவர் நமசிவாய தேசிகர் என்ற தீட்சா நாமத்தைப் பெற்றார். சித்தர் சிவப்பிரகாச தேசிகரின் குருவின் பெயர் 'அருள் நமசிவாயம்' என்பதாகும். குருவின் பெயரைச் சீடனுக்குச் சூட்டுவது ஆதீன வழக்கமாகும்.

திருவாவடுதுறையில் இருந்து சைவ அன்பர்களுக்கு உபதேசம் செய்துவருமாறு நமசிவாய தேசிகருக்கு ஆணையிட்டுவிட்டு சித்தர் சிவப்பிரகாசர் திருமறைக்காடு சென்று விட்டார். குருவின் கட்டளைக்கிணங்க நமசிவாய தேசிகர் சைவ பரிபாலனம் செய்து வந்தார். இவர் காலத்தைச் சேர்ந்த 'வீழி சிவாக்கிரக யோகிகள்' என்பவர் 'சைவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சந்நியாச பத்ததி' என்ற நூலினைக் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியுள்ளார். எனவே நமசிவாய தேசிகர் 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்துள்ளார். நமசிவாய தேசிகரைப் போற்றி எண்ணற்ற நூல்கள் வெளி வந்திருப்பினும் நமசிவாய தேசிகர் நூல் ஏதும் செய்ய வில்லை.

சிவாக்கிரகயோகிகளும் நமசிவாயரும்

சூரியனார் கோயில் மடத்தின் தலைவரான சிவாக்கிரக யோகிகள் ஒருமுறை நமசிவாய தேசிகரைக் கண்டு அளாவளாவத் திருவாவடுதுறை ஆதீனம் சென்றார். அப்போது ஆதீனத்தைச் சேர்ந்த சீடர் சிலர், சைவர் வீடொன்றில் பிச்சை ஏற்று நின்றனர். யோகிகளைக் கண்ட சீடர்கள், பிச்சைப் பாத்திரங்களை ஒரு திண்ணையில் பத்திரமாக வைத்துவிட்டு வந்து, பின் யோகிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். பிச்சைப் பாத்திரங்களுக்கு முதன்மை தந்தது போல் அவர்கள் செய்கை இருந்தது. சீடர்களின் பக்குவம் இன்மையை அறிந்த சிவாக்கிரக யோகிகள் நமசிவாயருடன் உரையாடும் போது, அடியார்களின் செய்கையைக் குறிப்பிட, நமசிவாய தேசிகர் பெரிதும் வருந்தினார். சிவாக்கிரக யோகிகளுக்குப் பதில் அவருடைய குருவான சிவக்கொழுந்து தேசிகருடனும் இச்சம்பவத்தைத் தொடர்பு படுத்துவதுண்டு. சிவாக்கிரக யோகிகள் தமிழிலும் வடமொழியிலும் பல நூல்கள் இயற்றி உள்ளார். முன்பே குறிப்பிடப்பட்டச் சைவ சந்நியாச பத்ததி என்ற வடமொழிநூல் அவைகளில் ஒன்றாகும். இந்நூலில், விஜயநகர வேந்தர் சதாசிவராயரும் (கி.பி. 1542-1570) தஞ்சாவூரில் ஆட்சி புரிந்த 'செவ்வப்பநாயக்கரும் குறிக்கப் பட்டுள்ளனர். எனவே இவர் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது உறுதி.

முத்துவாணிகம்

திருவாவடுதுறை ஆதீனத்தில் முத்துச் சலாபத்தைக் குறிப்பிடும் சக ஆண்டு 1461இல் கூடிய செப்பேடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருப்பெருந்துறை ஆவுடையார்க் கோயிலுக்கு முத்துக்கள் வழங்கியதைக் குறிப்பிடுகிறது. திருமலை நாயக்கரின் பெயர் இதில் வரினும் முன்செய்த தானம் மீண்டும் நிலை நாட்டப்பட்டது எனலாம். செப்பேட்டின் காலம் கி.பி.1539 என்பதால் நமசிவாய தேசிகர் காலத்தில் இச்செப்பேடு வெளியிடப்பட்டது போலும். திருப் பெருந்துறை ஆவுடையார்க் கோயிலுக்கு வாணாதிராயர்கள் மிகுதியான ஊர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். வாணாதிராயர் தானங்களைக் குறிப்பிடும் செப்பேடுகளில் சில செப்பேடுகள் நமசிவாய தேசிகர் காலத்தவையாக இருக்கலாம். மேற்கண்ட செப்பேடுகள் தற்போதும் ஆதீனத்தில் உள்ளன. ஆவுடையார்க் கோயிலும் ஆதீனத்தின் கோயில் என்பதைக் கூற வேண்டியதில்லை.

குடந்தைச் சிவப்பிரகாசர்

குடந்தையில் வாழ்ந்த சைவவேளாளர் ஒருவர் நமசிவாய தேசிகர்பால் வந்து அருளுபதேசம் பெற்று அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தார்.

அக்காலத்தில் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குப் பூசை முட்டுப்பாட்டை வேலூர் நாயக்கரின் உயரதிகாரி வேண்டு மென்றே செய்தார். அதாவது நடராசர் கோயிலுக்குரிய நிலங்களைக் கோவிந்தராசப் பெருமாளுக்கு வழங்கினார். தில்லைவாழ் அந்தணர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவரிடம் சென்று முறை யிட்டனர். தேசிகர் தம்முடைய அணுக்கத் தொண்டரான சிவப்பிரகாசரை வேலூருக்கு அனுப்பி வைத்தார்.

விஜயநகரத்து அரசருக்கு அமைச்சராகவும் பிரதி நிதியாகவும் இருந்து அரசு நிர்வாகத்தைச் செய்து வந்தவர் 'இலிங்கமநாயக்கர்' ஆவார். இவர் வீரசைவரும் ஆவார். இவரை இலிங்கண்ணா எனவும் அழைப்பர். நாயக்கரைக் கண்டு நமசிவாய தேசிகரின் எண்ணத்தைத் தெரிவிக்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விரும்பிய சிவப்பிரகாசர், வீரசைவர் கோலத்துடன் சென்று நாயக்கரிடம் வைணவ அதிகாரியின் அடாத செயலைக் குறிப்பிட்டார். இலிங்கமநாயக்கர் பழையபடி நடராசர் கோயிலுக்குரிய நிலங்களை வழங்கி, பூசை முட்டுப்பாட்டை நீக்கினார். சிவப்பிரகாசரை நாயக்கர் மிகவும் மதித்துள்ளார். திருவண்ணாமலையில் நாயக்கர் ஓர் வீரசைவமடம் ஏற்படுத்தி அதன் தலைவராக இவரை நியமித்துள்ளார். மேற்கண்ட செய்திகள் துறைசை குருபரம்பரை விளக்கத்தில் உள்ளன. இனி, வேலூர் வரலாறு என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

அச்சுததேவமகாராயர் கி.பி. 1539இல் தில்லை நடராசர் கோயிலில் கோவிந்தராசப் பெருமானைப் பிரதிட்டை செய்து வைகாநச சூத்திரத்தின்படி பூசை நடக்க நான்கு கிராமங்களை வரியிலியாக வழங்கினார். வேங்கடபதி தேவமகாராயர் ஆட்சியில் அவருடைய பிரதிநிதியாகச் செஞ்சியில் இருந்து ஆட்சி புரிந்த வைணவப் பற்றுடைய வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கர் என்பவர் கோயில் முதல் பிரகாரத்திலேயே கோவிந்தராசப் பெருமாளுக்குத் தனிக்கோயில் எடுக்க முனைந்தார். தில்லைவாழ் அந்தணர்கள் எதிர்த்துள்ளனர். கோபுரத்தின் மீதேறிக் கீழே விழுந்து இருபது பேர் தற்கொலை செய்தனர். இரக்கமில்லாத கிருஷ்ணப்ப நாயக்கன், தில்லைவாழ் அந்தணர்களைச் சுட்டுத்தள்ளும்படி உத்தரவிட்டான். இருவர் சுடப்பட்டு இறந்தனர். அப்போது சுற்றுப் பயணம் வந்திருந்த பாதிரியார் 'பிமெண்டோ' நாயக்கனின் அட்டூழியத்தைத் தன்னுடைய யாத்திரைக் குறிப்பில் குறித்துள்ளார். (The Aravidu Dynasty by Father Heras P. 533காண்க). நேரில் கண்ட பாதிரியார் முழுப் பெயர் Jesevit Father N. Pimenta என்பதாகும். காலம் கி.பி. 1597 ஆகும்.

விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாக வேலூரில் இருந்த வீரப்பநாயக்கர், சின்னபொம்முநாயக்க சகோதரர்களை யடுத்து இலிங்கம நாயக்கர் (1596-1604) ஆண்டு வந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பேரரசுக்கும் இவருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு நாளடைவில் கி.பி. 1601க்குப் பின் வேலூரைச் சுதந்திர நாடாக்க நாயக்கர் முனைந்தார். முதலாம் வேங்கடவன் என்ற விஜயநகர மன்னர் வேலூரின் மீது படையெடுத்து நாயக்கரை வென்றதுடன் அவரை 2.5.1604இல் ங்கைது செய்து சந்திரகிரி கோட்டைக்கு அனுப்பி வைத்தார். குரு பரம்பரை விளக்கம் குறிப்பிடும் இலிங்கம நாயக்கர் அல்லது இலிங்கண்ணா என்பவர் வேலூர் நாயக்க மன்னரே எனலாம்.

கி.பி. 1597இல் கிருஷ்ணப்ப நாயக்கர் தில்லைவாழ் அந்தணர்களுக்கு எதிராக இருந்துள்ளதால் 1597 அல்லது அதற்குப் பின்பே தில்லைவாழ் அந்தணர் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரிடம் முறையிட்டிருக்க வேண்டும். நடராசர் கோயில் பூசை முட்டுப்பாட்டுடன் கோயிலுக்குரிய இடமே வைணவக் கோயிலாக மாறியதால் தேசிகரும் இதில் பெரிதும் அக்கறைக் கொண்டிருக்கலாம். இயல்பாகவே வீரசைவத்தில் ஈடுபாடு கொண்ட இலிங்கம நாயக்கர் தில்லை சைவ வைணவச் சிக்கலில் சைவத்தின் சார்பாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். மேலும் சுதந்திரமாக நாட்டையாள முற்பட்ட நாயக்கர், விஜய நகரப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட செஞ்சிநாயக்கருக்கு எதிராகவும் இருந்திருக்க வேண்டும். செஞ்சிநாயக்கருடன் சேர்ந்து கொண்டு முதலாம் வேங்கடவனைப் பின்னர் இலிங்கம நாயக்கர் எதிர்த்துள்ளார் என்பதும் வரலாறாகும். வேலூர் நாயக்க மரபு வீழ்ந்ததால் தில்லை நடராசர் கோயிலில் வைணவரின் செல்வாக்கு தடைசெய்ய இயலாமல் போய்விட்டது எனலாம். பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் தில்லை வாழ் அந்தணர் கோபுரத்தில் ஏறிக் கோயிலுக்காகத் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டது போல் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் திருவரங்கம் ஜீயர்களில் சிலர் கோபுரத்தில் ஏறி அரங்கனுக்காக வேண்டி உயிர் விட்டுள்ளனர். இது திருவரங்க வரலாறு ஆகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தில்லை நடராசருக்காக வீரசைவராக மாறிய சிவப்பிரகாசர் பின்பு வீரசைவ ஆதீனத்தின் தலைவரானார். நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் கேட்டறிந்த நமசிவாய தேசிகர் இறைவன் சித்தப்படி யாவும் நடப்பதாக எண்ணி, சிவப்பிரகாசருக்குப் பதில் வேறோர் அடியவருக்கு ஆசாரியாபிஷேகம் செய்து மறைஞான தேசிகர் என்ற திருநாமமும் சூட்டி மகிழ்ந்தார்.

வீரசைவராக மாறிய சிவப்பிரகாசர் மீண்டும் திருவாவடுதுறை போந்து நமசிவாயர் அருள்பெற்று தம்முடைய திருவண்ணாமலை ஆதீனத்திற்குச் சென்றுள்ளார்.

துறையூர் மடம்

திருவண்ணாமலை வீரசைவ மடத்துடன் துறையூரில் ஒரு வீரசைவ மடம் ஏற்படுத்தப்பட்டது. இம்மடத்தை விரிவுபடுத்தத் துறையூரில் இருந்த ரெட்டிகள் நன்கொடை அளித்துள்ளனர். அவர்களின் மரபினர் தொடர்ந்து வீரசைவ மடத்திற்கு உதவி புரிந்தமைக்குப் பல செப்பேடுகள் சான்றாக உள்ளன. துறையூர் சிவப்பிரகாசர் மரபில் ஆறாவது பட்டத்திற்கு நன்னூல் சிவப்பிரகாச சுவாமிகள் வந்துள்ளார். இவர் பாடிய குருதோத்திரப் பாடல் ஒன்றில் திருவாவடுதுறை நமசிவாய தேசிகரின் பெயர் இடம் பெற்றுள்ளது.

செய்யதிரு வாவடுதண் டுறைநமச் சிவாயகுரு தேசி கோத்தமன்
துய்யகர சாதனனா யபிடேகத் திருநாமம் சூடப் பெற்றோன்
ஐயதில்லை யம்பலவன் பொருட்டாயத் துவிதசைவ வங்க லிங்கந்
தையல்பங்கன் சொற்படியே தரித்தசிவப் பிரகாசத் தவத்தான்
மாதோ!

இப்பாடலின் மூலம் வீரசைவ மடம் ஏற்படுத்திய சிவப்பிரகாசரின் குரு, திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் நமசிவாய தேசிகர் என்பது உறுதியாகிறது. தில்லை நடராசர் பொருட்டு இலிங்காதாரியாகச் சிவப்பிரகாசர் மாறியதும் விளங்குகிறது. எனவே வீரசைவ மடத்தின் தாபகரான

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

சிவப்பிரகாசரின் தொடக்கக் காலத்தில் அதாவது பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் வயது முதிர்ந்த நிலையில் நமசிவாயர் இருந்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம். நீண்ட காலம் நமசிவாயர் வாழ்ந்திருக்க வேண்டும்.

அம்பலவாண தேசிகர்

நமசிவாய தேசிகரால் மறைஞான தேசிகர் இளைய பட்டத்தில் அமர்த்தப்பட்டாலும் சதாகாலமும் இவர் நிட்டை யிலேயே இருந்ததால் நமசிவாய தேசிகர் அம்பலவாணர் என்ற வேறோர் அடியாருக்கு ஆசாரியாபிடேகம் செய்து வைத்தார். தட்சிணாமூர்த்தி தேசிகர் என்பவருக்குச் சங்காபிஷேகம் செய்து வைத்தார்.

நமசிவாய தேசிகரின் திருமேனிகள்

திருவாவடுதுறை ஆதீனத்தில் திருமாளிகைத் தேவர் கோயிலுக்குத் தெற்கில் நமசிவாய தேசிகருக்குச் சமாதி கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் பல்வேறு காலங்களில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. மதுரை மாநகரில் தானகோனேரியப்பர் தெருவில் உள்ள துறைசை ஆதினக் கிளை மடத்தில் நமசிவாய தேசிகரின் திருமேனி கருங்கல்லில் செய்து வைக்கப்பட்டது. சுசீந்திரம் நாயக்க மடத்திலும் இத்தேசிகருக்குச் சிலை செய்து வைக்கப் பட்டுள்ளது. சுசீந்திரமடம் முத்து வீரப்ப நாயக்கர் காலத்தது ஆகும். மதுரை மடம் சுசீந்திரம் மடத்திற்குப் பிற்பட்ட தாகும். எனினும் இவ்விருமடங்களும் பிற்காலங்களில் திருப்பணிகளுக்கு உள்ளாயின.

நெல்லையப்பர்கோயில், நெல்லை சந்தி விநாயகர் கோயில், விக்கிரமசிங்கபுரம் சிவந்தியப்பர் கோயில் ஆகிய கோயில்களில் தற்போதுள்ள ஆதீன குருமகான் சீர்வளர் சீர் சிவப்பிரகாசதேசிகர், நமசிவாயர் திருமேனிகளைப் பிரதிட்டை செய்துவைத்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நமசிவாயர் குறித்த நூல்கள்

நமசிவாய தேசிகரைப் போற்றி எண்ணற்ற நூல்கள் வெளிவந்துள்ளன. கீழ்க்கண்ட நூல்கள் அறிஞர் பலரும் அறிந்த நூல்கள் ஆகும்.

1. முத்தி பஞ்சாக்கர மாலை - ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
2. பஞ்சாக்கர தேசிகர் மாலை - சிவஞானமுனிவர் பாடியது.
3. நமசிவாயமூர்த்தித் தாலாட்டு - ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
4. பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி - கச்சியப்பமுனிவர் பாடியது.
5. நமசிவாய மூர்த்தி மும்மணிக்கோவை - ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
6. நமசிவாய மூர்த்தி ஆற்றுப்படை - ஆசிரியர் கடலூர் சீனிவாசாசாரியார்.
7. பாஷ்ண நிராகரணம் - அம்பலவாண தேசிகர்.
8. அனுபோக சாத்திரம் - அம்பலவாண தேசிகர்.
9. நமசிவாய மாலை - அம்பலவாண தேசிகர்.
10. பஞ்சாக்கர தேசிகர் பரமாசாரிய கீர்த்தனை - ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
11. துறைசை ஆதீன சோபனம் - ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
12. பண்டாரச் சாத்திரங்கள் பலவும் இவர் மீது பாடப் பட்டவையே யாகும். பிற்காலத்தில் மடத்தின் சார்பாகப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பாடப்பட்ட நூல்கள் பலவற்றிலும் நமசிவாய தேசிகரின் பெருமைகள் குறிக்கப்பட்டுள்ளன.

சிவஞான முனிவர் பாடிய கீழ்க்கண்ட பாடல் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் உருவ அமைப்பை நம்கண்முன் பறைசாற்றுகின்றது.

வற்றாக் கருணைத் திருநோக்கும் நின்முக மண்டலமும்
சற்றே முகிழ்த்த குறுமு ரலும்தட மார்பழகும்
பொற்றாளும் சின்முத் திரையுநெஞ் சூடு பொறித்து வைப்பாய்
செற்றார் புரம்செற்ற தேவேபஞ் சாக்கர தேசிகனே.

துறைசை நமசிவாயர் கோயில்

திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள நமசிவாயர் கோயில் ஏகதளக் கற்றளியாகும். விமானத்தைச் சுற்றி எட்டு நந்திகளும் நாற்புறமும் நமசிவாயரின் திருவுருவங்களும் தம்பிரான்களின் உருவங்களும் உள்ளன. கோயில் கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம் முதலியவற்றைக் கொண்டு கிழக்கு நோக்கிய வாயிலுடன் விளங்குகிறது.

அர்த்தமண்டபமும் வெளியில் உள்ள மகா மண்டபமும் கச்சியப்ப முனிவரால் திருப்பணி செய்விக்கப்பெற்றன. கச்சியப்ப முனிவரின் திருவுருவம் இங்கே புடைப்புச் சிற்பமாக உள்ளது. மகாமண்டபத்தின் தூண்களில் தேசிகர் களின் உருவங்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் தென்புறச் சுவரில் மார்க்கண்டேயரின் வரலாறு மற்றும் தெய்வ உருவங்கள் ஓவியங்களாக உள்ளன. கர்ப்ப கிரகத்தைச் சுற்றி வெளியில் அகசந்தானாசாரியர், புறசந்தானா சாரியர், துறைசை ஆதீன கர்த்தர்கள் ஆகியோரின் உருவங்கள் ஓவியங்களாக உள்ளன. முகமண்டபத்தில் பல்வேறு சிற்பங்களும் ஓவியங்களும் உள்ளன.

மதுரை தானகோனேரியப்பர் மடம்

மதுரை தானகோனேரியப்ப முதலியார் மடத்தில் பூஜை மண்டபத்திற்கு வெளியில் நமசிவாய மூர்த்தி சிலை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிழக்குப் பார்த்த நிலையில் உயர்ந்த மேடையில் உள்ளது. பூஜைமடத்தில் நடராசர், சிவகாமி, விநாயகர், ஆறுமுகர் ஆகியோருக்குச் சிலைகள் உள்ளன. இங்குள்ள இரண்டு கல்வெட்டுகளில் ஒன்று மடத்தின் பின்புறம் இருந்தது. கல்வெட்டு தற்போது உள்ளே வைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள வாசகம் வருமாறு:

திருவா வடுதுறை
நமசிவாய குருமாக
தானப்ப முதலியார்
(ஏக) கோனேரியப்ப மு
தலியார் (ஏக) குமாரர்
சொக்கலிங்க முதலி
யார் ம...உபை
யம் மடம்.

இக்கல்வெட்டில் நமசிவாயர் திருநாமத்தைக் காண்கிறோம். இவர் ஆதீன முதல் குருவாவார். தானப்பர், கோனேரியப்பர், சொக்கலிங்கர் என்ற மூவரையும் இக்கல்வெட்டில் காண்கிறோம். திருமலை நாயக்கர் பொருட்டு மைசூர் படையுடன் போரிட்டவராகக் கோனேரியப்ப முதலியாரை மடத்தின் வரலாறு குறிப்பிடுகிறது. இவர் ஏற்படுத்திய மடமே தற்போதுள்ள மதுரை தானகோனேரியப்ப முதலியார் மடமாகும். திருமலை நாயக்க மன்னர் என்பவர் கோனேரியப்பருக்கு 16 கிராமங்களை 1656இல் வழங்கினார். அக்கிராமங்களைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கோனேரியப்பர் வழங்கி விட்டார். மஞ்சவளியில் நன்செய் புன்செய் நிலங்களும் மனைப் பகுதிகளும் மடத்திற்காக வழங்கியதுடன் மதுரையில் சில காலிமனைப் பகுதிகளையும் கோனேரியப்பர் விட்டுச் சென்றுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தின் மூலம் பல்வேறு கட்டளைகள் செய்யப்பட்டு வருகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செவந்திநாடான்

விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள செவந்திநாடான் மற்றும் உள்ள நாடார்களுக்கு வரிகுறைப்புச் செய்த கல்வெட்டு ஆவணத்தில் 'தானப்ப முதலியார்' பெயரும் இடம் பெற்றுள்ளது. காலம் கி.பி. 1662. இவரே மதுரை மடத்தில் இடம் பெற்றுள்ளார் எனலாம்.

சின்னச் சொக்கலிங்கர்

கி.பி. 1650இல் கூடிய சுசீந்திரம் மடத்திற்குத் தானம் தந்த செப்பேட்டில் வடமண்டலத்து முதலிநாயக்கர் சின்னச் சொக்கலிங்கர் பெயர் இடம் பெற்றள்ளது. இவரே மதுரை மடத்தில் இடம் பெற்றவரா? என்பது தெரியவில்லை. ஆயின் இரண்டின் காலமும் சற்றேரக் குறைய ஒன்றாகும். திருவீழிமிழலைக் கோயிலுக்கு மகமை வழங்கிய செப்பேடு ஒன்றின் இருபிரதிகள் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளன. செப்பேட்டில் 'ராச ஸ்ரீ சொக்கப்ப முதலியார்' என்ற பெயர் இறுதியில் உள்ளது. செப்பேட்டின் காலம் கி.பி. 1690 ஆகும். இந்தச் சொக்கப்ப முதலியாரும் மதுரை மடத்தில் வரும் சொக்கலிங்க முதலியாரும் ஒருவரா? என்றும் தெரியவில்லை.

நடராச மூர்த்தம்

நமசிவாய மூர்த்திகளின் திருவுருவங்கள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகவே உள்ளன. ஆயின் சந்தானாசாரியர்களின் உருவங்கள் ஒன்றுபோல இல்லை. உமாபதி சிவாசாரியாரால் பூசிக்கப்பெற்று வழிவழியாக நமசிவாயதேசிகரிடம் வந்து அவரால் பூசிக்கப் பெற்ற ஞான மாநடராசப் பெருமானும் திருச்சிற்றம்பல உடையவரும் வைத்தீஸ்வரன் கோயிலில் இறைவனே சிவாசாரியரின் உருவில் வந்து கொடுத்தருளிய வைத்தியநாத சுவாமியாகிய ஆன்மார்த்த லிங்கமும் நமசிவாயர் காலம் தொடங்கி இன்றுவரை ஆதீன குருமுதல்வர்களால் பூசிக்கப்பட்டு வருகின்றன என்றறிகிறோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மகரத்தலைநாள்

நமசிவாய மூர்த்தியை வழிபட்டவர் நோய் நீங்கி எல்லா வளங்களும் பெற்று நல்வாழ்வு எய்துவர் என்ற நம்பிக்கை மக்களிடையே இன்றும் இருந்து வருகின்றது. பன்னெடுங்காலமாக நமசிவாய தேசிகரின் மகரத்தலைநாள் அசுவதி விழா தைமாதம் வெகுசிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது. தைமாதம் ஒன்றில் அசுவதி நட்சத்திரத் தில் நமசிவாய மூர்த்திகள் சிவசோதியில் கலந்தார்கள் என்பது மடத்தின் வரலாறாகும். இவருடைய காலத்தை 1525 தொடங்கி 1600 வரை குறிப்பிடலாம்.

மறைஞான தேசிகர்
இரண்டாவது பட்டம் - பதினாறாம் நூற்றாண்டு

நமசிவாய தேசிகருக்குப்பின் திருவாவடுதுறை ஆதீனத்தின் தலைவராக வந்த மறைஞானதேசிகர் எப்போதும் சிவானந்த நிட்டையிலேயே இருந்து வந்துள்ளார். எனவே மூன்றாவது பட்டத்தில் வந்தவரே உண்மையில் இரண்டாவது தேசிகர் எனலாம். அம்பலவாண தேசிகர் இயற்றிய 'தசகாரியம்' என்ற நூலில் நமசிவாய தேசிகரும் மறைஞான தேசிகரும் போற்றப்பட்டுள்ளனர்.

அரனருள் உருவாய் ஆவிக் களித்திட உளத்தை மாயா
உரமது பிளந்து குற்ற மொழிந்துநின் மலமது ஆக்கி
வரமது தனைய ளித்து மருவும்ஆ வடுது றைக்கோர்
பரன்மறை ஞான தேசிகன் பதாம்புயம் பற்றி வாழ்வாம்.

என்று மறைஞான தேசிகரை வாழ்த்தியுள்ளார் அம்பலவாண தேசிகர்.

மெய்ஞ்ஞான முனிவர்

மறைஞான தேசிகர் காலத்தில் மயிலாடுதுறையில் பிறந்த 'ஸ்ரீ மெய்ஞ்ஞான முனிவர்' என்பவர் திருவீழி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மிழலைத் தலபுராணம் பாடியுள்ளார். திருவீழிமிழலைச் சிவன் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது.

சிவாக்கிரக யோகிகள்

சூரியனார்கோவில் சிவாக்கிரக யோகிகளும் திருவீழி மிழலையில் இருந்துள்ளார். சூரியனார் கோயில் மடத்தின் கிளைமடம் இவ்வூரில் இருந்துள்ளது. யோகிகள் குரு மூர்த்தம் இங்குள்ளது. தெற்குப்பார்த்த நிலை.

வீழிநாதர் திருவூடல்

வீழிநாதர் திருவூடல் என்ற அச்சில் வராத நூலும் திருவீழிமிழலைக் கோயிலுக்குரியதாகும். இந்த நூலையும் மெய்ஞ்ஞான முனிவரே இயற்றியிருக்க வேண்டும். இந்த நூலின் ஓலைச்சுவடியையும் திருவீழிமிழலைத் தலபுராண ஓலைச்சுவடியையும் இந்நூல் ஆசிரியர் 20 ஆண்டுகளுக்கு முன் திருவீழிமிழலையில் தியாகராச தேசிகர் என்பவரிடமிருந்து அரசிற்காகச் சேகரித்துள்ளார். வீழிநாதர் திருவூடல் என்ற சுவடி நாடகம்போல் உள்ளது. வீழிநாதர் திருவூடலை நகல் செய்து அதன் கையெழுத்துப் பிரதியை இந்நூலாசிரியர் வைத்துள்ளார்.

மறைஞானதேசிகர் தைமாதம் ஒன்றில் சுவாதி நட்சத்திரத்தன்று திருவாவடுதுறையில் சமாதி அடைந்தார்.

இவருடைய காலத்தை 16ஆம் நூற்றாண்டின் இறுதி எனலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அம்பலவாண தேசிகர்

மூன்றாவது பட்டம் - பதினாறாம் நூற்றாண்டு

திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர்களில் அதிகமான ஞானநூல்கள் எழுதியவர் அம்பலவாண தேசிகரே ஆவார். தசகாரியம், சன்மார்க்கசித்தி, சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்த பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாயநிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்ற பத்து நூல்கள் பண்டாரச் சாத்திரத்துள் அடங்கும். இப்பத்து நூல்கள் மட்டுமின்றி வேறு சில நூல்களும் அம்பலவாண தேசிகர் இயற்றி உள்ளார்.

உயிரட்டவணை

தம்மிடம் பணிபரிந்து வந்த 'பூப்பிள்ளை' என்பவர் பொருட்டு 'உயிரட்டவணை' என்ற நூலை அம்பலவாணர் இயற்றியுள்ளார்.

உலகுடைய நாயனார்

வைணவப் பெரியாரான 'உலகுடைய நாயனார்' என்பவர் அம்பலவாண தேசிகரிடம் உபதேசம் பெற்றுச் சிந்தித்து, சிவாநுபூதி சிறக்க அம்பலவாணர் மீது பத்து விருத்தங்களைப் பாடியுள்ளார். பாடல்கள் யாவும் சிறப்பான வையாகும். 'மலமெனும் தடத்தில் கரும சேதகத்தின் மாயையாம்' என்று முதல் விருத்தம் தொடங்குகிறது.

பூப்பிள்ளை

சிவபுரம் என்ற ஊரைச் சேர்ந்த பெரிய பிள்ளை என்ற 'பூப்பிள்ளை' என்பவர் இந்த ஞான தேசிகரிடம் திட்சை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

பெற்றுள்ளார். அம்பலவாண தேசிகர் மீது 'அந்தமலத் தத்துவிதம்' என்று தொடங்கும் பத்து வெண்பாக்களை இவர் இயற்றியுள்ளார்.

உருத்திரகோடி தேசிகர்

தேசிகர் தம் அடியார்களில் மிகச்சிறந்த ஒருவரை இளையபட்டத்தில் நியமித்து 'உருத்திர கோடி தேசிகர்' என்ற தீட்சா நாமமும் வழங்கினார். திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலுக்குக் கி.பி. 1603 இல், களக்குடி என்ற ஊர் தானமாக வழங்கப்பட்டது. அப்போது அம்பல வாணதேசிகர் இளவரசராக இருந்துள்ளார்.

இவருடைய காலத்தை 1590 முதல் 1610 வரை குறிப்பிடலாம். மாசிமாதம் சித்திரை நட்சத்திரம் ஒன்றில் துறைசையில் இவர் சிவபரிபூரணமுற்றார்.

அம்பலத்தாடிமடம்

மேற்கண்ட தானத்தைக் குறிப்பிடும் செப்பேடு திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. செப்பேட்டில் வரும் 'அம்பலத்தாடி பண்டாரம்' என்ற சொல் நிச்சயமாக ஆதீனத் தலைவர் ஒருவரைக் குறிக்கும் சொல் என்பதில் ஐயமில்லை. ஆயின் எந்த ஆதீனத்தலைவர் என்பதில் சந்தேகம் வரலாம்.

11.12.1596இல் கூடிய கல்லிடைக்குறிச்சி மானேந்தி யப்பர் கோயிலில் உள்ள கல்வெட்டு அம்பலத்தாடும் தம்பிரான் மடத்தைக் குறிப்பிடுகிறது. இம்மடம் தற்போது கோயிலுக்கருகில் தளிகை மடமென வழங்கப்படுகிறது. திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடமாக இருந்து வருகிறது. எனவே செப்பேட்டில் வரும் அம்பலத்தாடி பண்டாரம் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரையே குறிக்கும் எனலாம். மேலும் செப்பேடும் மடத்தில் இருப்பதுடன் செப்பேடு குறிப்பிடும் திருப்பெருந்துறைக் கோயிலும் திருவாவடுதுறை ஆதீனத்தின் வசமே உள்ளதையும் குறிப்பிட வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏகாம்பரம் பிறை சூடும் பண்டாரம்

சக ஆண்டு 1503இல் வெளியிடப்பட்ட திருப்பெருந்துறைக் கோயில் தானம் குறித்த ஆயர் செப்பேடு திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. இதில் 'ஏகாம்பரம் பிறை சூடும் பண்டாரம்' என்பவரின் பெயர் உள்ளது. இவர் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பாகத் திருப்பெருந்துறையில் இருந்த ஒரு தம்பிரானாக இருந்திருக்க வேண்டும். கி.பி. 1583 என்பதால் நமசிவாய தேசிகர் அல்லது அம்பலவாண தேசிகர் காலத்தில் இச்செப்பேடு வெளியிட்டிருக்க வேண்டும். தட்சிணாமூர்த்தி தேசிகர், அம்பலவாண தேசிகர் போல நமசிவாய தேசிகரின் அன்புக்குப் பாத்திரமாகி இருந்துள்ளார். தசகாரியம், உபதேச பஃறொடை என்ற இருநூல்களை இவர் இயற்றியுள்ளார். இவரே ஏகாம்பரம் பிறைசூடும் பண்டாரமா? என்பது தெரியவில்லை.

உருத்திரகோடி தேசிகர்
நான்காவது பட்டம் (1610-1621)

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்களில் நான்காவது தேசிகராக இருந்த உருத்திரகோடி தேசிகரே தென் தமிழ்நாடு முழுவதும் தலயாத்திரை மேற்கொண்ட முதல் தேசிகர் எனலாம். மதுரை முத்து வீரப்பநாயக்க மன்னர், இவர் காலத்தில் திருவாவடுதுறை மடத்திற்குப் பல ஊர்களில் இறையிலியாக நிலங்கள் வழங்கியுள்ளார். சிவபூசை, குருபூசை, மாகேசுவரபூசை போன்றவை இத்தேசிகர் காலத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

ஜெவந்தியப்ப நாயக்கன்

தென்பாண்டி நாட்டில் பல ஊர்களில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உருத்திரகோடி தேசிகர் காலத்தில் கிளை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. உருத்திரகோடி தேசிகரின் பேரன்புக்குரியவராக இருந்த ஈசானத் தம்பிரான் பெயரில் ஏற்படுத்தப்பட்ட ஈசான மடங்கள் குறிப்பிடத்தக்கவை எனலாம். ஒருநாள் முத்துவீரப்ப நாயக்கனின் ஒன்றுவிட்ட அண்ணனாகிய ஜெவந்தியப்ப நாயக்கன் திருவாவடுதுறை யில் காவிரி ஆற்றிற்கருகே பசியால் மயங்கிக் கிடந்தார். அவ்வழியே வந்த ஈசானத் தம்பிரான் இறைவனுக்கு நிவேதித்த பழங்களைக் கொண்டுவந்து நாயக்கருக்கு வழங்கி பசி நீங்கிய பிறகு அவருடைய வரலாற்றைக் கேட்டறிந்தார். மதுரை முத்துவீரப்ப நாயக்கருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பகைமை வந்ததால் உயிருக்கு அஞ்சிவந்த விவரத்தை ஜெவந்தியப்பர் கூறினார். நாயக்கரின் பசியைப் போக்கிய பின், ஞானதேசிகரிடம் இவரைத் தம்பிரான் அழைத்துச் சென்று மடத்திலே இருக்க ஏற்பாடும் செய்தார். முத்துவீரப்ப நாயக்கருக்கும் ஜெவந்தியப்பருக்கும் நல்லுறவு ஏற்பட்ட பின், ஆபத்து நேர்ந்த காலத்தில் தன்னை ஆதரித்தத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கிளை மடங்கள் ஏற்படுத்தித் தந்ததுடன் பல ஊர்களை இனாமாகவும் வழங்குமாறு தம்பியைக் கேட்டுக் கொண்டார். முத்துவீரப்ப நாயக்கரும் பாவநாசம், திருப்புடைமருதூர், செவ்வல், திருநெல்வேலி, முரப்பநாடு, வள்ளியூர், சுசீந்திரம், கன்னியாகுமரி ஆகிய ஊர்களில் கிளை மடங்கள் ஏற்படுத்தி வழங்கினார். இம்மடங்கள் ஈசான மடங்கள் என வழங்கப் படுகின்றன. ஈசானத் தம்பிரான் பெயரில் இவைகள் அழைக்கப்பட்டன. இவ்வெட்டு மடங்களுக்கும் வளமான விளைநிலங்களை முத்து வீரப்ப நாயக்கர் இறையிலியாக அளித்துள்ளார். செவ்வல் தவிர பிற ஈசான மடங்கள் இன்றும் நன்னிலையில் இயங்கி வருகின்றன. செவ்வல்லில் மடம் இருந்த கட்டிடம் தற்போது இல்லை. எனினும் மடத்திற்குச் சொந்தமான காலிமனை கோவிலுக்கு அருகில் உள்ளது. ஈசான மடங்கள் அமைந்துள்ள ஊர்களில் உள்ள சிவன் கோயில்களுக்கு ஆதீனத்தின் கட்டளைகள் உள்ளன. பாவநாசம் ஈசான மடத்தின் கட்டளை, பாவநாசம் சிவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோயிலுக்குண்டு. இங்கே குறிப்பிடப்பட்ட ஈசான மடங்கள் தவிர மேலும் சில ஊர்களில் முத்து வீரப்பநாயக்கர் மடங்கள் கட்டித் தந்ததுடன் விளைநிலங்களும் வழங்கி யுள்ளார். அவைகளுக்குச் செப்பேடுகளும் வெட்டித் தந்துள்ளார்.

சிவந்திபுரம் மடம்

சிவந்திபுரம் என்ற ஊர் சிவந்தியப்ப நாயக்கரால் ஆதீனத்திற்கு வழங்கப்பட்ட எட்டு ஊர்களில் ஒன்று என்று தமிழ்த்தாத்தா டாக்டர். உ.வே. சாமிநாத அய்யர் தம்முடைய சுயசரிதையில் கூறி உள்ளார். ஈசான மடங்கள் எட்டில் இவ்வூர்மடம் சேராவிடினும் சிவந்தியப்ப நாயக்கர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாயக்கரின் தம்பி முத்துவீரப்ப நாயக்க மன்னர் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு இம்மடத்தை ஏற்படுத்தித் தந்துள்ளார். முத்துவீரப்ப நாயக்கர் ஆதீனத்திற்கு ஏற்படுத்தி வழங்கிய முதல் மடம் இதுவே என்று கருது கிறேன். தானத்தைச் செப்பேடாகவும் வெட்டி, மன்னர் ஆதீனத்திடம் அளித்துள்ளார். செப்பேட்டின் காலம் கி.பி. 1615 ஆகும்.

சங்கரங்கோயில், புளியங்குடி, வாசுதேவநல்லூர் மடங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரங்கோவில், புளியங்குடி, வாசுதேவநல்லூர் என்ற மூன்று பெரிய ஊர் களும் அருகருகே அமைந்துள்ளன. இம்மூன்று ஊர்களிலும் திருவாவடுதுறை மடத்திற்குக் கிளைமடங்கள் உள்ளன. இம்மூன்று கிளைமடங்களையும் முத்து வீரப்பநாயக்கர் ஏற்படுத்தி ஆதீனத்திடம் அளித்துள்ளார். இம்மூன்று கிளை மடங்களுக்கும் ஏராளமான விளைநிலங்களையும் மன்னர் இறையிலியாக வழங்கி உள்ளார். இத்தானத்திற்கு ஆதாரமாக மடத்தில் செப்பேடு ஒன்று இன்றுமுள்ளது. இம்மூன்று கிளைமடங்களும் ஈசான மடங்களில் சேரவில்லை. மடங்கள் கி.பி.1615 அல்லது அதற்கு முன்பாக ஏற்படுத்தப் பட்டன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநெல்வேலி ஈசான மடம்

திருநெல்வேலி மாநகரில் நெல்லையப்பர் கோயிலுக்கு அருகில் மேலரத வீதியில் ஈசான மடம் அமைந்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இம்மடத்தில் மடத்தின் தென்மண்டல அலுவலகமும் இயங்கி வருகிறது. மடம் ஏற்படுத்தப்பட்டதைத் தெரிவிக்கும் செப்பேட்டில் ஈசானத் தம்பிரானும் சிவந்தியப்ப நாயக்கரும் இடம் பெற்றுள்ளனர். கி.பி. 1621இல் இம்மடம் முத்து வீரப்ப நாயக்க மன்னரால் உண்டாக்கப்பட்டது. நெல்லை ஈசான மடத்திற்கு நெல்லையைச் சுற்றிப் பல ஊர்களில் நிலங்கள் வழங்கப்பட்டன. குறிப்பாகக் கூறுவது என்றால் சில கிராமங்களே நெல்லை ஈசான மடத்திற்கு முழுமையாக வழங்கப்பட்டன. நெல்லை ஈசானமடம் குறித்த செப்பேட்டாய்வை மெய்கண்டார் இதழில் இவ்வாசிரியர் எழுதிய கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

முத்து வீரப்பநாயக்க மன்னர் வழங்கிய நிலங்கள் தவிர மேலும் சில ஊர்களில் விசயரங்க சொக்கநாத நாயக்கர் நிலங்களை மடத்திற்கு வழங்கி அதற்குச் செப்பேடும் அளித்துள்ளார்.

நெல்லை ஈசான மடத்தில் முத்துவீரப்ப நாயக்கர் மற்றும் சிவந்தியப்ப நாயக்கர் இருவரும் ஈசானத் தம்பிரானை வணங்கும் நிலையில் சிற்பங்கள் உள்ளன. சிவந்தியப்ப நாயக்கர் மற்றும் முத்து வீரப்ப நாயக்கர் உருவங்கள் விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள சிவந்தியப்பர் கோயிலில் இன்று முள்ளன. பாபநாசம் ஈசான மடத்தில் ஈசானத் தம்பிரான் உருவம் புடைப்புச் சிற்பமாக உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டச் சிவந்திபுரம் செப்பேடு, சங்கரங்கோயில், புளியங்குடி, வாசுதேவநல்லூர் செப்பேடு, நெல்லை ஈசான மடத்துச் செப்பேடு மூன்றும் திருவா வடுதுறை ஆதீன கர்த்தரை 'ஆதீன பண்டாரு சந்நிதி' என்று குறிப்பிடுகின்றன. மூன்றும் தெலுங்கு மொழியில் கூடிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செப்பேடுகள் ஆகும். நான்காவதாக உள்ள விசயரங்க சொக்கநாதர் செப்பேடும் தெலுங்கு மொழியிலேயே சுருக்கமாக வெட்டப்பட்டுள்ளது.

உருத்திரகோடி தேசிகர், தம் அன்புக்குப் பாத்திரமான ஈசானத் தம்பிரானைத் தென்பாண்டிய நாட்டில் உள்ள துறைசை ஆதீனத்தின் கிளைமடங்களைக் கண்காணிக்குமாறு அருளாணை வழங்கினார்கள்.

வேலப்ப தேசிகர்

உருத்திரகோடி தேசிகர் தமக்குப் பிறகு ஆதீனத்தைப் பரிபாலிக்க வேண்டி வேலப்பத் தம்பிரான் என்பவரைத் தேசிகராக நியமித்து அவருக்கு வேலப்ப தேசிகர் என்ற தீட்சாநாமமும் சூட்டினார். உருத்திர கோடி தேசிகரையும் ஈசானத் தம்பிரானையும் பெரிதும் மதித்த முத்துவீரப்ப நாயக்கரும் சிவந்தியப்ப நாயக்கரும் வேலப்ப தேசிகரையும் போற்றி மகிழ்ந்துள்ளனர்.

சுசீந்திரம் நாயக்கர் மடம்

ஈசான மடங்கள் எட்டில் ஒன்றான சுசீந்திரம் கிளை மடத்தில் இளைய சந்நிதானமான வேலப்ப தேசிகர் தங்கியிருந்து அடியார்களுக்கு அருளுபதேசம் செய்து வந்தார். இம்மடம் நாயக்கர் மடமென வழங்கப்படும். முத்து வீரப்பநாயக்கர் கி.பி.1622 க்கு முன் ஏற்படுத்திய மடம் இதுவாகும். முத்து வீரப்பநாயக்க மன்னர் மற்றும் சில நாயக்க தலைவர்களின் உருவங்கள் கற்சிற்பங்களாக மடத்தில் உள்ளன.

தானகோனேரியப்ப முதலியார்

தென்பாண்டிய நாட்டுக்குப் பலமுறை யாத்திரை மேற்கொண்ட உருத்திரகோடி தேசிகர் கி.பி. 1621 அல்லது 1622இல் மதுரை நகரில் இறைவனடி சேர்ந்தார். கார்த்திகை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாதமொன்றில் அனுஷ நட்சத்திரத்தில் இவர் சிவப்பேறு எய்தியுள்ளார்.

மதுரையில் சிவப்பேறு எய்திய உருத்திரகோடி தேசிகருக்கு வேலப்பதேசிகர் மிகச்சிறப்பாகக் குருபூஜை நடத்தினார் என்று 'குருபரம்பரை விளக்கம்' கூறுகிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு அருகில் தானகோனேரியப்பர் தெரு ஒன்றுள்ளது. இத்தெருவில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான கிளை மடம் ஒன்றுள்ளது. இக்கிளைமடம் தானகோனேரியப்ப முதலியார் மடம் என வழங்கப்படுகிறது. இம்மடத்தில் உருத்திரகோடி தேசிகரைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் எழுத்தமைதி பிற்கால மாயினும் முத்துவீரப்ப நாயக்கருக்குப்பின் திருமலை நாயக்கரின் காலத்தில் இம்மடம் ஏற்படுத்தப்பட்டது எனலாம். இந்த மடத்தில் தனிக்கல்லில் கூடிய பலகையில் உருத்திரகோடி தேசிகர் கல்வெட்டு வெட்டி வைக்கப் பட்டுள்ளது.

திருவாவடுதுறை ஆதீ
னம் மூன்றாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ ருத்தி
ரகோடி தேசிக மஹா சன்னி
தானம் மதுரை அகழ் தோய
த்தில் வருடம் கார்த்திகை .
அசுவதி திருநட்சத்திரத்தில் பூர்த்
தியானார்கள் இக்கட்டிடம்
ஷெ ஆதீனம் கட்டளை ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுகத் தம்பிரா
னார் பித்திஷ்ணப்படி செய்யப்பட்டது பிரயோக்ரா கார்த்திகை.

மேற்கண்ட கல்வெட்டுள்ள கல், மடத்தின் தோட்டத்தில் முன்பு இருந்தது. தற்போது மடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. மதுரை சென்ட்ரல் தியேட்டரின் பின்புறம் சிறிய அளவில் கூடிய சமாதிக் கோயிலில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உருத்திரகோடி தேசிகரின் மூர்த்தம் உள்ளது. மீசை தாடியுடன் வித்தியாசமாக உள்ள இச்சிலை நின்ற நிலையில் உள்ளது. சென்ட்ரல் தியேட்டர் அமைந்துள்ள இடம் திருவாவடுதுறை ஆதீனத் திற்குச் சொந்தமான இடமாகும். உருத்திரகோடி தேசிகரின் மூர்த்தத்திற்கு நாள் வழிபாடும், ஆண்டுதோறும் குருபூசை வழிபாடும் நடைபெற்று வருகின்றன.

உருத்திரகோடி தேசிகர் பெயர் பொறித்த கல்வெட்டில் வருஷம் குறிப்பிடப்படவில்லை. ஆயின் மாதமும் நட்சத்திரமும் குறிக்கப்பட்டுள்ளன. கார்த்திகை மாதம் குறிக்கப்படுகிறது. தேசிகர் சிவப்பேறு எய்திய அனுஷ நட்சத்திரத்திற்குப்பதில் அசுவதி என்று கல்வெட்டில் உள்ளது. நமசிவாய தேசிகரே தைமாதம் அசுவதியில் சிவப்பேறு எய்தியவர் ஆவார். இக்கட்டிடத்தைத் திருவாவடுதுறையைச் சேர்ந்த கட்டளைத் தம்பிரான் ஆறுமுகத்தம்பிரான் என்பவர் கட்டியுள்ளார் என்று அறிகிறோம். இவரே பிரதிட்டை செய்துள்ளார் என்று இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஆயின் மடம் தொன்மையானது. தம்பிரான் திருப்பணி செய்துள்ளார் எனலாம்.

மீனாட்சி அகவல்

திருவாவடுதுறை ஆதீனத்துக்குக் கிளைமடங்கள் பல ஏற்படுத்தித் தந்த முத்து வீரப்பநாயக்கர் நாட்டில் கிறித்தவ மதம் பரவுவதைத் தடுத்து நிறுத்தினார் என்று வரலாறு கூறுகிறது. சைவத்தின்பால் பற்றும் தமிழ் மொழியின்பால் புலமையும் இவருக்கு ஏற்படத் திருவாவடுதுறை ஆதீனமே காரணமாகும். 'மதுரை மீனாட்சி அம்மன் பேரில் ஓர் அகவல்' என்ற நூலை இவர் பாடியுள்ளார்.

'வையக நாடாளும் மாமுது கிருஷ்ணன்
துய்யதோர் புதல்வன் சொல்லிய தமிழ்தான்
மீனாட்சி தாசன் விளம்பிய அகவல்'

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்று இந்நூலின் இறுதிப்பகுதி அமைந்துள்ளது. 18 ஆண்டுகட்கு முன்பு கும்பகோணம் அருகேயுள்ள தேப்பெருமாநல்லூர் என்ற ஊரில் இருந்து இவ்வாசிரியர் 'மீனாட்சி அகவல்' என்ற ஓலைச் சுவடியைத் தொல்பொருள் ஆய்வுத்துறைக்காகச் சேகரித்திருந்தார். பிறகு இந்நூல் ஆசிரியரே 1996 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருச்சி மாவட்ட நாயுடு மகாஜன சங்கமலரில் மூலத்துடன் மீனாட்சி அகவல் குறித்து கட்டுரை எழுதி உள்ளார். முத்துவீரப்பனின் தந்தை முத்துக்கிருஷ்ணன் என்ற பெயரே மீனாட்சி அகவலில் முதுகிருஷ்ணன் என்று வந்துள்ளது. முத்து வீரப்ப நாயக்கன், மீனாட்சி அம்மனின் தாசனாக இருந்துள்ளார். முத்து வீரப்பநாயக்கர் மட்டுமின்றி மதுரை நாயக்க மன்னர் பலரும் மீனாட்சி அம்மனைக் குல தெய்வமாகக் கருதி வந்துள்ளனர் என்பது வரலாறாகும். முத்து வீரப்ப நாயக்கரைத் தவிர வேறு எந்த மன்னரும் தமிழில் நூல் இயற்றும் அளவுக்குப் புலமை கொண்டிருக்கவில்லை. நூலும் இயற்ற வில்லை. திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடர்பு காரணமாகவே இவருக்குத் தமிழில் புலமை ஏற்பட்டது.

தெலுங்குச் செப்பேடுகள்

மதுரை நாயக்கர் வரலாறு எழுதிய ஒருவரும் முத்து வீரப்ப நாயக்கரின் ஒன்றுவிட்ட அண்ணனான சிவந்தியப்ப நாயக்கரைக் குறிப்பிடவில்லை. ஆயின் ஆதீன குருபரம்பரை வரலாற்றில் சிவந்தியப்பர் வரலாறு இடம் பெறுகிறது. இவ்வரலாற்றை மேலும் உறுதிபடுத்துவது போன்று மூன்று தெலுங்குச் செப்பேடுகளும் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளன. இச்செப்பேடுகளின் தமிழ்மொழி பெயர்ப்பு மூலங்கள் உரிய விளக்கங்களுடன் மெய்கண்டார் இதழ்களில் இவ்வாசிரியர் எழுதி உள்ளார். உருத்திரகோடி தேசிகரின் காலத்தைக் கி.பி. 1610 முதல் 1621 வரைக் குறப்பிடலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேலப்ப தேசிகர்
ஐந்தாவது பட்டம் - (1621-22)

உருத்திரகோடி தேசிகருக்குப் பின் திருவாவடுதுறை மடத்தின் ஆசாரியராக அமர்ந்த வேலப்ப தேசிகர் மதுரையில் தம்முடைய குருவிற்குச் சிறப்பாகக் குருபூஜை நிகழ்த்தினார். முத்துவீரப்ப நாயக்கரும் சிவந்தியப்ப நாயக்கரும் குரு பூஜையில் பங்கு கொண்டதாகக் குருபரம்பரை விளக்கம் என்ற நூல் குறிப்பிடுகிறது.

திருவருட்பயன்

மெய்கண்ட சாத்திரங்களுக்கு வேலப்ப தேசிகர் உரை கண்டதாக அறிஞர் குறிப்பிடுவர். டாக்டர். டி.பி.சித்தலிங்கம் என்பவர் தம்முடைய 'சைவசமய தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலில் திருவருட்பயன் என்ற உமாபதி சிவத்தின் நூலுக்கு வேலப்பப் பண்டாரம் உரை எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். நமசிவாயத் தம்பிரான் என்பவர் சில சாத்திரங்களுக்கு உரை கண்டுள்ளார். திருவருட்பயன், வினா வெண்பா என்ற இருநூல்களுக்கு இவர் எழுதிய உரைகள் கிடைத்துள்ளன. வினாவெண்பா நூலின் இறுதியில் 'மெய்கண்ட சந்ததியில் திருவாவடுதுறை நமசிவாய மூர்த்தி மரபில் வேலப்பப் பண்டாரம் அநுக்கிரகம் பெற்ற நமசிவாயத் தம்பிரான் சாலிவாகன சகாத்தம் 1600க்கு மேல் செல்லா நின்ற பிங்கள வருடம் வைகாசி மாதம் செய்த வினா விடை முற்றிற்று' என்று எழுதப்பட்டுள்ளது. காலம் கி.பி. 1678 ஆகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நமசிவாயத் தம்பிரான்

இக்காலத்தில் ஒன்பதாவது பட்டத்தில் இருந்த இராமலிங்க தேசிகரே திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமகானாக இருந்துள்ளார். ஆகவே ஐந்தாவது தேசிகர் காலம் தொடங்கி ஒன்பதாவது தேசிகர் காலம் வரை நீண்ட காலமாக நமசிவாயத் தம்பிரான் என்பவர் தம்பிரானாக இருந்துள்ளது தெரிகிறது. ஈசானத் தம்பிரான் நெல்லை ஈசான மடத்தில் இவர் காலத்திலும் இருந்து வந்துள்ளார். ஈசானத் தம்பிரான் ஒரு பங்குனி மாதம் திருவாதிரை நன்னாளில் முத்தி அடைந்துள்ளார். இவருக்கு நாள் வழிபாடும் ஆண்டு வழிபாடும் நடைபெறுகின்றன.

குமாரசாமி தேசிகர்

வேலப்ப தேசிகர் தமக்குப் பிறகு ஆசாரிய பீடத்தை அலங்கரிக்க வேண்டி குமாரசாமி தேசிகரை இளைய பட்டத்தில் நியமித்தார். குமாரசாமி தேசிகர் சுசீந்திரத்தில் இருந்தபடி அன்பர்களுக்குச் சிவஞான உபதேசம் செய்து வந்தார்.

திருப்பூவணம்

தலயாத்திரை மேற்கொண்ட வேலப்பதேசிகர், கார்த்திகை மாதம் ஒன்றில் உத்திராடத் திருநாளில் திருப்பூவணம் என்ற தலத்தில் சிவப்பேறு எய்தினார். குறைந்த காலமே இவர் ஆசாரிய பீடத்தில் இருந்துள்ளார். இவருடைய காலத்தைத் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியவில்லை.

சிவஞான சித்தி உரை

சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கு வேலப்ப தேசிகர் ஓர் உரை கண்டுள்ளார் என்று அறிகிறோம். ஸ்ரீ வேலப்ப தேசிகரும் அவர் மாணவராகிய நமசிவாயத் தம்பிரானும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எல்லா மெய்கண்ட நூல்களுக்கும் உரை செய்துள்ளனர் என்ற விவரத்தை மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதீன குருபரம்பரை விளக்கத்தில் (ஆதீனம் வெளியீடு - வருடம் 1950) பக்கம் 37-இல் குறிப்பிட்டுள்ளார்.

முற்குமாரசாமி தேசிகர்
ஆறாவது பட்டம் - கி.பி. 1622-?

திருப்பூவணத்தில் வேலப்ப தேசிகர் சிவப்பேறு எய்தியபின் ஆதீனத்தின் தலைவர் பொறுப்பேற்ற குமாரசாமி தேசிகர், மூவகை தீட்சையும் முறையாகப் பெற்ற தம்பிரான் ஒருவருக்குக் குமாரசாமி என்றே தீட்சாநாமம் தந்து தமக்குப் பிறகு பட்டத்திற்கு வர ஏற்பாடு செய்தார்.

சுசீந்திரம்

தேசிகரும் இளைய சந்நிதானமும் தலயாத்திரை மேற்கொண்டபோது சுசீந்திரத்தில் கார்த்திகை மாதம் ஒன்றில் உத்திராட நட்சத்திரத்தில் தேசிகர் சிவசமாதி அடைந்தார். இவரை முற்குமாரசாமி தேசிகர் என வழங்கு வது மடத்தின் மரபாகும். சிறிது காலமே ஆசாரியராக இவர் இருந்துள்ளார். சுசீந்திரத்தில் இவருடைய சமாதி உள்ளது. இத்தேசிகர் எப்போது பட்டத்திற்கு வந்தார்? எவ்வளவு காலம் அருளாட்சி புரிந்தார்? என்று தெரியவில்லை. எனினும் கி.பி. 1622 இல் சமாதி அடைந்திருக்கலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிற்குமாரசாமி தேசிகர்
ஏழாவது பட்டம் - (1622-1625)

பிற்குமாரசாமி தேசிகர் தமது முன்னவருக்குக் குருபூசை சிறப்பாக நடத்தினார். முத்தம்பலவாணத் தம்பிரான் என்பவரை இளைய பட்டத்தில் நியமித்து முத்தம்பலவாண தேசிகர் என்ற திட்சாநாமம் சூட்டி, சுசீந்திரத்தில் இருந்து வருமாறு தேசிகர் அருளாணையிட்டார். திருவாவடுதுறை யில் இருந்து ஒருமுறை அடியார் புடைசூழத் தென்பாண்டிய நாட்டைக் கடந்து சேரநாட்டுக்குத் தேசிகர் புறப்பட்டு வந்த போது குற்றாலத்தில் சிறிதுகாலம் தங்கி இறைவனை வழிபட்டு வந்தார்.

முத்தம்பலவாண தேசிகர்

தேசிகரும் இளைய தேசிகரும் குற்றாலத்தில் இருந்த போது இளைய தேசிகர் முத்தம்பலவாணர் மாசிமாதம் ஒன்றில் சித்திரை நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார்.

மாசிலாமணிதேசிகர்

சுசீந்திரம் சென்ற தேசிகர் எல்லாத் தகுதிகளும் நிறைந்த 'மாசிலாமணித் தம்பிரான்' என்பவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து துவிதிய ஆசாரியராக வைத்துக்கொண்டார்.

மயிலேறும் பிள்ளை

மாசிலாமணி தேசிகர் இளைய பட்டத்தில் இருந்த காலத்தில் சைவசந்நியாசம் வேண்டி சுவாமிநாதர் என்பவர் சுசீந்திரம் வந்தார். அறிவு, அடக்கம், ஒழுக்கமுடைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவருக்குத் திருநெல்வேலி மயிலேறும் பிள்ளை என்ற தமிழறிஞர் தமிழ் நூல்களைக் கற்பித்தார். செப்பறைக் கனகசபாபதி என்ற சமஸ்கிருதப் பண்டிதர், சமஸ்கிருத மொழியைப் பயிற்றுவித்தார்.

இலக்கணக் கொத்து

சுவாமிநாதர், இலக்கணக் கொத்து என்ற அரிய நூலை இயற்றினார். இவரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். தமிழைவிட சமஸ்கிருத பாஷையே உயர்ந்த பாஷை என்பது இவர் கருத்தாகும்.

பிற்குமாரசாமி தேசிகர் ஆவணி மாதமொன்றில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சிவப்பேறு எய்தியுள்ளார். சிவப்பேறு எய்திய இடம் சுசீந்திரமாகும்.

சுசீந்திரம் செப்பேடு

வேலப்ப தேசிகர் தொடங்கி, பிற்குமாரதேசிகர் வரை மூன்று ஆசாரியரும் குறுகியகாலமே பட்டத்தில் இருந்துள்ளனர். கி.பி. 1621 முதல் 1625 வரை இம்மூவருக்கும் குருபரம்பரை விளக்கத்தில் காலம் குறிக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள சுசீந்திரம் செப்பேட்டின் படி கி.பி. 1622இல் சுசீந்திரம் மடத்தின் சில பகுதிகள் ஒத்தி வைக்கப்பட்டதாக அறிகிறோம். சொக்கலிங்க நாயக்கர் என்பவர் பின்னர் மீட்டுத் தந்துள்ளார். புது மடம் ஒன்றும் அருகில் கட்டித்தந்ததுடன் மிகுதியான நிலங்களும் இவர் வழங்கியுள்ளார். தேசிகரின் இறுதிக்காலம் கி.பி. 1625 என்று அனுமானிக்கலாம். தொடக்கக்காலம் கி.பி. 1622 இறுதியாக இருக்கலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

மாசிலாமணி தேசிகர்

எட்டாவது பட்டம் - (1625-1658)

பூம்புகார் அருகேயுள்ள திருவெண்காடு என்ற ஊரில் பிறந்த மாசிலாமணி தேசிகர் சிறுவயது முதற்கொண்டு இறை உணர்வில் இருந்து வந்தார். இவருடைய தாயார் சீர்காழிப் பதியில் பிறந்தவர் ஆவார். தமிழ், வடமொழி இரண்டிலும் புலமைபெற்ற மாசிலாமணி திருவாவடுதுறை ஆதீன அடியவரானார். பிற்குமாரசாமி தேசிகர் இவரைச் சின்னப்பட்டத்தில் நியமித்து இயற்பெயரையே தீட்சா நாமமாகச் சூட்டி மகிழ்ந்தார். சின்னப்பட்டத்தில் இருந்த போது சுசீந்திரம் மடத்தில் இருந்தபடி அடியார்களுக்கு இவர் உபதேசம் செய்து வந்தார். பெரியபட்டத்திற்கு வந்த பின் திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்தபடி அருளாட்சி புரிந்து வந்தார்.

சிவக்கொழுந்து தேசிகர்

சிவக்கொழுந்துத் தம்பிரான் என்பவரைத் துவிதிய ஆசாரியராக்கி வழக்கம்போல் சுசீந்திரத்தில் இருந்து வரும்படி தேசிகர் ஆணையிட்டார்.

இராமலிங்கத்தம்பிரான்

சிவக்கொழுந்து தேசிகர் ஒருசமயம் திருவாவடுதுறை வந்தபோது மார்கழிமாதம் மூலநாள் ஒன்றில் சிவபரிபூரண முற்றார். ஆகவே இராமலிங்கத் தம்பிரான் என்பவரைத் தேசிகர் சின்னப்பட்டத்தில் அமர்த்தித் தமக்கு உதவியாக வைத்துக் கொண்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிராமண போஜனம்

மாசிலாமணி தேசிகர் பட்டத்தில் இருந்த காலத்தில் (1625-1658) மராட்டிய மன்னர் ஒருவர் மாறு வேடத்தில் அர்த்தராத்திரியில் பிச்சை கேட்க, தேசிகர் தாமே மடைப் பள்ளிக்குச் சென்று உணவு கொண்டு வந்து தந்ததாக மடத்தின் குருபரம்பரை நூலில் காண்கிறோம். திருவெண்காட்டில் பிராமண போஜனத்தை விட மாகேசுவரபூசையே சிறந்தது என்பதைத் தேசிகர் நிரூபித்துள்ளார். இங்குப் பிராமணர் போசனத்தின் உச்சிட்டம் போட்ட கிணற்று நீர் தூர் எடுக்கும் போது புழுக்கள் நெளிய மாகேசுவரபூசை ஒருமண்டலம் நடத்தி நாள்தோறும் போட்ட உச்சிட்ட கிணற்றுநீர் தூர் எடுக்கும்போது புழுக்கள் இல்லாமல் இருந்ததோடு தண்ணீர் கங்கையைப்போல் தெளிவாக இருந்ததாம். மேற்கண்ட கிணறு தற்போது பரிகலக் கிணறு என வழங்கப்படுகிறது. திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உரிமையாய் இன்றும் இக்கிணறு இருந்து வருகிறது. மராட்டிய மன்னனும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு மாகேசுவர பூசைக்கு நிலங்கள் வழங்கினான் என்று துறைசை ஆதீன குருபரம்பரை விளக்கம் என்ற நூல் குறிப்பிடுகிறது.

நரிப்பண்டாரச் சந்நிதிகள்

மாசிலாமணி தேசிகர் அடிக்கடி திருவெண்காட்டிற்குச் சென்று நிட்டையில் இருந்து வந்துள்ளார். ஒருசமயம் சுவாமிகள் நிட்டையில் இருந்தபோது நரி ஒன்று தேசிகருக்கு ஊறு செய்தபோது அவ்வழியாகச் சென்ற ஊரார் நரியை விரட்டி ஆசாரியாரை எழுப்பி நிகழ்ந்ததைக் கூறினர் என்று குரும்பரம்பரை விளக்கம் கூறுகிறது. இவருக்கு 'நரிப்பண்டாரச் சந்நிதிகள்' என்ற பெயர் ஏற்பட்டதாகவும் மேற்கண்ட நூல் குறிப்பிடுகிறது.

ஈசான தேசிகர்

மாசிலாமணி தேசிகரிடம் சங்காபிஷேகம் பெற்ற சுவாமிநாத தேசிகர், ஈசான தேசிகர் எனவும் வழங்கப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

பட்டுள்ளார். ஈசான தேசிகரின் மாணவர்களில் ஒருவரான சங்கர நமச்சிவாயரே நன்னூலுக்கு உரை கண்டுள்ளார்.

சுசீந்திரம் செப்பேடு

சுசீந்திரம் செப்பேட்டின்படி 21.3.1651க்கு முன் சுசீந்திரத்தில் கல்கட்டிடமும் பிச்சாதேவர் கோயிலும் மடத்தில் கட்டப்பட்டது. மாசிலாமணிதேசிகர் அம்பலவாணப் பண்டாரச் சந்நிதி என்றும் வழங்கப்பட்டுள்ளார்.

மௌனப்பண்டாரம்

கி.பி. 1622இல் பிற்குமாரசாமி தேசிகர் ஆதீன கர்த்தராகவும் மாசிலாமணி தேசிகர் தம்பிரானாகவோ இளைய சந்நிதானமாகவோ இருந்திருக்க வேண்டும். அப்போது சுசீந்திரத்தில் உள்ள திருவாவடுதுறை மடத்தின் சிலபகுதிகள் ஒத்தி வைக்கப்பட்டன. செப்பேட்டில் வரும் மௌனப்பண்டாரம் என்பவர் மாசிலாமணி தேசிகர் எனலாம். ஆதீனத்தலைவராக இவர் இருந்த காலத்தில் அடிக்கடி நிட்டையிலேயே இருந்துள்ளார் என்பது வரலாறாகும். வடமலையப்ப பிள்ளை, நாராயணப்பிள்ளை போன்றோர் சுசிந்திரம் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளனர். வடமலையப்ப பிள்ளையின் வரலாற்றினை இவ்வாசிரியர் எழுதியுள்ள 'விக்கிரமசிங்கபுர உலா' என்ற நூலில் காணலாம்.

தொண்டைமான்

கணக்கன் வயல் செப்பேடு 15.6.1654இல் வெளியிடப் பட்ட திருவாவடுதுறை செப்பேடாகும். திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் காலை பூஜை செலவிற்காகப் புதுக்கோட்டைத் தொண்டைமான் அலுவலர் குமாரசாமி பிள்ளை என்பவர் நிலங்களை விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளித்துள்ளார். மாசிலாமணி தேசிகர் அருளாட்சி காலத்தில் இத்தானம் வழங்கப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆடிய பண்டாரம்

கணக்கன்வயல் செப்பேட்டின்படி மடத்தின் காரியஸ்தராக இராவுத்த பண்டாரம் என்பவர் இருந்துள்ளார். மடத்தின் தலைவர் ஆடிய பண்டாரம் என அழைக்கப் பட்டுள்ளார். ஆடிய பண்டாரம் என்பவரே மாசிலாமணி தேசிகர் எனலாம். மதுரை மின்னல் பொன் 76 தந்து நிலம் வாங்கப்படுகிறது.

இலக்கணக் கொத்து

'ஆவடு துறையின் ஆசிலா உயிர்க்கருள்
மாசி லாமணிப் பெயர்அம்பல வாணன் என்று
உம்பரும் பரவவரும் ஞானதேசிகன்'

என்றும்

அம்பல வாணன் எனும் பெயர் ஆதரித்து
அறிவே உருவாய் அமர்ந்தகுரு ராயனைப்
பொறையுடல் போகப் புகழ்ந்தடி போற்றுவாம்.

என்றும் இலக்கணக் கொத்துப் பாயிரத்தில் மாசிலாமணி தேசிகர் போற்றப்பட்டுள்ளார்.

தசகாரியம்

சுவாமிநாததேசிகர் என்ற ஈசானதேசிகர் திருச்செந்தில் கலம்பகம், சிவஞான போதசூரணிக் கொத்து, கடம்பநாத புராணம், தசகாரியம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

பிள்ளைத்தமிழ்

மாசிலாமணி தேசிகர், திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ் என்ற அரிய நூலைப் பாடியுள்ளார். சிறுகம்பையூர் சர்க்கரைப்புலவர் குருமகான் ஆசியுடன் இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்துவான் ஆனார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருவெண்காடு

மாசிலாமணி தேசிகர் திருவெண்காட்டில் சித்திரை மாதமொன்றில் உரோகினி நட்சத்திரத்தில் சிவபெருமான் திருவடிநிழலை அடைந்தார். திருவெண்காட்டில் பிறந்து துறைசை ஆதீன கர்த்தராக விளங்கிய இவர், மாகேசுவர பூசையின் சிறப்பை இவ்வூரில் நிரூபித்துள்ளார். இறுதியில் இங்கேயே சிவப்பேறும் அடைந்துள்ளார். ஆதீனத்திற்குச் சொந்தமாக இவ்வூரில் இருந்த மடம் தற்போது சிதைந் துள்ளது.

திரிதிய ஆசாரியரான ஈசான தேசிகர் பொருட்டு திருவண்ணாமலையில் மடம் கட்டப்பட்டது. அங்கேயே கார்த்திகை உத்தர நட்சத்திரத்தில் (கி.பி. 1690) ஈசான தேசிகர் சிவப்பேறு எய்தினார்.

இராமலிங்க தேசிகர்
ஒன்பதாவது பட்டம் - (1658-1678)

திருமழபாடி என்னும் ஊரில் வாழ்ந்த ஆளுடைய பண்டாரம் என்ற சைவவேளாளரின் இரண்டாவது புதல்வரே இராமலிங்கர் ஆவார். இவர் ஆதீனத் தம்பிரானாக முதலில் இருந்து வந்தார்.

திருவண்ணாமலை மடம்

மாசிலாமணி தேசிகர் நியமித்த துவிதிய ஆசாரியர் சிவக்கொழுந்து தேசிகர் சிவப்பேறு எய்தியதாலும் திரிதிய குரவராகிய சுவாமிநாததேசிகர் என்ற ஈசான தேசிகர் திருவண்ணாமலை ஈசான மடத்திலேயே சிவானந்த நிட்டையில் இருந்து வந்ததாலும் இராமலிங்கத் தம்பிரானுக்கு ஆசாரிய அபிஷேகம் செய்விக்கப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேலப்ப தேசிகர்

இராமலிங்க தேசிகர் தமக்குப் பிறகு ஆதீனத்தை அலங்கரிக்க வேண்டி வேலப்பத் தம்பிரானை வாரிசாக நியமித்தார். வழக்கம்போல் துவிதிய ஆசாரியர் சுசீந்திரத்தில் இருந்து வந்தார்.

திருமழபாடி ஓதுவார் குடும்பம்

இராமலிங்க தேசிகர் ஆதீனத்தில் சீர்திருத்தங்கள் சிலவற்றை மேற்கொண்டார். திருமுறைகளில் இசையறிவுமிக்க குடும்பம் ஒன்றைத் திருமழபாடியிலிருந்து வரவழைத்துத் திருவாவடுதுறையில் இருந்து திருமுறை ஓதி வருமாறு கட்டளையிட்டார். இக்குடும்பத்தின் வழியில் வந்தவரே 16ஆவது தேசிகர் காலத்தில் வாழ்ந்த குருசாமி ஓதுவார் ஆவார். இப்போதும் அம்மரபில் வந்த இராமசாமி ஓதுவார் ஆதீனத்தில் பணியாற்றி வருகிறார்.

இராமலிங்க தேசிகர் காலத்தைச் சேர்ந்த செப்பேடுகள் சில மடத்தில் உள்ளன. அச்செப்பேடுகளை இனி, காண்போம்.

அம்பலத்தாடும் பண்டாரம்

*21.1.1661*இல் திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலுக்குச் சேதுபதி காத்ததேவர் தானம் அளித்துள்ளார். தமக்குச் சொந்தமான வெள்ளாம்பற்றுச்சீமை, பட்டுக்கோட்டைச்சீமை, புதுக்கோட்டைச்சீமை, திருப்புத்தூர்ச் சீமை, சூரைக்குடிச் சீமை, தேர்போகி நாட்டுச்சீமை, முத்துநாட்டுச்சீமை ஆகிய பகுதிகளில் மன்னர் நிலங்களை அளித்துள்ளார். தானத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்துப் பரதேசி முத்திரை அம்பலத்தாடும் பண்டாரம் மேற்கொள்ள வேண்டும் என்று செப்பேடு குறிப்பிடுகிறது. ஆவுடையார் கோயில் உச்சிக்கால பூசையை நடத்துவதற்காக மேற்படி தானம் வழங்கப்பட்டது. இச்செப்பேட்டின் இருபிரதிகள் மடத்தில் உள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

இங்குள்ள அம்பலத்தாடும் பண்டாரம் இராமலிங்க தேசிகர் ஆவார். இவருக்கு முன் இருந்த மாசிலாமணி தேசிகர், ஆடிய பண்டாரம் என வழங்கப்பட்டுள்ளதை முன்பே கண்டோம்.

நாட்டுச்சேரி

திருமலை நாயக்கர் (1623-1659) இறந்தபின் அவருடைய புண்ணியத்துக்காக நானாக்குடிக்குப் பதில் நாட்டுச்சேரி என்ற ஊரை மன்னர் இரகுநாத தேவர் கி.பி. 1661 இல் திருப் பெருந்துறைக் கோயிலுக்கு அளித்துச் செப்பேடும் வழங்கி யுள்ளார். பரதேசிக் கட்டளையாகத் திருவாவடுதுறை மடத்திற்கும் சில ஊர்களை மன்னர் சேதுபதி வழங்கி உள்ளார். செப்பேட்டில் குருந்த மர நிழலில் குருவாகச் சிவபெருமானும் சீடனாக மாணிக்கவாசகரும் சிற்பமாகக் காட்சி தருகின்றனர். மாணிக்கவாசகரை அழைத்துச் செல்ல வந்ததாகக் கூறும் பாண்டிய நாட்டு அதிகாரிகள் நால்வர் சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளனர். செப்பேட்டில் ஒரு வயலின் பெயர் கூறப்பட்டுள்ளது. அது பஞ்சந்தாங்கி வயலாகும். செப்பேட்டில் வரும் மருதப்பண்டாரம், ஏகபண்டாரம் இருவரும் மடத்தின் நிர்வாகிகள் எனலாம். செப்பேட்டினைச் சேது ராமலிங்கம் பிள்ளை என்பவர் எழுதியுள்ளார். சுவாமி சிதம்பரேசுவரர் சந்நிதியில் தினமும் மாகேசுவர பூசை நடைபெற மடப்புறமாக நிலங்கள் விடப்பட்டன. மன்னர் தமக்குரிய வரிகளையும் மடத்திற்கு அளித்துள்ளார். சிவஞானசித்தியாரின் ஒரு பாடலும் செப்பேட்டில் உள்ளது. செப்பேட்டில் சில குறியீடுகள் உள்ளன. திரிசூலம், இரட்டைக் கவரி, நந்தி அவைகள் ஆகும். செப்பேட்டில் உள்ள சித்தியார் பாடலுக்கும் அச்சில் வந்த பாடலுக்கும் இடையே பாட வேறுபாடு உள்ளது.

குருநமசிவாயம்

மேலே குறிப்பிட்ட செப்பேடு மிகவும் முக்கியமானது ஆகும். குருநமசிவாயம் என்ற பெயர் செப்பேட்டில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எழுதப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தின் முதல் குருவான நமசிவாய தேசிகரே செப்பேட்டில் உள்ள 'குரு நமசிவாயம்' ஆகும். இராமலிங்க தேசிகர் காலத்தில் நமசிவாயம் என்ற தம்பிரான் வாழ்ந்திருந்தாலும் ஈண்டுள்ள நமசிவாயம் பஞ்சாக்கர தேசிகரையே குறிக்கும். நந்தி, திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் கோமுக்தீஸ்வரர் கோயிலுக்கும் விசேடம் எனலாம்.

பரதேசி முத்திரை

*19.1.1668*இல் கூடிய பெருங்காடு செப்பேடும் திருப் பெருந்துறைக் கோயிலுக்கு வழங்கிய கொடையையே குறிப் பிடுகிறது. ஆவுடையார்கோயில் உஷாக்காலக் கட்டளைக்கு மன்னர் இரகுநாத சேதுபதி, பெருங்காடு என்ற ஊரை வழங்கியுள்ளார். அம்பலத்தாடும் பண்டாரம் என்று தேசிகர் அழைக்கப்பட்டுள்ளார். 'பரதேசி முத்திரை' என்ற சொற்றொடர் இச்செப்பேட்டிலும் காண்கிறோம்.

மருதப்பண்டாரம்

*12.5.1673*இல் கூடிய தச்சமல்லிச் செப்பேடும் ஆவுடையார் கோயிலுக்கு வழங்கிய தானத்தையே குறிப் பிடுகிறது. செப்பேட்டில் மருதப்பண்டாரம், ஏகபண்டாரம் என்ற இரண்டு பெயர்கள் உள்ளன. இச்செப்பேடு திருவாவடுதுறை ஆதீனத்தில் இல்லை. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இராமநாதபுரம் அகழ் வைப்பகத்தில் இது உள்ளது. மருதப்பண்டாரத்தின் மகன் சின்னத்தம்பியா பிள்ளை என்பது மற்றோர் செப்பேட்டின் மூலம் அறிகிறோம்.

புல்லுக்குடி

கி.பி. *1678*இல் திருப்பெருந்துறைக் கோயிலுக்குப் புல்லுக்குடி என்ற ஊர் வழங்கப்பட்டது. செப்பேடு தயாரித்தவர் அட்டவணை இராமலிங்கம் பிள்ளை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

வரிவிலக்களித்த மன்னர் இரகுநாததேவர் ஆவார். உச்சிக்காலக் கட்டளை நடத்தும் பண்டாரத்துக்கு ராமக்கோவுண்டன் என்பவர் புல்லுக்குடி ஏந்தல் எனும் ஊரை ஸ்ரீபண்டார பாதகாணிக்கையாக அளித்துள்ளார். திருவாடானை வட்டத்தில் புல்லுக்குடி உள்ளது. 'ராஜஸ்ரீ பண்டாரம்' என்று குருமகான் வழங்கப்பட்டுள்ளார். வாழ்வாங்கு வாழ்ந்த - ஒன்பதாம் பட்டத்தில் இருந்த இராமலிங்கதேசிகர் கார்த்திகை மாதமொன்றில் அனுட நாளில் திருவாவடுதுறையில் சிவப்பேறு எய்தினார். கி.பி. 1678இல் பூத உடலை விட்டு புகழுடம்பை எய்தினார்.

வேலப்ப தேசிகர்
பத்தாவது பட்டம் - (1678 - 1700)

இராமலிங்க தேசிகருக்குப் பின் பட்டத்திற்கு வந்த வேலப்ப தேசிகர் காலத்தில், முக்களாலிங்கர் என்ற சிவஞான முனிவர் ஆதீனத்தின் அடியவர் ஆனார். வேலப்ப தேசிகர் தமக்குப் பிறகு ஆசாரியராக வேண்டி வேறொரு வேலப்பரை இளைய பட்டத்தில் நியமித்தார்.

இளைய பட்டம்

இளைய பட்டம் தொடக்கத்தில் சுசீந்திரம் கிளை மடத்தில் இருந்தபோது முக்களாலிங்கர் என்பவர் மடத்திற்கு வந்து தீட்சை பெற்று, சந்நியாசியானார். துவிதீய ஆசாரியரைப் பேரூர் வேலப்ப தேசிகர் என அழைப்பர். பேரூர் வேலப்பதேசிகரின் அன்புக்குப் பாத்திரமாகி உரிய கல்வி பயின்று தமிழ், வடமொழி இரண்டிலும் புலமை பெற்றுச் சிவஞானியாக முக்களாலிங்கர் விளங்கினார். சிவஞானமுனிவர் என்றும் சிவஞானயோகிகள் என்றும் இவர் அழைக்கப்பட்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செப்பறை

பேரூர் வேலப்பதேசிகர் முன்னிலையில் செப்பறை அகிலாண்டேசுவரி மீது சிவஞானமுனிவர் முதன் முதலில் பதிகம் பாடி அரங்கேற்றினார்.

பஞ்சாக்கர பஃறொடை

இளைய சந்நிதானம் வேலப்பதேசிகர் பேரூரில் தங்கி, சிவத்தொண்டு புரிந்து வந்தபோது அங்கேயே ஒரு ஆனிமாதம் பரணி நட்சத்திரத்தில் சிவபரிபூரண முற்றார். இந்தப் பேரூர் வேலப்பதேசிகர் பஞ்சாக்கர பஃறொடை என்ற அரிய நூலை இயற்றியுள்ளார்.

பின்வேலப்ப தேசிகர்

பேரூர் வேலப்ப தேசிகர் சிவப்பேறு அடைந்த தால், தேசிகர் வேறோர் அடியாருக்கு ஆசாரியாபிடேகம் செய்து அவருக்கும் வேலப்ப தேசிகர் என்றே தீட்சா நாமம் சூட்டினார். துறைசை ஆதீனத்தில் இவர் பின்வேலப்ப தேசிகர் என வழங்கப்படுகிறார். பத்தாவது பட்டத்தில் இருந்த வேலப்பதேசிகர் முன்வேலப்ப தேசிகர் என வழங்கப்படுவார்.

பூலித்தேவன்

முன்வேலப்ப தேசிகர் பாண்டிய நாட்டில் பல தலங்களையும் தரிசித்தபடி சங்கரன்கோவில் வந்து சிறிது காலம் வாழ்ந்து வந்தார். அப்போது அடியார்களுடைய பல நோய்களைப் போக்கி வந்தார். நெற்கட்டும் செவ்வல் பூலித்தேவன் என்ற பாளையபட்டு மன்னருக்குக் குன்ம நோயை நீக்கியுள்ளார். பூலித்தேவனும் சிவபூசை, குருபூசை, மாகேசுவர பூசை ஆகியவை சங்கரன் கோயிலில் உள்ள துறைசைக் கிளை மடத்தில் சிறப்பாக நடைபெற தானம் வழங்கியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

தேசிகர் சமாதி

சங்கரங்கோயில் கிளைமடம் உருத்திர கோடி தேசிகர் அருளாட்சியின்போது மதுரை முத்து வீரப்ப நாயக்கரால் ஏற்படுத்தப்பட்டதாகும். மடம் மேல வீதியில் உள்ளது. வேலப்ப தேசிகர் இங்கேயே சிவ பரிபூரண முற்றதால் இவருக்குச் சமாதிக் கோயிலும் பின்னர் எடுக்கப்பட்டது. மடத்தில் நடராச சந்நிதிக்கு எதிரில் தூண் ஒன்றில் கிழக்குப் பார்த்த திசையில் வேலப்ப தேசிகரின் திருவுருவம் புடைப்புச் சிற்பமாக உள்ளது. மேலும் சங்கரங்கோவில் இறைவனாகிய கோமதீஸ்வரர் உருவமும் பேரூர் வேலப்ப தேசிகரின் உருவமும் தூணில் உள்ளன.

சங்கரன்கோவில் கிளைமடத்தில் வேலப்ப தேசிகர் சமாதி கிழக்குப் பார்த்த வாயிலையுடைய மண்டபத்தில் உள்ளது. தேசிகரின் திருவுருவம் அமர்ந்த நிலையில் தியானக் கோலத்தில் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கோமதிஅம்மன் கோவிலுக்கு முன்பாக வேலப்பதேசிகர் தாபித்தத் திருச்சக்கரம் இன்றும் உள்ளது.

சங்கரலிங்கர் உலா

வேலப்ப தேசிகர் காலத்தில் வாழ்ந்த வடமலையப்பர் என்பவர் சங்கரன்கோவில் திருப்பணியை மேற்கொண்டார் எனச் 'சங்கரலிங்கர் உலா' என்ற நூல் குறிப்பிடுகிறது.

குருபூசை

வேலப்ப தேசிகர் காலத்தைச் சேர்ந்த சில செப்பேடுகள் துறைசை ஆதீனத்தில் உள்ளன. அவைகளில் 22-11-1680 இல் கூடிய திருப்பெருந்துறைச் செப்பேடு, ஆவுடையார்கோயில் பரமசுவாமிகள் குருபூசைக் கட்டளை, வாசுதேவன் கட்டளை, தம்பாப் பண்டாரக்கட்டளை இவைகளை ஒன்றாக நடத்தும்படி கிழவன் சேதுபதி மன்னன் உத்தரவிட்டான் என்று அது கூறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அழகப்பத் தொண்டைமானார் கட்டளைக்குக் கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டன. புதுவைக் கோட்டை, புல்லுக்குடி, காடுகுடி, நரிக்குடி, எட்டிச்சேரி, உள்கிடை, ஏந்தல் ஆகிய ஊர்கள் கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டன. மேலும் கோயிலுக்குரிய நிலங்களின் மூலம் அரசிற்குச் செலுத்த வேண்டிய எந்தவொரு வரியையும் செலுத்த வேண்டியதில்லை என்றும் மன்னர் குறிப்பிட்டுள்ளார். திருமலை இரண்ய கெற்பயாதி சேதுபதி ரகுநாததேவர் மற்றும் சாத்தக்காளாயி தம்பியாயி ஆகியோரின் புண்ணியத்திற்காகத் தானம் வழங்கப்பட்டது. இச்செப்பேட்டில் மூன்று கட்டளைகள் உள்ளன. தம்பாப் பண்டாரம் யார் என்று தெரியவில்லை. குருபூசை என்ற சொல் துறைசை ஆதீனகர்த்தர் நமசிவாய தேசிகரின் குரு பூசையைக் குறிக்கும் போலும். திருவாவடுதுறை ஆதீனத்தில் நமசிவாய தேசிகரின் குருபூசையே மகரத்திருநாள் என மிக விமரிசையாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருவதை அன்பர்கள் பலரும் அறிவர்.

சொக்கப்ப முதலியார்

கி.பி. 1690இல் வெளியிடப்பட்ட திருவீழிமிழலைச் செப்பேடு, திருவீழிமிழலையைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழ்ந்த மகா ஜனங்களும் குடியான பேர்களும் கோயிலுக்கு வழங்கிய தானம் குறித்தச் செப்பேடாகும். திவ்யதேசமான திருவீழிமிழலை நிவந்தேசுவர சுவாமிக்குத் தானம் வழங்கப்பட்டது. இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத் துக்குச் சொந்தமான கோயிலாக இருப்பதால் செப்பேடு திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. ஐம்பத்திரண்டு ஊர்களைச் சேர்ந்த மக்கள் தானம் வழங்க உடன் பட்டுள்ளனர். 'ராச ஸ்ரீ சொக்கப்ப முதலியார்' என்பவர் அதிகாரியாக இருந்துள்ளார். ராமதேவராயர் என்ற அரசர் பெயரும் செப்பேட்டில் உள்ளது. இச்செப்பேட்டின் வேறொரு பிரதியும் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

கோயிலுக்கொன்றும் மடத்துக் கொன்றுமாகச் செப்பேடு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இளையபெருமாள்

திருச்செந்தூர்க் கோயிலுக்கு ஆறுமுகநேரியில் நிலம் வழங்கப்பட்ட ஆறுமுகநேரிச் செப்பேடு ஒன்று துறைசை ஆதீனத்தில் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கீழ்வேம்பு நாடான திருநெல்வேலியில் இருக்கும் இளைய பெருமாள் பிள்ளை சுந்தரத்தோள் பிள்ளை என்பவர் செப்பேடு வழங்கியுள்ளார்.

நரசப்பய்யன்

குருக்களுக்குப் புண்ணியமாகவும் ராயர் தளவாய் நரசப்பய்யன் அவர்களுக்குப் புண்ணியமாகவும் வடமலையப்ப பிள்ளையின் மகனுக்குப் புண்ணியமாகவும் தானம் வழங்கப்பட்டது. மங்கம்மாள் காலத்தில் இருந்த நரசப்பய்யனே செப்பேட்டில் வரும் நரசப்பய்யனாகும். மீனாட்சியம்மன் கோவில் ஓவியத்தில் இந்த நரசப்பய்யன் இடம் பெற்றுள்ளார். திருமலைநாயக்கர் காலத்தில் வேறோர் நரசப்பய்யன் இருந்துள்ளார். திருச்செந்தூர்க் கோயில் போற்றிமார், தலத்தார், தானத்தார் போன்றோரும் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். திருச்செந்தூர் இறைவனுக்கு வழங்கப்பட்ட தானத்தைக் கவனிக்கும் பொறுப்பு திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வழங்கப்பட்டது. அதாவது ஆறுமுகநேரி, மடத்தின் கிராமமாக இருந்துள்ளது. 1936 வரை இங்குத் திருவாவடுதுறை மடத்தின் கிளைமடம் இருந்தது.

முருகப்பன் மடம்

13-1-1692இல் கூடிய இரகுநாத சேதுபதி காத்ததேவர் அவர்களுடைய திருப்பொற்கோட்டைச் செப்பேடு திருப்பெருந்துறையில், இருந்த முருகப்பன் மடத்திற்குத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தானம் வழங்கப்பட்ட விவரத்தைக் கூறுகிறது. தற்போது இப்பெயரில் மடம் ஏதும் இல்லை.

இதே திருப்பொற்கோட்டை மீண்டும் *10-11-1733* இல் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு நன்கொடையாக அளிக்கப் பட்டுள்ளது. ஆயின் இரண்டு செப்பேட்டிற்கும் வேறுபாடு உண்டு. முதல் செப்பேடு திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. இரண்டாம் செப்பேடு திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலில் உள்ளது. முதல் செப்பேட்டில் 'ரகுநாயக சேதோபதே' என நாகரி எழுத்துகளில் மன்னன் பெயர் உள்ளது. முருகப்பன் மடதர்மத்திற்கும் அக்கிரகாரத் திற்கும் திருப்பொற்கோட்டை, பகையணீ பிராந்தனி என்ற இரு ஊர்கள் வழங்கப்பட்டன.

திருப்பொற்கோட்டை

திருப்பொற்கோட்டையின் எல்லையாக, வலையன் சோழியன்கண்மாய், ஏறணிக்கோட்டைக் கண்மாய், சிறுகைக்கண்மாய், ஆம்பட்டன் கோட்டை, செட்டி ஏந்தல், புளியாண்டான் கரிசல், துக்காக்குடி ஆறு போன்றவை குறிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் செப்பேட்டில் திருப்பக்கோட்டை நான்கெல்லைக் குட்பட்ட ஏந்தல், புறவடை, புன்செய், நன்செய், மாவடை, மரவடை ஆகியவை. காண்கிறோம். முதல் செப்பேட்டில் வரும் முருகப்பன் மடம் பின்னாளில் மறைந்துவிட்டது போலும். தமிழ்நாட்டில் எத்தனையோ மடங்கள் அழிந்து பட்டுள்ளன. முருகப்பன் மடமும் அவை களில் ஒன்றாகும். திருவீழிமிழலையிலும் திருப்பெருந்துறை யிலும் சூரியனார் கோயில் ஆதீனத்திற்குக் கிளைகள் இருந்துள்ளன. முருகப்பன் மடம் இவ்வாதீனத்தைச் சார்ந்ததா என்று தெரியவில்லை. திருப்பெருந்துறையில் உள்ள ஆவுடையார்கோவில் திருவாவடுதுறை ஆதீனத் திற்குச் சொந்தமான கோயிலாகவே இருந்து வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

திருவாவடுதுறைப் புராணம்

பத்தாவது குருமகானாக இருந்த வேலப்ப தேசிகர் காலத்தில் திருவாவடுதுறைப் புராணம் (பாடல்கள் 2600) திருப்பெருந்துறைப் புராணம் (பாடல்கள் 1787) திருப் பெருந்துறைக் கலம்பகம் என மூன்று நூல்களைப் புலவர்கள் பாடியுள்ளார்கள். இத்தேசிகர் காலத்தில்தான் ஈசான தேசிகரும் கி.பி. 1690 இல் சிவசாயுச்சியம் அடைந்துள்ளார். வேலப்ப தேசிகர், சங்கரன் கோவில் என்னும் தலத்தில் புரட்டாசி மாதமொன்றில் மூல நட்சத்திரத்தில் சிவனடி சேர்ந்தார். ஆண்டுதோறும் இங்குக் குருபூசை நடை பெறுகிறது.

பின்வேலப்ப தேசிகர்
பதினொன்றாவது பட்டம் - (1700-1730)

முன்வேலப்ப தேசிகர் சிவபரிபூரணம் அடைந்த மையைச் சீடர்கள் சுசீந்திரத்தில் இருந்த பின்வேலப்ப தேசிகரிடம் கூற தேசிகர் சங்கரன்கோவில் போந்து ஞானாசாரிய சுவாமிகள் குருமூர்த்தம் தரிசித்து, குருபூசை, மகேசுர பூசை ஆகியவை சிறப்பாக இயற்றி, சில நாட்கள் அங்கிருந்தார். தமது குருவிற்குச் சமாதிக் கோயில் எடுத்த துடன் திருவுருவமும் செய்து வைத்தார்.

பஞ்சாக்கர தேசிகர் மாலை

பின்வேலப்ப தேசிகர் காலத்தில் சிவஞான முனிவர் பல்வேறு நூல்களை யாத்துள்ளார். அவைகளில் பஞ்சாக்கர தேசிகர் மாலை, கட்டளைக் கலித்துறையில் கூடியது. இதில் உள்ள பத்துப்பாடல்களும் சிறந்தவையாகும் ஆதீன வழிபாட்டின்போது இப்பாடல்கள் தினமும் ஓதப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைத்தியநாத நாவலர்

சங்கர நமச்சிவாயர் எழுதிய நன்னூல் விருத்தியுரைக்குத் திருத்தமும் வைத்தியநாத நாவலர் என்பவர் இயற்றிய இலக்கண விளக்கம் என்ற நூலில் உள்ள வழுக்களை நீக்க இலக்கண விளக்கச் சூறாவளி என்ற நூலையும் சிவஞான முனிவர் இயற்றியுள்ளார்.

புடைமருதூர் மரபு

சித்தாந்த மரபு என்ற சிறந்த நூலுக்கு மறுப்பு நூலாகச் சித்தாந்த மரபு கண்டனம் என்ற நூலினைத் தருமபுர ஆதீனம் வெளியிட்டு மகிழ்ந்தது. கண்டன நூல் சைவ சித்தாந்தத்திற்கு ஏற்புடைய நூல் அன்று என்பதைத் தருக்க முறையில் விவரித்துச் 'சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம்' என்ற நூலினைச் சிவஞான முனிவர் இயற்றியுள்ளார். அடியேன் 'திருப்புடை மருதூர் மரபு' என்ற பெயரில் கூடிய ஓர் ஓலைச் சுவடியை நகல் செய்து 1998இல் நூலாகப் பதிப்பித்துள்ளேன்.

சித்தாந்த மரபில் வரும் செய்திகளுடன் வேறு பல செய்திகளும் புடைமருதூர் மரபில் உள்ளன. தருமபுர ஆதீனமும் திருவாவடுதுறை ஆதீனமும் புடைமருதூர் மரபின் ஒருபாதியையே திறனாய்வு செய்துள்ளன எனலாம். மேலும் விரிவுக்குச் 'சிவகீதையும் சித்தாந்த மரபும், என்ற இவ்வாசிரியரின் நூலைக் காணவும்.

மாபாடியமும் சிற்றுரையும்

சிவஞான முனிவர், சிவஞான போதம் என்ற சித்தாந்த நூலுக்கு மாபாடியம் எழுதியுள்ளார். இவ்வுரை நூலை எழுதுவதற்கு முன்பு முனிவர் பிராமணர்களிடம் வேதம் கேட்டறிந்துள்ளார். மணலி சின்னய்யா முதலியார், முனிவர் வேதப் பாடம் கேட்க ஏற்பாடு செய்துள்ளார். முனிவர், சிவஞான போதத்திற்குச் சிற்றுரையும் எழுதியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

வேறு பல உரை நூல்களும் இலக்கியங்களும் முனிவர் யாத்துள்ளார்.

திருப்பறியலூர்ப் புராணம்

வேலப்பதேசிகர் 'திருப்பறியலூர்ப் புராணம்' என்ற அரிய நூலை இயற்றியுள்ளார்.

சேதுபதி மன்னர்

தேசிகர் திருப்பெருந்துறையில் தங்கியிருந்தபோது இராமநாதபுரம் சேதுபதி மன்னர் தேசிகரைச் சந்தித்து வணங்கியபின் தம்முடைய உடற்பிணியை நீக்குமாறு வேண்ட, ஞானாசிரியர் அருள் நோக்கால் பிணி நீங்கப் பெற்றது. மன்னர் மாகேசுர பூசையின் பொருட்டு மிகுதியாக நன்கொடை வழங்கினார். நன்கொடையை உறுதிபடுத்தி செப்பேட்டையும் அளித்தார்.

மராட்டிய மன்னர்

சேதுபதி மன்னர்கள் மட்டுமின்றி மராட்டிய மன்னர்களும் வேறு சிலரும் மடத்திற்குத் தானங்கள் தந்துள்ளனர். செப்பேடுகளும் வழங்கியுள்ளனர்.

பைரவர் கோயில்

கி.பி. 1706 இல் கூடிய திருவாவடுதுறைச் செப்பேடு ஒன்று பைரவர் கோட்டுருவத்துடன் உள்ளது. 'சேமன் கோட்டைச் செப்பேடு' என இது வழங்கப்படுகிறது. பைரவர்கோயில் என்ற கோயிலைக் கட்டிய விவரத்தையும் அதற்குப் பல்வேறு நாட்டார் ஒன்றுகூடி மகமை தந்ததையும் இச் செப்பேடு விளக்குகிறது. 'பீமாஜி பண்டிதரய்யன்' என்ற அதிகாரி செப்பேட்டில் குறிக்கப்படுகிறார். இவர் மராட்டிய மரபினராக இருக்கவேண்டும். பைரவர் கோயிலை இவரே கட்டியவர். மேலும் 'அம்பலத்தாடும் பண்டாரம் அவர்கள் பாரிசமாக' ஆவுடையார் பரமசுவாமியார் மகமை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடக்குங்கால் பரியந்தமும் கட்டளையிட்டோம்' என்று இவர் குறிப்பிட்டுள்ளார். மகமைக்கு நாட்டாரும் வெள்ளாளரும் சம்மதித்துள்ளனர். 'சேஷகிரிசாஸ்திரியார்' என்பவர் ஒப்பம் இட்டுள்ளார். திருமிழலை நாட்டுப் பொன் பொத்திச் செங்கால் பிள்ளையின் ஒப்பம் செப்பேட்டின் இறுதியில் உள்ளது.

அய்யாவய்யன்

கி.பி. 1711 முதல் 1729 வரை தஞ்சாவூர் மராட்டிய மன்னராக முதலாம் சரபோசி மன்னர் இருந்துள்ளார். இவர் காலத்தில் அய்யாவய்யன் என்பவர் அதிகாரியாக இருந் துள்ளார். திருவாரூர்ச்சீமை, நாகப்பட்டினம் பர்கனாவுக்குள் கூடிய பிராமணர்களும் நாட்டார்களும் குடியான பேர்களும் ஒன்றுகூடி திருவாவடுதுறை ஆதீனப் பண்டாரச் சன்னிதி களுக்கு மகமை வழங்க முடிவுசெய்து அம்முடிவை 13-1-1712இல் செப்பேடாகவும் வெட்டி மடத்திடம் வழங்குகின்றனர். இம்மகமையைக் கொண்டு மகேசுரபூசை, அன்ன தானம் போன்ற தரும காரியங்களை ஆதீனகர்த்தர் செய்து கொள்ளலாம். மன்னரின் தருமாதிகாரி, சர்கேல், திவான் ஆகிய உயர் பதவிகளை வகித்த அய்யாவய்யன் தானம் வழங்கும்போது உடனிருந்துள்ளார். சர்க்காருக்கும் குடிக்குமாக முறையே கலநெல்லுக்கு ஓர் உரியும், கோட்டை ஒன்றுக்கு ஒருநாழி நெல் வீதமும் வழங்க மகமை தந்தவர்கள் உடன்படுகின்றனர்.

தில்லையாளிச் செப்பேடு

19-2-1726இல் தில்லையாளியைச் சேர்ந்த வர்த்தகர் பலரும் ஒன்றுகூடி திருவாவடுதுறை ஆதீனத்திற்கு மகமை வழங்க முடிவு செய்து செப்பேடும் அளித்துள்ளனர்.

வர்த்தகர் வழங்கிய செப்பேடு என்றாலும் பல்வேறு செட்டிகளும், பிள்ளைமார்களும், நாயக்கர்களும், படை யாட்சிகளும் ஒப்பம் இட்டுள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அய்யர்

இச்செப்பேட்டில் பின்வேலப்ப தேசிகர் அவர்கள் 'அம்பலவாண அய்யர் அவர்கள்' என அழைக்கப் பட்டுள்ளார். அய்யர் என்ற சொல் பிராமணர் மட்டுமின்றி வேறு சிலருக்கும் வழங்கப்பட்டதற்கு இச்செப்பேடும் உதாரணமாகும். சேக்கிழார் தமது புராணத்தில் நந்தனாரை ஐயர் என்றே குறிப்பிட்டுள்ளார். ஆகவே ஐயர் என்ற சொல் குறிப்பிட்டச் சாதிக்குரிய சொல்லன்று. அய்யர் என்ற சொல் உயர்ந்தவர் என்ற பொருளில் திருவாவடுதுறை குருமகானுக்கு வழங்கப்பட்டுள்ளது எனலாம்.

ஆயிரவைசியர் மண்டபம்

கி.பி. 172 இல் கூடிய திருமங்கலம்பேட்டைச் செப்பேடு, மதுரை ஆயிரவைசியர் மண்டபத்தில் சித்திரை முதல் திருவிழாதோறும் சுவாமி மற்றும் மீனாட்சியை எழுந்தருளப் பண்ணி அபிஷேகம், நைவேத்தியம் போன்றவை நடப்பதற்கு மகமை வழங்கியதைக் குறிப் பிடுகிறது. மண்டகப்படி ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு பொருட்களுக்கான மகமை அளவுகள் செப்பேட்டில் குறிக் கப்பட்டுள்ளன. திருமங்கலம்பேட்டை என்று செப்பேட்டில் குறிக்கப்படும் ஊர் மதுரை அருகேயுள்ள திருமங்கலமாகும். 'முத்துக் கருப்பன்' என்பவர் செப்பேட்டை எழுத 'பொம்மு மாரியப்பன்' தொடங்கி பலர் கையொப்பம் இட்டுள்ளனர். பல்வேறு சாதியாரும் ஒப்பமிட்டுள்ளனர். 'ராக்கிநாடான்' என்பவன் நாடார் இனத்தவன் ஆவான்.

சரஸ்வதி பண்டாரம்

செப்பேட்டில் வரும் சரஸ்வதிபண்டாரம் என்பவர் திருச்சிற்றம்பல தேசிகர் ஆவார். இவர் இளைய பட்டத்திலும் பின்வேலப்ப தேசிகர் பட்டத்திலும் இருந்த போது இச்செப்பேடு வெளியிடப்பட்டது. சிவாகமத்தில் இரண்டு லட்சம் கிரந்தம் ஆராய்ந்து அறிந்த திருச்சிற்றம்பல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசிகரைச் 'சரஸ்வதி பண்டாரம்' என அழைப்பதும் பொருத்தமாகும்.

திருவெண்காடு

*20-4-1710*இல் கூடிய திருவெண்காட்டுச் செப்பேட்டின் படி திருவெண்காட்டுக் கோயிலுக்கு ஏழு மாகாணத்து நாட்டார் வழங்கிய தானத்தைக் காண்கிறோம்.

இதே தேதியில் கூடிய சீர்காழி, திருவெண்காடு, திருக்கடவூர்ச் செப்பேட்டில் தேசிகரின் பெயர் அம்பலவாண அய்யர் என்றுள்ளது. அன்னதான குருபூசைக்காகப் பல சாதியாரும் மகமை வழங்க முடிவெடுத்தனர். ஆதீனத்தின் சார்பாக வைத்தியநாதன் நமசிவாயம் என்பவர் தானத்தைப் பெற்றுள்ளார். தானத்தை நிறைவேற்றும் பொறுப்பினைத் திருவாவடுதுறை ஆதீனத்திடம் பல்வேறு சாதியாரும் விட்டுள்ளனர். 'பல்லவராய திருவேங்கடம்' என்பவர் திருக்கடவூர்ச் செப்பேட்டு வாசகத்தை எழுதியுள்ளார். திருநள்ளாறு, திருநெடுங்காடு, திருக்கண்ணபுரம், திருப்புகலூர், திருவம்பர், பேரளம், திருமருகல் என்பவையே ஏழு மாகாணங்கள் ஆகும். ஒவ்வொரு மாகாணத்திற்கும் விதிக்கப்பட்ட தானம் அல்லது மகமை வேறுபடுகிறது. மொத்தம் *100* கலம் தானியம் திருவாவடுதுறை ஆதீன கர்த்தரிடம் வழங்க வேண்டும். ஒவ்வோர் மாகாணம் சார்பாக ஒவ்வொருவர் ஒப்பம் இட்டுள்ளனர். சாட்சிகளும் கையெழுத்திட்டுள்ளார்கள். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் 'அம்பலவாணத் தம்பிரான்' சார்பாக ஒருவர் ஒப்பம் இட்டுள்ளார்.

திவ்வியந்தபுரம்

உருத்திரகோடி தேசிகர் காலத்தில் முத்துவீரப்ப நாயக்க மன்னர் ஏற்படுத்தித் தந்த திருநெல்வேலி ஈசான மடத்திற்கு 'விஜயரங்க சொக்கநாத நாயக்கர், கி.பி. *1729*இல் மீண்டும் தானம் அளித்துள்ளார். 'திவ்வியந்தபுரம்' என்ற ஊரைச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

சர்வமான்யமாக அளித்துள்ளார். தானத்திற்குச் செப்பேடு ஒன்றும் திருவாவடுதுறை ஆதீனத்திடம் அளித்துள்ளார். இச்செப்பேட்டில் 'சிந்திகாபட்டி' என்ற ஊர்ப்பெயரும் உள்ளது. சிவந்திபட்டியே இவ்வாறு வழங்கப்பட்டது. நெல்லையருகே இவ்வூர் உள்ளது.

முத்துச்சலாபம்

'விசயரகுநாத சேதுபதி காத்த தேவர்' என்பவர் முத்துச்சலாபத்தில் ஒரு பகுதியினைத் திருப்பெருந்துறைக் கோயிலுக்கு வழங்க முடிவு செய்து அத்தானத்தினை 13-4-1720 இல் செப்பேடாகவும் வெட்டி, திருவாவடுதுறை ஆதீனத்திடம் அளித்துள்ளார். ஒரு தோணிக்கு ஐந்து முத்து வீதம் திருப்பெருந்துறை ஆவுடையார்க் கோயிலுக்கு வழங்க வேண்டும் என்பது மன்னனின் ஆணையாகும். மன்னர் அப்போது உடல் நலமின்றி இருந்துள்ளார்.

ஆத்மநாத சுவாமி

'பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர், சதாசிவ, ரகுநாத, பராசக்திக்கு மேலாகிய ஆத்மநாத சுவாமி, என்று திருப்பெருந்துறை உடையார் செப்பேட்டில் அழைக்கப் பட்டுள்ளார். சேதுபதி காத்த தேவரே பின்வேலப்ப தேசிகரின் அருள் பார்வையால் நோய் நீங்கப் பெற்றவர் எனலாம்.

சிறுநெல்லிக்கோட்டை

சிறுபனையூர் என்ற ஊரைச் சிறுநெல்லிக் கோட்டை யில் இருந்து அரசு புரிந்த 'விசயரகுநாத வாளாசி கிருட்டின கோபாலர்' என்பவர் திருப்பெருந்துறைக் கோயிலுக்குத் தானமாக முத்துகளை அளித்துள்ளார். அதனைச் செப்பேடா கவும் வெட்டி, திருவாவடுதுறை ஆதீனகர்த்தரிடம் அளித்துள்ளார். விடியற் காலையில் நடைபெறும் அர்ச்சனைக்கும் நிவேதனத்திற்கும் விளக்கிற்குமாக நன்கொடை வழங்கப்பட்டது. 'அம்பலத்தாடும் பண்டாரம்'

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்று திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அழைக்கப் பட்டுள்ளார். இச்செப்பேட்டின் காலம் 13-4-1729 ஆகும்.

பெரியநமசிவாய அம்பலவாணர்

திருப்பெருந்துறைக் கோயிலுக்கு மூன்று செப்பேடு களின் மூலம், பின்வேலப்ப தேசிகர் காலத்தில் நிலக்கொடை வழங்கப்பட்டன. மூன்றாவது செப்பேடு மடத்தின் வரலாற்றிற்கு மிக முக்கியமானது எனலாம். திருவாவடுதுறைமடம் 'பெரிய நமசிவாய அம்பலவாணப் பண்டாரச் சன்னிதி' எனப் பின்வேலப்ப தேசிகர் அழைக்கப்பட்டுள்ளார். மேலும் இராமலிங்கப் பண்டாரச் சன்னிதி' என்ற இயற்பெயரும் செப்பேட்டில் காண்கிறோம். பெரிய பண்டாரம் என்பதைப் பெரிய காறுபாறு என்ற பதவியுடன் ஒப்பிடக் கூடாது. குருமகான் அல்லது மடத்தின் தலைவர் என்ற பொருளிலேயே இங்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

திருக்கடவூர்ச் செப்பேடு

தஞ்சை மராட்டிய மன்னன் முதலாம் சரபோசியின் ஆட்சிக்காலத்தில் 3-3-1712 இல் திருக்கடவூர் ஏழு மாகாணச் சீமையைச் சேர்ந்தோர் திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாணத் தம்பிரான் வசம் 100 கலம் நெல் ஆண்டு தோறும் வழங்க முடிவெடுத்து அதை ஒரு செப்பேடாக வெட்டி ஆதீனத்திடம் அளித்துள்ளனர்.

திருப்பெருந்துறை

தென்னகத் தலயாத்திரை மேற்கொண்ட 'பின்வேலப்ப தேசிகர்' திருப்பெருந்துறையில் இருந்த போது ஒரு வைகாசி மாதம் பூரட்டாதி நட்சத்திரத்தில் சிவப்ரிபூரணமுற்றார். திருச்சிற்றம்பல தேசிகர் தம் குரு வேலப்ப தேசிகர் குருபூஜையினைச் சிறப்பாக நடத்தினார். ஆண்டுதோறும் குருபூசை விழா தற்போதும் நடைபெற்று வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

திருச்சிற்றம்பல தேசிகர்
பன்னிரண்டாவது பட்டம் - (1730-70)

சிவஞான சுவாமிகளின் மாணவர்களில் ஒருவராக இருந்த திருச்சிற்றம்பல தேசிகர் சென்னை மாநகரத்தில் 'அரும்பாக்கம்' என்ற பகுதியில் பிறந்தவர் ஆவார். சிவ ஆகம ஆராய்ச்சியையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்ட திருச்சிற்றம்பல தேசிகர், பின்வேலப்ப தேசிகரை யடுத்து திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமுதல்வர் ஆனார்.

சிதம்பரநாத முனிவர்

சிவஞான சுவாமிகளின் மாணாக்கர்களுள் ஒருவரான இலக்கணம் 'ஸ்ரீசிதம்பரநாத முனிவர்' திருச்சிற்றம்பல தேசிகரிடம் சந்நியாசம் பெற்றுக் கொண்டார்.

சோமசுந்தரகுரு

இராமநாதபுரம் 'சோமசுந்தரகுரு' என்பவரும் தேசிகரிடம் தீட்சை பெற்றுக் கொண்டார். எண்ணற்றச் சீடர்களைக் கொண்டிருந்த திருச்சிற்றம்பல தேசிகர் அற்புதங்கள் பல நிகழ்த்திய சாதனையாளர். இவரைப் போற்றும் சிலநூல்கள் உள்ளன. இவர் காலத்துச் செப்பேடு களும், கல்வெட்டுகளும் துறைசை ஆதீன வரலாற்றிற்கும் மடத்தின் சம்பிரதாயங்களுக்கும் பெரிதும் துணை புரிகின்றன.

மேகராகக் குறிஞ்சிப்பண்

திருச்சிற்றம்பல தேசிகர் ஒரு சமயம் இராமேச்சுரம் சென்று இறைவனை வழிபட்டுவிட்டு அடியார்களுடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இராமநாதபுரத்தில் தங்கியிருந்தார். ஞானதேசிகர் தங்கி யிருக்கும் செய்தியை அமைச்சர் முதலாயினோர் சேதுபதி மன்னரிடம் தெரிவிக்க அப்போது நாட்டில் மழையின் மையால் மக்கள் துன்புறுவதை எண்ணிய மன்னர், ஞான தேசிகர் மழை பெய்யும்படி செய்வார்களா? என்று அமைச்சரிடம் வினவ 'அவர்கள் அங்ஙனமே அனுக்கிரகம் செய்வார்கள்' என்று அமைச்சர் தெரிவித்தார். அரசர் எல்லோரையும் அழைத்துக்கொண்டு தேசிகரிடம் சென்றார். அனைவரும் தேசிகரின் திருவடிகளில் வீழந்து வணங்கிய பின்னர், அரசரின் வேண்டுகோளை அமைச்சர், தேசிகரிடம் முறையிட்டார். திருச்சிற்றம்பல தேசிகர் நடராச மூர்த்திக்குச் சிறப்பாகப் பூசை செய்து முடித்து, தேவாரத் திருப்பதிகங் களில் மேகராகக் குறிஞ்சிப் பண்களைப் பாடும்படி ஓதுவார்களுக்குக் கூறிவிட்டு, தாம் பஞ்சாக்கர செபத்துடன் சிவானந்த நிட்டையில் நெடுநேரம் இருந்தார். அப்போது மேகங்கள் நல்ல மழை பொழிய மன்னர் மகிழ்ந்து மாகேசுர பூசை, குருபூசை, சபாபதி பூசை ஆகியவை சிறப்பாக நடைபெற சர்வமான்யமாகச் சில ஊர்களை வழங்கியதுடன் செப்பேடும் வழங்கினார். தேசிகர் மழையை வேண்டி நிட்டையில் இருந்தபோது சொல்லிய பாடல் வருமாறு:

> **சைவ சமயம் சமயமெனின் அச்சமயத்**
> **தெய்வம் பிறைசூடும் தெய்வமெனின் - ஐவரைவென்**
> **றானந்த இன்பில் அழுந்துவது முத்தியெனின்**
> **வானங்காள் பெய்ம்மின் மழை.**

திருப்பொற்கோட்டை

மழை பெய்து நாடு வளம் பெற்றதால் சேதுபதி மன்னர் திருப்பொற்கோட்டை என்ற ஊரைத் தேசிகருக்கு இறையிலியாக வழங்கினார். அப்போது தேசிகர் பின் கண்ட பாடலைப் பாடினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

நதியாம் விரிசிலை நன்னகர் பொற்கோட்டைப்
பதியாம் துறைசைப் பதிக்கு - விதியாகத்
தானமிட்டான் சேதுபதி தாரணிதா னுள்ளளவும்
ஊனமில்லை யெந்தநா ளும்.

10-11-1733 இல் திருவாவடுதுறை ஆதீன மாகேஸ்வர பூசைக்காக அம்பலவாண சுவாமி சந்நிதியில் திருப்பொற் கோட்டை எனப்படும் திருப்பக்கோட்டையை மன்னர் சேதுபதி தானமாக அளித்துள்ளார். வியாபாரிகள் துறைசை ஆதீனத்திற்கு மகமை வழங்க வேண்டும் என்றும் மன்னர் ஆணையிட்டுள்ளார்.

மூட்டை ஒன்றுக்குப் பணம் ஒரு மாகாணி; சுமைக்கு அரை மாகாணி; சில்லறைக் கடைகளுக்கு மாதம் அரைக்கால்; துறைமுகத்தில் நெல் ஒரு கண்டிக்கு மூன்று மாகாணி; சுமைக்கு அரை மாகாணி; படகு ஏற்றுமதிக்குப் பத்துப்பணம், தீர்வைபட்டால் அரைப்பணம்; உப்பளத்தில் ஒரு பொதிக்கு (மூட்டைக்கு) அரைக்கால்பணம்; நாணயச் சாலையில் 100 பொன்னுக்குக் கால்பணம், என மகமை நிர்ணயிக்கப்பட்டது.

நன்செய் ஒரு மா நிலத்துக்கு நெல் குறுணி. புன்செய் ஒரு மா நிலத்துக்கு மூன்றுபடி என ·மகமை வரையறை செய்யப்பட்டது. தற்போதும் திருப்பொற்கோட்டையில் மடத்திற்குக் கிளைமடம் உள்ளது.

அம்பலவாணர் திருவடி

சேதுபதி மன்னருடைய சத்திரம் ஒன்று ஆவுடையார் கோயில் என்ற ஊரில் இருந்தது. அதையும் துறைசை ஆதீனமே நிருவகிக்க வேண்டும் என்றும் மன்னர் கேட்டுக் கொண்டுள்ளார். 'திருவாவடுதுறைப் பண்டாரச் சன்னதி மடம்' என்றே ஆதீனம் இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அரிய வரலாற்றைக் குறிப்பிடும் இச்செப்பேட்டின் இறுதியில் 'அம்பலவாணன் திருவடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாழ்க' என்று எழுதப் பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தின் 13 ஆவது பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகர், திருச்சிற்றம்பல தேசிகரின் காலத்தில் இளைய பட்டத்தில் இருந்ததால் அம்பலவாணன் என்ற சொல் அவரையும் குறிக்கலாம். இனி, இறைவனைக் குறிப்பதாக எடுத்துக் கொண்டாலும் பொருத்தமாகவே இருக்கும்.

பொசுக்குடிச் செப்பேடு

குருபரம்பரை விளக்கம் என்ற நூலில் திருப்பொற் கோட்டையைத் தானமாக மன்னர் வழங்கிய செய்தி விரிவாக உள்ளது. ஆயின் திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகளில் திருப்பொற்கோட்டை தானம் வழங்கிய செப்பேட்டின் காலத்திற்கு முன்பாகவே 'பொசுக்குடி' என்ற ஊரைச் சேதுபதி மன்னர், திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வழங்கிய விவரம் காண்கிறோம். காலம் 1-9-1731.

செப்பேடுகள்

ஏறக்குறைய 14 செப்பேடுகள் இத்தேசிகர் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. உருத்திரகோடி தேசிகருக்குப் பின்னர் இவர் காலத்தில்தான் மடத்திற்கு மிகுதியான ஊர்கள் இறையிலியாகக் கிடைத்துள்ளன.

முதுகுளத்தூர்

இரகுநாத சேதுபதி 1-9-1731இல் 'பொசுக்குடி' என்ற ஊரை மடப்புறமாகத் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு அளித்துள்ளார். இச்செப்பேட்டில் ஆதீன கர்த்தர், 'திருவாவடுதுறைப் பண்டாரச்சன்னிதி' என்றே அழைக்கப் பட்டுள்ளார். பொசுக்குடி என்ற ஊர் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளது.

வணங்காமுடித் தொண்டைமான்

அறந்தாங்கிப் பகுதியில் சிற்றரசனாக இருந்த வணங்கா முடித் தொண்டைமான் என்பவர் திருவாவடுதுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பண்டாரமவர்களுக்கு மாகேசுர பூசைக்கு வேண்டி, 'தப்பாதான் வயல்' என்ற நிலத்தைச் சர்வமானியமாக அளித்துள்ளார். இச்செப்பேடு 20-10-1731இல் வெளியிடப் பட்டது. திருப்பெருந்துறை என்ற பெயர் 'ஆவுடையார் கோயில்' எனச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

திருப்பைஞ்ஞீலி

கி.பி. 1738இல் கூடிய திருப்பைஞ்ஞீலிச் செப்பேடு ஆயிரவைசியர், கோமுட்டிச் செட்டியார், கார்குடியார் ஆகியோர் ஒன்றுகூடி திருப்பைஞ்ஞீலி இறைவன் நீலிவனநாத சுவாமி மற்றும் விசாலாட்சி அம்மன் அர்த்தசாம கட்டளை அபிஷேக பொருட்களுக்காக வேண்டி மகமை வழங்க உடன்படுகின்றனர். அம்மகமையைக் கொண்டு கட்டளையை நிறைவேற்ற வேண்டி, திருவா வடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாணத் தம்பிரானிடம் செப்பேடும் வெட்டித் தருகின்றனர்.

அம்பலவாணத் தம்பிரான்

செப்பேட்டில் வரும் 'சடை அம்பலவாணத் தம்பிரான்' திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் இளைய பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகர் எனலாம். இவரே 13ஆவது பட்டத்தில் இருந்தவர் ஆவார். மடத்தில் மாகேசுர பூசைக்கும் மற்ற செலவுகளுக்கும் மேற்கண்ட மகமையைப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

கோயிலுக்கு இரண்டு பங்கும் மடத்தின் மாகேசுர பூசை போன்றவற்றிற்கு ஒரு பங்கும் என வரையறை செய்யப்பட்டன. திருப்பைஞ்ஞீலியில் 1936 வரை திருவாவடுதுறையின் கிளைமடம் இருந்துள்ளது.

துறையூர்ப் பாளையக்காரர்

துறையூரில் இருந்து நிர்வாகம் செய்த இலிங்கா ரெட்டி செப்பேட்டில் உள்ளார். மேலும் வெங்கடாசல ரெட்டியார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

போன்றோர் பெயர்கள் இதில் இடம் பெற்றுள்ளன. காரியகர்த்தராக முத்துவசவாரெட்டியார் அவர்களும் பிரதானியாக நந்தியப்பிள்ளை அவர்களும் இருந்துள்ளனர். முகவனூர், அம்மன்பேட்டை போன்ற ஊர்களைச் சேர்ந்த வணிகர்கள் மகமை வழங்க உடன்பட்டுள்ளனர்.

இச்செப்பேட்டின்படி திருப்பைஞ்ஞீலி என்ற தலம் மேலைச் சிதம்பரம் என வழங்கப்பட்டுள்ளது உறுதியா கிறது. கோமுட்டிச் செட்டியார், ஆயிரவைசியார் என இரு திறத்தவர் த்னித்தனியாக இச்செப்பேட்டில் குறிக்கப் பட்டுள்ளனர்.

முதலியார்

'முதலியார் அவர்கள் சொற்படி நடப்பித்துக் கொள்ளக் கடவராகவும்' என்று செப்பேடு கூறுகிறது. மடத்தின் தலைவரை முதலியார் என்ற சொல் சுட்டுகிறது எனலாம்.

குமாரதேவர் மடம்

துறையூர்ரெட்டி மரபின் முன்னோர் துறையூர் வீரசைவ மடத்திற்குப் ·பொன்னும் பொருளும் வழங்கியமைக்கு விருத்தாசலம் குமாரதேவர் மடத்தில் செப்பேடு உண்டு.

தர்மராஜர் கோயில்

துறையூர் தர்மராஜர் கோயில் தினப்படி பூசை நைவேத்தியத்துக்கும் திருவிழா, திருப்பணி போன்ற வற்றிற்கும் வெங்கடாசல ரெட்டியின் மகனான பிரசன்ன வெங்கடாசலம் நன்செய், புன்செய், மரங்கள் வழங்கி யுள்ளார். காலம் 1833 ஆகும்.

அபிநவமங்கலம்

கி.பி. 1784இல் வேங்கடதேவ மகாராயர் ஆட்சியின் போது இராமேஸ்வரம் கிரிதனுஷ்கோடி சாஸ்திரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

அவர்களுக்கு சதுர்த்த கோத்திரம் செட்டிக்குளம் பல்லகுல நல்லப்ப ரெட்டியார் பேரன், இலிங்க ரெட்டியார் மகன் வெங்கடாசல ரெட்டியார் அன்னதான தர்மத்திற்காக 'அபிநவமங்கலம்' என்ற ஊரைத் தானமாக அளித்துள்ளார். இதற்கு ஒரு செப்பேடு திருப்பனந்தாள் காசிமடத்தில் உள்ளது. எனவே துறையூர் ரெட்டிமரபினர் பல்வேறு மடங்களுக்கும் பல்வேறு கோயில்களுக்கும் பல்வேறு காலங்களில் நன்கொடைகள் அளித்துள்ளனர் எனலாம்.

அழுஞ்சியேந்தல்

'முத்துவணங்காமுடி தொண்டைமானார்' என்ற குறுநில மன்னர் 1-1-1741இல் 'அழுஞ்சியேந்தல்' என்ற ஊரைச் சர்வமான்யமாகத் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வழங்கியுள்ளார். மாகேஸ்வர பூசைக்காக இவ்வூர் வழங்கப் பட்டது. தொண்டைமானார் என்ற மரபினரின் கீர்த்தி இச்செப்பேட்டில் விரிவாக உள்ளது. 'திருவாவடுதுறைப் பண்டாரச்சந்நிதிகள்' என்று திருச்சிற்றம்பல தேசிகர் குறிக்கப்பட்டுள்ளார்.

நாட்டுச்சேரி

திருமலை ரகுநாதசேதுபதி அவர்கள், கி.பி. 1661இல் கங்கணி, கட்டி, செரினாஞ்சிவயல், நானாக்குடி என்ற நான்கு ஊர்களையும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வழங்கி யிருந்தார். எக்காரணத்தாலோ ஆதீனத்தின் பொறுப்பில் நானாக்குடி இல்லாமல் இருந்தது. எனவே இவ்வூருக்குப் பதில் 31-12-1752இல் நாட்டுச்சேரி என்று ஊரைச் சேதுபதி மன்னர் அளித்துள்ளார். இரண்டும் திருவாவடுதுறை மடத்தின் ஊர்கள் ஆகும்.

நமசிவாய

சிற்பங்களுடன் கூடிய நாட்டுச்சேரிச் செப்பேட்டில், சிறுதேர் போன்ற அமைப்பும், 'ந' என்ற எழுத்தும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெட்டப்பட்டுள்ளன. 'ந' என்ற எழுத்து 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தைக் குறிப்பிடுகிறது எனலாம். இனி, ஆதீன குருமுதல்வராகிய நமச்சிவாயரையும் குறிப்பிடுகிறது எனலாம். ஏனெனில் முயலகனின் கீழ் 'சிவமயம்' என எழுதப்பட்டுள்ளதால் ஆதீனகுருமுதல் வரான நமச்சிவாயரைக் குறிக்கும் என்பதே பொருத்த மாகும். திருச்சிற்றம்பல தேசிகர் சிவ ஆகமத்தில் ஈடுபட்டவர் என்பதால் செப்பேடு சிவமயமாகக் காட்சி தருகிறது. செப்பேட்டில் மடத்தின் தலைவர் 'அம்பலவாணப் பண்டாரச் சன்னிதி' என அழைக்கப் பட்டுள்ளார்.

இலிங்கம்மன்

மைசூர் கிருஷ்ணராஜ உடையார் ஆட்சியின்போது இவருடைய தளவாயாகவும் காரியகர்த்தாவாகவும் வீரராசய்யன் என்பவர் இருந்துள்ளார். அப்போது கோயம்புத்தூர் பகுதியில் வரி வசூல் செய்யும் அதிகாரியாகக் குறிக்கார மாதய்யன் என்பவர் இருந்துள்ளார். இவரின் கீழ் இருந்த 'ராசஸ்ரீசங்கரய்யன்' என்பவரின் மனைவி 'இலிங்கம்மன்' காசிமாநகரில் அன்னதான சத்திரம் ஏற்படுத்தித் தந்தார். சத்திரத்தில் அன்னதானம் இடை விடாமல் நடைபெறக் கோவையைச் சுற்றி பல ஊர்களில் உள்ள வணிகர்கள் மகமை தர முடிவு செய்து செப்பேடாகவும் வழங்கியுள்ளார்கள். காலம் 3-12-1765 ஆகும். அதாவது திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக அப்போது திருச்சிற்றம்பல தேசிகர் இருந்துள்ளார். இச்செப்பேட்டைத் தயாரித்தவர் தானப்ப முதலியார் குமாரன் நீலகண்டன் ஆவார். மதுரை தானகோனேரியப்ப முதலியார் மடத்தில் தானப்ப முதலியார் பெயர் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. எனவே அம்மரபில் வந்தவராக இவர் இருக்கலாம். செப்பேட்டில் திருவாவடுதுறை ஆதீனம் என்ற பெயர் இல்லை. எனினும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

செப்பேடும் காசியில் உள்ள மடமும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமாக உள்ளன. காசிவிசுவநாதர், விசாலாட்சியம்மன் பெயரில் அன்னதானம் வழங்கப் பட்டது. செப்பேட்டில் விசுவநாதர், விசாலாட்சி ஓவிய மாகக் காட்சி தருகின்றனர். அன்னதானச் சத்திரமே பிற்காலத்தில் கண்ணப்பசாமி மடமாயிற்று. சைவகந்தப்ப முதலியார் அன்னதானச் சத்திரத்தை விரிவுபடுத்தி திருவாவடுதுறை ஆதீனத்திடம் வழங்கியதற்கு மடத்தில் வடமொழியில் கூடிய ஓர் ஆவணம் உள்ளது.

செட்டிகள் மகமை

இலிங்கம்மன் ஏற்படுத்திய காசி அன்னதான சத்திரத்திற்கு இருபத்திநாலு மனை தெலுங்குச் செட்டிகள், பன்னிரண்டு நகரத்துப் பலர், வேடசெந்தூர் ராவுத்தமார், கோமுட்டிச் செட்டிகள், தேவாங்குச் செட்டிகள் ஆகியோர் மகமை வழங்க உடன்பட்டுள்ளனர். இராவுத்தமார் என்பது முஸ்லீம் வணிகரைக் குறிக்கும்.

கூனம்பட்டி மடம்

கோவையைச் சேர்ந்த எட்டுவகைப் பலரும் பட்டடக் காரரும் *5-8-1747*இல் கூடி கூனம்பட்டித் திருமடத்திற்கு மகமை அளித்துள்ளதற்குக் கூனம்பட்டி மடத்தில் உள்ள செப்பேடு சான்றாக உள்ளது. இச்செப்பேட்டின் காலத்தில் கோயம்புத்தூர் அதிகாரியாகப் புட்டராசய்யனும் சுபேதராகச் சீனிவாசய்யனும் இருந்துள்ளனர். வீரராயன்காசு, வீரராயன் மாகாணி ஆகிய காசுகள் இதில் இடம்பெறத் திருவாவடுதுறை ஆதீனத்தின் காசிச் செப்பேட்டில் வேறு காசுகள் இடம் பெற்றுள்ளன.

திருசிதம்பர சுவாமிகள்

கி.பி. *1786*இல் சைவ கந்தப்ப முதலியார் திருவா வடுதுறை ஆதீனத்திற்கு வாரணாசியாகிய காசியில் மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கட்டித்தர 1000 வராகன் பொற்காசினைச் செலவிட்டுள்ளார். திருவாவடுதுறை க்ஷேத்திரத்தில் 'ஸ்ரீ நமசிவாய சுவாமி' களின் பெருஞ்சீடர் திருசிதம்பர சுவாமிகளின் சீடர் அம்பலவாண சுவாமி குருவிற்காகத் தண்ணீர்க்குளம் முதலியார் பேரனும் சைவமுதலியார் மகனுமான சைவ கந்தப்ப முதலியார் தான் சுயமாகச் சம்பாதித்த 1000 வராகனிலிருந்து காசி க்ஷேமேஸ்வர துறையில் இருந்த வைத்தியலிங்கத் தம்பிரான் மற்றும் கண்ணப்பத் தம்பிரான் என்ற இரு துறைசை ஆதீனச் சீடர்களின் மூலமாகப் பூமி பெற்றுஸ்தாபனம் செய்யப்பட்ட மடத்திற்குத் தன் உரிமையை விட்டுக் கொடுத்துள்ளார். அதாவது காசியில் இருந்த அன்னதான சத்திரமே விரிவுபடுத்தப்பட்டு மீண்டும் மடத்திடம் வழங்கப் பட்டது. தற்போதுள்ள கண்ணப்பசாமி மடமே சைவ கந்தப்ப முதலியார் ஏற்படுத்திய மடமாகும். ஆவணத்தில் குறிப்பிட்டபடியே மடத்தின் அமைவிடம் அமைந்துள்ளது. வடமொழியில் இந்த ஆவணம் எழுதப் பட்டாலும் சாட்சிகளும் தானம் தந்தவரும் தமிழிலேயே ஒப்பம் இட்டுள்ளார்கள். பத்திரம் தயாரித்தவர் வடமொழியில் ஒப்பம் இட்டுள்ளார். ஒரு சாட்சி தெலுங்கில் ஒப்பம் இட்டுள்ளார். இவ்வளவு ஆவணங்கள் இருக்கும் போது தனிநபர் ஒருவர் ஆதீனத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றவே தற்போது வழக்கு நடந்து வருகிறது.

அம்பலவாண தேசிகர்

ஆவணத்தில் 'அம்பலவாண தேசிகர்' என்ற பதிமூன்றாவது தேசிகரின் பெயர் உள்ளது. இவர் திருச்சிற்றம்பல தேசிகரின் சீடரும் அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவரும் ஆவார். இச்செப்பேட்டில் அம்பலவாணரின் குருவாகத் திருசிதம்பர தேசிகர் பெயர் உள்ளது. உ்ண்மையில் திருச்சிற்றம்பல தேசிகர் என்ற பெயரே 'திருசிதம்பர தேசிகர்' என வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சிற்றம்பலத்தைச் சிதம்பரம் என மொழிபெயர்த்தவர் திரு என்பதை ஸ்ரீ என மாற்றாமல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திரு என்றே வடமொழியிலும் எழுதியுள்ளார். தேசிகர் என்பதையும் ஆசாரியார் என மாற்றாதது சிறப்பான மொழி பெயர்ப்பாகும். திருச்சிற்றம்பல தேசிகர் அல்லது திரு சிதம்பர தேசிகரின் குருவாக 'நமசிவாய சுவாமிகள்' இச்செப்பேட்டில் குறிக்கப்படுகிறார். பின்வேலப்ப தேசிகரை இச்சொல் குறிக்கலாம். இனி, ஆதீன முதல் குருவான நமசிவாய தேசிகரையும் சுட்டலாம்.

சதுர்முகலிங்கேசுவரர்

மேற்கண்ட ஆவணத்தில் குறிப்பிட்டது போன்றே மடத்தின் தெற்கில் சதுர்முக லிங்கேஸ்வரர் காட்சி தருகிறார். மக்கள் இவரைப் பாதாளலிங்கேஸ்வரர் என்கின்றனர்.

கண்ணப்பசாமி மடமும் கல்வெட்டுகளும்

காசிமடத்தின் கிழக்கு நுழைவாயிலின் இருபுறமும் தனித்தனியாகப் பார்சி மற்றும் தமிழில் கண்ணப்பசாமி வெட்டி வைத்த கல்வெட்டுகள் உள்ளன. இரண்டின் காலமும் 13-4-1787. பார்சி மொழியில் கல்வெட்டின் காலம் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கல்வெட்டில் காலம் குறிக்க வில்லை. எனினும் இரண்டின் செய்தியும் ஒன்றேயாகும்.

கண்ணப்பத் தம்பிரான் மற்றும் வைத்தியலிங்கத் தம்பிரான் இருவரும் பதிமூன்றாவது பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகரின் சீடர்கள். இவர்கள் திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காசி அன்னதான சத்திரத்தை நிருவகித்து வந்துள்ளார்கள். கண்ணப்ப சாமிகள், மடத்திற்குப் பலவகையிலும் சொத்து சேர்த்துத் தந்துள்ளார்கள். கண்ணப்பசாமி கிழக்கு மடம் (Kannappa Swamy East mutt) ஒன்றும் காசியில் காண்கிறோம்.

குமரகுருபரர் என்ற சைவ அடியார், தருமபுர ஆதீனகர்த்தர் மாசிலாமணி தேசிகரின் அருளைப் பெற்றவர்; காசியில் மடம் கட்டி மிகுதியாகச் சொத்து சேர்த்தது போலவே கண்ணப்பசாமி என்பவர் அம்பலவாண தேசிகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருள்பெற்று, திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் காசியில் உள்ள மடத்தை விரிவுபடுத்திச் சொத்தையும் சேர்த்துத் தந்துள்ளார்.

கும்பாபிடேகம்

கண்ணப்பசாமி ஏற்படுத்திய மடத்தில் பிற்காலத்தில் சபாபதி கோயிலில் ஏழு லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டு கும்பாபிஷேகமும் நடத்தப் பட்டுள்ளது.

காளத்தி ஏந்தல்

29-5-1767 இல் 'முத்துவடுக உடையாத்தேவர்' என்பவர் திருவாவடுதுறை பண்டாரச் சந்நிதியில் அம்பலவாண சுவாமி பூசைக்கும் மாகேஸ்வர பூசைக்குமாகக் 'காளத்தி ஏந்தல்' என்ற ஊரை வழங்கியுள்ளார். அரண்மனைக் கட்டுக் குத்தகை மட்டும் செலுத்திவிட்டு உரிமையை அனுபவிக் கலாம் என்று செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

கோடிமங்கலம்

இதே மன்னர் மீண்டும் கி.பி. 1770இல் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கோடிமங்கலம் என்ற கிராமத்தை அளித்துள்ளார். ஊர் இறையிலியாக வழங்கப்பட்டது.

முத்துவடுக பெரிய உடையாத்தேவர்

முத்துவடுக பெரிய உடையாத்தேவர், அரசு நிலை யிட்ட விசைய ரகுநாத சசிவர்ண பெரிய உடையாத்தேவரின் மகன் ஆவார். சேதுபதி மன்னர்களின் கீழ்ச் சிவகங்கைச் சீமையில் இவர்கள் நாடாண்டுள்ளார்கள். இவர்களும் சேதுபதிகள் போன்று திருச்சிற்றம்பல தேசிகருக்கு இறையிலியாக நிலங்கள் அளித்துள்ளார்கள்.

சிவகாசி நாடார்கள்

கி.பி. 1769இல் சிவகாசி நாடார்கள் மற்றும் பலபட்டடையர் ஒன்றுகூடி 'திருவாவடுதுறை சுவாமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

தேசிகர்மூர்த்தி அருமை திருவாக்காய் திருமுகம் கட்டளை யிட்டருளியபடிக்குத் தலைக்கட்டு ஒன்றுக்கு ½ பணம்' வழங்க உடன்பட்டு செப்பேடும் வெட்டித் தந்துள்ளனர். திருச்செந்தூர்க் கோபுரத் திருப்பணிக்கு மேற்படி மகமை யைத் திருவாவடுதுறை ஆதீனம் செலவிட வேண்டும் என்று வேண்டியுள்ளனர். இச்செப்பேடு தொடர்பாக மெய்கண்டார் இதழில் அடியேன் கட்டுரை எழுதி யிருந்தேன். இதனைப் படித்த சென்னை வாழ்நாடார்கள் 28-9-1997இல் செப்பேட்டின் உரிமையாளரான ஆதீன கர்த்தருக்கு ரூ 10,000 வழங்கினர். ஆதீனத்தின் சார்பாக அடியேன் விழாவில் பங்குகொண்டு பணம் பெற்று வந்து ஆதீனத்திடம் சமர்ப்பித்தேன்.

திருவெண்ணெய் நல்லூர்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் கோயிலில் சக ஆண்டு 1708இல் கூடிய ஒரு கல்வெட்டுள்ளது. அதில் பன்னிரண்டாவது தேசிகரின் பெயரும் பதிமூன்றாவது தேசிகரின் பெயரும் உள்ளன. கல்வெட்டின் வாசகம் வருமாறு.

1. கயிலாச நந்திகேசுர பரம்பரை திருவெண்
2. ணைநல்லூர் மெய்கண்ட தேசிகர் ஆலயஞ் சீ
3. ரண உத்தாரணம் பண்ணினது மெயிகண்ட
4. சந்ததித் திருவாவடுதுறை நமசிவாய தே
5. சிகளுப் பன்னிரண்டாவது திருச்சிற்றம்ப
6. ல தேசிகரும் அம்பலவாண தேசிகரும் கட்ட
7. ளை யிட்டு மடத்துச் சிதம்பரநாத தம்பிரா
8. னும் மாணிக்கவாசக ஒதுவார் தம்பிரானும்
9. இருந்து திருப்பணி செய்வித்தது. சாலிவாகன
10. சகாத்தம் 1708 பராபவ அற்ப
11. சி மாதம் 26-ம் தேதி கும்பாபிசேக நிறைவே
றினது. மெய்கண்டார் துணை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இக்கல்வெட்டின்படி 1786க்கு முன்பே மெய்கண்டார் கோயில் இருந்துள்ளது. இது பழுதடைந்ததால் திருவா வடுதுறை ஆதீனகர்த்தர் திருச்சிற்றம்பல தேசிகரும் இளைய பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகரும் கோயிலைப் புதுப்பிக்கும்படி தங்களுடைய தம்பிரான்களுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்கள். தம்பிரான்களும் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வித்துள்ளார்கள்.

மாணிக்கவாசக ஓதுவார்

திருப்பணி மேற்கொண்ட தம்பிரான்களில் ஒருவரான சிதம்பர நாதத் தம்பிரான் என்பவர் திருச்சிற்றம்பல தேசிகரிடம் உபதேசம் பெற்றவர் ஆவார். திருப்பாதிரிப் புலியூர்ப்புராணத்தை இவர் பாடியுள்ளார். மாணிக்கவாசக ஓதுவார்த் தம்பிரான் வரலாறு தெளிவாக அறிய இயல வில்லை. எனினும் ஒன்பதாவது பட்டத்தில் இருந்த இராமலிங்கதேசிகரின் பூர்வாசிரம குலமரபில் வந்த வயித்தியலிங்க ஓதுவாமூர்த்தியின் புத்திரரும் பதிமூன்றா வது தேசிகர்பால் தீட்சையும் சித்தாந்த சாத்திரோபதேசமும் பெற்றவருமான குருசாமி என்ற பட்டப் பெயருடையவரே மாணிக்கவாசக ஓதுவார் தம்பிரானாக இருக்க வேண்டும். தேவாரம் ஓதிய குருசாமியைத் தொட்டிக்கலை சுப்பிரமணிய தம்பிரான் பெரிதும் பாராட்டி யுள்ளார்.

> ஒருசாமி வாழ்ந்திருக் கோமுத்தி யூர்தனி லுற்பவித்து
> வருசாமி எங்கள் வயித்திய லிங்கம் வரம்புரிந்து
> தருசாமி முத்தமிழ் சங்கீத சாமிநற் சாந்தகுணக்
> குருசாமி தீங்குர லெந்நாளும் கோகிலமே.

என்பது பாடலாகும்.

திருவெண்ணெய் நல்லூரில் உள்ள திருவாவடுதுறை ஆதீனத்தின் தம்பிரான் ஒருவர் கிளைமடத்தைக் கவனித்து வருகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

தளிகை மாநகர்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கல்லிடைக்குறிச்சியில் உள்ள தளிகை மடத்தின் நுழை வாயில் கதவில் பொறிக்கப்பட்ட 48 வரிகளைக் கொண்ட கல்வெட்டின் வாசகம் வருமாறு:

1. 908	17. ஞ்ச	33. ரத்
2. பரி	18. ாட்	34. தும
3. தா	19. சர	35. டா
4. பி.	20. தே	36. லை
5. தை	21. சிக	37. யப்
6. மீ உ	22. ன்க	38. பூமு
7. பிர	23. ல்	39. கப்
8. திட்	24. லி	40. புநீ
9. டை	25. டை	41. டூழி
10. பண்	26. க்கு	42. வா
11. ணின	27. றிச்	43. ழ்க
12. திரு	28. சித்	44. கு
13. வா	29. தளி	45. ருபா
14. வடு	30. கை	46. தந்
15. துை	31. மா	47. து
16. றப	32. நக	48. ணை.

பூமுகப்பு

கொல்லம் 908இல் அதாவது கி.பி. 1733ஆம் ஆண்டில் திருவாவடுதுறை பஞ்சாட்சர தேசிகராய் அப்போதிருந்த தேசிகர் திருச்சிற்றம்பல தேசிகர் ஆவார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கல்லிடைக் குறிச்சியில் உள்ள தளிகை மாநகரத்து மடாலயத்தில் பூமுகப்பினைச் செய்தளித்த தேசிகர் புகழ் வாழ்க என்பது கல்வெட்டின் பொருளாகும். பூமுகப்பு என்பது மரக்கதவாகும்.

மானேந்தியப்பர்கோயில்

மானேந்தியப்பர் கோயில் மரக்கதவும் கொல்லம் 900இல் திருச்சிற்றம்பலவர் காலத்தில் ஏற்படுத்தப் பட்டதே யாகும். இரட்டைக் கதவுகளில் 33 சட்டங்களில் தென் புறமும் 33 சட்டங்களில் வடபுறமும் மரச்சிற்பங்களும் ஆறுவரி கல்வெட்டும் மூன்று துறைசை ஆதீனத் தம்பிரான்களின் சிறபங்களும் உள்ளன. கல்வெட்டின் காலம் கி.பி. 1725 என்பதால் பின்வேலப்ப தேசிகர் காலத்தில் இளையபட்டத்தில் இருந்த திருச்சிற்றம்பலவர் திருப்பணி எனலாம். செல்வ குரு அம்பலம் என்று கல்வெட்டில் பெயர் உள்ளது. திருச்சிற்றம்பல தேசிகரின் பெயரே இவ்வாறு வெட்டப் பட்டுள்ளது.

மரச்சிற்பங்கள்

சிவனுடைய பல்வேறு மூர்த்தங்களும் அடியார்களின் திருவுருவங்களும் இங்குள்ளன. நான்கு கரங்களுடன் அம்மன், சிவலிங்கத்தை வழிபடும் சிற்பம், இரு கரங்களுடன் அம்மன், சிவலிங்கத்தை வழிபடும் சிற்பம், இராம இலக்குமணர் வில் அம்புடன் சிவனை வழிபடும் உருவம், கண்ணைத் தோண்டும் நிலையில் கண்ணப்பர் உருவம், ஆறுகரங்களுடன் கூடிய அம்மன் சிற்பம், சிவலிங்கத்தின் மீது பூச்சொரியும் தம்பிரான் சிற்பம், சாஸ்தாவை வழிபடும் அடியார் சிற்பம், சிவனை வழிபடும் கிளி உருவம் ஆகியவை கண்ணிற்கு விருந்தாகும். ஊர்த்துவதாண்டவரைக் கண்டு வியக்கும் அம்மன் சிற்பம், மார்க்கண்டேயனைக் காக்க யமனை உதைக்கும் காலாரி மூர்த்தி ஆகியவை கவின்மிகு சிற்பங்கள் எனலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

சிவபெருமான் கைலாயக்காட்சி அற்புதக் காட்சியாகும். தம்பிரான்களுடன் ஆதீனகர்த்தர், ஆதீன இளைய பட்டம் எனப் ப்ல்வேறு மரச்சிற்பங்கள் கதவுகளில் உள்ளன.

திருப்பணி

கல்லிடைக்குறிச்சியில் உள்ள இரு கல்வெட்டுகளை நோக்கும்போது மானேந்தியப்பர் கோயில் திருப்பணியினை மேற்கொண்டதுடன் தளிகைமடத்தின் திருப்பணியினையும் வெவ்வேறு காலங்களில் திருச்சிற்றம்பல தேசிகர் புரிந்துள்ளார் என்பது உறுதியாகிறது.

தொட்டிக்கலைச் சுப்பிரமணியர்

திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் திருத்தணிகைக் கச்சியப்பரும் காட்டுமன்னார்கோவில் சுப்பிரமண்யர் என்பவரும் தேசிகரிடம் சமயதீட்சையும் விசேஷ தீட்சையும் மந்திர காஷாயமும் பெற்று மடத்தின் அடியவர்கள் ஆனார்கள். தொட்டிக்கலைச் சுப்பிரமணியர் என்பவர் திருச்சிற்றபம்பல தேசிகர் மற்றும் பதிமூன்றாவது பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகர் காலத்தில் வாழ்ந்தவர். கச்சியப்பர், சிவஞான முனிவர் போன்று இவரும் பல பாடல்களைப் பாடியுள்ளார். இவர் இயற்றிய நூல்கள் வருமாறு.

1. கலைசைக் கோவை
2. கலைசைச் சிலேடைவெண்பா
3. கலைசைச் சிதம்பரேசர் சந்நிதி முறை
4. கலைசைச் சிதம்பரேசர் வண்ணம்
5. கலைசைச் சிதம்பரேசர் பஞ்சரத்தினம்
6. கலைசைச் சிவகாமியம்மை பஞ்சரத்தினம்
7. கலைசைச் சிதம்பரேசர் பரணி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

8. கலைசைச் சிதம்பரேசர் கட்டியம்

9. திருவாவடுதுறைக் கோவை

10. திருக்குற்றாலச் சித்திரசபைத் திருவிருத்தம்.

11. பழனிக் குழந்தைவேலர் பஞ்சரத்தின மாலை

12. சுப்பிரமணியர் திருவிருத்தம்

13. திருத்தணிகைத் திருவிருத்தம்

14. வடதிருமுல்லைவாயில் கொடியுடையம்மைப் பிள்ளைத்தமிழ்

15. ஆயலூர் முருகன் பிள்ளைத்தமிழ்

16. திருச்செந்திற் சந்த விருத்தம்

17. ஆவிநன்குடி கைலாயநாதர் பதிற்றுப்பத்தந்தாதி

18. திருமாளிகைத் தேவர் திருவிருத்தங்கள்

19. திருச்சிற்றம்பல தேசிகர் சந்த விருத்தம்.

21. அம்பலவாண தேசிகர் ஆனந்த களிப்பு

22. அம்பலவாண தேசிகர் பஞ்சரத்தின மாலை

23. அம்பலவாண தேசிகர் வண்ணம்

24. சிவஞான முனிவர் மீது தோத்திரம்

25. சிவஞான முனிவர் மீது கீர்த்தனை

26. இலக்குமி தோத்திரம்

27. அறம் வளர்த்த நாயகி பிள்ளைத்தமிழ்

28. தனிப்பாடல்கள்

29. ஞானமா நடராசர் கட்டியம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

30. சுப்பிரமணிய தேசிகர் ஆனந்த களிப்பு

31. சிவஞான முனிவர் மீது தோத்திர பஞ்சகம்

மேலும் சில நூல்களை இவர் இயற்றியிருக்க வேண்டும்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம்

'திருவாவினன்குடி பதிற்றுப்பந்தந்தாதி' என்ற ஓர் ஓலைச் சுவடியை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் பதிப்பதித்துள்ளது. ஓலைச் சுவடியில் 'இந்த அந்தாதி திருவா வடுதுறை நமசிவாய குருபரம்பரையில் அம்பலவாண தேசிகருக்குப் புத்திரனான சுப்பிரமணிய முனிவன் பாடியது' என்ற குறிப்பு உள்ளது. புத்திரன் என்ற சொல் சீடன் என்ற பொருளில் இங்கு ஆளப்பட்டுள்ளது.

கவிராட்சசர்

சிவஞான சுவாமிகளின் பன்னிரண்டு மாணாக்கர்களுள் கச்சியப்ப முனிவர் முதன்மை மாணாக்கர் ஆவார். திருத்தணிகை என்ற ஊரில் சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்த இவர்; சிவத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று இறைவனை வழிபட்டதுடன் பல நூல்களும் இயற்றி யுள்ளார். எளிதில் மிகவிரைந்து கவிபுனையும் ஆற்றலை நோக்கி இவரைக் 'கவிராட்சசர்' என ஆன்றோர் அழைத்தனர்.

திருவானைக்காப் புராணம்

இவர் திருவானைக்காவல் சென்று அண்ணலையும் அன்னை அகிலாண்டேசுவரியையும் கண்டு வணங்கினார். திருவானைக்காவல் புராணமும் பாடினார்.

பூவாளூர்ப் புராணம்

திருச்சியருகேயுள்ள பூவாளூர் சென்று பூவாளூர்ப் புராணம் பாடி இறைவனை வழிபட்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பேரூர்ப் புராணம்

கோயம்புத்தூர் அருகேயுள்ள பட்டீசுரம் சென்று இறைவனை வழிபட்டபின் மிகப்பெரிய நூலான பேரூர்ப் புராணம் பாடினார். இந்நூலை திருவாவடுதுறை ஆதீனம் பதிப்பித்துள்ளது.

திருத்தணிகை

இவர் திருத்தணி முருகன் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். விசாகப்பெருமாள் ஐயர், சரவணப் பெருமாள் ஐயர் ஆகிய இருவருக்கும் தந்தையாகிய கந்தப்பையர் என்பவர் கச்சியப்பரிடம் கல்வி பயின்றார்.

தணிகையாற்றுப்படை

திருத்தணிகைப் புராணம் என்ற கருத்துச்செறிவும் கற்பனை நயமும் கொண்ட நூலைக் கச்சியப்பர் யாத்துள்ளார். கந்தப்பையர் வயிற்று வலியால் துடித்தபோது தணிகையாற்றுப்படை என்ற நூலைப் பாடி நோய் நீங்கச் செய்தார். தணிகாசலப் பெருமான் மீது பதிற்றுப் பத்தந்தாதியும் பாடியுள்ளார்.

பிரசன்ன விநாயகர்

சென்னையில் பிரசன்ன விநாயகர் மீது யமக அந்தாதியும் பிள்ளைத்தமிழும் இவர் பாடியுள்ளார்.

விநாயகப் புராணம்

பார்க்கவ புராணமெனப் பெயர் வழங்கும் விநாயகப் புராணத்தை வடமொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்த்து விநாயகப் புராணம் என்ற பெயரில் கச்சியப்பர் பாடி முடித்தார். இந்நூல் சென்னையில் அரங்கேற்றம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. ஐயாப்பிள்ளை என்ற பிரபுவை அரங்கேற்றத்துக்கு அழைத்தபோது அவர் முனிவரின் பெருமையை அறியாதவர் என்பதால் 'இஃதென்ன

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

இராமாயணமோ நாம் வருவதற்கு?' என்று ஏளனமாகக் கூற உடனே கச்சியப்பர், ஐயாப்பிள்ளை திகைக்கும்படி இராமாயணத்தின் முதல் ஆறுசெய்யுட்களில் காணப்படும் பலவகை முரண்பாடுகளைக் கூறினார்.

கேட்ட பிள்ளையும் முனிவரின் புலமைத்திறத்தை வியந்து தம்முடைய அன்பளிப்பாக நூறுவராகன் அளித்து பட்டாடைச்சார்த்திக் கௌரவித்தார். தம்முடைய வார்த்தை களையும் பொறுத்து மன்னிக்குமாறு வேண்டினார். அரங்கேற்றத்தின்போது சென்னை வாசிகள் வழங்கிய 2000 வராகனை ஆதீன முதல் குருவின் சந்நிதி மண்டபத் திருப்பணிக்கு இவர் செலவிட்டார். விநாயகப் புராணத்தை இன்றும் கேட்பவர்கள் உள்ளனர். இது அருமையான நூலாகும்.

காஞ்சியும் முனிவரும்

காஞ்சியில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குக் கிளை மடம் உண்டு. முனிவர் இங்கே தங்கி இருந்துள்ளார்.

கச்சி ஆனந்தருத்திரேசர், கச்சிப் பதிற்றுப் பத்தந்தாதி, கச்சி ஆனந்தருத்திரேஸ்வரர் கழிநெடில், வண்டு விடுதூது, பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி ஆகிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

சிவஞான முனிவரும் கச்சியப்பரும்

சிவஞான முனிவருடன் கச்சியப்பர் காஞ்சி மடத்தில் இருந்த காலத்தில் ஒருசமயம் அட்டநாக பந்தம் ஒன்று பாடி அதற்குரிய சித்திர அமைப்பில் பொருத்தியபோது ஓர் எழுத்து தடையாக இருந்தது. கச்சியப்பர் செய்வதறியாது திகைத்தார். சிவஞான முனிவர் கச்சியப்பரை மட்டும் உடன் வைத்துக் கொண்டு உணவு உண்ணும் பழக்கமுடையவர். ஒருநாள் பகலுணவின்போது கச்சியப்பரை நோக்கி நீ சென்று 'த' எழுத்தைப் போட்டுவிட்டு வா என்றார். அவரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சித்தரத்தில் அவ்வெழுத்தையிட்டுப் பார்க்க பொருள் நலம் சிறக்கக் கண்டார். ஆசிரியரின் ஆற்றலைக் கண்டு வியந்து மீண்டும் ஆசிரியரிடம் வந்து உணவு உண்டாராம்.

கச்சியப்பர் முத்திநாள்

சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணத்தின் முதல் பாகம் பாட இரண்டாவது காண்டத்தைக் கச்சியப்பர் பாடி முடித்துள்ளார். காஞ்சியில் சாதாரண வருடம் சித்திரை மாதம் 11ஆம் நாள் (அதாவது 20-4-1790) செவ்வாய்க்கிழமை புணர்பூச நன்னாளில் கச்சியப்பர் முத்தியடைந்தார். முனிவருக்கு மடத்திலேயே சமாதி கட்டப்பட்டது. நாற்கால் மண்டபம் கட்டப்பட்டுத் திருவடி பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளது. தற்போது ஞான முதிர்வும் புலமைத்திறமும் வளர வேண்டுவோர் கச்சியப்பர் சமாதிக்கோயிலை வலம் வந்து வழிபடுகின்றனர். திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடம் காஞ்சியில் பிள்ளையார் பாளையம் என்ற பகுதியில் உள்ளது. கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் வேறு. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த கச்சியப்ப முனிவர் வேறு என்பதை நாம் உணர வேண்டும்.

காஞ்சி திருவாவடுதுறை மடத்தின் முன்மண்டபத்தில் மெய்கண்டார், சிவஞான சுவாமிகள் கச்சியப்பமுனிவர் ஆகியோரின் திருவுருவங்களும் சிவலிங்க மூர்த்தமும் நந்தியும் உள்ளன. கச்சியப்பர் சமாதியும் சிவஞான முனிவர் வழிபட்ட இலிங்க மூர்த்தியும் தனித்தனிச் சன்னதிகளாக உள்ளன. சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் 1990 இல் பழுது பார்த்துத் திருப்பணி செய்ய ஆணையிட மடம் தற்போது புதுப்பொலிவுடன் உள்ளது. தேர்வுக் காலங்களில் மாணவர்கள் கச்சியப்பர் சமாதியைச் சென்று வழிபட்டு பிறகு தேர்வு எழுதுகின்றனர். நன்முறையில் தேர்ச்சியும் பெறுகின்றனர். கல்லூரி மாணவர்களும் பள்ளி மாணவர் களும் தினமும் இங்குள்ள மைதானத்தில் விளையாடு கிறார்கள்; தேர்வுக்காகப் படிக்கிறார்கள். தியானம் மற்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

யோகாசனம் செய்யவும் இங்கே அறைகள் உள்ளன. அழகிய நந்தவனமும் உள்ளது. தம்பிரான் ஒருவர் இங்கிருந்து வருகிறார். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் வந்தால் தங்கு வதற்கு நவீனக் கட்டிடமும் இங்கு உள்ளது. இம்மடம் 'புதிய கருக்கினில் அமர்ந்தாள் கோயில்' அருகே உள்ளது.

சிவஞான சுவாமிகளின் நூல்கள்

மாதவச் சிவஞான சுவாமிகள் குறித்து ஒருசில செய்திகளை முன்பு கண்டோம். 1753 முதல் 1785 வரை 32 ஆண்டுகள் வாழ்ந்த முனிவர், ஏறக்குறைய 28 நூல்களை இயற்றியுள்ளார். துறைசை ஆதீனத்தின் பேரூர் வேலப்ப தேசிகர் இவருடைய ஞானாசிரியர் ஆவார். திருச்சிற்றம்பல தேசிகரின் காலத்தில் பல நூல்களை இயற்றி ஆதீனப்புலவர் போல் விளங்கினார். அம்பலவாண தேசிகர் காலத்தில் சிவனடியைச் சேர்ந்தார். இவருடைய வரலாறு பலரும் கூறியிருப்பதால் இவர் எழுதிய நூல்களின் பெயர்களை மட்டும் காண்போம்.

1. காஞ்சிப்புராணம் முதற்காண்டம்.
2. சோமேசர் முதுமொழி வெண்பா.
3. குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி.
4. இளசைப்பதிற்றுப் பத்தந்தாதி.
5. கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி.
6. கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்.
7. திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு.
8. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்.
9. அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ்.
10. அகிலாண்டேசுவரிப் பதிகம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

11. திருவேகம்பர் அந்தாதி.
12. வடதிருமுல்லைவாயிலந்தாதி.
13. திருத்தொண்டர் திருநாமக் கோவை.
14. ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலை.
15. கம்பராமாயண முதல் செய்யுள் சங்கோத்தர விருத்தி. இப்பதினைந்தும் இலக்கிய நூல்கள் எனலாம்.
16. தொல்காப்பியர் முதல் சூத்திர விருத்தி.
17. இலக்கண விளக்கச் சூறாவளி.
18. நன்னூல் விருத்தியுரை திருத்தம்.

இவை மூன்றும் இலக்கண நூல்கள் எனலாம்.

19. சிவஞான மாபாடியம்.
20. சிவஞான போதச் சிற்றுரை.
21. சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குப் பொழிப்புரை.
22. 'என்னையிப் பவத்தில்' சேராவகையெடுத்து என்னும் செய்யுட் சிவசமவாதவுரை மறுப்பு.
23. 'எடுத்து' என்னும் சொல்லுக்கு இட்ட வயிரக்குப் பாயம்.
24. சித்தாந்த மரபு கண்டன கண்டனம்.

இவை ஆறும் சைவசமயம் தொடர்பான நூல்கள் எனலாம்.

25. தருக்க சங்கிரகமும் அன்னம்பட்டீயமும்
26. சித்தாந்த பிரகாசிகை
27. சுலோக பஞ்சகம் விளக்கம்.
28. சிவதத்துவ விவேகம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

இவை நான்கும் வடமொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள் ஆகும். மேற்கண்ட நூல்கள் தவிர எண்ணற்ற தனிப்பாடல்களும் முனிவர் பாடியுள்ளார். இம்முனிவரின் வரலாற்றினை இவ்வாசிரியர் எழுதிய 'விக்கிரம சிங்கபுர உலா' என்ற நூலில் காணலாம்.

சாஸ்திரம் சாமிநாத முனிவர்

திருவாவடுதுறை ஆதீனத்தின் பத்தாவது குருமகா சந்நிதானமான வேலப்ப தேசிகரை ஞான குருவாக ஏற்ற சாஸ்திரம் சாமிநாத முனிவர் திருச்சிற்றம்பல தேசிகர் மற்றும் பதிமூன்றாவது தேசிகர் காலம் வரை வாழ்ந்துள்ளார். இவர் எழுதிய மூன்று நூல்கள் துறைசை வரலாற்றிற்குப் பெரிதும் துணை புரியும்.

திருவாவடுதுறைப் புராணம் 2600 செய்யுட்களைக் கொண்டது. திருச்சிற்றம்பல தேசிகரைப் புலவர் இந்த நூலில் போற்றியுள்ளார்.

பிள்ளைசொல் மழலை கேட்கும் பிதாவெனத் துறைசை வாழும்
வள்ளல்தன் புராண நாயேன் வகுத்த சொல் விரும்பிக் கேட்கும்
தெள்ளுதே சிகனாம் எங்கள் திருச்சிற் றம்பலவர் பாதம்
கள்ளுலா மலர்தூய் வாழ்த்தி கருத்தினுட் கொண்டு வாழ்வாம்.

சாமிநாதர் பாடிய திருப்பெருந்துறைப் புராணம் 1270 செய்யுட்களைக் கொண்டது. இதே ஊருக்கு மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் புராணம் பாடியுள்ளார். திருப்பெருந்துறைக் கலம்பகம் என்ற நூலையும் சாமிநாதர் பாடியுள்ளார். மேற்கண்ட நூல்கள் சொல்நயமும் பொருள்நயமும் உடைய நூல்களாகும்.

திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

சிவஞான முனிவருடைய மாணவர்களுள் ஒருவரான இலக்கணம் சிதம்பரநாத முனிவர் என்பவர் 'திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்' என்ற அரிய நூலைப் பாடியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இன்றைய கடலூரின் ஒரு பகுதியாகத் திருப்பாதிரிப்புலியூர் விளங்குகிறது. 19 சருக்கங்களுடன் 987 செய்யுட்களைக் கொண்ட நூலாக இது விளங்குகிறது. இந்த நூலில் குருதோத்திரத்தில் திருச்சிற்றம்பல தேசிகரின் பெயர் இடம் பெற்றுள்ளது.

யானென்று மெனதென்று மகப்பற்றும் புறப்பற்று மெய்தா
வண்ணம்
தானென்று வலிந்தாண்டு காயமொடு பொருளாவி தன்கைக்
கொண்டான்
தேனென்ற மொழித்துறைசைத் திருச்சிற்றம் பலகுரவன் திசைசூழ்
பாரில்
வானென்றும் பெய்வதுபோ லருள்புரிந்த வதற்கொருகை மாறில்
லேனே.

உமாபதி சிவத்தின் சிவப்பிரகாசம் என்ற நூலுக்கு அரிய உரை ஒன்றும் இவர் எழுதியுள்ளார்.

சுந்தரலிங்க முனிவர்

சுந்தரலிங்க முனிவர் என்பவரும் திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் அடியார் திருக்கூட்டத்தில் ஒருவராக இருந்துள்ளார். 'ஆதிகைலாச மான்மியம்' என்ற பெயரில் திருப்பெருந்துறைப் புராணம் ஒன்றை இவர்கள் இயற்றி யுள்ளார்கள். 59 சருக்கங்களுடன் 2080 பாடல்களை இப்புராணம் கொண்டுள்ளது.

காஞ்சிபுரம் சிதம்பர முனிவர்

காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் என்பவரும் சிவஞான சுவாமிகளின் மாணவர் ஆவார். திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் முருகப்பெருமான் மீது பல பாடல்களை இவர் பாடியுள்ளார்.

1. சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

2. காஞ்சி காமாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்,

3. முருகன் உறையும் 100 தலங்களைப் பற்றிய பாடல்கள். இதில் திருவாவடுதுறை மாசிலா மணியீசர் கோயிலின் மேற்கு ஆவரணத்தில் உள்ள முருகன் கோயிலும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

சீனிப்புலவர் முன்னோர்

திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் வாழ்ந்த சீனிப்புலவர், தேசிகரிடம் சிவஞான உபதேசமும் நிருவாண திட்சையும் பெற்றவர். ஆதீனத்தின் சம்பிரதாயங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். திருச்சிற்றம்பல தேசிகர் மீது கலம்பகம் ஒன்றைப் பாடியுள்ளார். 102 பாடல்களைக் கொண்ட இந்நூல் வரலாற்றிற்குப் பெரிதும் துணை புரிகின்றது. சீனிப்புலவருடைய தந்தையார் பெயர் சர்க்கரைப் புலவர் என்பதாகும். சர்க்கரைப்புலவரின் தந்தை ஆதிநெட்டி மாலைச் சர்க்கரைப் புலவர் ஆவார். இந்த நெட்டி மாலை 90 வயது வரை வாழ்ந்துள்ளார். இவருடைய தந்தை சாந்தா பிள்ளையாகும். நெட்டிமாலை துறைசை ஆதீன எட்டாம் பட்டத்தில் இருந்த மாசிலாமணி தேசிகர் காலத்தில் வாழ்ந்துள்ளார். இத்தேசிகர் காலத்தில் சுசீந்திரம் கிளை மடத்தில் இருந்த சின்னப் பட்டம் சிவக்கொழுந்து தேசிகரிடம் தமிழ்க்கல்வி பயின்றதுடன் சைவதிட்சையும் இவர் பெற்றுள்ளார்.

தஞ்சை மராட்டிய மன்னன் பிரதாபசிங் காலத்தில் (1739-63) மிழலைச்சதகம் என்ற நூலைப் பாடியவராக ஒரு சர்க்கரைப்புலவர், பெருந்தொகை (பாடல்1753) என்ற நூலில் குறிக்கப் பெறுகிறார்.

ஓரியூர்ச்சீமை என்ற அஞ்சுக் கோட்டைப் பத்தில் உள்ள நாட்டார், பிள்ளைமார், அம்பலக்காரர், வெற்றிலைக்காரர் ஆகியோர் பாகவத காவியப் பிரசங்கம் என்று போற்றப்பட்ட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சர்க்கரைப் புலவருக்கு 21-4-1748 அன்று திருவாடானை ஆதி ரத்னேசுவரர் சந்நிதியில் ராமசரித்திரம் இராமாயணம் பரிசுக்கட்டளையாக 'ஆமரம்' என்ற ஊரைக் கொடையாக அளித்தனர். பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர் என்பவருக்குச் சேதுபதி மன்னர்கள் மகமை வழங்கி யுள்ளனர். தமிழ்நாவலர் சரிதையில் சர்க்கரைப் புலவர் ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார்.

சர்க்கரைப் புலவர் ஒருசமயம், இராமேசுவரம் கோயிலில் இராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தினார். வேதபராரும் இயல் இசை நாடகத்தமிழ் வித்யாதரரும் கலந்து கொண்டனர். இராமர் பட்டாபிஷேகத்தன்று அவரைப் பாராட்டி, கோட்டக்குடி, கொந்தலான் வயல் ஆகிய ஊர்களை விசயரகுநாத சேதுபதியின் அண்ணனான முத்துவயிரவநாத தேவர் என்பவர் வழங்கியுள்ளார். இதுதொடர்பாக ஒரு செப்பேடும் இராமநாதபுரத்தில் உள்ளது.

சீனிப்புலவரின் தந்தை சர்க்கரைப்புலவர் திருச்செந்தூர் கோவை, வேதாந்த சூடாமணிக்குச் சித்தாந்தவுரை ஆகியவை இயற்றியுள்ளார்.

மருதுபாண்டியர்

சீனிப்புலவரின் முன்னோர் மட்டுமில்லாமல் இவருடன் பிறந்த சகோதரர்களும் கல்வியில் வல்லவர்களாக இருந்துள்ளார்கள். சாந்துப் புலவரும் சீனிச்சர்க்கரைப் புலவரும் இவருடைய அண்ணன்மார்கள் ஆவார்கள். முத்து முருகப்புலவர் தம்பியாவார். சாந்துப் புலவர் 'மயூரகிரிக் கோவை' என்ற நூலைப் பாடி உள்ளார். இந்நூல் 1778இல் அரங்கேறியுள்ளது. சாந்துப் புலவரின் பெருமதிப்புக் குரியவராகவும் வள்ளலாகவும் விளங்கிய மருதுபாண்டியர் கி.பி. 1801இல் பகைவர் கையில் சிக்குண்ட காலத்தில் புலவர் மிகவும் வருந்தி சிறுகம்பை என்ற தமது ஊரில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

இறைவனடி சேர்ந்துள்ளார். மருதுபாண்டியர் காலத்திலும் (கி.பி. 1780-1801) இவர் வாழ்ந்துள்ளார்.

புகையிலைவிடு தூது

சீனிச்சர்க்கரைப்புலவர் என்ற இரண்டாவது சகோதரர் 'திருச்செந்தூர் பரணி', 'புகையிலைவிடு தூது' ஆகிய சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார்.

சாமிநாதக் கவிராயர்

'திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம்', இயற்றிய சீனிப்புலவர், இராமநாதபுரத்தில் இருக்கின்ற நெல்லையப்ப பிள்ளை அவர்கள் குமாரர் சாமிநாத பிள்ளையின் நண்பருமாவார். சாமிநாத பிள்ளைக்குச் சாமிநாதக் கவிராயர் என்ற பட்டப் பெயருமுண்டு. இவருடைய சகோதரர் இராமநாதபுரம் சோமசுந்தரகுரு ஆவார். இவர் சமஸ்தான வித்துவானாக இருந்துள்ளார்.

உரைதருவே தாந்தசூ டாமணியுட் பொருளை
    உலகிலுள்ளோர் உணரவுரை செய்கவெனக் கடல்சூழ்
தரையரசன் சேதுபதி யமாத்தியனாம் தாமோ
    தரன்கங்கா குலதிலகன் தகுதிபெறச் சாற்ற
வரையறுத்துச் சித்தாந்தப் பொருட்டிறனுந் தோன்ற
    வகுத்தனன்நற் றுறைசைநமச் சிவாயதே சிகன்றாள்
பரவு சிவக் கொழுந்துநிதி யருள்கல்வி கடலைப்
    பருகுமுகில் சர்க்கரைநற் பாவலர் கோனே.

''என்னும் இவ்வுரைப்பாயிரம் இராமநாதபுரத்தில் இருக்கின்ற நெல்லையப் பிள்ளை அவர்கள் குமாரர் எம்மோடு கற்றோராகிய சாமிநாதபிள்ளை அவர்கள் பாடியது'' என்ற குறிப்பு ஏட்டில் உள்ளது. சிவக்கொழுந்து தேசிகரிடம் கல்வி கற்ற 'சர்க்கரைப் புலவர்' வேதாந்த சூடாமணிக்கு உரை எழுதிய விவரம் அறிகிறோம். 'கல்விக்கடலைப் பருகும் முகில்' என்று இவரைச் 'சேதுநாடும் செந்தமிழும்' என்ற நூல் கூறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருச்சிற்றம்பலதேசிகர் கலம்பகம்

திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம் என்ற நூலில் இருந்து திரட்டப்பட்ட செய்திகளை இனி, காண்போம்.

"காமனை வென்றடர்த்து ஞானப் பொருள்படைக்கும்
துறைசைவரு திருச்சிற்றம்பலக் குரவன்" என்றும்
'சைவக்கலை தாங்கு கல்விநலமுடையவர்' என்றும்
'தவத்திற்கு இங்கொருவன் தருக்கிக்கும் கலைஞன் என்றும்
'திருச்சிற்றம்பலவன் சிவாகமத்தையர்'

என்றும் இவர் போற்றப்பட்டுள்ளார்.

இரண்டுலட்சம் சிவாகம சுலோகங்களை இவர் கற்றதாகக் குருபரம்பரை விளக்கமும் கூறும்.

இடபவாகனத்தையே சிவிகையாகக் கொண்டு விளங்கும் சிவபெருமான் திருச்சிற்றம்பல தேசிகராகத் திரு உரு கொண்டதாக ஓரிடத்தில் சீனிப்புலவர் குறிப்பிடுகிறார்.

'எல்லா உலகும் திறை அளப்பது ஆகுமடத்தில்' என்ற 98ஆம் பாடலின் மூலம் குருவுக்குப் பாதகாணிக்கைச் செலுத்துதலைக் குறிப்பிடுகிறார்.

. 32ஆம் பாடலில் தென்னாட்டில் பொருள் தேடத் தேசிகர் சென்றதாகச் சீனிப்புலவர் குறிப்பிடுகிறார்.

சர்வமான்யம்

கோமுத்திபுரம், முத்திப்பதி, தேனுமுத்திபெறும்புரம் என்றெல்லாம் திருவாவடுதுறை போற்றப்படுகிறது. காசி கண்ணப்பசாமி வடமொழி ஆவணத்தில் கோமுத்திபுரம் என்றே துறைசை வழங்கப்பட்டுள்ளது. திருச்சிற்றம்பல தேசிகரின் திருவடியே 'சர்வமான்யம்' என்றும் 'கயிலாயம்' என்றும் சீனிப்புலவர் குறிப்பிடுவார். சர்வமான்யம் என்ற சொல் கல்வெட்டு, செப்பேடுகளில் வரும் சொல்லாகும். இலக்கியத்தில் இச்சொல் பயின்று வந்துள்ளது குறிப்பிடத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

தக்கதாகும். கலம்பகத்தில் இடம்பெறும் முத்துக்குமரன் என்ற பெயர் திருச்சிற்றம்பலதேசிகர் செப்பேட்டிலும், அம்பலவாணர் செப்பேட்டிலும் இடம் பெற்றுள்ளன.

வெள்ளித்தேர்

திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் 'தேசிகர் ஆன்மார்த்த பூசையைச் சிறப்புறச் செய்ய அன்புள்ளம் கொண்ட முத்துக்குமரன் என்ற முத்துக்குமரப்பிள்ளை' கயிலாயக் காட்சியொத்த வெள்ளித்தேரினை செய்து அளித்தார்.

கீழ்க்கண்ட பாடல் இச் செய்தியை உறுதிபடுத்தும்.

குருவெள்ளி நேர்திருச் சிற்றம் பலவர்பலி கூர்ந்துசெய்ய
மருவெள்ளி னெய்யெனு மன்பினன் முத்துக்கு மாரன்றந்த
வொருவெள்ளித் தேர்கயி லாச தரிசன மொத்திருக்கும்
கருவெள்ளி நீக்கு நடராசன் றன்திருக் கண்ணருளே.

மீண்டும் இருபதாவது பட்டத்தில் இருந்த தேசிகர் வெள்ளிப் பேழையினைத் தென்னாட்டின் தலயாத்திரை நினைவாகச் செய்தளித்துள்ளார்.

இன்றும் துறைசை ஆதீனத்தில் ஞானமாநடராசர், தேர் போன்ற வெள்ளிப் பெட்டியில்தான் வைக்கப்பட்டுள்ளார். இத்தேர் 20ஆவது பட்டத்தின் காலத்தில் ஆறாயிரம் ரூபா செலவில் அமைத்தது என்று சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி 21 பக்கம் 200இல் குறிப் பிட்டுள்ளார். ஆதீன மடாலயத்தில் நமசிவாய மூர்த்திகளை வழிபட்டு வலமாகச் சுற்றிவரும்போது பெரியபூசை மடத்தைக் காணலாம். இங்குதான் அலங்கார ஆசனத்தில் இவ்வெள்ளித் தேர் காட்சி தருகிறது. இத்தேரினுள் உமாபதி சிவாசாரியாரால் பூசிக்கப்பெற்று வழிவழியாக நமசிவாய மூர்த்திகளிடம் வந்து ஆதீன ஞானப்பரம்பரையிலே தொடர்ந்து இருந்தருளும் ஞானமாநடராசர், அழகிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிற்றம்பல உடையவர், நமசிவாய மூர்த்திகளுக்கு வைத்தீஸ்வரன் கோயிலில் இறைவனே சிவாசாரியரின் உருவில் வந்து கொடுத்தருளிய ஆன்மார்த்த இலிங்கமாகிய வைத்தியநாத சுவாமி, ஸ்படிகலிங்கம், ஸ்ரீசக்ர மகாமேரு முதலிய மூர்த்திகள் தேரினுள் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளனர். நமசிவாய தேசிகர் வைத்தீஸ்வரன் கோயிலில் சித்தாமிர்த தீர்த்தத்திலே புனித நீராடியபோது குளத்திலிருந்து படிகலிங்கம், கிடைத்ததாகக் குருபரம்பரை விளக்கம் கூறுகிறது. மேலே கண்ட மூர்த்திகளைப் பஞ்சாக்கர தேசிகர் தொடங்கி இன்றுவரை தேசிகர்கள் பூசித்து வருகிறார்கள். சீனிப்புலவரும் தமது கலம்பக நூலில் 68 ஆம் பாடலிலும் 86ஆம் பாடலிலும் மேற்கண்ட மூர்த்திகளைத் திருச்சிற்றம்பல தேசிகர் பூசித்ததாகக் குறிப்பிடுகிறார்.

அன்னக்கொடி

ஆதீன முதல் குரவராகிய நமசிவாய தேசிகரின் குருபூசை விழாவில் (மகரத்தலைநாள் விழா) முதல் நாள் அன்னக்கொடி கட்டிப் பத்து நாள்களிலும் அன்னம் வழங்கிய சிறப்பை 16 ஆம் பாடலில் சீனிப்புலவர் குறிப்பிட்டுள்ளார். இன்றைக்கும் குருபூசை விழாவில் அன்னக்கொடி கட்டுவதைக் காணலாம். மடத்தில் மகரத்தலைநாள் அன்று வெவ்வேறு விதமான அன்ன வகைகளும் இனிப்பு வகைகளும் காய்கறி வகைகளும் பரிமாறப்படுகின்றன. திருச்சிற்றபல தேசிகர் காலத்திலும் இப்போக்கினைக் காண்கிறோம். மடத்தின் பந்தியில் உண்பவர்கள் ஆயிரம் வகை அன்னம் உண்பவர்கள். அன்னம் முதலியவற்றை எடுப்பதற்கு ஆயிரம் கைகளும் உண்பதற்கு ஆயிரம் வாய்களும் உணவின் பாகுபாடு தெரிவதற்கு ஆயிரம் கண்களும் உணவு சென்று சேர பெருவயிறும் வேண்டுமென 90ஆம் பாடல் குறிப்பிடுகிறது. எண்ணிக்கை உயர்வு நவிற்சி என்றாலும் பல வேறுவகையான உணவு வகைகள் பரிமாறப்பட்டன எனலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

தேவாரப்பண்

தினந்தோறும் திருச்சிற்றம்பல தேசிகர் பூசை செய்யும் போது சேண்டி ஓசையும் சங்கின் முழக்கமும் கைத்தாள ஒலியும் ஐந்து கொத்து மணியின் ஒலியும் தேவாரப் பண்களின் இசையும் வெளிப்பட்டன என்பதை 99ஆம் பாடல் குறிப்பிடுகிறது. இன்றைக்கும் இதே முறையில் வழிபாடு நடைபெறுகிறது.

பன்னிரண்டாவது பட்டம்

திருச்சிற்றபல தேசிகர் நமசிவாய தேசிகர் வழியில் பன்னிரண்டாவது பட்டமாவார் சந்தானாசாரியர் போன்ற வர்களையும் சேர்க்க இவருக்குமுன் 21 குருமகான்கள் இருந்துள்ளமையை 97ஆம் பாடலில் காண்கிறோம்.

1. நந்திகுமாரர் 2. சனற்குமாரர் 3. சத்திய ஞானதரிசனி 4. பரஞ்சோதியார் 5. மெய்கண்டார் 6. அருணந்தியார் 7. மறைஞான சம்பந்தர் 8. உமாபதிசிவம் 9. அருள் நமச்சிவாயர் 10. சித்தர் சிவப்பிரகாசர். இவர்களுடன் நமசிவாயர் வழித் தோன்றல்கள் 11 பேர் திருச்சிற்றம்பல தேசிகருக்குமுன் உள்ளனர். 'கைலாயப் பரம்பரை' என்றும் 'மெய்கண்டான் பரம்பரை' என்றும் துறைசை ஆதீனம் நெடுங்காலமாக வழக்கப்பட்டு வருகிறது.

திருச்சிற்றம்பலவர் கோவை

சீனிப்புலவர் திருச்சிற்றபல தேசிகர் மீது கலம்பகம் பாடியதுடன் திருச்சிற்றபம்பலவர் கோவை என்ற நூலையும் பாடியுள்ளார். நம் அவப்பேற்றின் காரணமாக அந்நூல் கிடைக்கவில்லை. திருச்சிற்றம்பலவர் கலம்பகத்திலும் 6 பாடல்கள் கிடைக்கவில்லை.

சிவதேசிகர்

திருச்சிற்றம்பல தேசிகருக்குச் 'சிவதேசிகர்' என்ற பெயரும் இருந்ததைக் கலம்பகம் குறிப்பிடுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருச்சிற்றம்பல தேசிகருக்குப் பல பட்டப்பெயர்கள் இருந்துள்ளன.

திருச்சிற்றம்பல தேசிகரின் தோற்றம்

திருச்சிற்றம்பலவரின் உருவத் தோற்றத்தைச் சீனிப் புலவர் நம் கண்முன் நிறுத்துகிறார். தலையில் அஞ்சு கொத்தாகிய அக்கமாலையும் நெற்றியின் மீது ஒளிவீசும் திருநீற்றுப் பூச்சும் கருணையே கூடிய பார்வையும் புன்னகையும் செவிகளில் குண்டலங்களும் கழுத்தில் மணிமாலையும் கைகளில் செபவடங்களுமாகக் காட்சி யளித்துள்ளார்.

விபூதி

திருச்சிற்றபம்பல தேசிகர், சிலசமயம் அடியார்களுக்கு நெற்றியில் திருநீறு பூசுவார். சில சமயம் கையில் விபூதி வழங்குவார் என்றும் சீனிப்புலவர் குறிப்பிட்டுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் சம்பிரதாயங்களை அழகாக விளக்கும் திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகத்தை 1949இல் திருவாவடுதுறை ஆதீனம் பதிப்பித்துள்ளது.

பவானிக் கூடற்புராணம்

பவானிக் கூடற்புராணம் என்ற நூலின் ஆசிரியர் வாசுதேவ முதலியார், தமது நூலில் குருவணக்கமாகத் திருச்சிற்றபல தேசிகரைக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே எண்ணற்ற சீடர்களில் வாசுதேவ முதலியாரும் ஒருவர் எனலாம்.

குற்றாலம் செப்பேடுகள்

நெல்லை மாவட்டத்தில் உள்ள குற்றாலத்தில் குறும்பலா ஈசர் கோயில் உள்ளது. பாடல் பெற்றத் தலமாக உள்ள இக்கோயிலில் முற்காலப் பண்டியர், சோழர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

பிற்காலத் திருவிதாங்கூர் மன்னர் ஆகியோரின் கல்வெட்டுகள் உள்ளன. பிற்காலப் பாண்டியராம் தென்காசிப் பாண்டியரின் காலத்தில் வெளியிடப்பட்ட மூன்று செப்பேடுகளும் கோயிலில் உள்ளன. அம்மூன்றில் கி. பி. 1753இல் வெளியிடப்பட்ட இரண்டு செப்பேடுகள் திருவாவடுதுறை ஆதீனத்தைக் குறிப்பிட்டுள்ளன. குற்றாலம் திருக்கோயிலில் சித்திரை, ஐப்பசி, மார்கழி மாதங்களில் நடைபெறும் விழாக்களில் ஏழாவது திருநாள் திருவாவடுதுறை ஆதீனத்தின் செலவில் நடைபெறுகின்றது.

குற்றாலத்தைச் சுற்றி சில கிராமங்களில் சாலை அமைத்து மாகேசுவர பூசை செய்துவரும் ஆதீனம் கோயிலுக்கு மலர் வேண்டி நந்தவனம் ஏற்படுத்திப் பராமரித்து வருகிறது.

காளாஞ்சிப்பண்டாரம்

திருச்சிற்றபல தேசிகர் காலத்தில் இளைய பட்டத்தில் இருந்த அம்பலவாணர், ஒருமுறை சுசீந்திரத்தில் இருந்து திருவாவடுதுறை சென்றபோது குற்றாலத்திற்கு வந்தார். சித்திரா நதியில் தீர்த்தமாடி கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார். சித்திர சபாநாதரைத் தரிசிக்கும்போது தேசிகரின் கட்டளைக்கிணங்க அடியாருள் ஒருவரான சுப்பிரமணியசுவாமி சபாநாதர் மீது பத்துப்பாடல்கள் பாடியுள்ளார். கி.பி. 1753ஆம் ஆண்டு செப்பேட்டில் இடம்பெறும் காளாஞ்சிப்பண்டாரம் இவராக இருக்கலாம்.

செப்பேட்டில் ஓவியங்கள்

கருநாடக இராசாவும் துணை இராணுவத்தைச் சேர்ந்த குடி படைசெய் தொழிலாளர்களும் கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு குற்றாலநாதருக்கு மாலை வேளை பூசைக் கட்டளை நடத்தத் திருவாவடுதுறை ஆதீனம் கேட்டுக் கொள்ளப்பட்டது. வருடம் ஒன்றுக்குப் பல்லக்குக்காரர் ஒருபணமும் குதிரை மற்றும் சுருட்டிக்காரர் மூன்று பணமும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாவடுதுறை ஆதீனத்திடம் வழங்கவேண்டும். செப்பேட்டில் குறும்பலா நாதரின் ஓவியம் உள்ளது. மேலும் செப்பேட்டின் மேற்பகுதி ஏழு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் அம்மன், விநாயகர், முருகர், சிவலிங்கம், பீடம், கொடிமரம், குரங்கு, முனிவர் ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆதீனத்தின் குருமகான் பெயர் செப்பேட்டில் இல்லை.

குலசேகர தேவதீக்ஷதர்

'ஸ்ரீ அழகன் பெருமாள் இறந்தகாலம் எடுத்த ஸ்ரீ வலவர குணராம பாண்டிய குலசேகர தேவதிக்ஷிதர்' என்பவர் வெளியிட்ட செப்பேடுகளே இவை யிரண்டுமாகும். முதல் செப்பேடு 31.5 செ.மீ நீளமும் 20.5 செ.மீ அகலமும் கொண்டுள்ளது.

ஆசான் பிள்ளைமார்

இரண்டாம் செப்பேடு 32.5 செ.மீ நீளமும் 20.5 செ.மீ அகலமும் கொண்டுள்ளது. இருபக்கமும் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. இச்செப்பேட்டின்படி குற்றாலம் கோயிலில் சாயரட்சைக்குக்கு வேண்டிய செலவுக்காகப் பிள்ளைமார் தருமம் செய்துள்ளனர். 'காராளகுல திலகமான கங்கர் குலத்தாசன் பிள்ளைமார்' என்று பிள்ளைமார் போற்றப்பட்டுள்ளனர். முதலிமார் மற்றும் பிள்ளைமார் தருமத்தை நடத்தி வரவேண்டும் என்றும் காண்கிறோம். 'திருவாவடுதுறை மடத்துபாரிசன் செய்திருப்பதால் தருமபரிபாலனம் அம்மடமே மேற்கொள்ள வேண்டும்' என்று செப்பேடு கூறுகிறது.

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பாகக் காளாஞ்சிப் பண்டாரம் தருமத்தை நிறைவேற்ற ஒத்துக் கொண்டுள்ளார். காளாஞ்சி என்பதற்குத் தாம்புலம் உள்ள கலம் அல்லது வெற்றிலைப்பாக்கு எச்சில் உமிழும் பாத்திரம் எனலாம். மேற்படி பாத்திரம் ஏந்திய பண்டாரம் எனலாம். இனி

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

இயற்பெயராகவும் காளாஞ்சி இருக்கலாம். எது எப்படி யிருப்பினும் திருச்சிற்றம்பல தேசிகர் அருளாட்சி காலத்தில் அம்பலவான தேசிகர் சின்னப் பட்டத்தில் இருந்தபோது இச்செப்பேடு வெளியிடப்பட்டது. மடத்தில் இல்லாத செப்பேடுகளில் குற்றாலம் செப்பேடுகளும் குறிப்பிடத் தக்கவையாகும்.

திருச்சிற்றம்பல தேசிகர் திருவாவடுதுறையில் ஆனி மாதம் ஒன்றில் பரணி நட்சத்திரத்தில் சிவப்பேறு எய்தி யுள்ளார்.

அம்பலவாண தேசிகர்
பதின்மூன்றாவது பட்டம் - (1770 - 1789)

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர் என்னும் திருப்பதியில் சைவ வேளாளர் குடியில் அம்பலவாண தேசிகர் பிறந்தார். திருச்சிற்றம்பல தேசிகரிடம் மூவகை தீட்சையும் பெற்ற இவர், முதலில் தம்பிரானாக இருந்து பின்னர் இளைய பட்டத்தில் அமர்த்தப் பட்டார். திருச்சிற்றம்பல தேசிகர் கால ஆவணங்கள் சிலவற்றில் இவருடைய பெயரும் உண்டு.

அம்பலவாண தேசிகர் சின்னப்பட்டத்தில் இருந்த போது கல்லிடைக்குறிச்சித் தளிகை மடத்தில் இருந்து வந்தார். இவர் காலந்தொடங்கி இளையப் பட்டம் தங்கும் இடமாகத் தளிகைமடம் மாறியது. தளிகைமடத்தின் திருப்பணியுடன் மானேந்தியப்பர் கோயில் திருப்பணியிலும் இத்தேசிகர் ஈடுபட்டுள்ளார்.

வேளூர் சுப்பிரமணிய தேசிகர்

அம்பலவாண தேசிகர் தமக்குப் பிறகு ஆதீனத்தின் தலைவராக வேளூர் சுப்பிரமணிய தேசிகரை நியமித்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அம்பலவாணர் மீது பல நூல்களைக் கச்சியப்பத் தம்பிரான் பாடியுள்ளார். தொட்டிக்கலைச் சுப்பிரமணியத் தம்பிரான் என்பவரும் தேசிகர் மீது பல நூல்களை இயற்றியுள்ளார். குருசாமி ஓதுவார் என்பவர் அப்போது ஓதுவாராக இருந்துள்ளார்.

செப்பேடுகள்

அம்பலவாண தேசிகர் காலத்தைச் சேர்ந்த சில செப்பேடுகள் மடத்தில் உள்ளன. திருவாவடுதுறை ஆதீனத்திற்குப் பல ஊர்களில் நிலங்கள் வழங்கப்பட்டமையை இச்செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

வள்ளைக்குளம்

முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் 1.1.1782இல் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு 'அம்பலவாண சுவாமி' சந்நிதியில் மாகேசுர பூசை செய்வதற்கா 'வள்ளைக்குளம்' என்ற ஊரை வழங்கியுள்ளார். அப்போது திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக அம்பலவாண தேசிகர் இருந்துள்ளார். கொடையளித்த சேதுபதி ஆங்கிலேயரால் சிறிதுகாலம் திருச்சிச் சிறையில் இருந்தவர் ஆவார். விடுதலை ஆகி மீண்டும் அரசுப் பொறுப்பேற்ற பின் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு இவர் தானம் அளித்துள்ளார். அத்தானத்தைச் செப்பேடாகவும் வழங்கியுள்ளார். செப்பேட்டு வாசகம் எழுதியவர் 'பொக்கிச கணக்கு ஆதிநாராயணப் பிள்ளை மகன் தளவாத்தான்' ஆவார். முத்துப்பத்தர் மகன் 'வேலாயுத பத்தர்' செப்பேட்டை வெட்டிய ஆசாரி ஆவார்.

சிவகங்கை அரசர்

சிவகங்கை அரசர் வடுகநாத பெரிய உடையாத் தேவர் என்பவர் வள்ளைக்குளம் என்ற வேறோர் ஊரைக் காசி விசுவநாதர் கோயிலுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

இதன் காலம் 13.4.1763 ஆகும். இச்செப்பேட்டின் காலத்தில் திருச்சிற்றம்பல தேசிகர் ஆதீனத்தின் குருமகானாக இருந்துள்ளார்.

விசயரகுநாத சேதுபதி காத்த தேவர் ஆவுடையார் கோவில் உச்சிக்காலக் கட்டளைக்காக விலானூர், இடையூர், கொருகானூர், பூதக்குடி, கோடிக்குளம், ஆவுடையார் கோவில் தெற்குமடம், நடக்கிறதோப்பு, மனை, தென்னந் தோப்பு, ஊர்த்தோப்பு, மாரியம்மன் கோவில்திடல், உள்ளூர் மனைகள், உள்ளூர் நன்செய், புன்செய் நிலங்கள், நெல்லியடிக்குளம், நெல்லியடித் தோப்பு ஆகியவற்றையும் வழங்கியுள்ளார். இதன் காலம் 1.1.1782 ஆகும்.

வரிகள்

இப்பகுதியில் இருந்த சுங்கம், மகமை, நாடு காவல்வரி, உள்ளூர்வரி, சாணார்வரி, இடங்கைவரி, வலங்கைவரி உள்பட 18 வரிகளையும் கோயில் கட்டளைக்கு மன்னர் வழங்கியுள்ளார். மேற்கண்ட கட்டளையைத் திருவாவடுதுறை ஆதீனம் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டும் எனவும் மன்னர் வேண்டியுள்ளார். மணியம், கணக்கு, கங்காணி, ஆகியவற்றிற்கும் கிராமந்தரத்துக்கும் ஏதுவும் மடம் அளிக்க வேண்டாம் என்று கூறி பரதேசி முத்திரையும் சேதுபதி வழங்கியுள்ளார். இராமநாதபுரம், திருவாடானை சீமைகளில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் உள்ள நன்செய், புன்செய் நான்கு செய் இரண்டிரண்டு குறுக்கம் கொடையாக அளிக்கப்பட்டன.

நெல்லியடி மண்டபம்

திருவிழாக் காலங்களில் சேதுபதிச் சீமை மற்றும் சிவகங்கைச் சீமையில் இருந்துவரும் கால்நடைகள், ஆவுடையார் கோயில் கட்டளையில் சேர்க்க மன்னர் உத்தரவிட்டுள்ளார். சேதுபதி மன்னர் பெயரில் நடைபெறும் உச்சிக்காலப் பூசைக்கு உண்டான ஆபரணங்கள், வாஸ்து,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாகனம், பூசணம், பாத்திரம், பாண்டம் முதலியவற்றையும் நெல்லியடி மண்டபத்தையும் ஆதீனகர்த்தரிடம் மன்னர் வழங்கியுள்ளார். சுருக்கமாகக் கூறுவது என்றால் அம்பலவாண தேசிகர் மீது அளவற்ற அன்பும் பெருமதிப்பும் சேதுபதி மன்னர் வைத்திருந்தார். தொன்றுதொட்டு சேதுபதி மன்னர்களுக்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் நெருங்கிய உறவு இருந்து வந்துள்ளது. இன்றும் அவ்வுறவு இருந்து வருகிறது.

தை அசுவதி குருபூசை விழாவிற்குத் தம்பிரான் தலைமையில் மூவர் சென்று நேரில் அழைப்பிதழ் வழங்குவர். ஆடை, பிரசாதம், திருமுகம் ஆகியவற்றையும் வழங்குவர்.

ஏழூர்த் தட்டப்பாறை

திருச்செந்தூர் முருகன் கோயில் கோபுரத் திருப்பணிக்கு நெல்லை மாவட்டம் முக்கூடலை யொட்டி உள்ள மேல் தட்டப்பாறை, கிழ்த்தட்டப் பாறை, செக்காலைக்குடி, உமுரிக் கோட்டை, காரி சோரி, சிங்கத்தாகுறிச்சி, பூவாணி, கொம்பாடி, முரம்பன், சங்கம்பட்டி, வாகைக் குளம், சேகரம் ஆகிய ஊர்களில் வாழ்ந்த பல்வேறு சாதியார் ஒன்றுகூடி அதாவது பதினெட்டுச் சாதியாரும் ஒன்று சேர்ந்து மகமை வழங்க முடிவெடுத்தனர். தங்கள் முடிவைச் செப்பேடாகவும் வெட்டி, கோயில் திருப்பணியைச் செய்துவரும் திருவாவடுதுறை ஆதீனத்திடம் வழங்கி உள்ளனர். செப்பேட்டில் ஏழூர்த் தட்டப்பாறை, வணிதம் சூழ்ந்த கிராமத்தார் முதலில் குறிக்கப்பட்டுள்ளனர்.

முத்திரை மனுடர்

வீடொன்றுக்கு வருடம் ஒன்றுக்குக் குறுணி நெல்லும் ஓலைப்படிக்குள்ள தவசமும் அரைக்கயத்து நிலமும் திருவாவடுதுறை ஆதீன சந்நிதானத்து முத்திரை மனுடர் வசம் வழங்க உடன்படுகின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

மகாசன்னங்கள், நாட்டாண்மைக்காரர், கணக்குப் பிள்ளைமார், தண்டல்காரர் ஆகியோர் மகமையை வசூலித்து தரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இச்செப்பேட்டின் காலம் கி. பி. 1779 ஆகும்.

சாத்தூர்ச் செப்பேடு

'இம்முடி வங்காரு சுந்தர பாண்டியன் ஏறபாப்ப நாயக்கர்' என்ற சாத்தூர்பகுதியில் வாழ்ந்த பாளையக்காரர், திருச்செந்தூர்க் கோயில் கோபுரத் திருப்பணிக்குத் தம்முடைய அதிகாரத்தில் உள்ள ஊர்களில் வாழ்ந்துவரும் பலசாதியினரும் ஆண்டொன்றுக்குக் குறுணி நெல் வழங்க வேண்டும் என்று கி. பி. 1779 இல் ஆணையிட்டுள்ளார். ஈரம், பதர் இல்லாத நெல்லாக வழங்கவேண்டும். இம்மகமையைத் திருவாவடுதுறை ஆதீனத்திடம் வழங்க வேண்டும். பாளையக்காரரின் உத்தரவு, செப்பேடாகவும் வெட்டப்பட்டு, திருவாவடுதுறை ஆதீனத்தம்பிரான் அருணாசலத்தம்பிரான் வசம் வழங்கப்பட்டது. பதிமூன்றா வது தேசிகர் காலத்தில் அருணாசலத்தம்பிரான் என்பவர் திருச்செந்தூர்ப் பகுதியில் ஆதீனக் காரியங்களைச் செய்து வந்திருக்க வேண்டும். இவரே சிதம்பரம் சிவகாமியம்மன் கோயில் ஓவியத்திலும் உள்ளார்.

ஏழாயிரம்பண்ணை

சாத்தூர் வங்காரு ஏறபாப்ப நாயக்கர் என்பவர் திருவாவடுதுறை ஆதீனத்திடம் மகமை வழங்கியது போல 'ஏழாயிரம் பண்ணை' என்ற ஊரில் வாழ்ந்த 'குலசேகர ஆண்டுகொண்டார்' தமக்குச் சொந்தமான கிராமங்களில் ஒவ்வொரு வீட்டாரும் ஆண்டிற்குக் குறுணி நெல் வீதம் திருச்செந்தூர்க் கோபுரத் திருப்பணிக்கு வழங்க உத்தரவிட்டு அதற்காக ஒரு செப்பேடும் ஆதீனத்திடம் அளித்துள்ளார். இச்செப்பேட்டிலும் அருணாசலத்தம்பிரானே இடம் பெற்றுள்ளார். திருப்பணியை நடத்திவரும் திருவாவடுதுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதீனத்திடம் மகமை வழங்க வேண்டும். செப்பேட்டில் நாட்டுக்கணக்குச் சங்கரலிங்கம் ஒப்பமிட்டுள்ளார். பத்து வகையான அப்தங்கள் (இந்திய ஆண்டு வகைகள்) இச்செப்பேட்டில் குறிக்கப்படுவதுடன் 1/60 வினாடி அளவு தொடங்கி பலகோடிவரை எண்கள் தமிழ் எண்களில் எழுதப்பட்டுள்ளன. மனித ஆண்டுடன் தேவயாண்டு போன்றவையும் செப்பேட்டில் குறிக்கப் பட்டுள்ளன. காலம் கி. பி. 1779 ஆகும்.

கட்டபொம்மன்

*18.1.1779*இல் கூடிய வீரபாண்டிய கட்டபொம்ம நாயக்கர் என்பவர் திருச்செந்தூர்க் கோயிலுக்கு வழங்கிய நன்கொடை குறித்தச் செப்பேடும் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. ஜாக்சன் துரையுடன் போரிட்ட வீரபாண்டியனுக்கு முன்பிருந்த வேறோர் கட்டபொம்மனே இச்செப்பேட்டில் குறிக்கப் பட்டுள்ளார். கட்டபொம்மனே ஆணையிட ஒருவர் எழுதித் தருவதாகச் செப்பேட்டில் உள்ளது. செப்பேட்டினை எழுதியவர் இராயசம் குமாரசாமி பிள்ளையின் மகனாகிய 'சிவசுப்பிரமணியன்' ஆவார். முருகனுடைய மயில்வாகனமும், கோழியும், வேலும் செப்பேட்டில் சிற்பங்களாக உள்ளன. ஒவ்வொரு வீட்டாரும் ஈரம், பதர் இன்றி வருடமொன்றுக்குக் குறுணிநெல் துறைசை ஆதீனத்திடம் வழங்கவேண்டு மென்று கட்டபொம்மன் ஆணையிட்டுள்ளார். இந்தக் கட்டபொம்மனும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி மாண்டவர் ஆவார். இவரை முதல் கட்டபொம்மன் எனலாம்.

திருப்பைஞ்ஞீலி நந்தவனம்

திருச்சி மாவட்டத்தில் உள்ள பாடல் பெற்ற தலங்களில் பைஞ்ஞீலியும் ஒன்றாகும். நீலிவன நாதசுவாமி கோயில் இங்குள்ளது. குடைவரைக் கோயிலும் உண்டு. மிகவும் உயரமான மூன்று திருமதில்களை இக்கோயிலில் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

மூன்றாம் திருமதிலையொட்டி நந்தவனம் ஒன்றும் உள்ளது. பைஞ்ஞீலியின் தலவிருட்சம் வாழையாகும்.

கோயிலில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. மத்திய அரசு கல்வெட்டுத்துறையும் டாக்டர். இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையும் இங்குள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளன.

இராவணன் திருவாயில் என்று தற்போது வழங்கப் படும் இரண்டாவது கோபுரத்தின் தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டொன்று அம்பலவாணப் பண்டாரத்தைக் குறிப் பிடுகிறது. பிரமாதி வருடம் ஒன்றில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. நந்தவனம் ஒன்று கோயிலுக்கு ஏற்படுத்தியதைக் குறிப்பிடும் இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1759 ஆகும். இக்காலத்தில் திருச்சிற்றம்பல தேசிகர் பெரிய பட்டத்திலும். அம்பலவாணப்பண்டாரம் சிறிய பட்டத்திலும் இருந்துள்ளனர். கல்வெட்டில் அம்பலவாணப் பண்டாரம் என்றே வருவதால் இக்கல்வெட்டைப் பதி மூன்றாவது தேசிகருடைய கல்வெட்டாகக் குறிப்பிடலாம்.

1. நீலிவன நாதசுவாமி திருநந்தவனம் தற்
   அம்பலவாண பண்
2. டாரத்துக்கு விலை முறி உடையான் பேரயன்
   வரும் பிறமாதி ஞ தையி
3. மாதம்.... தி வரைக்கும் மாத....
4. மண்வெட்டி, அருவாள்.. ஆக... க்கு வப்-
5. வாய்த்தலைக் கூடலூர் புக 1/2 செட்டிமங்கலம்
6. சுனைப்புகள் நல்லூர் -பாண்டிபுரம்
7. நெய்வேலி .... குளநல்லூர் உள்பனைவரம்
8. புக... மேல்பத்து ... துடையூர்... கொத்தக்குடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

9. பிராந்த நல்லூர் .... த்திறைபுக பாச்சூர் புகவ...

10. அழகிய மணவாளம் ... பாலையநல்லூர்
உப்பூர்... அத்தாணி... நொச்சியம்...

11. மான்படுமங்கலம்... தேவிமங்கலம் ... யிப்படி
தையிமாத முதல் ஆனி மாத வரைக்கு...

12. யினிமேல் ஆடிமாத முதல் மார்கழி மாத வரைக்கும்
இந்த பிறகாரம் குடுப்போமாகவும் யிந்தபடிக்கு
பாதாளி பிள்ளை எழுத்து.

13. கவிசின்னது அரியினான் பெரியினான்
முத்துப்பிரமண் மேத்தளி பெரிய பெருமாள்
திருவேங்கடம் ரங்கப்பன் பெரிய..

14. தம்பிகைந் திருமை தாண்டவராயன் பாச்சூர்
அழகியக் கண்ணன் காத்தியப் பிள்ளை

15. பெரியதம்பி நொச்சியம் செல்லன் சொக்கலிங்கம்
விறை குலாந்தகநல்லூர் கஸ்தூரிரங்கன்

16. யிந்த தற்மத்து

17. க்கு அகுத

18. ம் பண்ணி

19. னபேர்கெங்

20. கைக் கரையி

21. லே காரம் பசு

22. வை கொண்ண

23. பாவத்திலே போ

24. வண்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

இக்கல்வெட்டில் திருப்பைஞ்ஞீலியைச் சுற்றி உள்ள பல்வேறு ஊர்களைச் சேர்ந்தவர்கள் தை முதல் ஆனி வரை வழங்கிய மகமையை இனி ஆடி முதல் மார்கழி வரையும் வழங்க உடன்படுகின்றனர். உடன்பாட்டில், பாதாளி பிள்ளை, முத்துப்பிரமன், அழகிய கண்ணன், காத்தியப் பிள்ளை போன்றோர் ஒப்பம் இட்டுள்ளனர். நந்தவனப் பணிக்கு மண்வெட்டி அரிவாளும் வழங்கப்பட்டுள்ளன. அம்பலவாணப் பண்டார சுவாமிகளிடம் உடையான் பேரயன் நிலம் வழங்கியதுடன் பல கிராமங்களைச் சேர்ந்தவர்களும் மகமை வழங்க ஏற்பாடு செய்துள்ளான். திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் வெளியிடப்பட்ட திருப்பைஞ்ஞீலிச் செப்பேட்டை ஏற்கனவே கண்டோம். ஆதீனத்துடன் தொடர்பு கொண்ட கோயிலாக இது இருந்துள்ளது. இன்றும் இக்கோயில் திருவிழாவில் ஆதீனத்தின் பங்குண்டு.

சங்கரலிங்கத் தம்பிரான்

தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் அரித்துவார மங்கலம் என்ற பாடல் பெற்ற தலமுள்ளது. 'அரதைப் பெரும்பாழி' என ஞானசம்பந்தர் இத்தலத்தைக் குறிப் பிடுவார். துளசா மகாராசா என்ற மராட்டிய மன்னனுடைய ஆட்சியின்போது (5.3.1770) ஒரு செப்பேட்டின் மூலம் பாதாளலிங்கருக்குக் கொடை வழங்க முடிவாயிற்று. அக்கொடை திருவாவடுதுறை ஆதீனத்தின் மூலம் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டு, செப்பேடு ஆதீனத் தம்பிரானாகிய சங்கரலிங்கத்தம்பிரான் வசம் ஒப்படைக்கப் பட்டது. செப்பேட்டின் காலத்தில் மத்திஷமாக இருந்தவர் 'காணுசாயுபு' என்பவர். அதிகாரம் செலுத்தியவர் இலட்சுமி காந்தய்யன் மகன் 'சுவாமி அய்யன்' ஆவார். செப்பேட்டைப் பொறித்தவர் 'அருள் நிறைத்தேவர் அம்பலவாணர்' குமாரர் 'செங்சடை வேதியன்' ஆவார். மன்னர் சார்பாகச் செப்பேட்டில் குறிக்கப்படும் கொடை ஏற்பாட்டைச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

'சுவாமி' அய்யன்' செய்துள்ளார். இவருடன் பெருமாள் செட்டி, வெங்கடாசல செட்டி, சிவகுருநாதன் ஆகியோர் ஒப்பம் இட்டுள்ளனர். தீப நகர், அம்மாபேட்டை பலபட்டடை வணிகர்கள், சாத்தெண்ணெய், சந்தனக் கட்டை, சூடம், சாம்பிராணி ஆகியவைகளை கோயிலுக்கு நன்கொடையாக அளித்துள்ளனர். பல்வேறு வரிகளும் கோயிலுக்கு வழங்கப்பட்டன. இச்செப்பேட்டில் ஆதீனத்தின் தலைவர் பெயர் இல்லை. எனினும் காலத்தை நோக்க அம்பலவாண தேசிகராகிய பதிமூன்றாவது தேசிகர் காலத்தில் இச்செப்பேடு வெளியிடப்பட்டது எனலாம்.

சங்கரலிங்கத்தம்பிரான் திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்களில் ஒருவராவர். இதே பெயரில் 16 ஆவது தேசிகர் காலத்திலும் ஒரு தம்பிரான் இருந்துள்ளார்.

காசியில் உள்ள கண்ணப்பசாமிமடத்தில் உள்ள கல்வெட்டுகளிலும் சமஸ்கிருத காகித ஆவணத்திலும் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் கோயில் கல்வெட்டிலும் அம்பலவாண தேசிகர் பெயரும் இடம்பெற்றுள்ளன என்பதை முன்பே கண்டோம்.

சிதம்பரம் நடராசர் கோயில் வளாகத்தில் சிவகாமி அம்மன் கோயில் அந்தப்புரவாயிலை அடுத்துள்ள மண்டப விதானத்தில் 'அம்பலவாணர் சதா 'சேர்வை' என்ற பெயருடன் தேசிகரின் உருவம் ஓவியமாக உள்ளது. அருணாசலத் தம்பிரான் உருவமும் முத்துக்குமாரத்தம்பிரான் உருவமும் உள்ளன. மேற்படி உருவங்களை இந்நூல் ஆசிரியர் கண்டுபிடித்தார்.

அம்பலவாண தேசிகர் கி. பி. 1790இல் மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் துறைசையில் சிவபரிபூரணம் அடைந்தார். பதினாறாவது பட்டத்தில் விளங்கிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் என்பவர் அம்பலவாண தேசிகர் திருஅவதாரம் செய்தருளிய கடையநல்லூர் இல்லத்திற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

எழுந்தருளி குருதரிசன காட்சி நல்கியுள்ளார் என்று குருபரம்பரை விளக்கம் என்ற நூல் குறிப்பிடுகிறது. 13 ஆவது தேசிகர் காலத்தில் பலகோயில்களில் திருப் பணிகள் நடந்துள்ளன.

வேளூர் சுப்பிரமணிய தேசிகர்
பதினான்காவது பட்டம் - (1790 - 1845)

வைத்தீஸ்வரன் கோயில் என்ற திருப்புள்ளிருக்கு வேளூர் தலத்தில் பரம்பரைச் சைவவேளாளர் குலத்தில் தோன்றிய சுப்பிரமணிய தேசிகர், திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து, கல்விபயின்று மூவகை தீட்சையும் பெற்று சமஸ்கிருதம், தமிழ் இரண்டிலும் பெரும்புலமை பெற்று, தம்பிரானாக இருந்து அம்பலவாண தேசிகர் காலத்தில் சின்னப்பட்டத்தில் நியமிக்கப் பட்டார். சின்னப்பட்டத்தில் இருந்தபோது இவர் கல்லிடைக்குறிச்சியில் தங்கியிருந்து அருளுபதேசம் செய்து வந்துள்ளார். பதிமூன்றாவது பட்டம் துறைசையில் சிவப்பேறு எய்தியபின் இவர் ஆதீனகர்த்தராகி 1790 முதல் 1845 வரை நீண்ட காலம் பட்டத்தில் இருந்து வந்துள்ளார். அதாவது 55 ஆண்டுகள் குரு முதல்வராக இவர் இருந்துள்ளார்.

கனகசபாபதி தேசிகர்

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருமாகறல் என்னும் ஊரில் பிறந்த 'கனகசபாபதி' என்ற தம்பிரானைத் தேசிகர், சின்னப்பட்டத்தில் நியமித்து, கல்லிடைக்குறிச்சித்தளிகை மடத்தில் இருந்து வருமாறு பணித்தார்.

மெய்கண்டார் தேசிக மாலை

திருவெண்ணெய் நல்லூர் மடத்தில் இருந்த மெய்கண்டார் திருமேனியை வணங்கி அப்பெருமான் மீது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மெய்கண்டார் தேசிகர் மாலை என்ற நூலை இத்தேசிகர் பாடினார். அம்மாலையில் ஒருபாடல் வருமாறு.

பூவே பொற்பூவின் மணமே மணப்புதுப் பூங்கற்பகக்
காவே யென்திருக் கண்ணே யென்கண்ணுட் கருமணியே
கோவே குணக்குன்ற மேயெனை யாண்டசு கோதயமே
தேவே திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே.

சுப்பிரமணிய தேசிகர் பலமுறை தென்னாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

இளைய பட்டத்தில் இருந்த கனகசபாபதி கல்லிடைக் குறிச்சித் தளிகை மடத்தின் பலபகுதிகளைக் கட்டியுள்ளார். இம்மடத்தின் நடராசர் சன்னதிக்கு எதிரில் உள்ள தூணொன்றில் இவருடைய உருவம் சிற்பமாக உள்ளது.

பகழிக் கூத்தன் சன்னதி மடம்

கொல்லம் 1000இல் (கி.பி.1825) கூடிய கல்வெட்டொன்றும் ஒரு தூணில் உள்ளது. 'பகழிக் கூத்தன் சன்னதிமடம்' என்று கல்வெட்டில் தளிகைமடம் வழங்கப் பட்டுள்ளது. பதினான்காவது பட்டத்தில் இருந்த சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் 'திசை விளங்கும் பெருமாள்' என்பவர் தானம் தந்த விவரம் கீழே குறிப்பிடப்படும் கல்வெட்டில் காண்கிறோம்.

1. 1000 ஞு ஆவணி மீ 6ம் தேதி பகழி
2. க் கூத்தன் சன்னதி மடம்
3. கல்லிடைக் குறிச்சி மா
4. காண நாட்டுக்கணக்
5. குஷெயூர் கோயிலு
6. ண்டான சீபண்
7. டாரக் கணக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

8. வகை மாலை சதா

9. சேர்வை திசை வி

10. ளங்கும் பெருமாள்

11. சதா சேர்வை.

இக்கல்வெட்டின்படி தளிகை மடத்திற்கு 1825இல் 'பகழிக் கூத்தன் சன்னதி மடம்' என்ற பெயர் இருந்தது தெளிவாகிறது. இம்மடத்திற்கு அருகில் 'பகழிக் கூத்தர் கோயில்' என்ற பெயரில் சிவன் கோயில் இன்றும் உள்ளது. கல்வெட்டில் நாட்டுக்கணக்கு, கோயிலுண்டான சீபண்டாரக் கணக்கு என்ற இரு கணக்குகள் உள்ளன. 'சீபண்டாரக் கணக்கு' என்பது கோயில் மற்றும் மடத்துடன் தொடர்புடையது எனலாம். திசைவிளங்கும் பெருமாள் திருப்பணி புரிந்தவர் போலும். மேற்படி கல்வெட்டினை இந்நூல் ஆசிரியர் கண்டுபிடித்தார். மடத்தின் பின்புறம் கனகசபாபதியின் சமாதிக்கோயில் உள்ளது.

இராசவல்லிபுரம்

கனகசபாபதிக்குப் பின் இராசவல்லிபுரத்தைச் சேர்ந்த 'சுப்பிரமணிய தம்பிரான்' என்பவரை துவிதிய ஆசாரியராக்கி, கல்லிடைக்குறிச்சியில் இருந்து அடியார்களுக்கு உபதேசம் செய்து வருமாறு தேசிகர் பணித்தார்.

இராசவல்லிபுரத்தைச் சேர்ந்த துவிதிய ஆசாரியர் சுப்பிரமணிய தேசிகர் ஒருமுறை திருவாவடுதுறை வந்திருந்த போது மாசிமாதம் ஒன்றில் பரிபூரணம் அடைந்துள்ளார்.

அம்பலவாண தேசிகர்

பதினான்காவது தேசிகர் நியமித்த முதலிரு துவிதிய ஆசாரியர்கள் சிவப்பேறு எய்தியதால் மூன்றாவதாக அம்பலவாணத் தம்பிரான் என்பவரை இளைய பட்டத்தில் அமர்த்தி 'அம்பலவாண தேசிகர்' என்ற அபிடேக நாமமும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சூட்டினார். இவரே பதினைந்தாவது தேசிகராக விளங்கியுள்ளார்.

திருக்குறள் முதல்பதிப்பு

திருக்குறள் முதல் பதிப்பு கி.பி. 1812ஆம் ஆண்டில் வெளிவந்தது. திருக்குறள் மூலம், திருவள்ளுவ மாலை, நாலடியார் மூலம் மூன்றும் ஒரே நூலாக அச்சிடப்பட்டது. இந்நூல் அச்சில் வருமுன் தென்னாட்டில் பரம்பரை ஆதீனங்களிலும் வித்துவ செனங்களிடத்தும் உள்ள ஓலைச்சுவடிகளில் இருந்து சுத்தப் பாடங்கள் பார்க்கப்பட்டன. அச்சுக்குத் தயாராக இருந்தபோது 'இவடம் (சென்னை) வந்திருந்த திருவாவடுதுறை ஆதீனவித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாதப் பண்டாரம் இவர்களாலும் மறுபடி கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டது' என்ற வாசகங்கள் பதிப்பிக்கப்பட்ட நூலில் உள்ளன. பதினான்காவது தேசிகர் காலத்தில், திருவாவடுதுறை ஆதீனத்தின் தம்பிரான் ஆலோசனைப்படி நூல் பதிப்பிக்கப் பட்டது எனலாம். வித்துவானாகவும் தம்பிரானாகவும், துவிதீய ஆசாரியராகவும் இருந்த இவரே கி.பி. 1845 முதல் 1869 வரை ஆதீனத்தின் பதினைந்தாவது தேசிகராக இருந்துள்ள்ார்.

ஆறுமுகத்தம்பிரான்

வேளூர் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் ஆறுமுகத் தம்பிரான் என்பவர் ஞான தேசிகர் திருக்குறிப்பின் படி பல திருப்பணிகள் செய்துள்ளார். திருச்சி அருகேயுள்ள மண்ணச்ச நல்லூரில் இருந்த ஆளுடைய பிள்ளை மற்றும் சொக்கலிங்கம் பிள்ளை என்ற இருவரும் வழங்கிய பெரும்பொருள் கொண்டு திருவாவடுதுறை ஆதீனத்தின் ஒடுக்கத்தினைக் கல்கட்டிடமாக இன்றுள்ளபடி ஆறுமுகத் தம்பிரான் கட்டி வைத்தார். பொருளுதவி புரிந்த மேற்கண்ட இருவரின் திருவுருவங்க்ளைச் சிற்பங்களாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

இவர் ஒடுக்கத்தில் செய்து வைத்துள்ளார். மேற்படி உருவங்களை இன்றும் காணலாம் என்று 'குருபரம்பரை விளக்கம்' குறிப்பிடுகிறது.

அருணாசலம் பிள்ளை

திருவாசி என இன்றழைக்கப்படும் திருப்பாச்சில் ஆச்சிரமத்தில் சிவன்கோயில் அருகே சிதைந்த மண்டபம் ஒன்றுள்ளது. நீள் செவ்வக வடிவில் கூடிய இம்மண்டபத்தின் நுழைவாயிலில் ஆறு வரி கொண்ட கல்வெட்டு உள்ளது. கல்வெட்டில் மடத்தின் பெயர் உள்ளது.

'சாலிவாகன சகாத்தம் 1727 மேல் குறோதன ஹ தையி மீ" 16வ திங்கள்கிழமை அசுவதி நட்செத்திரம் சுபதினத்தில் திருவாவடுதுறை நமசிவாய குருமூர்த்தி ஆதீனத்துக்கு மண்ணச்ச நல்லூரிலிருக்கும் கற்பகம் பிள்ளையவர்கள் குமாரன் அறுணாசலம் பிள்ளை தற்மம்' என்றுள்ளது.

இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1805 ஆகிறது. அதாவது பதினான்காவது தேசிகர் காலம் எனலாம். திருவாவடுதுறை நமசிவாய குருமூர்த்தி ஆதீனத்திற்கு அருணாசலம் பிள்ளை திருவாசியில் கிளைமடம் கட்டித்தந்துள்ளார். இங்கே தம்பிரான் ஒருவர் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வரை தங்கியிருந்ததாக அறிகிறோம். இறுதியாக இங்கிருந்த தம்பிரான் இராமலிங்கத் தம்பிரான் என இவ்வூரில் வயதான வர்கள் குறிப்பிடுகின்றனர். திருவானைக்காவல் என்ற ஊரில், ஒரு தம்பிரான் வாழ்ந்துள்ளார். அத்தெரு, தம்பிரான் தெரு என இன்று அழைக்கப்படுகிறது.

திருப்பணி

திருவாவடுதுறை ஆதீனத்தின் ஒடுக்கத்தினைப் புதுப்பித்துத் தந்த ஆறுமுகத் தம்பிரான் திருவாவடுதுறையில் நீண்டகாலம் வாழ்ந்துள்ளார். தம்முடைய ஞான தேசிகர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஞானமா நடராசரைப் பூசை புரிவதற்கு நவ பூஜா மண்டபமும் பாகசாலையும் போசனசாலையும் வேறுபல கல் திருப்பணிகளையும் செய்துள்ளார். பரிதாபி வருடம் சித்திரை மாதம் கார்த்திகை நட்சத்திரம் ஒன்றில் இத் தம்பிரான் சிவனடி சேர்ந்துள்ளார்.

தாண்டவராயர்

திருவிடைமருதூரில் பிறந்த தாண்டவராயர் என்பவர் வேளூர் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் இருந்த தம்பிரான்களில் ஒருவர் ஆவார். கவிஞராகவும் இவர் இருந்துள்ளார். இவர் சென்னை சென்று நீண்ட காலம் அங்கேயே வாழ்ந்துள்ளார் என்று அறிகிறோம்.

சிதம்பர நாதத் தம்பிரான்

திருவாவடுதுறை ஆதீனத்தில் 14ஆவது பட்டத்தில் இருந்த சுப்பிரமணிய தேசிகரிடம் திட்சையும் காசாயமும் பெற்ற அடியார்களுள் சிதம்பர நாதத் தம்பிரானும் ஒருவராவர்.

வள்ளியூர்க்கோயில்

திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூரில் குரு மூர்த்திகள் ஆணைப்படி இவர் இருந்து வந்தபோது குன்ம நோயினால் வருந்தி உயிரைப் போக்கிக் கொள்ள முற்படுகையில் பார்வதி தேவியால் இவர் தடுத்தாட் கொள்ளப்பட்டார். வள்ளியூரில் கோயில் திருப்பணி புரிந்ததுடன் 'திரியுகம் கண்ட தேவிமாலை' என்ற நூலையும் இவர் இயற்றியுள்ளார். எனவே வள்ளியூர்க் கோவில் பதினான்காம் தேசிகர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது உறுதியாகும்.

சாமி கவிராயர்

'சாமிகவிராயர்' என்பவர் கல்லிடைக்குறிச்சித் தளிகை மடத்தில் இருந்து வந்த அடியார் ஆவார். இவர் 'சாமிநாதம்'

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

என்ற இலக்கண நூலையும் 'பொதிகை நிகண்டு' என்ற நிகண்டு நூலினையும் இயற்றியுள்ளார். இந்நூலின் ஓலைச் சுவடி ஒன்று திருவாவடுதுறை ஆதீனத்தின் சரஸ்வதி நூலகத்தில் தற்போதும் உள்ளது. அச்சிடப்பட்ட இந்நூலில் ஆசிரியர் பெயர் குறிப்பிடும் விருத்தம் வருமாறு.

பூமாது புவிமாது போற்றுமு னம்மாது
பொன்மலை வில்லியு மீன்ற கமலைமி லுதித்தோன்
மாமாது குறமாது மணவாளர் செந்தூர்
வடிவேல னடிமலரை மனத்திடத்து நினைத்தே
கோமாது விரித்தனைய பலநிகண் டும்பார்த்துக்
கும்பன்மகிழ் பொதிகைநிகண்டுடன் குருநூல் பகர்ந்தா
னாமாது புகழ்பொருள் நாந்திகுழ கல்லிடை
யூர்ந்த குலன்சாமி கவிராச சங்கநிதியே'

பதினான்காவது பட்டத்தில் இருந்த சுப்பிரமணிய தேசிகர் எண்பது ஆண்டுகள் வரை வாழ்ந்துள்ளதால் இவருக்குத் திரு நட்சத்திரப் பண்டார சந்நிதி என்ற பெயருமுண்டு. மடத்தின் தலைவராகவே பல ஆண்டுகள் இவர் இருந்துள்ளார்.

மணலி முதலியார்

அக்காலத்தில் ஜமீன்தார்களும் பெருஞ்செல்வர் களும் இவருடன் அளாவளாவுவதில் பெருவிருப்பம் கொண்டிருந்தார்கள். சென்னையை யடுத்த மணலியில் வாழ்ந்த சின்னையா முதலியார் என்பவர் தேசிகரைத் தரிசிக்க வேண்டி தமது துணைவியார்களுடன் ஒருசமயம் திருவாவடுதுறை வந்துள்ளார். அப்போது பழுத்தப் பழம்போல் தேசிகர் இருந்துள்ளார். தேசிகரின் பணிவிடை 90வயது நிரம்பியவராக இருந்துள்ளார். முதலியாருக்கு விபூதிப்பை, பீதாம்பரம், தாம்பூலம் ஆகியவை வழங்கிய தேசிகர், முதலியாரின் தேவியர்களுக்கு மஞ்சள், குங்குமம், தாம்பூலம், ஆகியவை அளித்துள்ளார். வயதான ஒருவரைப் பணிவிடையாக வைத்திருந்த தேசிகரின் அருட்பாங்கினை எண்ணி முதலியார் மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செப்பேடுகள்

பதினான்காவது தேசிகர் காலத்தில் ஒருசில செப்பேடுகள் வெளியிடப்பட்டன. அவைகளில் திருவிடை மருதூர்ச் செப்பேடு முக்கிய மெனலாம்.

மகாலிங்க சுவாமிபூசை

விசயரகுநாத தொண்டைமான் அவர்கள் திருவிடை மருதூர் மகாலிங்கசுவாமி உஷாகால பூசைக்காக வேண்டி சூரியனரர் கோவில் ஆதீனத் தம்பிரான் வசம் நிலம் நன்கொடையாக அளித்துள்ளார். சூரியனார்கோவில் மடம் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்நிலை மடமாகும். இம்மடத்தின் தலைவரைத் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரே நியமிப்பது வழக்கமாக இன்று வரை இருந்து வருகிறது. சூரியனார் கோவில் மடத்தின் தலைவரான சிவாக்கிரக யோகிகள் (13, 14, 15, 16, பட்டங்களில் ஒருவர்) நன்கொடையைப் பெற்றுக் கொள்கிறார்.

ரெகுநாத வாத்தியார்

வீரக்குடி நாட்டு குறுக்காக்குறிச்சி மாகானம் தொடங்கி 14 எல்லைக்குள்பட்ட ஏந்தல் நாலூற்கும் நன்செய், புன்செய் உட்பட சர்வமான்யமாகத் தொண்டைமான் மன்னர் நிலம் வழங்கியுள்ளார். செப்பேட்டின் வாசகத்தை ஒருவாத்தியார் எழுதியுள்ளார். அவர்பெயர் ரெகுநாத வாத்தியார் என்பதாகும். இவர் தந்தை பழனியப்ப வாத்தியாராவார்.

திருக்கழுக்குன்றக் கல்வெட்டு

திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடங்களில் திருக்கழுக்குன்றக்கிளை மடமும் ஒன்றாகும். எண் 19, சன்னதித்தெருவில் உள்ள இக்கிளைமடம் வேளூர் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் கட்டப்பட்டது. கி.பி. 1807 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று மடத்தின் திண்ணையை யொட்டிய சுவரில் காணப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

தனிக்கல்லில் ஆறுமுக முதலியார் என்பவர் கல்வெட்டு வெட்டி, சுவருடன் பதித்து வைத்துள்ளார். சூரியன், சந்திரன், நந்தி என்ற சிற்பங்களும் 'சிவமயம்' என்ற சொல்லும் கல்வெட்டின் தொடக்கத்தில் உள்ளது. கல்வெட்டின் வாசகம் வருமாறு;

1. சாலிவாகன சகார்த்தம் 1729
2. க்கு மேல் செல்லா நின்ற பிறப்பவ
3. ஞ சித்திரை மாசம் 3 சோமவாரம் பூர்வ
4. பட்ச பஞ்சமியு மிருக சிரீட நட்செத்திரம்
5. மீனலெக்கனமுஞ் சோபனநாமயோக
6. மும்பாலவாகறண முங் கூடின சுபதின
7. த்திற் கயிலாய பரம்பரையாகிய திருவா
8. வடுதுறை நமசிவாய ஞானகுரு தேசிகர்
9. தினத்துக்கு அமாம்பேட்டிலிருக்கும் க
10. ந்தப்ப முதலியாரவர்கள் குமாரர் ஆறு
11. முக முதலியாரவர்கள் திருக்கழுகுன்
12. றத்தில் அடிவாரத் திருக்கோயிற் சன்னி
13. தான வீதியிற் சொற்க வினாயகர் கோ
14. விலுக்குத் தெற்கு ஒசூர் அம்மன்
15. கோவிலுக்குக் கிழக்குப் பிடாரி கோயி
16. ற் சந்துக்கு மேற்கு காக்கைக் குன்று
17. வரை வால லிச்சுமின்னான்கெல்
18. கைக்குள்பட்ட நிலத்தை திரு லத்து
19. ரிடத்திற்க் கிறயத்துக்கு வாங்கி சீசர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

20. மடாலயம் கட்டிவைத்து பஞ்ச பூதசா

21. ட்சியாகத் தெத்தம் பண்ணின தற்ம நீ

22. டுழி வாழ்க. இந்த மடாலய தற்மத்துக்கு

23. ஆராகிலு மொருவர் இடையூறு நினை

24. த்தாற் சிவத்துரோகம் பண்ணினவர்

25. கள் வீழும் நிரையத்திற் போகக் க

26. டவாராகவும்.

கல்வெட்டின் வாசகம் எளிமையாக உள்ளதால் விளக்க வேண்டியதில்லை. திருவாவடுதுறை ஆதீனம் கயிலாயப் பரம்பரை என்று இக்கல்வெட்டிலும் குறிக்கப்படுகிறது. நமசிவாய ஞானகுருதேசிகர் தினம் என்பது ஆதீனத்தாபகர் நமசிவாய தேசிகரின் குருபூஜை ஆகும். அமாம் பேட்டிலிருக்கும் கந்தப்ப முதலியாரின் மகனார் ஆறுமுக முதலியார் துறைசை ஆதீனத்துக்குப் பூமியை விலைக்கு வாங்கி வழங்கியுள்ளார். நிலத்தின் நான்கெல்லையும் வரையறை செய்யப்படுகிறது. மலையடிவாரத் திருக் கோவில் என்பது பக்தவச்சலனார் கோயிலாகும். சன்னதி வீதியில் சொர்க்க வினாயகர் கோவில் உண்டு. அம்மன் கோவிலும் பிடாரி கோயிலும் காக்கைக்குன்றும் எல்லை களாகச் சுட்டப்படுகின்றன. ஆறுமுகம் முதலியார் மடாலயம் கட்டி வைத்த விவரமும் நிலங்களைத் தத்தம் பண்ணிய விவரமும் பின் காண்கிறோம். மடாலய தர்மம் நீடுழி வாழ வேண்டும் என்றும் தானத்திற்கு எதிராக இருப்பவர் நரகை அடைவர் என்றும் காண்கிறோம்.

மடத்திற்குச் சிலகட்டிடங்களும், சுமார் 120 ஏக்கர் நிலங் களும் தற்போதும் உள்ளன. திருமண மண்டபமும் மடத்தின் பொறுப்பில் இயங்கி வருகின்றது. சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகர் இக்கிளை மடத்தில் வேறுபல திருப்பணிகளும் புரிந்துள்ளார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

திருவாவடுதுறை ஆதீனத்தின் பதினெட்டாவது பட்டத்தில் இருந்த சுப்பிரமணிய தேசிகர் திருக்கழுக் குன்றத்தில் பிறந்தவர்கள் ஆவார்கள். 'திருக்கழுக்குன்ற சுவாமிகள்' என்றே இவர் அழைக்கப்பட்டுள்ளார்.

திருக்கழுக்குன்றத்தில் மலை உச்சியில் வேதகிரீசர் கோயிலும் இடையில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த குடைவரைக் கோயிலும் ஊரில், பக்தவச்சலனார் கோயிலும் உள்ளன. இவ்வூர், பாடல் பெற்ற தலமாகும். மணிவாசகர் பெரிதும் விழைந்த இவ்வூர்க் குறித்துத் தலபுராணமும் உண்டு.

அருணகிரிநாதர் தமது திருப்புகழில் நாள்தோறும் இரண்டு கழுகுகள் வந்து மலையில் உணவருந்திச் செல்லும் காட்சியைக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற 'மதிகெட்டான் நாடகம்' என்ற அச்சில் வராத நாடகத்திலும் பட்சிகள் சாதம் உண்ண தினமும் மலைக்கோயிலுக்கு வந்த விபரம் குறிக்கப்பட்டுள்ளது.

புனித தலமான திருக்கழுக்குன்றத்தில் துறைசை ஆதீனத்திற்குப் பூமியை விலைக்கு வாங்கி வழங்கிய ஆறுமுக முதலியார் புகழ் நிலைத்து நிற்கிறது.

பதிமூன்றாவது தேசிகர் காலத்தில் காசிக்குச் சென்ற கண்ணப்பசாமியும் வைத்தியலிங்கத் தம்பிரானும் இத்தேசிகர் காலத்திலும் மடத்தின் வளர்ச்சிக்காகப் பாடு பட்டுள்ளார்கள். வைத்தியலிங்கத் தம்பிரான் தம் இறுதிக் காலத்தில் செங்கோட்டை வட்டம் மேக்கரையில் வாழ்ந் துள்ளார். செங்கோட்டை அருகேயுள்ள மேக்கரைக் கிளை மடமும் மடத்துக்குச் சொந்தமான நிலங்களும், பதினான் காவது தேசிகர் காலத்தில் வைத்தியலிங்கப் பண்டாரத்தின் மூலம் கிடைத்துள்ளன. கி.பி.1828 அளவில் மேற்படி சொத்தைத் திருவிதாங்கூர் மன்னர் வழங்கியுள்ளார் என்று அறிகிறோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேக்கரை மடமும் வைத்தியலிங்கத் தம்பிரானும்

தென்காசியில் இருந்து அச்சங்கோயில் செல்லும் சாலையில் சுமார் 15.கி.மீ தூரத்தில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கிளைமடம் உள்ளது. கேரள பாணியில் கட்டப்பட்ட கிளைமடத்தின் கட்டிடம் தரைக் கிழ்த்தளத்தையும் (Underground) இரண்டு மாடிகளையும் கொண்டுள்ளது. திருவிதாங்கூர் மன்னர் ஒருவர் வைத்திய லிங்கத் தம்பிரானுக்கு இதனை வழங்கியுள்ளார். துறைசை ஆதீனத் தம்பிரான்களில் ஒருவராக இவர் இருந்துள்ளார். மேக்கரை வண்டாடும் பொட்டலில் இத்தம்பிரான் சிவப்பேறு எய்தினார். திருவிதாங்கூர் மன்னர் இவருக்குப் பட்டுக்களும் பீதாம்பரங்களும் பூஜைக்கு வேண்டிய வெள்ளிப் பாத்திரங்களும் பல்லக்கைச் சுமப்பவனுக்கு அடித்தூண் சம்பளத்திற்கு வேண்டிய பொருளையும் வழங்கியிருந்தார். மேலும் மேக்கரையை யொட்டி சுமார் 2000 ஏக்கர் நிலத்தையும் மன்னர் அளித்துள்ளார் என்று அறிகிறோம்.

'சிவநல்லூர் சேகரம் மேக்கரை' நிலங்கள் தொடர்பாக ஓர் ஆவணம் இவ்வாசிரியரால் பார்வையிடப்பட்டது. கொல்லம் 1003, 1004, 1007, 1016 ஆண்டுகள் அதில் உள்ளன. 'வைத்தியலிங்க பண்டாரம்' என்ற பெயரும் அதில் உள்ளது. '1003-வது ஆண்டு ஆனிமாதம் 24-ம் தேதி திருவிதாங்கோடு சமஸ்தானத்தைச் சேர்ந்த செங்கோட்டைக் கடைவாசல் ஸ்ரீபண்டார காரியம் செய்பவர்களான திருவாவடுதுறை மடம் வகை காரியஸ்தர் நமசிவாய பண்டாரம் வைத்தியலிங்க பண்டாரத்துக்கு எழுதிக் கொடுத்த மேலோலையாவது' என்று ஆவணம் தொடங்குகிறது. முதலில் பூலியப்பதேவருக்குக் குத்தகைக்கு விடப் பட்டது. குத்தகை ஒழுங்காக வராததால் பின்னர் மாற்றப்பட்டுள்ளது. நஞ்சை, புஞ்சை குத்தகை எவ்வளவு வழங்கவேண்டும் என்ற விவரமும் இதில் உள்ளது. இந்த ஆவணத்தின் காலத்தில் வேளூர் சுப்பிரமணிய தேசிகரே (1789-1845) திருவாவடுதுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

ஆதீனத் தலைவராக இருந்துள்ளார். மேக்கரை மடமும் 2000 ஏக்கர் நிலமும் தற்போதும் மடத்தின் பராமரிப்பிலேயே உள்ளன.

வைத்தியநாதத் தம்பிரான்

கோவை மாவட்டம் தாராபுரம் தாலுக்கா கண்ணபுறம் கிராமம் ஒலைப்பாளையத்தில் இருக்கும் தானியப்ப கவுண்டர் என்பவர் அநப்பம்பாளையத்தில் இருக்கும் முத்தய்யகவுண்டனுக்கு எழுதிக்கொடுத்த நோட்டீசில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான நிலங்கள் குறிக்கப்படுகின்றன. ஸ்ரீமுக ஆண்டு ஆடி மாதம் 13ஆம் தேதி கொண்ட இந்த ஆவணம் கி.பி. 1813ஆம் ஆண்டிற் குரியதாகும். இதில் வயித்தியநாதத் தம்பிரான் சுவாமியவர்கள் மற்றும் படாலையவதி சிவதானுதம்பிரான் சுவாமியவர்கள் குறிக்கப்படுகிறார்கள். இந்த ஆவணத்தில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தராகிய வயித்தியநாதத் தம்பிரான் சுவாமி என்றுள்ளதால் வயித்தியநாதர் ஆதீனகர்த்தர் என்பது உறுதி யாகிறது. ஆவணத்தின் காலத்தில் 'வேளூர் சுப்பிரமணிய தேசிகரே ஆதீன கர்த்தராக இருந்துள்ளதால் சுப்பிரமணிய தேசிகருக்கு வைத்தியநாதர் என்ற பெயரும் இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம். வேளூராகிய வைத்தீஸ்வரன் கோயில் இறைவன் பெயரை வேளூரில் பிறந்த இவர் பெற்றிருப்பதில் வியப்பில்லை.

வெண்கடன் பத்திரம்

பதினெட்டாவது பட்டத்திற்கு வந்த சுப்பிரமணிய தேசிகரின் பிள்ளைத்திருநாமம் வைத்தியநாதன் என்பதாகும். ஆயின் காலம் மிகவும் பிற்காலமாகும். மடத்தின் நிலம் 25 ரூபாய் குத்தகைக்குப் பெறப்பட்டுள்ளது. மற்றோர் ஆவணம் ஆனிமாதம் 19ஆம் தேதியில் (கி.பி. 1813) கூடியது. செம்பகராம் என்பவர் கடன் வாங்கியதற்காக ரூபாய் முப்பதுக்கு வெண்கடன் பத்திரம் எழுதித் தந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆனிப்பூரம்

திருவாவடுதுறை குருமகான்களில் நீண்டகாலம் அருளாட்சி புரிந்த வேலூர் சுப்பிரமணிய தேசிகர் கி.பி.1845இல் குரோதன வருடம் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவாவடுதுறையில் சிவபரிபூரண மடைந்தார்.

அம்பலவாண தேசிகர்
பதினைந்தாவது பட்டம் - (1840-1869)

தம்பிரானாகவும் சின்னப்பட்டமாகவும் நீண்ட காலம் இருந்த அம்பலவாண தேசிகர் கி.பி. 1845இல் பெரிய பட்டத்திற்கு வந்தார். இவர் மெய்கண்ட சாத்திர நூல்கள், பண்டார சாத்திரநூல்கள் இரண்டிலும் மிகுந்த பயிற்சி கொண்டவர். எப்போதும் சிவசிந்தனையிலே இருந்தவர். தென்பாண்டிய நாட்டிற்குப் பலமுறை கிளைமடங்களை ஆய்வு செய்யவும் சிவன் கோயில்களில் தரிசனம் செய்யவும் தலயாத்திரை மேற்கொண்டுள்ளார். இவர் தமிழ் மொழியின் மீது பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். தம்பிரானாக இருந்தபோதே 'திருக்குறள், நாலடியார், திருவள்ளுவ மாலை என்ற மூன்று சுவடிகளும் ஒன்றாக முதல்பதிப்பாக அச்சில் வந்தபோது பிழை திருத்தித் தந்துள்ளார் என்பதை முன்பே கண்டோம் அன்றோ?

குற்றாலலிங்கம்

அம்பலவாண தேசிகர் தமக்கு உதவியாகக் குற்றால லிங்கம் என்பவரைச் சின்னப்பட்டத்தில் அமர்த்திச் 'சுப்பிரமணிய தேசிகர்' என்ற தீட்சா நாமமும் சூட்டினார். தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகளைக் கொண்டு இவருக்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்பிக்க அம்பலவாண தேசிகர் ஏற்பாடு செய்துள்ளார். வடமொழியும் கற்பிக்க வழி செய்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

தனிகை மடத்தில் மகரத்தலைநாள்

மடத்தின் மரபிற்கேற்ப இளையபட்டம் சுப்பிரமணிய தேசிகர் கல்லிடைக்குறிச்சியில் இருந்து வந்தார். அப்போது பஞ்சாக்கர தேசிகர் என்ற நமசிவாய தேசிகருடைய மகரத்தலைநாள் குருபூஜை விழா வந்தது. அக்காலத்தில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்கள் பலரும் விழாவில் பங்கு கொண்டுள்ளனர். மகரத்தலைநாள் விழா கல்லிடைச் குறிச்சியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

வீரபத்திர பிள்ளை

துவிதீய ஆசாரியார் சுப்பிரமணிய தேசிகர் திருநெல்வேலி ஈசான மடத்தில் இருந்தபோது அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற 'வீரபத்திரபிள்ளை' என்பவர் வெள்ளியில் கூடிய பாதுகைகள் இரண்டை, துவிதீய தேசிகருக்கு வழங்கி மகிழ்ந்துள்ளார்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை

அம்பலவாண தேசிகர் தம்முடைய ஆதீன வித்துவானாகத் திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (1815-1876) என்பவரை நியமித்துக் கொண்டார். செய்யுள் இயற்றுவதிலும் பாடங்கள் நடத்துவதிலும் பெரும்புலமை கொண்டவராக மீனாட்சிசுந்தரம் பிள்ளை விளங்கினார். மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குக் குருமகானே தீட்சை செய்து வைத்தார். அம்பலவாணர் மீது கலம்பகமும் பிள்ளைத் தமிழும் இவர் பாடியுள்ளார். சந்நிதானங்கள் சமாதியுற்ற தலம், மதி, நாள் ஆகியவை நன்கு விளங்குமாறு இவர் 'குருபரம்பரை அகவல்' பாடியுள்ளார்.

நாவலர்

யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகம்பிள்ளை ஞான தேசிகரிடம் திருமந்திரத்துள் தமக்குரிய ஐயங்களைக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

கேட்டுத் தெரிந்து கொண்டார். சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவரான ஆறுமுகம்பிள்ளைக்கு ஞானாசிரியர், நாவலர் என்ற பட்டத்தை வழங்கி பெருமைப்படுத்தினார்.

சோமசுந்தரத் தம்பிரான்

தருமபுர ஆதீனத்துக்குட்பட்ட வைத்தீஸ்வரன் கோயில் கட்டளைத் தம்பிரானாகிய சோமசுந்தரத் தம்பிரான் என்பவர் அம்பலவாண தேசிகரை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வரவழைத்து யாவரும் குருதரிசனக் காட்சி பெற ஏற்பாடு செய்துள்ளார்.

சிதம்பரம் மெய்கண்டார்கோவில்

'பிரபவ' வருட மொன்றில் சிதம்பரம் போந்த, அம்பலவாணதேசிகர் உமாபதி சிவாசாரியார் வீடாக இருந்து பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்தின் மெய்கண்டார் கோயிலாக விளங்கும் மாலைக் கட்டித்தெருவில் இருக்கும் கிளைமடத்தில் சிலநாள்கள் இருந்து வந்துள்ளார். ஆனி மாதம் ஆருத்திரா தரிசனம் கண்டு நடராசப் பெருமானுக்கு மகரகண்டிகை செய்தளித்துள்ளார். அன்பர்களுக்குக் குருதரிசனமும் அளித்துள்ளார். மெய்கண்டார் கோவில் தற்போது புதுப்பிக்கப்பட்ட நிலையில் கிளைமடத்துடன் காட்சியளிக்கிறது.

சர்க்கரைப்பண்டாரி

பல்வேறு தலங்களையும் தரிசித்துக் கொண்டு, அம்பலவாண தேசிகர் அருணையம் பதிக்குப் புறப்பட்டார். இடையில் உள்ள வேட்டவலம் சென்றபோது ஜமீன்தார் 'சர்க்கரைப் பண்டாரி' என்பவர் சுவாமிகளை வரவேற்று மாகேசுர பூசை முதலியன சிறப்பாக நடத்தி மகிழ்ந்தார். தேசிகரின் குருதரிசனக் காட்சி நடைபெற்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

திருவெண்ணெய் நல்லூர்

திருவண்ணாமலையில் தேசிகர் இருந்தபோது திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டார் கோயில் புதுப்பிக்கும் பணியை நேரில் இருந்து கவனித்துள்ளார்.

கங்கை கொண்ட சோழபுரம்

கங்கைகொண்ட சோழபுரம் சென்று அங்குச் சிறிது காலம் தேசிகர் இருந்தார் என்று குருபரம்பரை விளக்கம் கூறுகிறது.

திருப்பனந்தாள் மடம்

திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர் அம்பலவாண தேசிகரை வரவழைத்து பெருமைபடுத்தினார். காசிமடத்தின் அதிபராக அப்போது இராமலிங்க சுவாமிகள் அருளாட்சி புரிந்தார். காசியில் கண்ணப்பசாமி மடத்திற்காக புதிய மனைகள் வாங்கப்பட்டன.

திருப்பெருந்துறை

அம்பலவாண தேசிகர் அடியார் பலருடன் இராமேசுரத்திற்குச் சென்று சிறிதுகாலம் அங்கே இருந்தார். பின்னர் திருப்பெருந்துறையிலும் இருந்துள்ளார்.

வேணுவனலிங்கத் தம்பிரான்

வேணுவனலிங்கத் தம்பிரான் இத்தேசிகர் காலத்திலும் 16ஆவது தேசிகர் காலத்திலும் வாழ்ந்துள்ளார். வேணுவன லிங்கத்தம்பிரான் இத்தேசிகர் பெயரில் விக்கிரமசிங்கபுரம் அருகே 'அம்பலவாணபுரம்' என்ற ஊரை ஏற்படுத்தினார் என்பது வரலாறாகும்.

சிவஜோதி

அம்பலவாண தேசிகர் பிரபவ வருடம் ஆனி மாதம் பூரநட்சத்திரத்தன்று (கி.பி. 1868) திருவாவடுதுறையில் சிவஜோதியில் கலந்தார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்
பதினாறாவது பட்டம் - (1869-1888)

குற்றாலக்குறவஞ்சி எனும் நூலை இயற்றிய திரிகூடராசப்ப கவிராயர் மரபில் வந்த குற்றாலலிங்கம் என்பவரே திருவாவடுதுறை ஆதீனத்தின் பதினாறாவது பட்டத்தில் விளங்கிய தேசிகர் ஆவார். சுப்பிரமணிய தேசிகர் என்ற அபிடேகப் பெயரினை இவர் பெற்றார். சுப்பிரமணிய தேசிகர் என்ற பெயரில் பலர் இருப்பதால் பதினாறாவது பட்டத்தில் இருந்தவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் எனவும் பதினான்காவது பட்டத்தில் இருந்தவர் வேளூர் சுப்பிரமணிய தேசிகர் எனவும் வழங்கப்பட்டுள்ளனர்.

தமிழ் இலக்கியப் பொற்காலம்

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அருளாட்சி புரிந்த காலமே ஆதீன வரலாற்றில் தமிழ் இலக்கியத்திற்கான பொற்காலம் எனலாம். எண்ணற்ற தமிழ் நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டதுடன் பழந்தமிழ் நூல்கள் பல உ.வே. சாமிநாதஐயர் போன்றவர்களால் பதிப்பிக்கப் பட்டுள்ளன. திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் புலமையைப் போற்றியதுடன் அவர் வாழ்ந்த போதும் அவர் இறைவனடி சேர்ந்த பின்பும் அவர் குடும்பம் கடனில் மூழ்காதபடி பெரும் பொருள் வழங்கி, காத்து இரட்சித்த பெருமை சுப்பிரமணிய தேசிகரையே சாரும். மன்னர் நிலையில் இருந்து புலவர்களை ஆதீனகர்த்தர் ஆதரித்து வந்துள்ளார். வித்தியா குருவான தாண்டவராய சுவாமி களிடம் இத்தேசிகர் பெருமதிப்பு வைத்திருந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

சிவஞான சுவாமிகள்

விக்கிரம சிங்கபுரத்தில் துறைசை ஆதீனத்திற்காகவே வாழ்ந்து மறைந்த சிவஞான சுவாமிகளைத் தம் வழிபடு கடவுளாகவே தேசிகர் கருதி வந்துள்ளார்.

உ.வே.சா.வும் ஆதீனமும்

தமிழறிஞர்கள் மட்டுமின்றி வடமொழி வாணர்களும் சங்கீத விற்பன்னர்களும் தேசிகரால் பெரிதும் ஆதரிக்கப் பட்டுள்ளனர். யார்யார் எங்ஙனம் எப்பேது ஆதரிக்கப் பட்டனர் என்பதற்கு உ.வே.சா.வின் என் சரித்திரமே சான்றாகும்.

கும்பகோணம் அருகில் உள்ள உத்தமதானபுரம் வேங்கட சுப்பையருக்கு மகனாகக் கும்பகோணம் அருகில் உள்ள சூரிய மூலை என்ற சிற்றூரில் பிறந்து வறுமையில் வாடி கல்விபெற முடியாமல் இருந்த வேங்கடரமணர் என்ற பிராமண மாணவருக்கு முழுமையான தமிழ்க்கல்வி புகட்டி, தமிழறிஞராக்கியவர் சுப்பிரமணிய தேசிகரே ஆவார். இவருக்குக் கல்விச்செல்வம் வழங்கியதுடன் இவர் குடும்பம் வறுமையில் வாடாதபடி சுப்பிரமணிய தேசிகர் பார்த்துக் கொண்டார். கி.பி. 1877இல் திருவாவடுதுறையில் உ.வே.சாமிநாத அய்யருக்குப் புதுவீடு தந்து ஆண்டிற்கு 60 கலம் நெல்லும் ரூபாய் 50 சன்மானமும் தேசிகர் வழங்க ஏற்பாடு செய்துள்ளார். கவலையின்றி தந்தையார் சிவவழிபாடு செய்ய உதவிய தேசிகரை உ.வே.சா. தம் நூலில் நினைவு கூர்ந்துள்ளார்

தேசிகரின் மற்றொரு மாணவரான தியாகராச செட்டியாரின் விருப்பப்படி உ.வே.சாவிற்குக் கல்லூரிப் பேராசிரியராவதற்குப் பரிந்துரைக் கடிதமும் சுப்பிரமணிய தேசிகர் அளித்துள்ளார்.

திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவரான இராமலிங்கத் தம்பிரான் வேண்டுகோளுக்கிணங்க தமது

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

ஆதீன வித்துவான் குமாரசாமித் தம்பிரான் என்பவரைத் திருப்பனந்தாள் மடத்திற்கு அனுப்பி அங்கு அவர் மடாதிபதியாக இருக்க தேசிகர் வழிவகை செய்துள்ளார். இந்தக் குமாரசாமித் தம்பிரான் 1880 முதல் 1894 வரை திருப்பனந்தாள் மடத்தின் தலைவராக இருந்துள்ளார். இவர், தேசிகர் மீது பல பாடல்களைப் புனைந்துள்ளார். உ.வே.சா. இந்தக் குமாரசாமித் தம்பிரானைப் போற்றி உள்ளார்.

ஆறுமுகத் தம்பிரான்

குன்றக்குடியில் உள்ள திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க ஆதீன வித்துவான் ஆறுமுகத் தம்பிரான் என்பவரைத் தேசிகர் அனுப்பி வைத்தார். காலம் 1888 ஆகும். அக்காலத்தில் சைவ மடாதிபதிகளில் சுப்பிரமணிய தேசிகருக்கே பெருமதிப்பு இருந்துள்ளது.

முத்துக்குமாரதேசிகர்

சூரியனார்கோவில் மடத்தின் தலைவராக முத்துக் குமாரத் தம்பிரானை நியமித்து அவருக்கு 'முத்துக்குமார தேசிகர்' என்னும் தீட்சா நாமமும் சூட்டி 1888இல் சூரியனார் கோயில் மடத்திற்குத் தேசிகர் அனுப்பி வைத்துள்ளார். சூரியனார் கோவில் மடம் துறைசை ஆதீனத்தின் சார்பு மடமாகும்.

கிறித்தவரும் தேசிகரும்

சவேரிநாதப்பிள்ளை என்ற சிவகுருநாதப்பிள்ளை கிறித்தவராக இருந்தும் அவருக்கு முறையாகத் தமிழ்க்கல்வி வழங்க தேசிகர் ஏற்பாடு செய்துள்ளார். முன்சீப் வேதநாயகம் பிள்ளை என்ற கிறித்தவரால் தேசிகர் பெரிதும் போற்றப் பட்டுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

நமசிவாய தேசிகர்

திருநெல்வேலிப் பேட்டையில் பிறந்த நச்சாடலிங்கர் என்பவருக்கு முறையாகத் தீட்சைகள் செய்வித்து 'நமசிவாய தேசிகர்' என்ற திருநாமமும் சூட்டி ஆசாரியாபிடேகம் செய்து துவிதிய ஆசாரியராக வைத்துக் கொண்ட தேசிகர், பல முறை தமிழகமெங்கும் தலயாத்திரை மேற்கொண்டுள்ளார். நமசிவாய தேசிகர், இளையபட்டத்தில் இருந்தபோதே கல்லிடைக்குறிச்சியில் சிவப்பேறு எய்தினார். சித்திர பானு வருஷம் தை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் (கி.பி. *1883*) சின்னப்பட்டம் பரிபூரணம் அடைந்துள்ளார். கல்லிடைக் குறிச்சித் தளிகைமடத்தின் தோட்டத்தில் இவருக்குச் சமாதிக்கோயில் கட்டப்பட்டது. சமாதியில் கல்வெட்டும் பொறிக்கப் பட்டுள்ளது.

1. 1058 ஹு தை
2. மீசிவநமசிவ
3. ாய தேசிக சுவா
4. மிகள் பரிபூறன
5. மான தினம்

சமாதிக் கோயில் முன்புற மண்டபத்தின் விதானத்தில் இக்கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் அருகில் சாஷ்டாங்க மாக விழுந்து வணங்கும் தம்பிரான் 'சுவாமி உருவம் கல்வெட்டுடன் உள்ளது. 'காறுபாறு நமசிவாய தம்பிரான்' என்பது கல்வெட்டாகும். மேலும் விரிவுக்கு இவ்வாசிரி யரின் கல்லிடைக் குறிச்சிக் கலைக்கோயில்கள் என்ற நூலைப் பார்க்கவும்.

அத்தாணி மண்டபம்

*16*ஆவது பட்டத்தில் சுப்பிரமணிய தேசிகர் இருந்த போது கல்லிடைக்குறிச்சி மடம் விரிவுப்படுத்தப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

நமசிவாய தேசிகர் இளைய பட்டத்தில் கல்லிடைக் குறிச்சியில் இருந்தபோது தளிகைமடத்தில் அத்தாணி மண்டபம் கட்டப் பட்டுள்ளது. மேலும் மேல்தளமும் மாடிக்குச் செல்ல இரு இடங்களில் படிக்கட்டுகளும் இத்தேசிகர் காலத்தில் கட்டப்பட்டன. கல்கட்டிடமாக இருக்கும் தளம், சுண்ணாம்புக்காரைக் கொண்டு முழுமை யாகப் பூசப்பட்டுள்ளதால் மழை பெய்தாலும் கீழே நீர் ஒழுகாதபடி கட்டிடம் அமைந்துள்ளது. பழங்காலத்தில் கல்கட்டிடங்கள் எப்படி இருந்திருக்கும் என்பதற்குத் தளிகைமடமே எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

நாவலர்

யாழ்ப்பாணம் வடகோவைச் சபாபதி பிள்ளை என்பவர், சுப்பிரமணிய தேசிகரிடம் தீட்சை பெற்றதுடன் சித்தாந்த நுண்பொருளும் கேட்டறிந்துள்ளார். நாவன்மை மிக்க இவருக்கு நாவலர் என்ற பட்டத்தைத் தேசிகர் வழங்கியுள்ளார்.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் மதுரை அங்கயற்கண்ணி உடனுறை சோமசுந்தரப் பெருமான் கோயில் கும்பாபிடேக விழா நடைபெற்றுள்ளது. விழாவில் தேசிகர் கலந்து கொண்டுள்ளார். மாகேசுவர பூசையும் நடைபெற்றுள்ளது.

சுப்பிரமணிய விலாசம்

வேணுவன லிங்கத்தம்பிரான் சுவாமிகள் சிவந்திபுரத்தில் உள்ள திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடத்தில் 'சுப்பிரமணிய விலாசம்' என்ற பகுதியைப் புதிதாகக் கட்டி தேசிகரின் திருவுருவத்தையும் சிலை யாகச் செய்து வைத்து, குமாரசாமித் 'தம்பிரான்' தேசிகர் மீது பாடிய பாடல்களில் ஒன்றைக் கல்வெட்டாகவும் வெட்டி வைத்துள்ளார். சுப்பிரமணிய தேசிகர் சிவந்தி புரத்திற்கு எழுந்தருளிய காலத்தில் தமிழ்ப்புலவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பலரும் தேசிகர் மீது கவிகள் பாடியுள்ளார்கள். இக்கவிகள் உ.வே.சாமிநாதையர் முயற்சியால் நூலாகவும் வெளி வந்துள்ளது. உ.வே.சா. பதிப்பித்த முதல்நூல் இதுவேயாகும். இத்தேசிகர் காலத்தில் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் திருப்பெருந்துறை ஆவுடையார் கோவிலில் மணிவாசகர் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்ததுடன் கும்பாபிடேகமும் செய்வித்தார். இவ்விழாவிலும் தேசிகர் பங்கு கொண்டுள்ளார்.

அம்பலவாண தேசிகர்

வடுகநாதப்பண்டாரம் என்பவரின் புத்திரரும் அருணாசலம் என்னும் பிள்ளைத் திருநாமம் உடையவருமான அம்பலவாணருக்கு மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் ஆசாரிய அபிடேகம் செய்து வைத்தார். காலம் 7.1.1888 ஆகும்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை

சுப்பிரமணிய தேசிகர் சிவஞான சித்திக்கு ஒரு பதவுரை எழுதியுள்ளார். ஆதீனத்தின் பெரும் புலவராகிய திரிசிபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அம்பர்ப்புராணம், ஆற்றூர்ப் புராணம், கண்டதேவிப் புராணம், காசி ரகசியம், குறுக்கைப் புராணம், கோயிலூர்ப் புராணம், சூரைமா நகர்ப்புராணம், தனியூர்ப்புராணம், தியாகராசலீலை, குடந்தைப் புராணம், திருத்துருத்திப்புராணம், திருநாகைக் காரோணப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருமயிலைப் புராணம், திருவரன்குளப்புராணம், பட்டீசுரப் புராணம், மண்ணிப் படிக்கரைப் புராணம், மயிலாடுதுறைப் புராணம், வான்னொளிப்புற்றூர்ப் புராணம், விளத்தொட்டிப்புராணம், வீர வனப்புராணம் என எண்ணற்றப் புராணங்களை இயற்றினார். இவருடைய ஆதி குமரகுருபர சுவாமிகள் சரித்திரத்தை மறைந்த பேராசிரியர் மு. அருணாசலம் தமது குமரகுருபரர் நூலில் விமர்சித்துள்ளார்.

குருபூசை மான்மியம், குசேலோபாக்கியானம், சூதசங்கிதை, கச்சி விநாயகர் பதிகம், சுப்பிரமணிய சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

பதிகம், திட்டக்குடிப்பதிகம், மருதவாணர் பதிகம் போன்ற நூல்களையும் இவர் யாத்துள்ளார்.

தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, திருஞான சம்பந்தர் பதிற்றுப் பத்தந்தாதி, திருவூறைப்பதிற்றுப் பத்தந்தாதி, பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி, பாலைவனப் பதிற்றுப் பத்தந்தாதி, பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, குடந்தை திரிபந்தாதி, திரிப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி, திருவிடை மருதூர் திரிபந்தாதி, திருச்சிராப்பள்ளி யமக வந்தாதி, எறும்பீச்சுரம் வெண்பா அந்தாதி எனப் பல அந்தாதி நூல்களை மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடியுள்ளார்.

அகிலாண்டநாயகி மாலை, கற்குடி மாலை, சிதம்பரேசர் மாலை, சுப்பிரமணிய தேசிகர் மாலை, சச்சிதானந்தர் தேசிகர் மாலை, சிவராயலு நாயகர் மாலை, சித்திரச் சத்திரமாலை புகழ்ச்சி எனப்பல மாலை நூல்களைச் செய்துள்ள மீனாட்சி சுந்தரம் பிள்ளை அகிலாண்ட நாயகிப் பிள்ளைத் தமிழ், காந்திமதியம்மைப் பிள்ளைத்தமிழ், சேக்கிழார்ப் பிள்ளைத்தமிழ், திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், திருவிடை முருகன் பிள்ளைத்தமிழ், பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழ், பிரம்ம வித்யா நாயகிப் பிள்ளைத்தமிழ், பெருந்திரு பிராட்டியார்ப் பிள்ளைத்தமிழ், மங்களாம்பிகைப் பிள்ளைத்தமிழ், அம்பலவாண தேசிகர் மீது பிள்ளைத்தமிழ் எனக் கணக்கற்ற பிள்ளைத்தமிழ் நூல்களையும் இயற்றி யுள்ளார்.

'பக்திச்சுவை நனிசொட்ட சொட்ட' சேக்கிழார் பெரிய புராணம் பாடியதாகச் சேக்கிழார்ப் புராணத்தில் மீனாட்சி சுந்தரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

வாட்போக்கிக் கலம்பகம், அம்பலவாண தேசிகர் கலம்பகம், சீர்காழிக்கோவை, குளத்தூர்க்கோவை, வியாசக் கோவை, திருவிடை மருதூர் உலா, சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது, தானப்பாசாரியார் தசவிடு தூது,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

திருவிடைக்கழி குறவஞ்சி, திருவாவடுதுறை சிலேடை வெண்பா, கப்பற்பாட்டு, குருபரம்பரை அகவல், திருஞான சம்பந்தர் பேரில் ஆனந்தக்களிப்பு, பொன்னூசல், மங்கலம், லாலி, வாழ்த்து எனப் பல சிற்றிலக்கியங்களையும் தனிப் பாடல்களையும் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றியுள்ளார்.

தியாகராச செட்டியார், உ.வே.சாமிநாத அய்யர் போன்ற வித்துவான்கள் இவருடைய மாணாக்கர்கள் ஆவார்கள். உ.வே.சாமிநாத அய்யர் தம்முடைய குருவின் வரலாற்றை மிக விரிவாக எழுதியுள்ளார். தம்முடைய சுயசரிதையிலும் தம் குருவையும் திருவாவடுதுறை ஆதீனத்தையும் போற்றி யுள்ளார். பெரும்புலவரான மீனாட்சி சுந்தரம்பிள்ளை 30.1.1876 அன்று திருவாவடுதுறையில் சிவனடி சேர்ந்தார். சாகும் தறுவாயில் திருவாசகத்தின் அடைக்கலப்பத்து பாடல்களை இவருடைய மாணவர்கள் பாடினர்.

விருது

மீனாட்சிசுந்தரம் பிள்ளை வாழ்ந்த இல்லத்தைப் புதுப்பித்து அவர் பெயரிலேயே துறவியர் தங்கும் விடுதியாக இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் ஏற்படுத்தியதுடன் ஆண்டுதோறும் மகரத்தலைநாள் விழாவில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பெயரில் விருது ஏற்படுத்தி, நற்றமிழ்ப் புலவருக்குப் பொற்கிழியும் விருதும் வழங்கி வருகிறார். மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்குச் சிலை அமைத்து பெருமைபடுத்த வேண்டும் என்று சைவ அன்பர்கள் விரும்புகின்றனர்.

சபாபதி நாவலர்

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் மற்றும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, உ.வே.சாமிநாத அய்யர் ஆகியோர் காலத்தில் வாழ்ந்த சபாபதி நாவலரும் பல நூல்களை இயற்றியுள்ளார். பல வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். தேசிகர் மீது கவிகள் இயற்றியுள்ளார். சிவகணாரமிர்தம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

சிதம்பர சபாநாதர் புராணம், திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, மாவையந்தாதி, திராவிட பிரகாசிகை, இயேசு மதசங்கற்ப நிராகரணம், ஞானசூடாமணி போன்ற பதினெட்டு நூல்களை இவர் எழுதியுள்ளார். ஞானாமிர்தம் என்ற பத்திரிகையை இவர் நடத்தி வந்துள்ளார். திருவிளையாடல் புராணத்திற்கு உரை எழுத சபாபதி நாவலர் முயன்றார். ஆயின், நூல் எழுதும் முன்பே சிவப்பேறு எய்திவிட்டார். மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் இவரையும் ஆதரித்துள்ளார்.

சிந்தாமணி

சமண நூலான சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்க தேசிகர் பொருளுதவி புரிந்ததுடன் ஓலைச் சுவடியையும் அளித்துள்ளார். சண்பகக் குற்றாலக் கவிராயர் என்பவர் தேசிகரின் தம்பியாவார். உ.வே.சா.வுடன் இவரும் கல்வி பயின்றார்.

உ.வே.சாமிநாதர் துறைசையில் பல்லாண்டுகள் மாணவராகவும் ஆசிரியராகவும் இருந்தபின் 1880 முதல் 1903 வரை குடந்தை அரசினர் கல்லூரியிலும் பின் சென்னை மாநிலக் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தின் மாணவர் என்பதாலேயே தமிழகத்தின் பல இடங்களிலும் இவர் ஓலைச்சுவடிகளை இலவசமாகப் பெறமுடிந்தது. இவரிடம் ஓலைச்சுவடிகளை நன்கொடையாக வழங்கிய சிலர் நூல்கள் வெளியிடவும் பொருளுதவி புரிந்துள்ளனர்.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் மட்டுமின்றி 20ஆவது தேசிகர் வரை உள்ள குருமகான்கள் அனைவரும் இவருக்குப் பெரும்பொருள் வழங்கி தமிழ்நூல்கள் அச்சில் வர உதவியுள்ளார்கள். உ.வே. சாமிநாதர் பதிப்பித்த பழந்தமிழ் நூல் ஒவ்வொன்றிலும் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஒரு சுவடியாவது இடம் பெற்றிருக்கிறது. தவிர உ.வே.சாமிநாதர் தமது இறுதி நாட்களைத் திருவாவடுதுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

ஆதீனத்தின் கிளைமடமான திருக்கழுக்குன்றத்தில் கழித்துள்ளார். 28.4.1942-இல் உ.வே.சா இறைவன் அடி சேர்ந்தார். அவர் பெயரில் சென்னைத் திருவான்மியூரில் ஒரு நூலகம் இயங்கி வருகிறது. அந்த நூலகத்தில் உள்ள சுவடிகளில் திருவாவடுதுறை ஆதீனத்தின் சுவடிகளும் உள்ளன.

உ.வே. சாமிநாத அய்யர் 'தமிழ்த்தாத்தா' என யாவராலும் பாராட்டப்படுகிறார். இவருடைய சுயசரிதம் ஆனந்த விகடன் வாராந்திர இதழில் முதலில் தொடர்ச்சியாக வெளிவந்தது. பின்னர் உ.வே.சா. நூலகம் வெளியிட்டது. இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு சமீபத்தில் வந்துள்ளது. இவர் குறித்துப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. சின்னத் திரையிலும் இவருடைய வரலாறு ஒளிஒலி பரப்பப்பட்டு விட்டது. இவர் எழுதிய அல்லது பதிப்பித்த நூல்கள் பலரும் எழுதியுள்ளதால் ஈண்டுக் குறிப்பிடப்படவில்லை. உ.வே. சாமிநாதர் எழுதிய 'என் சரித்திரம்' படித்தால் திருவாவடுதுறை ஆதீனத்தின் பெருமைகளும் சிறப்புகளும் தொண்டுகளும் நாம் அறிந்து கொள்ளலாம். பதிப்புச் செம்மல் டாக்டர் ச.மெய்யப்பனுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டில் உ.வே.சா.வின் நூல்கள் ஆய்வு செய்யப் பட்டுள்ளன.

காவடிச்சிந்து

மேலகரம் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடம் பயின்ற மாணவர்களில் அண்ணாமலை ரெட்டியாரும் ஒருவர். இவரும் பல பாடல்களைப் பாடியுள்ளார். 'காவடிச்சிந்து' என்ற பெயரில் இவர் பாடல்களை ஒரு நூலாக வெள்ளையாம்பட்டு சுந்தரம் வெளியிட்டுள்ளார்.

வேலுச்சாமி

வேலுச்சாமிபிள்ளை என்பவரும் தேசிகரிடம் கல்வி பயின்றவர். இவர் 'திருத்தில்லை நீரோட்ட யமக அந்தாதி' என்ற நூலினை யாத்துள்ளார். சுப்பிரமணிய தேசிகரின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

பொருளுதவி பெற்று பல வித்துவான்கள் தமிழ்ப்பணி ஆற்றினார்கள்.

வேணுவனலிங்கத் தம்பிரான்

விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்த வேணுவனலிங்கர் திருவாவடுதுறை ஆதீனத்தில் 15ஆவது தேசிகர் காலத்தில் தம்பிரானாக இருந்தவர். 16ஆவது தேசிகர் காலத்தில் காறுபாறு சுவாமிகளாக உயர்ந்துள்ளார். திருப்பெருந்துறைக் கிளை மடத்தில் இவர் பணியாற்றிய போது ஆவுடையார் கோயிலுக்கு வெள்ளி வாகனங்கள் செய்வித்து வழங்கிய துடன் நாட்டுச் சாலை என்ற ஊரை விலைக்கு வாங்கி மடத்திற்கு வழங்கியுள்ளார். சிவந்திபுரத்தில் பெரிய காறுபாறு சுவாமிகளாக இருந்தபோது கம்பனேரி புதுக்குடி என்ற ஜமீன் கிராமத்தை விலைக்கு வாங்கி அம்பலவாணபுரம் என்று பெயரிட்டு மடத்தின் கிராமமாகச் செய்துள்ளார். 28.3.1870 இல் காணுகோ ரகுநாதராவ் என்பவரிடம் இருந்து கோடாரங்குளம் முதலிய ஊர்களை விலைக்கு வாங்கித் தம்முடைய குருமகான் சுப்பிரமணிய தேசிகர் பெயரில் ஊரை ஏற்படுத்தினார்.

சிவிகை

திருவனந்தபுரம் மன்னர் வழங்கிய சிவிகை போன்ற விருதுகளை ஆதீனத்தில் சேர்ப்பித்து ஆசாரியாரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார் வேணுவனலிங்கர்.

சிவஞானமுனிவர் இல்லம்

இவர் விக்கிரமசிங்கபுரத்தில் சிவஞான முனிவர் அவதாரம் செய்த வீட்டில் கோவில் அமைத்து முனிவரின் திருவுருவைப் பிரதிட்டைச் செய்துள்ளார்.

இவர் திருவாவடுதுறை ஆதீனமடத்தில் கொலு மண்டபம் ஒன்றைப் புதுமையான முறையில் தேக்குக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

கட்டைகளைக் கொண்டு கட்டப்பட்ட விவரத்தை இரு கல்வெட்டுகளாக விதானத்தில் பொருத்தி வைத்துள்ளார். கல்வெட்டின் காலம் 22.10.1887 ஆகும். வேணுவனலிங்கத் தம்பிரான் விருப்பப்படி கண்ணப்பத் தம்பிரான் அவர்கள் சேற்றூர் ஜமீன்தார், சிவகிரி ஜமீன்தார் தந்த மரங்களைக் கொண்டு ஈஸ்வர ஆண்டு கொலு மண்டபம் கட்டி முடித்தார். இக்கொலு மண்டபம் வேணுவனலிங்க விலாசம் என்றே வழங்க 16ஆவது தேசிகர் ஆணையிட்டுள்ளார்கள்.

கொலுமண்டபம்

வேணுவனலிங்கர் சிவந்திபுரத்தில் சுப்பிரமணிய தேசிகவிலாசம் எடுத்ததை முன்பே கண்டோம். கொலு மண்டபமாகிய வேணுவனலிங்கவிலாசம் ஈஸ்வர வருடம் தை முதல்தேதி கட்டி முடிக்கப்பட்டது. ஆயின் சுப்பிரமணிய விலாசம் இதற்கு முன்பே கட்டி முடிக்கப்பட்டது. உ.வே.சா. பதிப்பித்த முதல் நூல், கொலு மண்டபம் தொடர்பாகப் புலவர்கள் பாடிய கவிகளே ஆகும். இந்த நூலில் வேணுவனலிங்கரின் சரித்திர குறிப்பும் உண்டு.

முத்துக்குமாரசாமித் தம்பிரான்

வேணுவனலிங்கர் தம்பிரானாக இருந்த காலத்தில் தெட்சணம் விசாரணை பொறுப்பு முத்துக்குமாரசாமித் தம்பிரான் அவர்களிடம் இருந்தது. ஆறுமுக சுவாமிகள் தம்பிரானாக இருந்துள்ளார்.

சங்கரலிங்கத்தம்பிரான்

செங்கோட்டையைச் சேர்ந்த சங்கரலிங்கத் தம்பிரான் என்பவர் இத்தேசிகர் காலத்தில் கி.பி. 1883இல் துறவி யானார். இவர் 20ஆவது சந்நிதானம் காலத்தில் 1951இல் சமாதி அடைந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

நமசிவாய சுவாமிகள்

தெட்சணம் காறுபாறு நமசிவாய சுவாமிகள் 16ஆவது தேசிகர் காலத்தில் மடத்தின் அடியவர் ஆனார். 17ஆவது தேசிகர் அருளாட்சியின் போது கி.பி. 1894இல் நெல்லை பாவநாசத்தில் பரிபூரணம் அடைந்துள்ளார்.

தம்பிரான்கள்

குமாரசாமித் தம்பிரான், முத்துச்சாமி ஓதுவார், பன்னிருகை தம்பிரான், ஆறுமுகத்தாப் பிள்ளை போன்றோர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் ஆதீனத்தின் அடியார்களாக இருந்துள்ளார்கள்.

மகா வைத்தியநாதர்

இசைமேதை மகாவைத்தியநாத அய்யர் 16ஆவது தேசிகரைப் புகழ்ந்து பாடி பல பரிசுகளைப் பெற்றுள்ளார். தேசிகருடன் சல்லாபம் செய்ய கல்லிடைக்குறிச்சித் தளிகை மடத்திற்கும் இவர் சென்றுள்ளார். ஒருமுறை வாயுத் தொல்லையில் வருந்தியிருந்தபோது மகா வைத்தியநாதர் தமது இசைப்புலமையால் தேசிகரை மகிழ்விக்க, தம்பிரான்கள் தேசிகருக்கு ஆசையாக வாங்கித்தந்த மெத்தை, திண்டு போன்றவற்றை தேசிகர் வைத்திய நாதருக்கு வழங்கிவிட்டார். கலைஞர்களுக்கு மரியாதை செய்வதில் வள்ளலாகத் தேசிகர் விளங்கினார். பகலில் ஒருதலை யணையை மட்டும் வைத்துக்கொண்டு வெறும் தரையிலேயே தேசிகர் படுத்துக்கொள்வாராம்.

குமாரசாமித் தம்பிரான்

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் குமாரசாமித் தம்பிரான் ஆதீனத்தின் சின்னக் காறுபாறாக இருந்தபோது கோயில், மடம், நந்தவனம் நன்றாக விளங்கும்படி கவனித்துக் கொண்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

ஆயிலிய மகாராசா

திருவனந்தபுரத்தில் ஆட்சி செய்த ஆயிலிய மகாராசாவின் விருப்பத்திற்கிணங்க சுப்பிரமணிய தேசிகர் திருவனந்தபுரம் அரண்மனைக்கு எழுந்தருளினார். அரசர் தேசிகரைப் பொற்பீடத்தில் எழுந்தருளச் செய்து உபசரித்தார். ஞானாசிரியருக்கும் இளையபட்டத்திற்கும் தனித்தனி சிவிகை, பொற்குடை முதலாகிய வரிசைகள் தந்து நகரை வலம் வரச்செய்து உபசரித்தார்.

ஆயிலிய மகாராசாவிற்குப்பின் முடி சூடிய விசாக மகாராசா என்பவர் காசி யாத்திரையின்போது துறைசை வந்து தேசிகரை வழிபட்டுச் சென்றுள்ளார். மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அருளாட்சி காலத்தில் குமாரசாமித் தம்பிரான் என்பவர் மாதவ சிவஞான சுவாமிகளின் வரலாற்றைப் பாட முனைந்தார். ஆயின் நூல் முற்றுப்பெற வில்லை.

பாலைக்காட்டுச் சேரி செப்பேடு

சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் பாலைக்காட்டுச் சேரியைச் சேர்ந்த வெள்ளாளச் செட்டிகள் ஒன்று கூடி திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானுக்கும் மாமுலை அம்மனுக்கும் பூசை போன்றவற்றிற்கும் நெய்விளக்கு போன்றவற்றிற்குமாக மகமை வழங்க முடிவு செய்து அம்முடிவைச் செப்பேடாகவும் வெட்டி கோயிலுக்குச் சொந்தமான திருவாவடுதுறை மடத்திடம் செப்பேட்டை அளித்துள்ளனர். செப்பேட்டில் திருவிடை மருதூர் கோயில் குருக்களாக அப்பு குருக்கள், அவர் மகன் அய்யர் குருக்கள் ஆகியோரின் பெயர்கள் உள்ளன. சீனிச்செட்டி என்பவர் கோயிலுக்குத் தானம் தந்துள்ளார். செப்பேட்டில் நஞ்சுண்ட ஈஸ்வரசாமியே சாட்சியாகக் காண்கிறோம். செப்பேட்டில் வரும் அம்பலவாணத்தம்பிரான் என்பவர் சின்னப் பட்டத்தில் இருந்த தேசிகர் ஆவார். 16ஆவது தேசிகருக்குப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

பின் இவரே 17ஆவது தேசிகராக இருந்துள்ளார். எனவே 23.7.1883இல் வெட்டப்பட்ட இச்செப்பேட்டின் காலத்தில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரே ஆதீனத்தின் பெரிய பட்டத்தில் இருந்துள்ளார்.

விளக்குகள் வழங்கியதுடன் விளக்குகள் ஏற்றவும் திருவமுதுக்கும் பூசைக்கும் பரதேசிகளின் உணவிற்கும் பணம் முதலீடாக வைக்கப்பட்டது. பட்டையம் வழங்கியவர் காளிச் செட்டி சின்னிச் செட்டியாரவர்கள் ஆவார்.

கல்வெட்டுப்பாடல்

சிவந்திபுரம் மடத்தில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் திருவுருவத்துடன் கீழ்க்கண்ட விருத்தத்தையும் வேணுவனலிங்கத்தம்பிரான் ஈஸ்வர ஆண்டு ஆடி மாதம் 18ஆம் தேதியன்று (கி.பி. 1897) கல்வெட்டாக வெட்டி வைத்துள்ளார்.

மன்னு சீர்ச் சாலிவாகன சகாத்த
மாயிரத் தெழுசதத் தோடு
மருவிய தொண்ணூற் றொன்பதீச் சுரநல்
வருடத்தி லாடிமா மதியிற்
றுன்னுமுத் தேதி யாதி யாவறுபான்
றினத்துட் சொலற்கரு மைத்தாய்த்
துவன்றுபல் லங்க மமைதிரு மடத்தைத்
தொகுபுகழ்ச் செவந்தியி லமைத்துப்
பன்னுநற் றுறைசைப் பஞ்சாக்கரற் கீரெட்
டானபிற் றோன்றலென் றிப்பார்
பரவுசுப் பிரமணிய குருமணியின் றிருவுருப்
பிரதிட்டை செய்த ருச்சித்துத்
துன்னுமற் றவன்றன் றிருவருட் பிரதிட்டை
உளத்திடை செய்தன னுறைந்தா
னுயர் புகழ்க் காறு பாறுவே ணுவன
லிங்கமா தவர்க்கொரு மணியே.

முதல் தேசிகராகப் பஞ்சாக்கர (நமசிவாயர்) தேசிகரும் பதினாறாவது தேசிகராகச் சுப்பிரமணிய தேசிகரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

இருந்துள்ளனர். மாதவர்க்கொருமணியாக விளங்கிய வேணுவனலிங்கர் தமது மனதில் கடவுளாகவே தேசிகரைக் கருதியுள்ளார்.

வேணுவனலிங்க விலாசம்

திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள கொலு மண்டபத்தில் மண்டபம் கட்டப்பட்ட விபரம் இரண்டு கல்வெட்டுகளாக வெட்டப்பட்டன. ஒரே செய்தியைக் கூறும் இக்கல்வெட்டின் காலம் 20.10.1877 என்பதை முன்பே கண்டோம். இனி, கல்வெட்டைக் காண்போம்.

1. சிவமயம் திருக்கைலாச பரம்பரைத்
   திருவாவடுதுறை ஆதீனத்து
2. த்தி...ரத்திகர் திருமரபில் 16 ஆவது பட்டத்திலெழுந்
   தருளிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக சு
3. வாமிகள்...வண்ணம் ஷெ ஆதீனத்து பாரங்களை
   யெல்லாந்தாங்கிப் பாதுகாக்கின்ற தக்ஷி
4. ணம் பெரிய காறுபாறு குருபுத்திர சிரோன்மணி
   வேணுவனலிங்க தம்பிரானவர்கள் வேண்டுகோளின்
5. படி அருட்பணிக்குரிய காறுபாறு கண்ணப்ப
   தம்பிரானவர்கள் சேற்றூர் சிவகிரி ஜமீன் தாரவ
6. ர்கள் உபகரித்த மரங்களைக் கொண்டு சேற்றூர்ச்
   சமீன் முகவூர் புதியவனாசாரியார் பணி செய்வித்து
7. வேணுவனலிங்க விலாசம் எனப் பெயர் சாத்தி
   கலியப்தம் 4979 சாலிவாகன சகாப்தம் 1800 கொ
8. ல்லம் ஆண்டு 953 இல் நிகழா நின்ற ஈஸ்வர ஸ்ரீ
   ஐப்பசி மீ குருகுல சோமவார தினத்திலே நிறை
   வேற்றினார்கள்.

வேணுவனலிங்க தம்பிரான் பெரிய காறுபாறாக இருந்த போது கண்ணப்பதம்பிரான் காறுபாறாக இருந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

பதிமூன்றாவது தேசிகர் காலத்தில் காசியில் கண்ணப்ப சாமி மடத்தை ஏற்படுத்திய கண்ணப்பத் தம்பிரான் போன்றே 15 மற்றும் 16ஆவது தேசிகர் காலத்தில் ஒரு கண்ணப்பத் தம்பிரான் வாழ்ந்துள்ளார். உ.வே.சாமிநாத அய்யரும் இவரைச் சந்தித்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தில் வேறுவனலிங்கர் விருப்பப்படி கொலு மண்டபம் கட்டியுள்ளார். திருப்பெருந்துறையில் உள்ள ஆவுடையார் கோயில் திருப்பணியிலும் பங்கு கொண்டுள்ளார். இவரே காசிக்கும் சென்று கண்ணப்பசாமி மடத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டுள்ளார். மடத்தில் உள்ள பார்சி மொழியில் கூடிய சில ஆவணங்கள் இதை நிரூபிக்கின்றன. ஓரிரண்டு ஆவணங்களை மட்டும் காண்போம்.

கண்ணப்ப சாமி

திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து வந்த கண்ணப்பசாமி அண்மையில் சோனார்புரத்தில் இருந்து கொண்டு (தற்போதுள்ள 'காசிகண்ணப்பசாமி மடத்தில் இருந்துகொண்டு) மடத்திற்காகப் புத்தசாகர் என்பவரிட மிருந்து பூமியை விலைக்கு வாங்கியுள்ளார். ராம்தேகேல் மித்ரபுத்திரன் பவானி மீகூமகன் புத்தசாகர் என இவர் அழைக்கப்பட்டுள்ளார். ஆவணத்தின் காலம் 13.2.1848. பாதல்கான் சாட்சியாக ஒப்பமிட்டுள்ளார்.

வேறோர் ஆவணம் கி.பி. 1855இல் மடத்திற்கு நிலம் வாங்கியதைக் கூறுகிறது. பகதூர் என்பவர் ரிஜிஸ்டரர் ஆக இருந்துள்ளார்.

சத்ரசால் என்பவர் பசலி 1230இல் மடத்திற்குத் தம்முடைய நிலத்தை விற்றுள்ளார்.

அடைமானம்

17.11.1846இல் மடத்திற்கு நிலம் வாங்கப்பட்ட செய்தி சுவையானதாகும். 30.1.1844இல் ரூ.150க்கு மணிசிங் என்பவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

தமது நிலத்தை அடைமானம் வைக்கிறார். அடைமானத்தை அவரால் மீட்க முடியவில்லை. எனவே மடத்திற்குத் தம்முடைய நிலத்தை 17.11.1846இல் விற்று விடுகிறார். ஆவணம் எழுதியவர் தேவிசிங் என்பவர் ஆவார். அக்காலத்தில் மடத்திடம் கடன் வாங்கியவர் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் உடையவராக இருந்துள்ளனர். இன்று மடத்திற்குத் தரவேண்டிய குத்தகைப் பணம் ரூ. 25 ஆக இருந்தாலும் குத்தகை எடுத்தவர் தருவ தில்லை. இது காலத்தின் கோலமாகும்.

நமசிவாயத் தம்பிரான்

பதினாறாவது தேசிகர் காலத்தில் சின்னப் பட்டத்திலே இருந்த நமசிவாய தேசிகர் (1871-1883) திருக்கூட்டத்துத் தம்பிரான் சுவாமிகளாக முதலில் இருந்துள்ளார். காசியில் 12 ஆண்டுகள் தங்கியிருந்த காலத்தில் கி.பி. 1859 இல் காசிக் காண்டம் என்ற கையெழுத்துப் பிரதி எழுதி முற்றுவிக்கப் பட்டுள்ளது. 15ஆவது பட்டத்தில் அம்பலவாண தேசிகர் (1854-1868) இருந்தபோதே நமசிவாய தேசிகர் தம்பிரானாக இருந்துள்ளார். காசியிலும் இவர் இருந்துள்ளார். பரமசிவத் தம்பிரான் என்பவரும் காசியில் சிறிது காலம் இருந்துள்ளார். மும்மணிக் கோவை என்ற நூலைத் தேசிகர் மீது இவர் பாடினார். 'ஸ்ரீகைலாச பரம்பரையாகிய திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீகாசி கண்ணப்பசாமிகள் மடாலயத்தில் இருக்கும் நமசிவாய சுவாமியவர்களுக்குச் சின்னத்தம்பிரான் சுப்பிரமணிய தம்பிரான் ' சீடனாக இருந்துள்ளார்.

'பொருள் வைத்த சேரியிலிருந்து யாத்திரைக்கு வந்திருக்கும் சடையப்ப முதலி ஷெயூர் ஆறுமுகம் பிள்ளை இவர்களால் காசிகாண்டம் ஸ்ரீகாசியிலிருந்து எழுதி முற்றுப் பெற்றது. கலியுகாதி ஸ்ரீ 4961 சித்தார்த்திரி ௵ தை மீ 29உ கி.பி. 1859-60 எனலாம். ஒப்பம் சுப்பிரமணிய தம்பிரான்'.

மேலே கண்ட சொற்கள் காசி காண்டத்துக் காகிதப் பிரதிகள் முகப்பு ஏட்டில் இருந்ததாக 1953 இல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

பதிப்பிக்கப்பட்ட 'ஸ்ரீகாசி காண்டம்' என்ற நூலில் காண்கிறோம். காசியின் புராண வரலாற்றைக் குறிப்பிடும் அரிய நூல் இதுவாகும். உ.வே.சாமிநாதரின் குருவும் ஆதீனத்தின் மகாவித்துவானாகவும் இருந்த திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய 'காசி ரகசியம்' வேறொரு நூலாகும். இது 26 அத்தியாயங்களும் 1012 பாடல்களையும் கொண்ட நூலாகும். பலமுறை காசியாத்திரை மேற்கொண்டவரும் அக்காலத்தில் திருவிடைமருதூர்க் கட்டளை அதிகாரம் பார்த்து வந்தவருமான சுப்பிரமணியத் தம்பிரான் விருப்பத்தின்படி 'காசி இரகசியம்' பாடப்பட்டது. அந்நூலை மகாவித்துவான் காசியில் இருக்கும்போது ஒரு வடமொழி வித்துவானைக் கொண்டு மொழி பெயர்க்கச் செய்து தமிழ் வசன நடையில் தாமே எழுதி வைத்திருந்தார். இந்த வசனமே பின் செய்யுள் நூலாகத் திருவிடை மருதூரில் கி.பி. 1870-இல் அரங்கேற்றப்பட்டது. காசியில் கி.பி. 1880ஆம் ஆண்டு அச்சிடப் பெற்றது. முன்பு குறிப்பிட்ட 'காசி காண்டம்' என்ற நூல் 21 ஆவது பட்டம் சுப்பிரமணிய தேசிகர் காசி யாத்திரை நினைவாக 1953 இல் பதிப்பிக்கப்பெற்றது. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல் இதுவாகும்.

கண்ணப்பத் தம்பிரான், வேணுவனலிங்கத் தம்பிரான் போன்று சங்கரலிங்கத்தம்பிரான், நமசிவாய சுவாமி தம்பிரான், முத்துக் குமாரசாமி போன்றோரும் இத்தேசிகர் காலத்தில் மடத்தில் தம்பிரான்களாக இருந்துள்ளனர்.

திருச்சி மாவட்டம் மண்ணச்ச நல்லூரில் வாழ்ந்த ஓர் விதவைப்பெண் தம்முடைய சொத்துக்களை ஆதீனத்திற்கு வழங்கி தரும காரியங்களை இத்தேசிகர் காலத்தில் செய்துள்ளார்.

பாப்பம்மாள் சத்திரம்

திருச்சிராப்பள்ளியருகே உள்ள திருவானைக் காவலில் திருவானைக்கா உடையார் கோயில் உள்ளது. இது பஞ்சபூததலங்களில் அப்பு தலமாக விளங்குகிறது. பாடல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பெற்ற தலமான இக்கோயில் அருகே சன்னதித்தெருவில் பாப்பம்மாள் சத்திரம் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளை மடமும் மாணவர் விடுதியும் இச்சத்திரத்தில் இயங்கி வருகின்றன. கி.பி. 1876ஆம் ஆண்டு பொறிக்கப் பட்ட கல்வெட்டு பாப்பம்மாள் சத்திரத்தில் மட்டுமின்றி மண்ணச்ச நல்லூரிலும் சிவன்கோயிலில், வெட்டி வைக்கப் பட்டுள்ளது.

பாப்பம்மாளின் இயற்பெயர் மீனாட்சியாகும். இவருடைய கணவர் பெயர் சிவசுப்பிரமணியபிள்ளை. மாமனார் பெயர் ஆவுடையப்பபிள்ளை. சுவிகாரப் பிள்ளை சாமிப்பிள்ளை. பாப்பம்மாள் மாமனாரும் கணவரும் சுவிகாரப்புத்திரனும் பரலோகம் சென்றனர்.

1858 ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி சாமிபிள்ளை உயிருடன் இருந்தபோது திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வழங்கப்பட்ட கட்டளை தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்ததுடன் 1875ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி பாப்பம்மாளும் ஆதீனத்திற்குத் தர்ம சாசனம் எழுதித் தருகிறார்.

1876-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நான்காம் தேதி தொடங்கி ஆதீனம் பின்வரும் கட்டளைகளை நடத்திவர வேண்டும் என்று உயில் எழுதியதுடன் கல்வெட்டும் பொறித்து வைத்துள்ளார். பாப்பம்மாள் விருப்பப்படி கட்டளையை நிறைவேற்றுவதாக ஆதீனமும் சம்மதித்து எழுதிக் கொடுத்துள்ளது. இதன் காலம் 4.8.1876 ஆகும். இனி, பாப்பம்மாள் கட்டளையையும் மடத்திற்குச் சொந்தமான இடங்களையும் காண்போம்.

மீனாட்சி சுந்தரேசுவரர் கட்டளை

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கட்டளையானது ஆவுடையப்பபிள்ளை பேரில் உள்ள கட்டளையாகும். இதற்கு மேலைச்சிதேவி மங்கலம் தென்கால் கிராமத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

30 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. இதிலிருந்து வரும் குத்தகை கொண்டு மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரருக்குக் காலைச்சந்தி பூசைக்குச் செலவிடப்படுகிறது. மண்ணச்ச நல்லூர் அருகே தெங்கால் கிராமம் உள்ளது. கல்வெட்டில் கட்டளைக்கு ரூ. 250 வழங்க வேண்டும் என்றுள்ளது.

முத்தாலம்மன் கோயில்

மண்ணச்சநல்லூரில் இருந்து திருப்பைஞ்ஞீலி செல்லும் சாலையில் 3. கி.மீ தூரத்தில் உளுந்தங்குடி உள்ளது. இவ்வூரில் 120 ஏக்கர் நன்செய்நிலமும் 80 ஏக்கர் புன்செய் நிலமும் 100 மனைப்பகுதியும் பாப்பம்மாள் சத்திரத்திற்குச் சொந்தமாய் உள்ளன. இவ்வூரில் முத்தாலம்மன் கோயில் என்ற கிராம தேவதைக் கோயில் உண்டு. விசேட பூசைக்கு மட்டும் ஆதீனம் செலவிடுகிறது. உளுந்தங்குடி - கல்பாளையம் வகையறா சமுதாயமுள்பட அடுத்துக் குறிப்பிடப்படும் போஜனத்திற்குச் செலவிடவேண்டும்.

பக்கரி மான்யம்

மண்ணச்சநல்லூரின் ஒரு பகுதியாகப் பக்கிரி மான்யம் உள்ளது. 2 ஏக்கர் நன்செய்நிலம் உள்ளது. சத்திரத்திற்கு இந்நிலத்தின் வருமானத்தை வழங்க வேண்டும். பங்கயச் செல்வி தோப்பு, திருவானைக்காவல் சத்திரம், தோப்பில் வரும்படி ஆகியவை கொண்டு பிராமணர் 20 பேருக்கு பகலிரவு போஜனத்திற்கு ரூ. 2¼ . 12 பரதேசிகள் உணவிற்கு ரூ. 1/2 செலவிட வேண்டும்.

மோட்சதினம்

ஆண்டுதோறும் மீனாட்சி அம்மாள் (பாப்பம்மாள்) மோட்சதினத்தில் வழிபாட்டுக்கும் மாகேஸ்வரபூசைக்கும் செலவிட ரூ. 10ம், மார்கழி மாதம் சுக்கில பட்சம் தசமியில் ஆவுடையப்பபிள்ளை மோட்ச தின செலவிற்காக ரூ. 10ம் மாசி மாதம் கிருஷ்ணபக்ஷ பிரதிமையில் சிவசுப்பிரமணியன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

மோட்ச தினத்தன்று செலவிட ரூ. 35ம் வழங்கவேண்டும். தண்ணீர்ப்பந்தலும் வைக்க வேண்டும்.

மண்ணச்ச நல்லூர் பூமிநாத சுவாமி கோவில் நித்திய படி செலவு, சாயரட்சை, படித்தரம் போன்றவற்றிற்காக வருடமொன்றுக்கு ரூ. 208, பரிவட்டம் (ஆடை) ரூ. 6, நவராத்திரிச்செலவு ரூ. 15, கார்த்திகைச் செலவு ரூ. 5, சோம வாரச்செலவு ரூ.2, விதிபாதம் ரூ. 1 தைப்பூசச் செலவு ரூ. 10, சிவராத்திரியின் போது செலவு 2½, சூரிய பூசைக்கு (சூரிய கிரகனத்திற்கு) ச் செலவு ரூ. 2½, அன்னாபிஷேகச் செலவு ரூ. 3½, பிரம்மோற்சவம் செலவு ரூ.150, சிப்பந்திகளுக்கு ஊதியம் ரூ.120 என வரையறை செய்யப்பட்டுள்ளது. சொந்த ஊர் மண்ணச்ச நல்லூர் என்பதால் மிகுதியாக அவ்வூர்க் கோயிலுக்குத் தானம் வழங்கியுள்ளார்.

மலைக்கோட்டை தாயுமானவர் கோயில் சித்திரைத் திருநாளில் நான்காம் நாள் கைலாச வாகன உபயத்திற்காக ரூ. 60 வழங்கவேண்டும் என்று கல்வெட்டில் காண்கிறோம்.

மேற்படி கோயில் நந்திகேஸ்வரர் கோயிலுக்குச் சிவராத்திரி அபிஷேகத்திற்கு ரூ. 15 வழங்க வேண்டும்.

திருவானைக்காவல்

திருவானைக்காவல் ஜெம்புகேஸ்வரர் மற்றும் அகிலாண்டேஸ்வரி திருமுன்பாகச் சோமவார சுக்கிர வார அர்ச்சனை மற்றும் தெப்போற்சவத்திற்காக ரூ. 34 வழங்க வேண்டும். திருவரங்க அரங்கநாத சுவாமிக்கு ஸ்திரவாரம் ஏகாதசி அர்ச்சனைக்காக ரூ. 18 வழங்க வேண்டும்.

சிதம்பரம் நடராசப் பெருமான்

சிதம்பரம் நடராசப்பெருமானுக்குத் தினமும் குளித் தளிகை என்ற பெயரில் அபிஷேகம் நடத்த ரூ. 42 வழங்க வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

ஆறாம்நாள்

திருவாவடுதுறை மகரத்தலைநாள் விழாவில் ஆறாம் நாள் திருவிழாவிற்கு ரூ. 25 வழங்கவேண்டும். ஆகச் சத்திரம் கோவில் வகையறா செலவு ரூ. 1977 ஆகும். பாப்பம்மாள் வழங்கிய சங்கம சொத்துக்களைக் கொண்டு தொடர்ந்து திருவாவடுதுறை ஆதீனம் கட்டளையை நடத்தி வர வேண்டும் என்றும் மேற்குறிப்பிட்ட தருமங்களை வேறொரு யிடத்தில் பேர்த்துப் போடக்கூடாது என்றும் மேற்கண்ட கட்டளையை நன்றாக நிறைவேற்றி வருபவர் கங்கைக் கரையில் அனேகம் கோதானம் செய்த பலனை அடைவர் என்றும் கல்வெட்டின் இறுதியில் காண்கிறோம்.

திருவாசி

பாப்பம்மாள் சத்திரத்தில் உள்ள கல்வெட்டினைத் 'திருச்சினாப்பள்ளியைச் சேர்ந்த 'கல்லிராய மேஸ்திரி' வெட்டி வைத்துள்ளார். ஸ்தபதி என்ற சொல்லே மேஸ்திரி யாயிற்று. திருவானைக்காவல் பாப்பம்மாள் சத்திரத்தைச் சுற்றி மனைப்பகுதியும் ஓட்டுவீடும் உள்ளன. மனை அளவு 12.0971 ச.அடி. மணச்ச நல்லூர் மனைப்பிரிவுகள் 1500 உள்ளன. திருவாசியில் தம்பிரான் மடமும் காலியிடமும் உள்ளன. திருவாசி மடம் இடிந்த நிலையில் உள்ளது.

திருவளர் சோலை

திருவானைக்காவலில் இருந்து கல்லணை செல்லும் பாதையில் சுமார் 5.கி.மீ. தூரத்தில் திருவளர் சோலை உள்ளது. இங்கு மடத்திற்கு 4 ஏக்கர் நிலம் உள்ளது.

கி.பி. 1936 ஆம் ஆண்டு வரை திருச்சி நகரைச் சுற்றி நான்கு கிளைமடங்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு இருந்துள்ளன. தற்போதும் மடத்திற்குச் சொந்தமாகப் பல இடங்களில் மனைகள் உள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

திருச்சியில் கட்டிடம்

திருச்சிச் சிந்தாமணி காவேரியின் தென்கரையில் உள்ளது. இந்தக் கட்டிடம் மடத்திற்குச் சொந்தமாக உள்ளது. இதில் மூன்று வீடும் இரண்டு காலிமனையும் அடங்கும்.

தம்பிரான் தெரு

திருவானைக்காவல் தம்பிரான் தெருவில் இரண்டு கட்டிடமும் ஆறு காலிமனையும் உள்ளன. பாப்பம்மாள் சத்திரம் உருவாவதற்கு முன்பாகவே ஆதீனத்தைச் சேர்ந்த தம்பிரான் இங்கிருந்துள்ளார். எனவே தம்பிரான் தெரு என்றே இது வழங்கப் படுகிறது.

இலால்குடி

இலால்குடி என்ற ஊரில் நன்செய் 1.70 செ.மீ. நிலமும் பழைய மண்டபமும் 5 மனை வாடகையும் மடத்திற்குச் சொந்தமாக உள்ளன. இவ்வூரில் உள்ள 'சப்தரிஷி ஈஸ்வரர் கோயில்' சித்ரா பௌர்ணமி விழாச்செலவு மடத்தின் செலவாகும்.

கடம்பவனேசுவரர்

குழித்தலைவதியம் கிராமத்தில் மடத்திற்கு நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. மேலும் இங்குள்ள நமசிவாய நகரில் மனைக்கட்டுகள் உள்ளன. சித்திரை திருவோணத்தில் இங்குள்ள 'கடம்பவனேசுவரர் கோயில்' நடராசருக்கு அபிஷேகம் செய்ய மடத்தில் இருந்து செலவிடப்படுகிறது.

மாணவர் விடுதி

திருவானைக்காவல் கிளைமடத்தின் பொறுப்பில் பாப்பம்மாள் கட்டளைக்குரிய நிலங்கள் தவிர வேறு நிலங்களும் கட்டிடங்களும் உரிமையாய் உள்ளன. முப்பது மாணவர்கள், பாப்பம்மாள் சத்திரத்தில் தங்கி படித்து வருகிறார்கள். சாதி வேறுபாடின்றி ஏழை மாணவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

விடுதியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இலவச விடுதியாக இது உள்ளது.

வேதநாயகம் பிள்ளை

தாது வருட துலாமாதத்து நிகழ்ந்த சூரிய கிரகணத்தில் தீர்த்தஸ்நானம் செய்வதற்கு மயிலாடுதுறைக்கு வந்து காவிரியின் தென்கரைப் பாங்கர் மண்டபத்தில் தேசிகர் இருந்தபோது மாயூரம் முன்சிப் வேதநாயகம் பிள்ளை தேசிகரைப் பாராட்டி இரண்டு பாடல்களைப் பாடினார்.

குருவும் கிரகணமும் கூடலாற் கங்குன்
மிகுமென் றுளமே வெருவ – னகுதுறைசைச்
செப்பரிய மாச்சுப் பிரமணிய தேசிகனா
மப்பரிதி யீங்குதித்த லால்.

என்பது ஒரு கவியாகும்.

அவ்வருடம் பஞ்சம் ஏற்பட்டதால் பொது மக்களுக்கு உணவும் உடையும் வழங்க தேசிகர் ஏற்பாடு செய்தார். மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் மடத்தின் ராயசமாகப் பொன்னுசாமி செட்டியார் என்பவர் சிறப்பாகப் பணியாற்றி வந்துள்ளார். ஆங்கிலம் தொடர்பான கடிதங் களுக்கு மாயூரம் முன்சிப் வேதநாயகம் பிள்ளை உதவி வந்துள்ளார். பொன்னுசாமி செட்டியார் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் இறைவனடி சேர்ந்தபின் பாடிய இரங்கற்பாவில் காலம் குறிக்கப்பட்டுள்ளது.

ஏர்தரு சாலிவாகன சகாப்த மாயிரத் தெண் சதத்தோடு
சார்தரு பத்திற் சருவசித் தாண்டு தகுமதி தனு விருபத்தைந்
தார்தரு தேதிசோதி நாடிர மாமணி கிளர்வார மித்தினஞ்சீர்
சேர்தரு துறைசைச் சுப்பிரமணிய தேசிகர் பூரணதினமே.

மகாவைத்தியநாத சிவன்

திருவையாறு முதலிய சப்த ஸ்தான தலங்களிலும் திருமழபாடி தலத்திலும் ஒரே நாளில் கும்பாபிஷேகம் செய்தலை விரும்பி சிவநேயச் செல்வர்களிடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளும் மகாவைத்திய நாத சிவனும், இராமசாமி சிவனும், நெல்லை ஐயாசாமி பிள்ளையும் சென்று பொருளுதவி பெற்று வந்தனர். சுப்பிரமணிய தேசிகர் பெரும்பொருள் நல்கினார். மகாவைத்தியநாதசிவன் தம்முடைய ஊரில் கட்டிய சிவன் கோயிலுக்கு நடராசர் சிலையைச் சுப்பிரமணிய தேசிகர் வழங்கினார்.

திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான நாணல் காட்டை அழித்து இலட்சம் தென்னை மரக்கன்றுகளை இத்தேசிகர் நட்டுவைத்தார். காட்டைத் திருத்தும்போது கிடைத்த நடராசர் சிலையையே மகாவைத்திய நாதருக்குத் தேசிகர் வழங்கினார்.

கல்லிடைக்குறிச்சிக்கு அடிக்கடி தேசிகர் சென்று வருவார். அப்படிப் போகும்போது மகாவைத்திய நாதரும் அவருடைய அண்ணன் இராமசாமி சிவனும் உடன் செல்வதுண்டு. அன்பர்கள் பாதபூசையாக வழங்கும் சால்வை, பொற்காப்பு, பொற்சங்கிலி, வைரக்கடுக்கன், மோதிரம் போன்றவற்றைத் தேசிகர் மகாவைத்தியநாதரிடம் வழங்கி விடுவாராம். சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயரும், சின்ன வைத்தியநாத ஐயரும் இத்தேசிகரால் பெரிதும் ஆதரிக்கப் பெற்றனர்.

அருணாசலம் என்ற பிள்ளைத் திருநாமம் உடைய அம்பலவாண தேசிகருக்கு 7.1.1888 இல் ஆசாரியாபிஷேகம் செய்வித்து அன்றே மார்கழி மாதம் சனிக்கிழமை சுவாதி நாளில் சுப்பிரமணிய தேசிகர் சிவபரிபூரண மடைந்தார். இவருடைய மறைவை எண்ணி வருந்தி உ.வே.சாமிநாத ஐயர் பாடிய இரங்கற் பாக்களில் ஒன்று வருமாறு.

சுந்தரமூர்த்தி யென்றும் தூயமெய்கண் டானென்றும்
முந்தறிஞர் சொல்லு முறைக்கேற்ப – எந்தமையும்
பேதிலா தாள்சுப் பிரமணிய தேசிகன்றான்
சோதிநாள் சேர்ந்தானந் தோ.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

அம்பலவாண தேசிகர்
பதினேழாவது பட்டம் - (1888-1920)

சென்னை நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு மடத்தில் இருந்த வித்துவான் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளிடம் படித்துவந்த அருணாசலம் என்ற இளைஞரே பதினாறாவது தேசிகர் அன்புக்குப் பாத்திரமாகி, 17ஆவது குருமகானாக நியமிக்கப்பட்டார். ஆதீனத்தின் தலைவர் பொறுப்பேற்ற பின் இவர் அம்பலவாணர் என வழங்கப் பட்டார்.

தமிழறிவும் இசையறிவும்

தமிழ் மற்றும் வடமொழி இரண்டிலும் பெரும் புலமை உடைய இவர், இசையறிவிலும் சிறந்து விளங்கினார். திருமுறைகளில் இவருடைய நுண்ணறிவு நன்றாகச் சென்று திளைத்திட்டமையின் எண்ணற்ற இசைக்குறிப்புகளை எழுதி வந்தார். ஏட்டுச் சுவடிகள் பலவற்றைக் காகித்தில் பிரதி செய்து பாதுகாத்து வந்தார். இசைத்தொடர்பான குறிப்புகளும் எழுதி வந்தார். சிவஞான போத மாபாடியத்தை மூன்று முறை இவர் காகிதத்தில் பிரதி செய்துள்ளார்.

நூலகம்

திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்த புத்தகச் சாலையை விரிவாக்கி, பல மொழிகளில் அச்சுப் புத்தகங்களை இவர் விலைக்கு வாங்கி சேர்த்துள்ளார். 31.1.1895இல் இராமநாதபுரம் சேதுபதி மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் சரஸ்வதி மகால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

நூல்நிலையத் திறப்பு விழாவில் பங்கு கொண்டார். நமசிவாயர் குருபூசையும் அப்போது நடைபெற்றதால் விழா சிறப்பாக அமைந்தது.

அம்பலவாண தேசிகர் பஞ்சாக்கர மகாமந்திரத்தை ஒருகோடி எழுதித் தொகுத்து அச்சிடுவித்துக் கட்டட மாக்கி அழகாக வைத்தார்கள். இவர் எழுதி வைத்த திருமுறைக் குறிப்புகள் பலமாதங்களாக மெய்கண்டார் இதழ்களில் வெளிவந்தமையைப் பலரும் அறிவர்.

சுப்பிரமணிய தேசிகர்

வைத்தியநாதத் தம்பிரான் என்பவருக்கு ஆசாரி யாபிடேகம் செய்து சுப்பிரமணிய தேசிகர் என்னும் திருநாமமும் தேசிகர் வழங்கினார்.

போஜராஜன்

புலவர்களை ஆதரிப்பதில் இவர் போஜராஜனாக இருந்ததாகக் குருபரம்பரை விளக்கம் குறிப்பிடுகிறது. கர்ணனாக இருந்ததாகவும் அந்நூல் கூறுகிறது.

பொன்னோதுவா மூர்த்திகள்

அம்பலவாண தேசிகர் காலத்தில் பொன்னோதுவா மூர்த்திகள் ஆதீன சரஸ்வதி மகால் நூலகக் காப்பாளராக இருந்துள்ளார். சிதம்பரம் மீனாட்சிக் கல்லூரியில் உ.வே.சாமிநாத அய்யருக்குப்பின் இவர் கல்லூரி முதல்வராக இருந்தவர் ஆவார். பொன்னோதுவார் துறைசை சிலேடை வெண்பா, துறைசையமக அந்தாதி போன்ற நூல்களுக்குக் குறிப்புரை எழுதினார். ஓலைச்சுவடிகளில் இருந்து பலநூல்களை நகல் செய்து வந்தார். காஞ்சி நாகலிங்க முதலியாரைக் கொண்டு 1897இல் மெய்கண்ட சாத்திரம் முழுமையும் பதிப்பிக்கச் செய்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

· ஈக்காடு இரத்தினவேல் மூலம் உபதேசகாண்டம், காசிக்காண்டம் போன்ற நூல்கள் பொழிப்புரையுடன் இத் தேசிகர் காலத்தில் பதிப்பிக்கப்பெற்றன.

ஆ.சிங்காரவேலு முதலியார் பதிப்பித்த அபிதான சிந்தாமணி என்ற அரிய நூலுக்கு அம்பலவாணதேசிகர் பொருளுதவி புரிந்துள்ளார்.

தூத்துக்குடி முத்தையாபிள்ளை என்பவர் சிவஞான சித்தியாருக்கு 1914-இல் சுபக்கம் வெளியிட்டார். இதற்கும் தேசிகர் உதவி செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும் உ. வே. சாமிநாத அய்யர் வெளியிட்ட பலநூல்களுக்குப் பெரும்பொருளினைத் தேசிகர் வழங்கினார்.

கல்லிடைக்குறிச்சி வித்துவான் ஸ்ரீமுத்து சாஸ்திரி களிடம் வடமொழிக் கல்வியும் சபாபதி நாவலர், தியாகராச செட்டியார் ஆகியோரிடம் தமிழ்க்கல்வியும், ஞான தேசிகராம் சுப்பிரமணிய தேசிகரிடம் திருமந்திரம், தேவாரம் முதலிய அருட்பாக்களையும் கற்றுத் தேர்ந்ததால் பெரும் புலமை வாய்ந்தவராக இத்தேசிகர் இருந்துள்ளார்.

இசைமேதை மகாவைத்தியநாத சிவனை அடிக்கடி வரவழைத்து இசைநிகழ்ச்சிகளையும் சிவகதா பிரசங்கங் களையும் தேசிகர் கேட்டு, கேட்டு மகிழ்ந்துள்ளார்.

இசையில் புலமையுடைய தேசிகர் கானடா, சகானா, காம்போதி, யதுகுல காம்போதி, கேதாரகவுளை, சுருட்டி, மோகனம், புன்னாகவராளி, தன்யாசி, நாத நாமக்கிரியை, சாவேரி, வசந்தம், ஆனந்தபைரவி, முகாரி, உசேனி, பைரவி, காப்பி, சங்கரா பரணம், தோடி, அடாணா, நீலாம்பரி, ஆரபி, பிலகரி வேகடை, கல்யாணி, பந்துவராளி, பூர்வ கல்யாணி என்ற இவ்விருபத்தேழில் பெருவிருப்பம் கொண்டிருந்தார்கள். தம்மிடம் வரும் இசைப்புலவர்களிடம் இசை சம்பந்தமாகப் பல செய்திகளைக் கேட்பார்கள். நுட்பமான வினாக்களைக் கேட்பார்கள். புலமை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மிக்கவர்களுக்கு, வள்ளல் நிலையில் வாரி வழங்குவார்கள். மகாவைத்தியநாதனுக்குத் தேசிகர் வழங்கிய செல்வத்திற்கு அளவில்லை. *1892* இல் சிவன் நோய்வாய்பட்டபோதும் அவர் இறைவனடி சேர்ந்தபின்பும் பொன்னும் பொருளும் அவருடைய தமையனாரிடம் அம்பலவாண தேசிகர் அள்ளி அள்ளித் தந்துள்ளார். மகாவைத்தியநாத சிவனின் மாணாக்கர் களுக்கும் இவர் உதவி புரிந்துள்ளார்.

அம்பலவாண தேசிகர் தமக்குப்பின் வைத்திய நாதத் தம்பிரான் என்பவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து சுப்பிரமணிய தேசிகர் என்னும் தீட்சா நாமமும் கொடுத் ததை முன்பே குறிப்பிட்டோம். *1920* ஆம் வருடம் சித்திரை சதயத்திலே திருவிடை மருதூரில் இத்தேசிகர் சிவபரிபூரணம் அடைந்தார்.

சுப்பிரமணிய தேசிகர்
பதினெட்டாவது பட்டம் - (1920-22)

செங்கல்பட்டு அருகேயுள்ள திருக்கழுக்குன்றத்தில் சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்த சுப்பிரமணிய தேசிகர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். உலகியல் அறிவு மிகுதியாக உடைய இத்தேசிகர் நிர்வாகத்தில் வல்லவராக இருந்தார். இவர் இரண்டே ஆண்டுகள் பட்டத்தில் இருந்ததால் இவருடைய அருட்பணிகள் குறைவே ஆகும். 'திருக்கழுக்குன்றப் பண்டாரச் சந்நிதி' என அழைக்கப்பட்ட இத்தேசிகர், திருவாடுதுறையில் தைமாதமொன்றில் பரணி நன்னாளில் *(கி.பி. 1922)* சிவபரிபூரணமுற்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

வைத்தியலிங்க தேசிகர்
பத்தொன்பதாவது பட்டம் - (1922-1937)

திருவாடுதுறை ஆதீனத்தில் பத்தொன்பதாவது தேசிகராக விளங்கிய வைத்தியலிங்க தேசிகர், பட்டத்திற்கு வருவதற்கு முன்பு நீண்ட காலம் தம்பிரானாகவும் காறுபாறாகவும் இருந்துள்ளார். எனவே சிறந்த நிர்வாகத்தை இவரால் வழங்க முடிந்தது. சுப்பிரமண்ய மந்திரசித்தியும் வாக்குப் பலிதமும் உடையவராக விளங்கிய இவர், திருமுறையில் நல்ல ஈடுபாடு கொண்டிருந்தார். ஆண்டு தோறும் திருவிடைமருதூருக்குத் தைமாத புஷ்ய தினத்தன்று புனித நீராட எழுந்தருளினார். ஆண்டுதோறும் துலா மதியன்று மயிலாடுதுறை கடைமுக ஸ்நானத்திற்கு எழுந் தருளினார். இத்தேசிகர் தமிழ்த் தாத்தா என்றழைக்கப்படும் உ.வே.சாமிநாதர் வெளியிட்ட பல நூல்களுக்குப் பெரும் பொருள் வழங்கினார். திருநீலக்குடி மகாத்மியம் என்ற வடமொழி நூல் இவர் காலத்தில் வெளியிடப்பட்டது. திருநீலக்குடி சிவன்கோயில் துறைசை ஆதீனத்திற்குச் சொந்த மானதாகும். வைத்தியலிங்க தேசிகர் மயிலாடுதுறையில் ஐப்பசி மாதம் அவிட்ட நன்னாளில் (கி.பி. 1937) சிவபரிபூரண முற்றார். இத்தேசிகர் காலத்தில் திருவாவடுதுறை தலைமை மடம் நீங்கலாக, நாடெங்கும் 130 கிளைமடங்கள் இருந்த விவரம் கிடைக்கிறது.

திருவாவடுதுறை ஆதீனத்திற்கு 1936-ல் இருந்த கிளை மடங்களின் எண்ணிக்கையை நோக்கினால் மடத்தின் செழுமையையும் பெருமையையும் அறிந்து கொள்ளலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அப்போதிருந்த மாவட்ட வாரியாக இக்கிளை மடங்களைக் காண்போம்.

தஞ்சாவூர் மாவட்டம்

1. கும்பகோணம் செட்டித்தெரு மடம்: திருவிடைமருதூர்க் கோயிலைச் சேர்ந்தது. தம்பிரான் பூசை உண்டு.
2. யானையடி மடம்
3. சுவாமிமலை மடம்
4. திருவையாறு மடம்
5. திருவெண்காடு மடம்
6. சீர்காழி மடம்
7. வைத்தீஸ்வரன்கோயில் மடம்
8. மூவலூர் மடம்
9. மாயூரம் கட்டளை மடம்
10. திருவாரூர்தேவூர் வாஞ்சிய மடம்
11. பட்டீஸ்வரம் மடம்
12. மன்னார்கோயில் மடம்
13. நாட்டுச் சாலை மடம்
14. காலக மடம்
15. திருப்பெருந்துறை கோயில் மடம் - தம்பிரான் பூசை உண்டு
16. மடம் குருமூர்த்தம்
17. திருவிடைமருதூர் மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

18. திருவாவடுதுறை ஆதீனத்தலைமை மடம்

19. புழுதிக்குடி மடம்

20. நரசிங்கன்பேட்டை மடம்

21. வேதாரண்ய மடம்

மதுரை இராமநாதபுரம் கிளை மடங்கள்

22. தானப்ப முதலியார் மடம் - தம்பிரான் பூசை உண்டு

23. திருப்பரங்குன்ற மடம்

24. திரிபுவன மடம் (இராமநாதபுரம் மாவட்டம்)

25. சிவகெங்கை மடம், பிராமணக் குறிச்சி மடம்

26. இராமநாதபுரம் மடம், கஸ்பா மடம்

27. இராமேஸ்வர மடம்

28. உத்தரகோச மங்கை மடம்

29. வல்லக்குளம் மடம்

30. நெட்டூர் வகையறா மடங்கள்

31. முன்னாளி முத்து நாளை மடம்

32. திருப்பொற்கோட்டை மடம்

33. ஸ்ரீ வில்லிபுத்தூர் கஸ்பா வடகரை மடம்

34. கூனங்குளம் மடம் (தம்பிரான் பூசை உண்டு)

35. ராஜபாளையம் மடம்

36. தோளங்குளம் கரிசல்பட்டி மடம்

37. விருதுபட்டி மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருச்சி மாவட்டம்

38. காவேரிக்கரை மடம். தம்பிரான் பூசை உண்டு
39. சிந்தாமணி மடம்
40. கடம்பூர்க் கோயில் மடம்
41. கரூர் மடம்
42. திருவானைக்காவல் மடம் - தம்பிரான் பூசை உண்டு
43. பாப்பம்மாள்சத்திரம் திருவானைக்காவல்

கோவை மாவட்டம்

44. பேரூர் மடம்
45. திருப்பைஞ்ஞீலி மடம்
46. திருவாசி மடம்

சித்தூர் மாவட்டம்

47. காளஹஸ்தி மடம். இம்மடம் தற்போது சங்கராச்சாரிய மடத்தின் பொறுப்பில் உள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம்

48. திருக்கழுக்குன்ற மடம்
49. வெள்ளப்பந்தல் மடம்
50. காஞ்சிபுரம் மடம் (இங்கே கச்சியப்பருக்குக் கோயில் உண்டு)
51. சென்னை மடம்
52. திருவொற்றியூர் மடம்
53. அச்சிரப்பாக்கம் மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

திருவாங்கூர் சமஸ்தானம்

54. செங்கோட்டை தாலுக்கா மேக்கரை மடம் (மிக அருமையான கட்டிடம் உண்டு)
55. மேலடி பிருஞ்சி கீழ்பிடாகை மேல்பிடாகை மடம்
56. சுசீந்திர மடம் - நாயக்கர் மடம். தம்பிரான் பூசை உண்டு
57. கன்னியாகுமரி மடம்
58. பாணத்திட்டு மடம்
59. குமாரர் கோவில் மடம்

தென்னார்க்காடு மாவட்டம்

60. சிதம்பரம் ஞானப்பிரகாசர் கட்டளை மடம் - தற்போது ஆறுமுக நாவலர் கட்டளைவசம் உள்ள சேக்கிழார் கோயில் அருகே இருந்தது.
61. தெற்கு மடம் (தற்போதுள்ள மெய்கண்டார் கோயில்)
62. சிங்காரத்தோப்பு மடம் (சிதம்பரத்தின் மேற்கில் இடிந்தநிலையில் மடம் உண்டு)
63. திருவதிகை வீரட்டான மடம். தம்பிரான் பூசை உண்டு.
64. திருவண்ணாமலை மடம்
65. திருத்துறையூர் மடம்
66. திருவெண்ணெய்நல்லூர் மடம்
67. விருத்தாசலம் மடம்
68. திருப்பாப்புலியூர் மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருநெல்வேலி மாவட்டம்

69. ஜெவந்திபுரம் மடம் (விக்கிரமசிங்கபுரம் அருகில் இவ்வூர் உள்ளது) தம்பிரான் பூசை உண்டு
70. கொட்டா குளம் மடம்
71. ஜெவந்திபுரம் ஜெவந்தி ஈசான மடம்
72. ஆரடியூர் மடம்
73. பாப்பாக்குடி காசிதரும மடம்
74. மேலச்சேவல் மடம்
75. கீழைச்சேவல் மடம்
76. ஊர்க்காடு மடம்
77. விக்கிரமசிங்கபுரம் பாபநாச கட்டளை மடம்
78. சிவஞான சாமிமடம்
79. பாபநாச ம் ஈசான மடம்
80. ஆழ்வார்க்குறிச்சி மடம்
81. தென்காசி மடம்
82. திருக்குற்றால மடம்
83. காசி தர்ம மடம் - தம்பிரான் பூசை உண்டு
84. கம்பனேரி புதுக்குடி மடம்
85. கரடிக்குளம் என்கிற கனகசபாபதி மடம்
86. கடைய நல்லூர் மடம்
87. வாசுதேவநல்லூர் கீழைமடம், மேலைமடம்
88. புளியங்குடி மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

89. சங்கரநயினார் கோயில் மடம்

90. கழுகுமலை மடம்

91. பத்தை வடகரை மடம் - தம்பிரான் பூசை உண்டு

92. புலியக்குறிச்சி மடம்

93. கரிசல் குளம் மடம்

94. நெல்லை ஈசான மடம் - தம்பிரான் பூசை உண்டு

95. மாயமான் குறிச்சி மடம்

96. ஸ்ரீ வைகுண்ட மடம்

97. அன வரதநல்லூர் மடம்

98. காந்திஸ்வர மடம்

99. முறப்பநாடு மடம் - தம்பிரான் பூசை உண்டு

100. முறப்பநாடு மடம் பிருந்த கொப்புகார மடம்

101. திருச்செந்தூர் விசாகக் கட்டளை மடம்

102. திருப்பணி மடம்

103. மேல மடம்

104. அறுபத்தி மூவர் மடம்

105. கார்த்திகைக் கட்டளை மடம்

106. சோமதந்திர மடம் (101 முதல் 106 வரை உள்ள மடங்கள் திருச்செந்தூர் மடங்கள் ஆகும்)

107. ஆத்தூர் சோமநாத சுவாமி பிச்சைக்கட்டளை மடம்

108. ஆறுமுகநேரி மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பல மாவட்டங்களில் கூடிய மடங்கள்

109. தாமரைமொழி என்கிற தட்டா மடம்
110. குலசேகரப்பட்டின மடம்
111. கல்லிடைக்குறிச்சி மடம் - தம்பிரான் பூசை உண்டு
112. வீரவநல்லூர் அன்னதானக் கட்டளை மடம்
113. திருப்புடைமருதூர் விளாபூசைக் கட்டளை மடம்
114. பீகாம்பாள் மடம்
115. வள்ளியூர் மடம்
116. விஜயநாராயண மடம் - தம்பிரான் பூசை உண்டு
117. ஆரல்வாய்மொழி மடம்
118. வடசேரி மடம்
119. குமார கோவில் மடம்
120. பரக்கை மடம்
121. பீமநகரி மடம்
122. அருமை நல்லூர் மடம்
123. வீரவநல்லூர் மடம்
124. சிறா மடம்
125. தரிசனம் கோப்பு மடம்
126. ஆரூர் மடம்
127. வீராணமங்கல மடம்
128. குமாரகோவில் மடம்
129. தோவாளை மடம்
130. ஆரல்வாய்மொழி மடம்
131. புத்தேரி மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

அம்பலவாண தேசிகர்
இருபதாவது பட்டம் - (1937-1951)

தூத்துக்குடி மாவட்டம் கொற்கை என்ற பழம்பதியில் பிறந்த அம்பலவாண சுவாமிகள் தமது பத்தொன்பதாவது வயதிலே திருவாவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்த சிவந்திபுரம் மடத்தில் தட்சிணம் காறுபாறாக இருந்த வைத்தியலிங்கத் தம்பிரானைச் சந்தித்து வழிபட்டார். பின் ஆதினத்தின் தம்பிரான் ஆனார். அம்பலவாணருடைய பிள்ளைத் திருநாமம் வைகுண்டம் பிள்ளை. திட்சாநாமம் வைத்தியலிங்கத் தம்பிரானாகும்.

ஆதீன வித்துவான்

17ஆவது பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகரின் அணுக்கத் தொண்டராக இருந்த இவர் ஆதீன வித்து வானாகவும் இருந்துள்ளார். சேற்றூர். இரா. சுப்பிரமணியக் கவிராயரிடம் தமிழ்க்கல்வியை முழுமையாகவும் முறையாகவும் கற்றார்கள். இவர் திருமந்திரத்தில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

திருப்பெருந்துறைக் கட்டளைத் தம்பிரான்

திருப்பெருந்துறையில் கட்டளைத் தம்பிரானாக இவர் முதலில் பணியாற்றி வந்தார். இவருடைய நிர்வாகத் திறமையை உணர்ந்த 19ஆம் பட்டத்தில் இருந்த வைத்தியலிங்க தேசிகர் இவரைத் திருவிடை மருதூர்க் கட்டளைக்கு மாற்றினார். தமக்குப் பிறகு பட்டத்திற்கு வர இவரையே தேசிகர் நியமித்தார். ஈஸ்வர ஆண்டு ஐப்பசி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மாதம் 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அபிடேகம் நிகழ்ந்தது. இருநாள் கழித்து வைத்தியலிங்க தேசிகர் சிவபரிபூரணமுற்றதால் 20ஆவது தேசிகராக இவர் பொறுப் பேற்றுக் கொண்டார்.

நாட்டுப்பற்று

இத்தேசிகர் தேசப்பணிக்கான பொதுக்காரியங்கள் எவையாயினும் அவற்றிற்குத் தகுந்த உதவிகள் செய்து வந்துள்ளார்.

இந்திய நாடு 14.8.1947ஆம் ஆண்டு இரவு 11.45 மணிக்கு விடுதலை அடைந்தது. பண்டித ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியாக 15.8.1947இல் பொறுப்பேற்றுக் கொண்டார். இத்தேசிகர் சைவ சின்னமாகிய ரிஷப அமைப்புடன் கூடிய ஒரு தங்கச் செங்கோலை ஆதீனத்தின் தம்பிரான் சுவாமிகளில் ஒருவரான குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், மடத்தின் ஓதுவார் மாணிக்க ஓதுவார், ஆதீனத்தின் நாதசுர வித்துவான் டி.என். ராஜரத்தினம் பிள்ளை ஆகியவர்களிடம் ஒப்படைத்து புதுதில்லிக்கு அனுப்பி 'அரசாள்வார் ஆணை நமதே' என்ற திருமுறை ஓதுவித்துச், செங்கோலை இந்தியப்பிரதமர் நேருவிடம் வழங்குமாறு கூறினார். இவ்வாறு தமது நாட்டுப்பற்றை இவர் வெளிப்படுத்தினார்.

வெள்ளித்தேர்

தஷிண யாத்திரையின் நினைவாக ஆதினத்தில் உள்ள ஞானமா நடராசப் பெருமானுக்கு அழகிய வெள்ளித்தேர் அமைத்தருளினார். 12ஆவது பட்டம் செய்த தேரினைப் புதுப்பித்து வழங்கினார் எனலாம்.

சைவநூல்கள்

சைவசமயம் தொடர்பான நூல்களையும் தலபுராணங் களையும் மிகுதியாக அச்சிட்டு அன்பர்களுக்கு வழங்கினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மொழி வளர்ச்சி

ஆதீனத்தின் சார்பாகத் தமிழ்ப்புலவர்களையும், வடமொழி வல்லுநர்களையும் இசைவிற்பன்னர்களையும் ஆதரித்து வகையறிந்து பரிசும் பட்டமும் வழங்கினார்.

நாட்டு வளர்ச்சி

நாட்டுநலத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்ட தேசிகர் குடியரசுத் தலைவர் மாண்புமிகு பாபு ராஜேந்திரபிரசாத் அவர்களை ஆதீனத்திற்கு வரவழைத்து கஸ்தூரிபாய் நிதிக்காக ரூ. 35,000 வழங்கி மகிழ்ந்தார். அக்காலத்தில் இது பெருந்தொகையாகும்.

கல்வி வளர்ச்சி

கரந்தைப்புலவர் கல்லூரி, உமாமகேஸ்வரர் உயர் நிலைப்பள்ளி முதலியவற்றின் வளர்ச்சிக்காக ரூபாய் 30,000 ஒவ்வொரு வருடமும் வழங்கி மகிழ்ந்தார்.

நூலக வளர்ச்சி

அம்பலவாண தேசிகர் அருளாட்சியில் விக்கிரம சிங்கபுரம், திருநெல்வேலி, செங்கோட்டை ஆகிய இடங்களில் அம்பலவாண தேசிகர் என்ற பெயரில் நூலகங்கள் ஏற்படுத்தினார். மயிலாடுதுறையில் ரூ. 10,000 செலவில் புதிய நூல்நிலையம் ஏற்படுத்தித் தந்தார்.

திருக்குடமுழுக்குகள்

திருவிடைமருதூர், திருநீலக்குடி, நல்லூர், சூரியனார்க் கோயில், இலுப்பைப்பட்டு, திருவாவடுதுறை, பாபநாசம், பத்தை, வடகரை, மேக்கரை (செங்கோட்டை வட்டம்) விநாயகர்கோவில், தென்காசி, ஆறுமுகனேரி, வெள்ளூர், திருவைகுண்டம், திருநெல்வேலி குறுக்குத்துறை ஆகிய இடங்களில் மடத்தின் கிளைமடங்களைச் செப்பனிட்டும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருக்கோயில்கள் குடமுழுக்குகள் செய்வித்தும் பெருந் தொண்டாற்றினார்.

அம்பலவாண தேசிகர் காலத்தில் வெளியிடப் பட்ட செப்பேடு ஒன்று மடத்தில் உள்ளது. 31.3.1950இல் திருநெல்வேலி குறுக்குத்தெரு சுப்பிரமணிய சுவாமிக்கு நெல்லை டவுன் சேர்மாதேவி ரோடு எண் 7இல் கூடிய ஸ்ரீ டி.என். சிதம்பரம் பிள்ளையின் மனைவி கனக சுந்தரவடிவு அம்மாள் என்பவர் பல அணிகலன்களை வழங்கிச் செப்பேடும் அளித்துள்ளார். பழையவைரம், பழையபச்சை, பழைய சிவப்பு பதித்த தங்கவேல் ஒன்றும் பழைய பச்சை, பழையசிவப்பு பதித்த சிவலிங்க கெவுடு ஒன்றும், நற்பவழ மாலையில் சிவப்புப் பதக்கம் கோத்தது ஒன்றும் வழங்கியுள்ளார். செப்பேட்டை வெட்டித்தந்த ஆசாரியின் பெயர் சி.சு. செல்லையா ஆசாரி. ஆசாரி நெல்லை அக்கசாலை விநாயகர் கோவில் தெருவினைச் சேர்ந்தவர் ஆவார்.

தேவாரப் பாடசாலைகள்

திருநெல்வேலி, தென்காசி, இலஞ்சி, கடையநல்லூர், செங்கோட்டை, சிந்துபூந்துறை, மேலகரம் ஆகிய ஊர்களில் தேவாரப் பாடசாலைகளை நிறுவித் தமிழ்த் தொண்டாற்றிய தேசிகர், சைவ சமயத்தின் சிறப்புகளை நாடெங்கும் மக்களுக்கு எடுத்துக்கூற நாகர்கோயிலைச் சேர்ந்த தசாவதானம் ஆறுமுகம் பிள்ளை, தொண்டர்குழாம் ஆறுமுக நாவலர், என்.எம். இராஜன், பகவதிபெருமான் பிள்ளை, மறைதிருநாவுக்கரசு, சிவகாமசுந்தரி அம்மையார், வீரசுப்பிரமணியம், முத்துக்குமாரசுவாமி பிள்ளை, ஈஸ்வர வடிவம்மையார், வி.சிதம்பர இராமலிங்கம்பிள்ளை, த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஆகியோர்களைச் சமயப் பிரசாரகர்களாக நியமித்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

நன்கொடைகள்

இரண்டாம் உலகப்போரின் நினைவாக அம்பா சமுத்திரத்தில் 'விக்டரி ஆர்ச்' எனப்படும் வளைவு அமைக்க நிதி உதவியினைத் தேசிகர் வழங்கினார். மேலும் 'சேரமாதேவி பார்க்' கட்டட நிதியுதவி, நெல்லை இந்து கல்லூரிக்கு நிதி உதவி, தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரிக்கு ரூ. 8,000 நிதி உதவி, நெல்லை வண்ணாரப்பேட்டை வேளாளர் கல்வி அபிவிருத்தித் திட்டம் போன்றவற்றிற்கு ரூ. 10,000 என நன்கொடைகள் அளித்துள்ளார்.

கல்வி நன்கொடைகள்

குடந்தை ஆடவர் கல்லூரி மாணவர்களுக்கு நிதி யுதவி வழங்கினார். திருவிடைமருதூரில் ஆதீனத்தின் பொறுப்பில் உள்ள மேல்நிலைப்பள்ளி (முன்பு உயர் நிலைப்பள்ளி)க்கு பல வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடம் கட்டித் தந்ததுடன் இங்குள்ள தொடக்கப் பள்ளிக்கும் நிதி உதவியும் செய்தார். கும்பகோண பொது நூல்நிலையத்துக்காக ரூ.7,500மும் அம்பாசமுத்திரம் பள்ளிக் கட்டிடத்திற்கு ரூ. 4,000மும் வழங்கினார்கள். இலால்குடி மகளிர் பள்ளிக்கு நிதிஉதவி புரிந்தார்.

தஞ்சாவூர் சுகாதாரக் கழகத்துக்கு நிதிஉதவி புரிந்தார். டாக்டர். உ.வே.சா.வின் பதிப்பிக்கப்படாத சில நூல்களை இவர் பதிப்பித்துள்ளார். தஞ்சை ஷயரோக சானிடோரியத் துக்கு ரூ. 20,000 வழங்கினார். கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவிற்கு நன்கொடை அளித்தார். ஏ.ஆர்.பி. உணவு சகாயநிதி வழங்கினார். தேவூரில் மருத்துவமனை அமைத்துத்தந்தார்.

காட்சிக்கு எளியவராக விளங்கிய அம்பலவாண சுவாமிகள் திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமான் மீது பெரிதும் ஈடுபாடுடையவர். அதற்கேற்பவே திருவிடை மருதூரில் விக்ருதியாண்டு பங்குனித்திங்கள் 30ஆம் நாள் வியாழக்கிழமை இவர்கள் சிவபரிபூரணம் எய்தினார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

திருவிடைமருதூரில் உள்ள இத்தேசிகர் குருமூர்த்தத் திற்கு ஆண்டுதோறும் பங்குனியில் குருபூசை நடைபெற்று வருகிறது.

சுப்பிரமணிய தேசிகர்
இருபத்தொன்றாவது பட்டம் - (1951-1967)

திருவாரூரில் சுவாமிநாத தேசிகருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்த சுப்பிரம்ணியர், இளமையிலேயே திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்து சைவ சந்நியாசம் பெற்றுக் கொண்டார். படிப்படியாக உயர்ந்து ஆதீனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பெரும் புலவரும் இசைமேதையுமான ச. தண்டபாணி தேசிகரை இவர் ஆதீன மகா வித்துவனாக நியமித்தார்.

பல்லக்கை விடுத்து மகிழுந்தை ஏற்றல்

சுப்பிரமணிய தேசிகர் நேர்மைக்கு உறைவிடமாக விளங்கினார். மடத்தின் சொத்துப் பராமரிப்பு எவ்வாறு நிகழ்கிறது? என்பதைக் கண்டறிய முன் அறிவிப்பின்றி அடிக்கடி பயணம் மேற்கொண்டார். இப்பணிக்கு இடை யூறாகப் பல்லக்குப்பவனி இருந்ததால் அதனைக் கைவிட்டு மகிழுந்து மூலம் பயணங்களை மேற்கொண்டார்.

மடத்துக்குச் சொந்தமான கோயில்கள் மட்டு மில்லாமல் மடத்துக்குரிய கிளைமடங்களையும் புதுப்பிக்க இவர் ஏற்பாடு செய்தார்.

நலதிட்டங்கள்

மருத்துவமனைகள், கல்விக்கூடங்கள் போன்றவை கட்ட தேசிகர் பொருளுதவி புரிந்தார். செங்கிப்பட்டியில் காசநோய் மருத்துவமனை தொடங்க உதவி புரிந்தார். சைவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சமய நூல்கள் மிகுதியாக அச்சிட்டு நன்கொடையாக அறிஞர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார். நமசிவாயமூர்த்தி என்ற அச்சகத்தைத் திருவாடுதுறை ஆதீனத்தில் நிறுவினார்.

ஆண்டுதோறும் திருவெண்ணெய்நல்லூரில் சைவ சித்தாந்த மாநாடு நடத்தி, மாநாடு முடிந்தபின் மாநாட்டுக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டு மகிழ்ந்தார்.

திருமந்திரம்

திருமூலரின் திருமந்திரத்துக்குத் தண்டபாணி தேசிகரைக்கொண்டு 'பஞ்சாட்சரதீபம்' என்ற பெயரில் உரை எழுதுவித்து நூல்களாக வெளியிட்டார். சுப்பிரமணிய தேசிகர். மிகச்சிறப்பான உரையாக இவ்வுரை இருப்பதால் அறிஞர்கள் திருமந்திரம் என்றால் திருவாடுதுறை ஆதீன வெளியீடையே வாங்குகிறார்கள். பல பதிப்புக்களைக் கண்ட திருமந்திரம் மெய்கண்டார் இதழ்களில் தற்போது தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றது.

வடநாட்டுப் பயணம்

ஆண்டுதோறும் காசி, நேபாளம், திருக்கேதாரம் போன்ற வட இந்திய புனித தலங்களைத் தரிசிக்க, பயணங்களைச் சுப்பிரமணிய தேசிகர் மேற்கொண்டார். மடத்தின் பணியாளர்கள் காசி சென்றுவர பொருளுதவி செய்தார். காசியில் உள்ள கண்ணப்பசாமி மடத்தைப் புதுப்பித்ததுடன் அடிக்கடி காசி மடத்திற்கும் இவர் சென்று வந்தார். 20.9.1967இல் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் காசி மடம் திருப்பணி நடைபெற்றது. வீண் ஆடம்பரமும் விளம்பரமும் வேண்டாத தேசிகர், 'நமக்கென்னையா? நமசிவாய மூர்த்திகளின் சொத்து, நமக்கென்ன பந்தம்? நமக்கு விளம்பரம் எதற்கு?' என்று கேட்பாராம்.

சீன பாரதபோர்

சுப்பிரமணிய தேசிகரின் அருளாட்சி காலத்தில் இந்தியாவுக்கும் சீனாவிற்கும் பெரும்போர் நிகழ்ந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

அப்போது சென்னை மாநில முதலமைச்சராக இருந்த பெருந் தலைவர் காமராசரை அன்புடன் அழைத்து தங்கத்தையும் பணத்தையும் எல்லையைக் காக்கும் பணிக்காக வாரி வழங்கினார். 17.12.1962இல் 3315 கிராம் தங்கமும், 65,000 ரூபாய் ரொக்கமும் பெருந்தலைவரிடம் தேசிகர் வழங்கினார். இந்நன்கொடையை நிழற்படமாக ஆதீன மண்டபத்தில் இன்றும் காணலாம்.

திருவெம்பாவை

ஆண்டுதோறும் திருவெம்பாவை மாநாடு வெவ்வேறு ஊர்களில் நடத்தித் திருவெம்பாவை நூலின் சிறப்பினைப் பலரும் அறியச் செய்தார் தேசிகர்.

தேவாரப் பாடசாலைகள்

திருவாவடுதுறை, தென்காசி, மேலகரம், இலஞ்சி, திருநெல்வேலி, விக்கிரமசிங்கபுரம், மயிலாடுதுறை, திருவிடைமருதூர் முதலிய இடங்களில் தேவாரப் பாட சாலைகள் நிறுவி, தேவாரம் பயிற்றுவிக்க இத்தேசிகர் ஏற்பாடு செய்தார். படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகைகள் வழங்கவும் செய்தார்.

திருப்பணிகள்

மயிலாடுதுறையில் உள்ள ஆதீனக் கோயிலான மயூரநாதசுவாமி கோயில் இவர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நிகழ்த்தப்பெற்றது. 4 லட்சம் ரூபாய் இதற்காகச் செலவிடப்பட்டது.

திருவாவடுதுறை கோமுக்தீஸ்வரர் கோயிலில் பல்வேறு திருப்பணிகள் இத்தேசிகர் காலத்தில் நிகழ்ந்துள்ளன. வசந்த மண்டபம் புதுப்பிக்கப்பட்டது. கோபுரம், மதில், திருமூலநாயனார் முன்மண்டபம் ஆகியவை புதுப்பிக்கப்பட்டன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

திருவிடைமருதூரில் நூல்நிலையம், பிரசார மண்டபம், கோசாலை முதலியன புதிதாகக் கட்டப்பட்டன. ஏக நாயகருக்கு வெள்ளிப்படிச்சட்டம், படித்துறை விநாயகருக்கு வெள்ளிக்கவசம், வெள்ளிக் கைலாச வாகனம், வெள்ளிரதம் ஆகியவை வழங்கப்பட்டன. அறுபத்தி மூவர் திருவுருவங் களுள் பின்னம்பட்டவை புதிதாக வார்க்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன. அறுபத்துமூவர் வீதி உலாவுக்கு எனப் புதிய மஞ்சங்கள் செய்யப்பட்டன.

கார்த்திகைச் சோமவார அபிஷேகத்திற்காக 1008 சங்குகள் புதிதாக வாங்கித் தங்கம் கட்டி வைக்கப் பட்டன.

திருவிடைமருதூரில் வசதியுடன் கூடிய விடுதி ஒன்றும் கட்டப்பட்டது.

ஆதீனத்தின் கட்டளைகள் உள்ள மதுரை மீனாட்சி கோயில், திருச்செந்தூரில் உள்ள சுப்பிரமணியர்கோயில், திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் கோயில் எனப் பல கோயில் களின் திருப்பணிகளுக்குச் சுப்பிரமணிய தேசிகர் பெரும் பொருள் தந்துள்ளார்.

பாசன வசதி

பாசன வசதிக்காக அறுபதுக்கு மேற்பட்ட ஊர்களில் குளம், கலுங்கு, கால்வாய், ஏரி முதலியவை புதிதாகக் கரைகட்டியும் ஆழமாக வெட்டியும் அணைகள் கட்டியும் வேளாண்மை வளம்பெற ஏற்பாடு செய்த சுப்பிரமணிய தேசிகர், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அருகேயுள்ள மேக்கரை என்ற ஊரில் அணைகட்டி அதற்காகக் கல்வெட்டொன்றையும் வெட்டிவைத்துள்ளார். மேற்கண்ட கல்வெட்டு மடத்துக்குச் சொந்தமான கிளைமடத்தில் இன்றுமுள்ளது. அக்கல்வெட்டு வருமாறு

திருவாவடுதுறை ஆதீனம்
21 வது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

குருமகா சன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமண்ய
பண்டாரச் சன்னதி
அவர்களால்
1963வது வருஷம்
மே மாதம் கட்டப்பட்டது.

பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள எடுத்தணி வயல் என்ற கிராமத்தில் 300 ஏக்கர் நிலங்களை நன்செய் நிலங்களாக்கி மக்களுக்கு வழங்கியதுடன் விநாயகர் கோயில் ஒன்றையும் கட்டித் தந்துள்ளார்கள்.

பாப்பம்மாள் சத்திரம்

திருவானைக்காவல் சன்னதித் தெருவில் உள்ள பாப்பம்மாள் சத்திரத்தில் ஏழைப் பிள்ளைகள் தங்கி இலவசமாக உணவுண்டு கல்விபயில சுப்பிரமணிய தேசிகர் ஏற்பாடு செய்தார். கட்டிடத்தையும் புதுப்பித்தார்.

புலவர்கள்

ஸ்ரீனிவாசாசாரியர் என்பவரை வித்துவானாக நியமித்து பலநூல்கள் மடத்தின் சார்பாக வெளிவர தேசிகர் ஏற்பாடு செய்தார். சிவசுப்பிரமணியன் என்பவரும் சுவாமிகளால் வித்துவானாக நியமிக்கப்பட்டார். மூன்று மொழிகளில் புலமையுடைய இவர் பலநூல்களை மடத்தின் சார்பாகப் பதிப்பித்துள்ளார். ஞானாந்தர், திருப்புகழ் வேங்கட சுப்பிரமணியர் போன்றோரும் மடத்தில் பணியாற்றி நல்ல நூல்களைப் பதிப்பித்துள்ளார்கள்.

ஆந்திரப் பயணம்

சுப்பிரமணிய தேசிகர் தமிழ்நாட்டில் மட்டுமின்றி ஆந்திரமாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற சைவத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று வழிபட்டுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

இளையபட்டம்

பெரியபூசை சுப்பிரமண்ய தம்பிரான் சுவாமிகளுக்கு ஆசாரிய அபிஷேகம் செய்வித்து இளைய பட்டத்தில் தேசிகர் அமர்த்தினார்.

முத்திநாள்

சைவத்தை வளர்க்க இத்தேசிகர் பலவாறு முயன்றுள்ளார். சைவப்பிரசாரர்கள் பதின்மர் இவர் காலத்தில் நியமிக்கப்பட்டனர். சித்தாந்த மாநாடுகளில் டாக்டர். இராதாகிருஷ்ணன், டாக்டர். வி.வி. கிரி போன்றோர் கலந்து கொண்டுள்ளனர். ஆவுடையார்க்கோயிலில் திருவாசக மாநாட்டை இத்தேசிகர் நடத்தியுள்ளார். 23.9.1967 அன்று தேசிகர் தம்முடைய ஜன்ம நட்சத்திரமாகிய பரணி நன்னாளிலேயே முத்தி அடைந்துள்ளார்.

அம்பலவாண தேசிகர்

இருபத்திரண்டாவது பட்டம் - (1967-1983)

கோயம்புத்தூர் அருகேயுள்ள பேரூரில் சைவ முதலியார் குடும்பத்தில் பிறந்த சுப்பிரமணி என்பவர் இளமையிலேயே திருவாவடுதுறை ஆதீனத்தில் சேர்ந்து துறவியானார். ஆதீனத்தில் பெரியபூசை சுப்பிரமணிய தம்பிரானாகி நீண்டகாலம் பூசை செய்து வந்து 23.9.1967இல் இவர் ஆதீன குருமுதல்வர் ஆனார். சிவஞான முனிவர் காலத்தில் பேரூரைச் சேர்ந்த வேலப்ப தேசிகர் இளையபட்டத்தில் இருந்துள்ளார். இவ்வூரில் வீரசைவ மடமும் உண்டு. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட எழுத்துக்கள் பொறித்த மட்பாண்டங்கள் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பாடல்பெற்ற தலமான பேருர்க்கு மிகப் பெரிய தலபுராணமும் உண்டு. இத்தகு புகழ் பெற்ற தலத்திலே அம்பலவாணர் பிறந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருமுறைக் கருத்தரங்கு

21ஆவது தேசிகர் போன்றே இவரும் சைவத்தை வளர்க்க அரும்பாடுபட்டார். ஆண்டுதோறும் திருவிடை மருதூரில் திருமுறைக் கருத்தரங்கினை மூன்று நாட்கள் நடத்திக் கட்டுரைகளை நூல்களாக்கி அம்பலவாணர் வெளியிட்டுள்ளார். 18.1.1979 இல் நடந்த கருத்தரங்கில் அப்போதைய பாரதப் பிரதமரான மொராஜ்ஜி தேசாய், தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் இருவரும் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து கொண்டனர். 1979 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் நெல்லை காந்திமதி அம்மன் கோயிலில் உலகச் சைவமாநாடு நடத்தி மகிழ்ந்தார். அம்பலவாண தேசிகர், சங்கரங்கோயில் என்ற தலத்திலும் ஒரு சைவ மாநாட்டினை நடத்தினார்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்காக இத்தேசிகர் ரூ. 50,000 வழங்கினார்.

திருப்பணிகள்

திருவாவடுதுறையில் உள்ள கோமுக்திஸ்வரர் கோயில் 27.8.1972இல் கும்பாபிஷேகம் நடை பெறவும், தஞ்சை-மயிலாடுதுறை நெடுஞ்சாலையில் திருவாவடுதுறைக்குப் பிரியும் சாலையின் முகப்பில் நுழைவுவாயில் ஏற்படுத்தவும் அம்பலவாணர் ஆணையிட்டிருந்தார். இன்றும் நுழைவு வாயில் கம்பீரமாகக் காட்சி தருகிறது. 15.7.1970இல் திருவிடை மருதூர் மகாலிங்கசுவாமி கோயில் கும்பாபிஷேகம் இத்தேசிகர் ஆணைக்கிணங்க நடந்தேறியது. சூரியனார் கோயில், ஆவுடையார்க்கோயில் போன்ற கோயில்களின் திருப்பணிக்கு வித்திட்ட இத்தேசிகர் அவினாசியில் உள்ள சிவன் கோயில் திருப்பணிக்கு ரூ.10,000 வழங்கினார்.

திருச்செந்தூரில் கந்தசஷ்டி மண்டபம் கட்டியதுடன் இங்குள்ள சுக்கிரவாரக் கட்டளை மடம், செவ்வாய்க்கிழமை மடம், விசாகக்கட்டளை மடம் போன்ற மடங்களில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

அன்னதானம் சிறப்பாக நடைபெற அம்பாலவாண தேசிகர் ஏற்பாடு செய்தார்.

நன்கொடைகள்

திருவாவடுதுறை, திருவிடைமருதூர், மயிலாடுதுறை, சிதம்பரம், சங்கரநயினார்கோயில் ஆகிய தலங்களில் உள்ள சிவாலயங்களுக்குத் தலா ஒரு யானையை விலைக்கு வாங்கி நன்கொடையாக இத்தேசிகர் வழங்கினார். தற்போது எங்கும் யானை இல்லை.

ஆண்டுதோறும் அரசினர் தேர்வில் உயர்மதிப்பெண் பெறும் ஆதீனத்தின் பள்ளி மாணவர்களுக்குத் தங்கம் மற்றும் வெள்ளி மெடல்களை வழங்க இத்தேசிகர் ஏற்பாடு செய்தார்.

பஞ்சம் மற்றும் வெள்ளம் வந்த காலங்களில் மக்களுக்கு உதவித்தொகைகளை இத்தேசிகர் வழங்கினார்.

இசைவாணர்களையும் நாதசுர வித்துவான்களையும் சிவ ஆகம விற்பன்னர்களையும் இவர் ஆதரித்துள்ளார். திருவாரூரில் திருக்குறள் வகுப்பும் தேவாரப் பாடமும் நடைபெற இவர் உதவி புரிந்தார்.

பாவநாசம், சுசீந்திரம், செங்கோட்டை போன்ற ஊர்களில் தேவாரப் பாடசாலைகள் இவர்காலத்தில் நிறுவப் பட்டன. திருவிடைமருதூர்க் கோயில், மயிலாடுதுறைக் கோயில் போன்றவற்றில் ஓதுவார்களை இவர் நியமித்தார்.

மாணவர்களின் உயர்கல்விக்கும் இத்தேசிகர் உதவி உள்ளார். திருவோத்தூர் சிவன்கோயில் கல்யாண மண்டபம் கட்டுவதற்கு ரூ. 10,000 ஐ 1970இல் அளித்துள்ளார்.

இந்திராகாந்தி

பாரதப்பிரதமராக இருந்த இந்திராகாந்தி சென்னையில் தங்கியபோது வெள்ளி விபூதிச் சம்புடம், ஸ்படிகலிங்கம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

உருத்திராட்சமாலை, சாதாரா ஆகியவை வழங்கி அம்பலவாண தேசிகர் ஆசிர்வாதமும் செய்தார்.

ஆதீன வித்துவான்கள்

அம்பலவாண தேசிகர் ஆதின வித்துவான்களாகப் புலவர்கீரன், மதுரை சோமு, ஏ.கே.சி. நடராசன் போன்றோரை நியமித்தார்.

மெய்கண்டார் இதழ்

அம்பலவாண தேசிகர் 12.12.1982இல் மெய்கண்டார் என்ற திங்களிதழைத் தொடங்கி வைத்தார். இன்றுவரை இவ்விதழ் இடையூறின்றி குறித்த நாளில் வந்து கொண்டிருக்கிறது. அரிய கட்டுரைகள் இவ்விதழில் வந்து கொண்டிருக்கின்றன. அம்பலவாணதேசிகர் எத்தனையோ நற்காரியங்கள் செய்திருப்பினும் மெய்கண்டார் இதழ் தொடங்கியது தலையாயத் தொண்டு எனலாம். 7.4.1983 வியாழக்கிழமை திருவோண நன்னாளில் தேசிகர் சிவபரி பூரணமானார்.

சிவசுப்பிரமணியன்

விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்த சிவசுப்பிரமணியன் என்ற இளைஞரை ஆட்கொண்டு முதலில் தம்பிரானாகவும் பின் பெரிய பூசைத் தம்பிரானாகவும் நியமித்து இறுதியாக 6.8.1980இல் இளவரசு பட்டமும் கட்டிவைத்தார் அம்பலவாணர். இத்தேசிகர் காலத்தில் அடியேன் திருவாவடுதுறை ஆதீனம் சென்றுள்ளேன். எனினும் குருமுதல்வருடன் அளாவளாவும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. கோவை. சி.கே. சுப்பிரமணியமுதலியார் அம்பலவாணதேசிகரின் தூரத்து உறவு என்று கூறுவர். பெரிய புராணத்தின் ஆராய்ச்சியிலேயே வாழ்நாளைக்கழித்த சி.கே.சி போன்றே திருமுறைகளில் அம்பலவாணரும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர்
இருபத்து மூன்றாவது பட்டம் - 1983 முதல்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

என்ற குறளினை மொழிந்த வள்ளுவர்,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் கண்ப தறிவு.

என்றும் மொழிந்துள்ளார். ஆகவே புகழுக்கு ஏதுவாகப் பிறக்க வேண்டும். இல்லையெனில் பிறக்காமலே இருந்து விடுவது நன்று என்று பொருள் கொள்வது பொருத்தமாக இல்லை. எந்தச் செயலைச் செய்கிறோமோ அந்தச் செயலிற் புகழ்பெற வேண்டும். அல்லது எந்தத் துறையில் ஈடுபடு கிறோமோ அந்தத்துறையில் பெயர் வாங்கவேண்டும் என்பதே இக்குறளுக்குப் பொருள் எனலாம். இவ்வுலகில் பிறந்த எத்தனையோ சான்றோர் தம் செயல்களினால் மக்கள் உள்ளங்களில் இடம் பெற்றனர்; பெற்று வருகின்றனர்.

சிவப்பிரகாச தேசிகர்

எளிய குடும்பத்தில் விரோதி ஆண்டு ஐப்பசி மாதம் 29ஆம் நாள் பூர நட்சத்திரத்தில் *(15.11.1949)* நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்த சிவசுப்பிரமணியன் என்பவர், ஆன்மீக வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து அதில் சிறிதும் வழுவாமல் மக்களுக்கும் தொண்டாற்றி வருவதால் பலராலும் போற்றப் படுகிறார். இவருடைய பெற்றோர் கோமதிநாயகம் பிள்ளை, கோமதி அம்மாள் ஆவர். குடும்பத்தில் இரண்டாவது மகனாக இவர் பிறந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

சிவஞானி

விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்த முக்களாலிங்கர் என்ற சிவஞான சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனத்தில் சேர்ந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்ததுடன் இறுதிவரை துறவியாக வாழ்ந்து புகழீட்டினார். இவரை முன் மாதிரியாகக் கொண்டு சிவசுப்பிரமணியன், திருவாவடுதுறை ஆதீனத்தில் சேர்ந்து துறவியாக மட்டுமின்றி ஆதீன குருமுதல்வராகவே விளங்கி வருகிறார்.

இளமைப் பருவம்

பள்ளி இறுதிக்கல்வி வரை பயின்று கூட்டுறவுத் துறை ஆய்வாளர் தேர்வில் வெற்றி பெற்று மதுரை கோட்ஸ் ஆர்.வி. மில் கூட்டுறவுப் பண்டக சாலையில் சிறிதுகாலம் சிவசுப்பிரமணியன் பணியாற்றி வந்துள்ளார். துறவின் பால் கொண்ட பற்றுதல் காரணமாகத் திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்ட இவர், தொடக்கம் முதல் ஆன்மீகத்திலேயே ஈடுபட்டு வந்துள்ளார். கணபதி மந்திரம் என்ற வேலாயுத சுவாமி மடத்தில் கணபதி மூலமந்திரம் உபதேசமாகப் பெற்று, கணபதி பூசையைத் தனது வீட்டில் சிவசுப்பிரமணியன் செய்து வந்தார். பின்னர் ஒருநாள் மாசி மாதம் சிவராத்திரி சமயத்தில் ரிஷிகேசத்திலிருந்து வந்த துறவி ஒருவரிடம் கணபதி காயத்ரி மந்திரத்தை உபதேசமாகப் பெற்று, செபித்து வரலானார். நெல்லையைச் சேர்ந்த குருக்கள் ஒருவரிடம் பஞ்சாட்சர உபதேசமும் இவர் பெற்றார். வித்தியானந்த சுவாமிகள், சொரூபானந்த சுவாமிகள் ஆகியோரிடம் துறவின்பால் தமக்கு இருந்த ஈடுபாட்டைச் சிவசுப்பிரமணியன் குறிப்பிட்டிருந்தார்.

திருவாவடுதுறை தம்பிரான் - இளவரசர் - குருமகான்

திருவாவடுதுறை ஆதீனத்தின் அடியவர்களில் ஒருவராக இருக்க விரும்பி, சிவசுப்பிரமணியன் திருவாவடுதுறை ஆதீனத்திற்குப் புறப்பட்டார். முதலில் சிதம்பரம் வந்து நடராசரை வழிபட்டு விட்டு திருவாவடுதுறை ஆதீனத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

அடைந்தார். குருவருளும் திருவருளும் வாய்க்கவே அப்போது குருபீடத்தில் இருந்த 22ஆவது குருமகான் அம்பலவாண தேசிகரின் அருட்கண் நோக்கம் இவர்பால் விழுந்தது. 24.9.1979இல் யாத்திரை காஷாயமும் 21.2.1980இல் மந்திர காஷாயமும் 17.5.1980இல் நிர்வாண திட்சையும் பெற்ற சிவசுப்பிரமணியன், சுப்பிரமணிய தம்பிரானாக மாறினார். பிறகு பெரியபூசை சுப்பிரமணிய தம்பிரானாக உயர்ந்தார். இவருடைய அதிபக்குவ நிலையை உணர்ந்த அம்பலவாண தேசிகர், 6.8.1980இல் ஆதீன இளவரசு பட்டத்தில் இவரை நியமித்து ஆதீன நிர்வாகம், பூசை முதலியவற்றில் திறம்பெறச் செய்தார்கள். இளவரசர் ஆனபின் இவருடைய திருநாமம் சிவப்பிரகாச தேசிகராக மாறியது. குருமகான் கருத்தறிந்து இவர் மடத்தின் நிர்வாகத்தைச் செய்து வந்தபோது 7.4.1983இல் அம்பலவாண தேசிகர் சிவபரிபூரணமானார். எனவே சிவப்பிரகாச தேசிகர் ஆதீனகர்த்தரானார்.

அம்பலவாண தேசிகரின் குருபூஜையைப் பத்துநாள்கள் சிறப்பாகச் செய்த சிவப்பிரகாச தேசிகர், 7.4.83 முதல் குருமகா சந்நிதானமாக ஞானபீடத்தில் எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகிறார்கள். துறவியர்களின் கடந்தகால வாழ்க்கையைப் பார்க்கக் கூடாது என்பதற்காகவே 'ரிஷிமூலம் நதிமூலம் பார்க்கக்கூடாது' என்பர். இருப்பினும் நல்லனவற்றைக் காணலாம் என்று கருதுகிறேன்.

இதழ்களும் பெருமக்களும்

சிவப்பிரகாச தேசிகருடைய தமிழ்ப்பணியையும் சமூகப் பணியையும் சமயப் பணியையும் தமிழக ஏடுகளும், வார, மாத இதழ்களும் பாராட்டி வருகின்றன. கலைமாமணி விருது பெற்ற என் கல்வெட்டாசான் இரா. நாகசாமியைச் சந்திக்கும் போதெல்லாம் சிவப்பிரகாச தேசிகரின் சமயப் பணியையும் ஆகம நூல்களை வெளியிட்டுவரும் அரும் பணியையும் பாராட்டுவார். மிக எளிமையாகத் தொண்டாற்றி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

வரும் சிவப்பிரகாச தேசிகரைப் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் பலமுறை வியந்து போற்றியுள்ளார்கள்.

பழங்காலக் காசுகள் தொடர்பாகவும் 'சிவாலயத் திருமேனிகள்' நூல் தொடர்பாகவும் ஒரு முறை தினமலர் ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தியிடம் அடியேன் பேசிக் கொண்டிருந்தபோது சிவப்பிரகாச தேசிகரின் ஆகம நூல்களின் வெளியீடுகளை மிகவும் புகழ்ந்து தேசிகருக்குத் தனது நன்றியைத் தெரிவிக்குமாறு குறிப்பிட்டார்கள்.

தினந்தந்தி நாளிதழின் உரிமையாளரைச் செப்பேடுகள் தொடர்பாக ஒருமுறைச் சந்தித்து அடியேன் உரையாடினேன். அப்போது சிவப்பிரகாச தேசிகரின் சமூகப் பணியினை டாக்டர். சிவந்தி ஆதித்தன் மிகவும் பாராட்டினார்கள்.

கடவுள் நம்பிக்கை இல்லாத என்னுடைய பள்ளி ஆசிரியர் பல்லடம் மாணிக்கம், சான்றார் தொடர்பாக ஆய்வு செய்துவரும் சிறந்த பேச்சாளரான நெல்லை நெடுமாறன், கலை வரலாற்று நூல்களை வெளியிட்டு வரும் பதிப்புச் செம்மல் டாக்டர். ச. மெய்யப்பன், டாக்டர். இரா. கலைக்கோவன், தமிழ்த் தொண்டாற்றி வரும் வெள்ளையாம்பட்டு சுந்தரம் போன்றவர்களை அடியேன் சந்திக்கும் போது சிவப்பிரகாச தேசிகரின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டுவார்கள். இவர்களுடைய பாராட்டுகள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாத பாராட்டுகளாகும். அடியேன், சிவப்பிரகாச தேசிகர் இளவரசராக இருந்த காலந்தொடங்கி இன்றுவரை நேரில் கண்டு உரையாடும் பேறு பெற்றவன் என்பதால் அவருடைய பண்புகளையும் செயல்களையும் ஓரளவு அறிவேன். துறைசை ஆதீன கர்த்தருடன் அறிஞர் பலர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலும், நூல் எழுதும் வாய்ப்பு நடராசப் பெருமான் திருவருளால் எனக்குக் கிட்டியுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

முதல் சந்திப்பு

ஓலைச்சுவடிகள் சேகரிக்கும்பொருட்டு 1980ஆம் ஆண்டின் இறுதியில் ஒருநாள் அடியேன் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்றிருந்தேன். இளைய பட்டத்தில் இருந்த சிவப்பிரகாச தேசிகரைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. எளிய தோற்றம். அருள் வீசும் கண்கள். இளமை துள்ளும் மேனியுடன் இருந்த அவர்கள் என் பெயர், பணியாற்றும் வேலை போன்றவை குறித்து விசாரித்தார்கள். அடியேன் பணி சிறக்க வாழ்த்திவிட்டு, ஆதீன வெளியீடுகளை அன்புடன் வழங்கினார்கள். ஓலைச்சுவடி ஆய்வில் எனக்கிருந்த ஈடுபாட்டைப் பாராட்டினார்கள். தாம் அதிகம் பேசாது என்னைப் பேசவைத்து செவி மடுத்தினார்கள். அதன்பின் தஞ்சையில் பணியாற்றிய போது ஓரிருமுறை சுவாமிகளைச் சந்தித்திருக்கிறேன்.

அன்புள்ளம்

பணிமாற்றம் காரணமாக 1983 ஆகஸ்டுமாதம் தருமபுரி சென்ற எனக்கு 1986இல் தான் மீண்டும் சுவாமிகளைச் சந்திக்க முடிந்தது. இதற்கிடையில் சுவாமிகள் 7.4.83இல் மகா சந்நிதானமாகப் பொறுப்பேற்றச் செய்தியை அறிந்திருந் தேன். 1986இல் சுவாமிகளைச் சந்திக்கச் சென்றபோது பலவித எண்ணங்களுடனேயே ஆதீனத்திற்குச் சென்றேன். 'சந்நிதானம் நம்மை எங்கே ஞாபகத்தில் வைத்திருக்கப் போகிறது? ஞாபகம் இருந்தாலும் குருமகான் என்பதால் நம்மிடம் உரையாடல் நிகழ்த்துமோ?' என்றெல்லாம் எண்ணியபடி ஆதீனத்திற்குள் நுழைந்தேன். இன்முகத்துடன் வ்ரவேற்ற சுவாமிகள், 'எங்கே நீண்ட காலம் இப்பக்கம் காணோம்? எங்கே பணியாற்றுகின்றீர்? முக்கிய கண்டு பிடிப்பு உண்டா?' என்றெல்லாம் வினவி வழக்கம் போல என்னை நீண்ட நேரம் பேச வைத்து செய்திகளைக் கேட்டறிந்தார். இடையிடையே சாத்திரக் கருத்துகளைத் திருவாய் மொழிந்தருளினார். ஒன்றுக்கும் பற்றாத அடியேனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மறக்காததுடன் மடத்திற்கு அடிக்கடி வந்து போகும்படி திருவுளம் பற்றிய சுவாமிகளின் திருக்கருணையை எண்ணி வியந்தேன். வியந்தேன். இன்றும் வியக்கின்றேன்.

காட்சிக்கெளியர்

தமிழகத்தில் உள்ள பல்வேறு ஆதீனங்களையும் சந்திக்கும் வாய்ப்பு இறை அருளால் அடியேனுக்குக் கிட்டியது. கிட்டி வருகிறது. ஒவ்வொரு ஆதீனத் தலைவரும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புடையவராக விளங்கி வருகிறார்கள். அவ்வகையில் சிவப்பிரகாச தேசிகர் அடியேன் அறிந்தவகையில் காட்சிக்கு எளியவராகவும், கடுஞ்சொல் அற்றவராகவும், கல்விமான்களைப் போற்று பவராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக மனித நேயம் மிக்க வராகவும் விளங்கி வருகிறார்கள். சுவாமிகள் கடுஞ்சொல் கூறாதவர் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

வன்சொல் வழங்காதவர்

'பெண்ணாடம் தலபுராணம் மாறுபட்ட செய்திகள்' என்ற கட்டுரையினைக் கல்வெட்டுக் காலாண்டிதழ் ஒன்றில் நான் எழுதியிருந்தேன். கட்டுரையில் சிதம்பரம் சிங்காரத் தோப்பில் உள்ள திருக்களாஞ்செடியுடைய மகாதேவர் கோயிலையும் மறைஞான சம்பந்தர் சமாதியையும் குறிப் பிட்டுள்ளேன். சிதம்பரம் மௌனகுரு சுவாமிகள் மடத்தைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், கோயிலைத் தூய்மைப் படுத்தி ஓரளவு புதுப்பித்திருந்தார். இச்செய்தியைக் குறிப்பிட நேர்ந்தபோது கோயில் அருகில் உள்ள மறைஞான சம்பந்தர் சமாதி, மௌனகுரு சுவாமிகள் மடத்தின் பொறுப்பில் இருப்பதுபோல் தவறாக எழுதியிருந்தேன். உண்மையில் இச்சமாதிக் கோயில், கட்டுரை எழுதியிருந்த காலத்தில், திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கோயில் என்பதை அடியேன் அறிந்திருக்கவில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

இக்கட்டுரையைப் படித்திருந்த சிவப்பிரகாச சுவாமிகள், அடியேன் சுவாமிகளைச் சந்தித்தபோது கடுஞ்சொல் கூறாமல் நனிநாகரிகமாக என் பிழையைக் கூறியதுடன், 'சமாதியருகே அறிவிப்புப் பலகை இல்லாதது ஒரு குறை. சிதலமான நிலையில் உள்ள சமாதிக் கோயிலைப் புதுப்பிக்க உள்ளோம்' என்று கூறியதுடன் வெகுவிரைவிலேயே புதுப்பித்துக் குடமுழுக்கும் நடத்தி, கல்வெட்டும் பொறித்து வைத்துள்ளார்கள். என்னே! சுவாமிகளின் அருட்பண்பு! செயலாற்றும் வேகம்!

'காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் அற்றவனாகவும் நாடாளும் வேந்தனுக்கே வள்ளுவர் இலக்கணம் கூறும்போது, துறவியான யான் எளியவனாகவும், கடுஞ்சொல் பேசாதவனாகவும் இருப்பதில் பெருமை என்ன இருக்கிறது?' என்று சுவாமிகளே ஒருமுறை என்னிடம் குறிப்பிட்டார்கள்.

விருந்தோம்பல்

வசதி மிக்கவர் வரும்போது எப்படி இன்முகத்துடன் வரவேற்று ஆசி வழங்குவாரோ அதே போல் ஏழைகள் வரும்போதும் வரவேற்று ஆசி வழங்குவதுடன் சிறுசிறு நூல்களோ, கனிகளோ கொடுத்தனுப்பும் வழக்கத்தைச் சுவாமிகள் பின்பற்றி வருகிறார்கள். வருபவர் உள்ளக் குறிப்பை அறிந்து அதற்கேற்ப வருபவரிடம் பொருளினைச் சுவாமிகள் அளிப்பார்கள்.

சில சமயங்களில் பழவகைகளுடனும், சில சமயங்களில் புத்தகங்களுடனும் பல சமயங்களில் காணிக்கை ஏதுமின்றியும் அடியேன் சுவாமிகளைச் சந்தித்து வந்துள்ளேன். அடியார்கள் தந்த கனி வகைகளில் சில கனிகளைச் சுவாமிகள் என்னிடம் அன்புடன் வழங்குவார்கள். அச்சமயங்களில் 'நேராக வீட்டிற்கு தானே போகிறீர்கள்?' என்று கேட்டறிவார்கள். என் மீதும் என் குடும்பத்தார் மீதும் சுவாமிகள் கொண்டிருக்கும் கருணைக்கு அளவில்லை. 1998இல் காசி சென்ற சுவாமிகள் அங்கிருந்து திருநீறும், காசிக்கயிறும் என்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

குடும்பம் நலம்பெற ஆசி மடலும் அனுப்பி வைத்தார்கள். என்னிடம் மட்டுமின்றி அன்பர்கள் பலரிடத்தும் சுவாமிகள் இவ்வாறே நடந்து கொள்கிறார்கள். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் போன்று சுவாமிகள் அன்புள்ளம் கொண்டவராக உள்ளார்கள். சுவாமிகளின் மனித நேயத்திற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிறர்நலம் பேணல்

சீர்வளர் சீர் சிவப்பிரகாச சுவாமிகள் 1.9.97 அன்று மதுரை வந்தார்கள். அங்கிருந்து வெளி மாநிலங்களில் உள்ள பல தலங்களுக்கும் சென்றுவர திட்டமிட்டார்கள். 2.9.97 அன்று குமுளி வந்த சுவாமிகள் மலைமீதுள்ள ஒரு ஆஸ்ரமத்தின் எளிய குடிலில் தங்கிக் கொண்டார்கள். கடுமை யான குளிர். சுவாமிகள் அதைப் பொருட்படுத்தவில்லை. அவருடன் சென்ற என்னைப் போன்ற அன்பர்கள் அரசிற்குச் சொந்தமான நல்ல விடுதியில் வசதியாகத் தங்கிக் கொள்ள ஏற்பாடு செய்தார்கள். 3.9.97 காலை எட்டுமணிக்கெல்லாம் யாத்திரை தொடங்கியதால் நாங்கள் யாரும் சிற்றுண்டி அருந்தவில்லை. சுவாமிகளுக்கு ஆஸ்ரமத்தில் காலைச் சிற்றுண்டி தயாரிக்கப்பட்டுக் காரில் அனுப்பி வைக்கப் பட்டது. நாங்கள் யாரும் உணவு அருந்தவில்லை என்பதைப் பேச்சுவாக்கில் அறிந்து கொண்ட சுவாமிகள் தாமும் சிற்றுண்டி அருந்தாமல் காலை 10 மணி வரை காத்திருந் தார்கள். எங்கள் கார்கள் பீர்மேடு என்ற பகுதி வந்தபோது அனைவரையும் சிற்றுண்டி விடுதிக்கு அனுப்பிவிட்டு, சுவாமிகள் காரில் இருந்தபடியே சாப்பிட்டார்கள்.

எங்களுடன் வந்த கார் ஓட்டுநர்களில் நெல்லையைச் சேர்ந்த ஒருவர் பொருட்டு சுவாமிகள் நடந்து கொண்ட விதம் நெகிழத்தக்கதாகும். பீர்மேடு தாண்டி ஓரிடத்தில் மலையில் இருந்து விழும் அருவியைக் கண்ட சுவாமிகள் வண்டியில் இருந்து இறங்கி, சில நிமிடங்கள் இயற்கைக் காட்சியைக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

கண்டு ரசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஓட்டுநர் திடுதிப்பென்று அருவிக்குச் சென்று நீராடத் தொடங்கி விட்டார். இவ்வளவுக்கும் அப்போது அருவியில் ஒருவரும் குளிக்கவில்லை. ஓட்டுநருக்காகப் பத்துநிமிடங்கள் வரை சுவாமிகள் காத்திருந்தார்கள். பிறர்நலம் பேணுவதே சுவாமிகளின் இயல்பெனலாம். மேலும் ஒரு சம்பவத்தைக் காணலாம்.

பல்லக்கும், குருபூசையும்

அடியேன் பலமுறை திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று வந்திருந்தாலும், மகரத்தலைநாள் குருபூசை பட்டினப்பிரவேசம் நடைபெறும் நாளில் முதன்முதலாக 1996ஆம் ஆண்டுதான் குருபூசையைக் காணச் சென்றேன். அன்று இரவு சுவாமிகள் பல்லக்கில் அமர்ந்துவர, அடியார்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லும் காட்சியைக் காண எண்ணற்ற அடியார்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். அடியேனும் ஆவலுடன் இருந்தேன். மடங்களின் வரலாற்றில் மடாதிபதிகள் பட்டினப் பிரவேசம் செய்தல் (பல்லக்கில் அமர்ந்து ஊரை வலம் வருதல்) என்பது தொன்று தொட்டு வரும் சம்பிரதாயம் ஆகும். பழங் காலத்தில் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடம் செல்ல மடாதிபதிகள் பல்லக்குகளையே பெரிதும் நம்பியிருந்தனர். மடாதிபதிகள் மட்டுமின்றி அரசர்களும் நிலக்கிழார்களும் கூட பல்லக்குகளைப் பயன்படுத்தி உள்ளனர்.

சம்பந்தரும், பல்லக்கும்

ஞானசம்பந்தர் பொருட்டு இறைவன் முத்துப் பல்லக்கினையே வழங்கியிருந்தான். திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயிலில், சம்பந்தரைச் சைவ அடியார்கள் பல்லக்கில் சுமந்து வருவது போன்ற சிற்பத்தைக் கோனேரிராயன் என்ற சிற்றரசன் எடுத்துள்ளான். இவனே தம் இருமனைவியருடன் பல்லக்கில் வருவது போன்ற

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

சிற்பத்தையும், கல்வெட்டுடன் வேதபுரீசுவரர் கோயிலில் பொறித்து வைத்துள்ளான்.

திருமலையும், பல்லக்கும்

திருமலை நாயக்க மன்னரை மதுரையில் இருந்து திருச்சிக்கும் பின் திருச்சியில் இருந்து மதுரைக்கும் போயர்கள் பல்லக்கில் தூக்கி வந்துள்ளனர். இதனைக் குறிப்பிடும் செப்பேடு ஒன்று இன்றுமுண்டு. பல்லக்கில் அமர்ந்து தலமெங்கும் யாத்திரை செய்து வரும் மடாதி பதிகள் ஒரே ஊரில் பல்லக்கில் அமர்ந்து பட்டினப்பிரவேசம் செய்வது ஆண்டிற்கு ஓரிரு முறையே ஆகும். பொதுவாக மடத்தின் தாபகர் குரு பூஜையின்போது பட்டினப் பிரவேசம் நடைபெறும். நாவலர் நெடுஞ்செழியன் மடாதிபதிகளைக் கிண்டல் செய்து பேசும்போது பட்டினப் பிரவேசத்தைக் குறிப்பிட்டு அந்த ஒரு நாளில்தான், ஊர் குறித்து மடாதி பதிகள் தெரிந்து கொள்வர். மற்ற நாட்களில் மடங்களிலேயே பூசை, வழிபாடு என்றிருப்பர் என்று குறிப்பிடுவதுண்டு.

'வேதம் புதிது' என்ற சினிமா படத்தில் அந்தணச் சிறுவன் ஒருவன் பல்லக்கில் அமர்ந்து வரும் சுவாமி களிடமே 'தங்களைச் சுமந்து வருபவர்களும் மனிதர்கள் தாமே. இது சரிதானா?' என்று கேட்க, சுவாமிகள் கீழே இறங்கி நடக்க ஆரம்பிப்பார்.

தில்லை உமாபதி சிவாசாரியார், கோயில் வழிபாடு முடித்துப் பல்லக்கில் அமர்ந்து சென்றபோது, மறைஞான சம்பந்தர் அவரைக் கண்டு, 'பட்டக் கட்டையில் பகல் குருடு செல்லுதல் காணீர்' என்று குறிப்பிட, உமாபதியார் பல்லக்கில் இருந்து குதித்து மறைஞானர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிச் சீடரானார் என்பது வரலாறு.

திருவாவடுதுறை ஆதீனங்களில் 21ஆவது குருமகான் காலத்தில்தான் தலயாத்திரைக்குப் பல்லக்கிற்குப் பதில் மகிழுந்து (கார்) வாங்கப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

ஞானியாரடிகள்

சைவப்பணியும், தமிழ்ப்பணியும் ஆற்றிய ஞானியார் சுவாமிகள், பல்லக்கில் அமர்ந்து தலதரிசனம் செய்து வந்த போது பழனியருகே சிவப்பேறு அடைந்ததை அறிஞர்கள் பலரும் அறிவர். இன்றும் பல கோயில்களில் பல்லக்கு களைக் காணலாம்.

வள்ளுவமும், பல்லக்கும்

பல்லக்கு என்றவுடன் திருக்குறள் நினைவிற்கு வருகிறது. வள்ளுவர் பல்லக்கில் அமர்ந்து செல்பவனையும், தூக்கிச் செல்பவனையும் கீழ்க்கண்ட குறளில் குறிப்பிட்டுள்ளார்.

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

இக்குறளுக்கு இக்காலத்தில் சிலர் புதுமையாக உரை கூறினும் பரிமேலழகர் கூறும் உரையையே பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். செல்வந்தனோ அரசனோ, உயர் அதிகாரியோ பல்லக்கில் அமர்ந்து செல்ல அதனைச் சுமந்து செல்பவர் கூலி அல்லது வெகுமதியைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே பல்லக்கில் செல்பவன் புண்ணியவான் என்றும் பல்லக்கைச் சுமப்பவன் பாவத்தைச் செய்தவன் என்றும் முழுமையாகக் கூறிவிட முடியாது. பணமிருந்தால் அல்லது அதிகாரம் இருந்தால் யாரும் பல்லக்கில் செல்ல முடியும் அன்றோ? இக்குறளுக்கு அடியேன் வேறு கோணத்தில் பொருள் காண முற்பட்டேன். இறைவனின் அருள்பெற்ற அடியார்களை அல்லது சமயத்தலைவர்களை அன்பர்கள் தூக்கிச் செல்லும் போது பணம் இடம்பெறுவதில்லை. மேலும் பல்லக்கில் அமர்ந்திருப்பவரை வழிபடும் மக்கள், சுமந்து செல்பவரை நினைத்து கூட பார்ப்பதில்லை. எனவே இறை அருள்பெற்ற அடியாரையே வள்ளுவர், பல்லக்கில் அமர்ந்து செல்லும் புண்ணியவானாகக் குறிப்பிட்டுள்ளார் என்று சிந்தித்துப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

பார்த்தேன். ஆம்! இன்றும் இதே கருத்தையே கொண்டுள்ளேன். பல்லக்கில் அமர்ந்து மடாதிபதிகள் பட்டினப்பிரவேசம் செய்வது என்பது கோயிலில் உள்ள உற்சவ மூர்த்திகள் வீதி உலா வருவதற்குச் சமமாக அக்கால மக்கள் கருதி வந்துள்ளனர். உற்சவ மூர்த்திகளையே தூக்க இன்றைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் சுவாமிகளைத் தூக்க அவர்கள் கேட்கும் தொகை இறைப் பற்றாக இன்றி, வியாபாரமாகக் காட்சி தருகிறது.

மகரத்தலைநாள் பட்டினப் பிரவேசத்திற்குச் சுவாமிகள் சம்மதிக்கவில்லை. அலங்காரங்களுடன் கொலுபூசையில் இருந்துவிட்டு, ஒடுக்கத்திற்குச் சென்று விட்டார்கள். ஊர் மக்களுக்கு வியப்பும், ஆத்திரமும் ஏற்பட்டன. குருமகான் பல்லக்கில் பவனி வராவிட்டாலும் பரவாயில்லை. இளைய பட்டமாவது பவனி வரவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இளைய பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகரும் பட்டினப்பிரவேசம் மேற்கொள்ளவில்லை. அவரும் தம் ஒடுக்கம் சென்றுவிட்டார். கூச்சல் குழப்பத் துடன் கூட்டம் களைந்தது. சுவாமிகளின் இப்போக்குக் குறித்துப் பலர் பலவிதக் கருத்துக்கள் குறிப்பிட்டாலும் அடியேன் நினைவில் பின்கண்ட குறட்பாக்கள் நினைவிற்கு வந்தன.

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

இளையபட்டம்

இக்கால நடைமுறை வாழ்க்கையை ஒட்டி, சுவாமிகள் பட்டினப்பிரவேசத்தைத் தவிர்த்தார் என்றே நம்பினேன். அது மட்டுமின்றிச் சுவாமிகள் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற மகரத்தலைநாள் குரு பூசைக்கு முன் அதாவது நான்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மாதங்களுக்கு முன்பு காசி யாத்திரை மேற்கொண்டார். சுவாமிகள் விழாவுக்கு வந்து விடுவார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆயின் சுவாமிகள், குருபூசைக்கு வரவில்லை. பலருக்கு வியப்பு. சிலருக்கு வருத்தம். இளைய பட்டம், சுவாமிகள் எண்ணத்திற்கேற்ப குருபூசையை நடத்தினார்கள். தமக்கு முதன்மை தரும் சடங்கினைக் கூட சுவாமிகள் விரும்பவில்லை என்றே அடியேன் எண்ணிக்கொண்டேன். குருபூசை முடிந்து சில நாட்கள் கழித்து இளையபட்டம் அம்பலவாண தேசிகர் அவர்கள் தென்னாட்டுக்கு யாத்திரை மேற்கொண்டு கல்லிடைக் குறிச்சிக்குச் சென்றார்கள். அவ்வூரிலேயே சிவப்பேறும் எய்தினார்கள். அப்போது காசியில் இருந்து சுவாமிகள் செய்தி அறிந்து நேராகக் கல்லிடைக்குறிச்சிக்குப் பறந்து வந்தார்கள். மடத்தின் நிர்வாகம் தொய்வடையக்கூடாது என்ற சுவாமிகளின் உறுதியினைக் காண்கிறேன். வெகு சிக்கிரத்திலேயே ஒருவரை இளவரசு பட்டத்தில் நியமித்து மடத்தின் பணிகள் செவ்வனே நடைபெற ஏற்பாடும் செய்தார்கள்.

காசி விசுவநாதத் தம்பிரான்

திருவாவடுதுறை ஆதீன இளவரசு பட்டத்தில் நியமிக்கப்பட்ட காசி விசுவநாதத் தம்பிரான் 24.3.1997 திங்கட்கிழமை பட்டத்தில் அமர்ந்தார். அம்பை அருகே யுள்ள கூனியூரில் இராமையா பிள்ளை - முத்தம்மாள் எனும் தம்பதியர்க்கு மூன்றாவது குழந்தையாக 1968ஆம் வருடம் மார்ச் மாதம் இவர் பிறந்தார். இளவரசர் காசி விசுவநாதத் தம்பிரானின் இளமைப் பெயர் குமரேசன் ஆகும். இளமையிலேயே துறவின்பால் பற்றுகொண்டு துறைசை ஆதீனத்தில் சேர்ந்தார். சைவநூல்களை நன்கு கற்று சமஸ்கிருதம், இந்தி; மலையாளம் ஆகியவற்றிலும் தேர்ச்சிப் பெறுமாறு சீர்வளர் சீர் சிவப்பிரகாசர் இவருக்கு அருளாணை இட்டிருந்தார். இளவரசரும் புலமை பெற்றார். திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவநாயனார் ஞான

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

சமாதித் திருக்கோயிலில் ஆறுமாதங்கட்கு மேலாக இவர் நாட்பூசனைகளைத் தம்பிரானாக இருந்தபோது செய்து வந்துள்ளார். மேலும் துறைசையில் தம்பிரானாக இருந்த போது திருமடத்துப் பூசைகள் நிர்வாகக் காரியங்களில் நன்கு பயிற்சி பெற்றார். அடியேன் சீர்வளர் சீர் சிவப்பிரகாசரைச் சந்திக்கச் செல்லும்போது, தம்பிரானாக இருந்த இவர் நீண்ட கூந்தலுடன் காட்சிதருவார். ஊர் முதலிய விவரம் கேட்டபோது, 'துறவிக்குச் சொந்த ஊர் ஏது?' என்று புன்னகையுடன் குறிப்பிடுவார். சீர்வளர் சீர் சிவப்பிரகாசரைப் போன்றே தாம் அதிகம் பேசாமல் என் பேச்சினைக் கேட்டிருப்பார். இளைய சந்நிதானமாக வந்த பின்னரும் அவ்வாறே உள்ளார். குருவிற்கேற்ற சீடராகக் காசி விசுவநாதர் இருந்து வருவார் என்று நம்புகிறேன்.

துறவின் துன்பம்

பக்குவம் பெறாதவர் துறவினை மேற்கொள்ளக் கூடாது என்று சீர்வளர் சீர் சிவப்பிரகாச சுவாமிகள் கருதுவார்கள். ஒருமுறை இளைஞர் ஒருவர் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்து தான் துறவியாகப் போவதாகக் குருமகானிடம் குறிப்பிட்டார். பக்குவம் பெறாத அவரிடம் 'தலயாத்திரை மேற்கொண்டு பிறகு மடத்திற்கு வாருங்கள்' என்று சுவாமிகள் கூறினார்கள். பின்னர் அவ்விளைஞர் மடத்திற்கே வரவில்லை. உண்மையான துறவில் துன்பமே மிகுதியன்றோ?

இல்லறக் கடமை

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர், தன்னுடைய மனைவி மக்களால் தனக்கு நேர்ந்த ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்து தான் வேலை செய்த மில்லில் தொடர்ந்து பணியாற்றாமல் திருவாவடுதுறை ஆதீனத்தில் ஏதாவது வேலை செய்து வாழ்நாளைக் கழிக்க விழைந்தார். தன் எண்ணத்தைக் குருமகானிடம் தெரிவித்தார். 'மனைவி

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மக்களுக்குப் பொருளாதார வசதி செய்து தருவதே முதற்கடமை அதை மறந்து விட்டு மடத்திற்கு வருவது உசிதமல்ல' என்று சுவாமிகள் கூறினார்கள். மூன்று, நான்கு நாட்கள் மடத்தில் அவருக்கு எந்த வேலையும் தராமல் உணவு மட்டும் வழங்கப்பட்டது. இறுதியாக மனம் மாறிய அவ்வன்பர் குமரி மாவட்டம் சென்றுவிட்டார். அடியேனிடம் அவ்வன்பர் தன் குடும்பச் சூழலைக் குறிப்பிட்டதுண்டு. அடியேனும் அவ்வன்பருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறியிருந்தேன். கடமைகளை நினைவூட்டினேன்.

காஞ்சி முனிவரும், சிவப்பிரகாசரும்

சிவப்பிரகாச சுவாமிகள், ஏனைய மடங்களின் குரு மகான்களைப் பெரிதும் மதிப்பவர்கள். காஞ்சி முனிவர் என வழங்கப்பட்ட அமரரான பெரியவர் சந்திரசேகரர் என்ற சங்கராச்சாரியார் குறித்துச் சுவாமிகள் என்னிடம் கூறிய விபரம் வருமாறு. ஒருமுறை காஞ்சி முனிவர் மௌன விரதம் இருந்தபோது பார்வையில்லாத மாணவர்கூட்டம் ஆசிரியருடன் சங்கரர் மடத்திற்கு வந்தது. காஞ்சிமுனிவர் அருளாசியைச் சைகை மூலம் காட்டினார். வந்திருந்த ஆசிரியர், சுவாமிகளை நோக்கி திருவாய் மலர்ந்தருளி ஆசிர்வதிக்க வேண்டினார். பார்வையற்ற மாணவர்களுக்காக மௌனவிரதத்தைக் கைவிட்டு காஞ்சி முனிவர் பேசி அருளாசி புரிந்த செயலைச் சுவாமிகள் கூறி வியந்தார்கள்.

ஒருமுறை காசிக்குச் சென்று காசிக்கயிற்றுடன் கங்கா தீர்த்தம் எடுத்து வந்த சிவப்பிரகாச சுவாமிகள், காஞ்சியில் சங்கராச்சாரியாரைச் சந்தித்தார்கள். கங்கா தீர்த்தத்தைத் தலையில் தெளித்துக் கொண்ட சங்கராச்சாரியார் கயிற்றைக் கையில் கட்டிக் கொண்டார். அப்போது சங்கராச்சாரியாருக்கு 90 பிராயத்திற்கு மேலாகும். ஏழை வேத விற்பன்னர்களை வாழவைக்கக் காஞ்சி முனிவர், தம்முடன் கலந்துரையாடி யதையும் நினைவு கூர்கிறார்கள் சிவப்பிரகாச சுவாமிகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

காஞ்சி சங்கர மடத்துப் பெரியவருடன் சீர்வளர்சீர் சிவப்பிரகாசர் நல்லுறவு கொண்டிருந்தாலும் துறைசை ஆதீனச் சொத்தினைக் காப்பதில் சுவாமிகள், இளவரசு பட்டத்தில் இருந்தபோதே பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்கள். 22ஆவது குருமகான் காலத்தில் காளஹஸ்தி எனப்படும் திருக்காளத்தியில் திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான கட்டிடம் காஞ்சி சங்கர மடத்துக்கு வழங்கப் பட்டது. பாடசாலை இதில் தொடங்கப்பட்டது. எனினும் உரிய ஆவணங்கள் இருதிறத்தாரும் வழங்கிக்கொள்ள வில்லை. சீர்வளர் சீர் சிவப்பிரகாசர் மடத்தின் சொத்துகளை ஆய்வு செய்தபோது இக்குறையை அறிந்தார். காஞ்சி சங்கரமடத்துக்கு வழங்கப்பட்ட காளத்தி கட்டிடத்திற்குப் பதிலாகச் சென்னையில் சங்கரமடத்துக்குச் சொந்தமான இடத்தில் சிறிதளவு இடம் வழங்குமாறு சங்கர மடத்திற்குக் கடிதம் எழுதினார்கள். திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்னையில் கட்டிடம் ஏதுமில்லை. மடத்திற்குச் சொந்தமான இடமும் பிரச்சனையில் இருப்பதை இங்கே குறிப்பிட வேண்டும். சங்கர மடத்தின் நிர்வாகிகள் சென்னையில் திருவாவடுதுறை மடத்திற்கு வழங்கக்கூடிய அளவுக்கு நல்ல இடத்தில் இடமில்லை என்று குறிப்பிட்டனர்.

திருவிடைமருதூரில் காஞ்சி சங்கர மடத்திற்குச் சொந்தமான காலிமனை இருப்பதை அறிந்து அந்த இடத்தை யாவது காளஹஸ்திக்குப் பதில் பரிவர்த்தனை செய்யுமாறு சீர்வளர்சீர் சிவப்பிரகாசர் கேட்க சங்கர மடமும் சம்மதித்தது. எனினும் திருவிடைமருதூரில் உள்ள காஞ்சி மடத்தின் நிர்வாகிகள் இடத்திற்கு வாடகை கேட்டிருந்தனர். காளஹஸ்தி இடத்திற்கு வாடகை தருமாறு சங்கர மடத்திற்கு கடிதம் எழுதப்பட்டது. சங்கரமடம் ஒரு ரூபாய் வாடகை நிர்ணயிக்க சீர்வளர் சீர் சிவப்பிரகாசரும் திருவிடைமருதூர் இடத்திற்கு ஒருரூபாய் வாடகை நிர்ணயித்தார்கள். பின்னர் சரிக்குச்சரி என்று பிரச்சனை முடிந்தது. ஆக மடத்தின் சொத்தினைப் பிறருக்கு வழங்கும் போதும் மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

பாதிக்காதபடி பார்த்துக் கொண்டார்கள். பயிரிடப்படாமல் பொட்டல் வெளியாக இருக்கும் மடத்தின் நிலங்களை நற்காரியங்களுக்குக் குத்தகையாக அல்லது விலைக்கு வழங்கும் போதும் மடத்திற்கு நட்டம் வராமல் சுவாமிகள் பார்த்து கொள்கிறார்கள்.

திருப்பனந்தாள் காசிமடம்

திருப்பனந்தாள் காசிமடத்து எஜமான் சுவாமிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது 'எஜமான் சுவாமிகள் சிறந்த கல்விமான் மட்டுமன்று. யாத்ரீக சுவாமி' (அடிக்கடி யாத்திரை செய்பவர்) என்றும் சிவப்பிரகாச சுவாமிகள் கூறி பாராட்டுவார்கள்.

தருமையும், துறைசையும்

திருவாவடுதுறை ஆதீனத்திற்கு நிலமுள்ள சில ஊர்களில் தருமபுரம் மடத்திற்கும் ஆதீன நிலங்களுக்கு அருகிலேயே நிலங்கள் இருப்பதைக் குறிப்பிட்டு இரண்டு மடங்களும் நெருங்கிச் சைவப்பணியாற்றுவதை என்னிடம் குறிப்பிட்டார்கள். தற்போதுள்ள தருமபுர ஆதீன குருமகானின் கல்விச் சிறப்பினைப் போற்றினார்கள்.

காவிரிபாயும் சோழநாட்டு மூவலூரில் பிறந்த நமசிவாயர் ஏற்படுத்திய திருவாவடுதுறை ஆதீனத்திற்குப் பாண்டிய நாட்டில் பொருநை நதிபாயும் பகுதியில்தான் மிகுதியான நிலங்கள் உள்ளன. அவ்வாறே பொருநைநதி பாயும் தெண்பாண்டிய நாட்டில் பிறந்த (ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்த) குருஞான சம்பந்தர் ஏற்படுத்திய தருமபுர ஆதீனத்திற்குக் காவிரி பாயும் சோழ வளநாட்டில்தான் மிகுதியான நிலங்களும் கோயில்களும் இருப்பதைச் சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

செங்கோல் ஆதீனம்

தென்பாண்டி நாட்டில் தொன்மையான மடங்களுள் பெருங்குளம் செங்கோல் ஆதீனம் ஒன்றாகும். இம்மடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

குருமகான் இன்றி நலிவுற்ற நிலையில் இருந்தபோது அன்பர்கள் பலரின் கோரிக்கைக்கிணங்க துறவில் ஈடுபாடுள்ள அன்பர் ஒருவரைச் சிவப்பிரகாச சுவாமிகள் துறவியர்க்குரிய பயிற்சி தந்து மடாதிபதியாக நியமித்தார்கள். தற்போது செங்கோல் மடம் ஓரளவு இயங்கி வருகிறது. தற்போதுள்ள மடாதிபதியின் பெயர் கலியாண சுந்தர சத்தியஞான பண்டாரச் சந்நிதியாகும்.

சிவப்பிரகாசரும், சிவஞான முனிவரும்

இளமையில் தனக்கு உபதேசம் செய்த பாபநாசம் மற்றும் அருகில் இருந்த துறவிகளைச் சிவப்பிரகாச சுவாமிகள் மறப்பது இல்லை. அவ்வாறே தான் பிறந்த மண்ணையும் மறப்பதில்லை. விக்கிரமசிங்கபுரத்தில் சுவாமிகள் வாழ்ந்த காலங்களில் மாதவச் சிவஞான சுவாமிகள் ஆலயத்திற்கு நாள்தோறும் வந்து வழிபாடு செய்வதும், அங்குள்ள நூல்களைப் பயில்வதும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். குருமகான் ஆனதும் சிவஞான முனிவர் புகழைப் பரப்பி வருகிறார்கள்.

சிவஞான முனிவரின் நூல்களை விரிவாக ஆய்வு செய்ய 1985ஆம் வருடம் ஏப்ரல் 26, 27, 28 தேதிகளில் கருத்தரங்கு நடத்தி அதனை நூலாகவும் 1986இல் வெளியிட்டார்கள். சிவஞான யோகிகள் புகழ்மாலை, சிவஞான முனிவர் அருளிச் செய்த உரை, செய்யுள் போன்ற நூல்களையும், ஆங்கில நூல்களையும் வெளியிட்டார்கள். 1996இல் கூட சிவஞான முனிவர் இயற்றிய சிவஞானமாபாடியம், சிறப்புப்பாயிரம் (சிற்றுரை அடக்கம்) வெளியிட்டார்கள். சிவஞான முனிவர் பிறந்த இடத்தில் ஆண்டுதோறும் சிவஞான சுவாமிகள் குருபூசையைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடும் செய்துள்ளார்கள். அந்நாளில் சைவ சித்தாந்தத்தில் சிறந்த நல்லறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் சிறப்பும் செய்து வருகிறார்கள். தற்போது, காஞ்சியில் உள்ள கிளை மடம், சுசீந்திரம் மடம், விக்கிரமசிங்கபுரம், துறைசை

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

ஆதீனம் என்ற நான்கு இடங்களிலும் முனிவரின் குருபூசை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிவஞான முனிவரின் மறுபிறப் பாகவே சிவப்பிரகாச சுவாமிகளை அன்பர்கள் கருதி வருகிறார்கள். ஆம்! சிவஞான முனிவர் அறிவுக் கடலாக விளங்கினார்கள். சிவப்பிரகாச சுவாமிகள் அருட்கடலாக விளங்கி வருகிறார்கள்.

வேணுவனலிங்கரும், சிவப்பிரகாசரும்

விக்கிரம சிங்கபுரத்தில் பிறந்த வேணுவனலிங்கத் தம்பிரான் திருவாவடுதுறை ஆதீன வளர்ச்சிக்காகவே வாழ்ந்து மறைந்த பெரியவர் எனலாம். இவர் கட்டிய கொலு மண்டபங்களும், திரட்டித்தந்த சொத்துக்களும் இவரின் தன்னலமற்றத் தொண்டினைப் பறைச்சாற்றுகின்றன. இந்தத் தம்பிரானின் வாழ்க்கையையும் சுவாமிகள் முன்மாதிரியாகக் கொண்டுள்ளார்கள் எனலாம். வேணுவனலிங்கத் தம்பிரான் ஆற்றிய தொண்டுகள் பலவற்றை அடியேனிடம் சுவாமிகள் நினைவு கூர்ந்தார்கள்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், சிவப்பிரகாசரும்

தமிழில் மிகுதியான செய்யுட்கள் இயற்றியவரும் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானுமான திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் நினைவாக அவர் தங்கி இருந்த இடத்தில் அழகிய கட்டிடம் கட்டியதோடு அவர் நினைவு நாளில் செந்தமிழ்ப் புலவர் ஒருவருக்குப் பொற் கிழியும், சிறப்புகளும் சுவாமிகள் செய்து வருகிறார்கள். தமிழ்மொழிக்கும், சைவசமயத்திற்கும் தொண்டாற்றிய யாழ்ப்பாணம் ஆறுமுகம் என்பவருக்கு ''நாவலர்'' என்ற பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது திருவாவடுதுறை ஆதீனமேயாகும். ஆறுமுக நாவலர் அவர்களின் குருபூசை ஆண்டுதோறும் சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர் அறக் கட்டளை மூலம் நடைபெற்று வருகிறது. அந்நாளில் ரூபாய் 1000 நன்கொடையாகச் சிவப்பிரகாச சுவாமிகள் வழங்கி வருகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

சிவப்பிரகாசரும், ஆதிதிராவிடர்களும்

சிவப்பிரகாச சுவாமிகள் தமிழையும், சைவத்தையும் தம்மிரு கண்களாகப் பாவித்தாலும் மனித நேயத்தை உயிர் மூச்சாகக் கொண்டுள்ளார்கள். பொதுவாக ஆதீன குருமுதல்வர்கள், தம்மை நாடி வரும் அன்பர்களுக்கு நல்லாசி வழங்கிவிட்டு, பூசை, வழிபாடு இவற்றிலேயே கவனம் செலுத்துவார்கள். சிவப்பிரகாச சுவாமிகள் பூசை, வழிபாட்டோடு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பழங்குடி மக்களையும், ஆதிதிராவிடர்களையும் கடைத்தேற்ற வேண்டி அவர்கள் இருப்பிடங்களுக்கு நாடிச்சென்று அவர்கள் வாழ்வாங்கு வாழ உபதேசிப்பதுடன் ஒல்லும் வகையில் எல்லாம் உதவிகளையும் செய்து வருகிறார்கள். சாத்திர, சம்பிரதாயங்களை ஒதுக்கி விட்டு குருமகான் ஆதிதிராவிடர் மற்றும் ஒடுக்கப் பட்டவர்களுக்குத் தம் திருக்கரங்களாலேயே திருநீறு அணிவித்து வருகிறார்கள். ஒருசில குருக்கள் பக்தர்களுக்கு விபூதி வழங்கும்போது தம் கைகள் பக்தர்களின் மேல் பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தில் திருநீறை வீசுவதுபோல் வழங்குவதை அன்பர்கள் அனுபவித்திருக்கலாம். பார்த்திருக்கலாம்.

ஒருசில மடாதிபதிகள் உபதேசிக்கும்போது 'தீண்டாமை பாவம்' என்பார்கள். நடைமுறையில் ஆதி திராவிடர்களை ஒதுக்குவார்கள். தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள், அரிஜனங்களை அரவணைத்துச் சென்றதுபோல் சமய உலகில் சிவப்பிரகாச சுவாமிகள் அரவணைத்துச் செல்கிறார்கள். திருவாவடுதுறை ஆதீனம் நடத்தும் திருவானைக்காவல் பாப்பம்மாள் சத்திர விடுதியில் ஆதிதிராவிட மாணவர்களும், சலவைத் தொழில் செய்யும் இனத்தில் பிறந்த மாணவர்களும், வறிய நிலையில் உள்ள பிறசாதி மாணவர்களும் ஒன்றாகக் கூடி கல்வி பயில் கிறார்கள். 28.8.95 அன்று திருநெல்வேலி துப்புறவுத் தொழிலாளர் வசிக்கும் பகுதிக்குச் சுவாமிகள் நேரில் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அம்மக்களிடையே

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சமய உணர்வும், நற்பண்புகளும் வளர அருளுரை வழங்கினார்கள். சுவாமிகள் தாம் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் எல்லாம் சாதிப்பாகுபாடு கூடாது. தீண்டாமை எனும் பேயை விரட்ட வேண்டும் என்று கூறுவதுடன், மது அருந்தும் அபாயத்தையும், பெண் கல்வி தேவையையும் மக்களிடம் எடுத்துக் கூறி வருகிறார்கள். 5.8.97அன்று மேலே குறிப்பிட்ட பகுதிக்குச் சென்று சமபந்தி போஜனத்தில் சுவாமிகள் கலந்து கொண்டார்கள்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற குறளைக் குறிப்பிட்டுச் சைவசமயம் ஒருபோதும் சாதிப்பாகுபாட்டை ஏற்பதில்லை என்று நாயன்மார்களின் வழிநின்று விளக்கமாக உபதேசம் செய்தார்கள்.

கும்பகோணம் அருகேயுள்ள மேலக்காவிரி ஆதி திராவிடர் குடியிருப்பில் சுவாமிகள் முகாமிட்டு இருந்த போது, 'ராணி' வார இதழ் நிருபர் பேட்டிக் கண்டார். அப்போது சுவாமிகள் தெரிவித்தக் கருத்துக்கள் செப்பேட்டில் பொறிக்கத்தக்கவையாகும்.

மக்கள் தொண்டு

'ஆதீனங்கள் மடத்துக்குள் அடைபட்டுக் கிடக்காமல் வெளியில் வந்து மக்களுடன் கலந்து பழகி, பணியாற்ற வேண்டிய காலம் வந்து விட்டது. கிறித்தவம் என்றவுடன் மக்கள் தொண்டுதான் நினைவுக்கு வரும். அந்த மக்கள் தொண்டு வழியாகத்தான் நமது சைவத்தையும் வளர்க்க வேண்டும். கிறித்தவப் பாதிரியார்கள் மக்களுடன் இணைந்து பிணைந்து பழகி வருகிறார்கள். கிறித்தவர்களுக்கு ஒரு தீங்கு என்றால் பாதிரியார்கள் வீதிக்கு வந்து போராட்டம் நடத்துகிறார்கள். முஸ்லீம் இமாம்களும் தங்கள் இனத்து மக்களுக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள். எனவே இந்து ஆதீனங்கள் மட்டும் ஏன் ஒதுங்கி இருக்க வேண்டும்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. எனவேதான் நாம் வெளியில் வந்து மக்களுடன் பழகுகிறோம். மக்களுக்காகப் போராடுகிறோம். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுகிறோம். அவர் களுக்கு உதவிகள் செய்துவருகிறோம்' என்று குறிப் பிட்டார்கள்.

'இந்துக்களில் ஆதிதிராவிடர்கள் மதமாற்றுதலுக்குக் காரணம் தீண்டாமையே' என்பதைக் குறிப்பிட்ட சுவாமிகள், தீண்டாமையை அறவே ஒழிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆதி திராவிடர்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் பேருதவி புரிந்து வரும் சுவாமிகள் இதே பணிக்காகவும், பிறசமூகப் பணிக்காகவும் தொண்டு செய்து வரும் நிறுவனங்களுக்குப் பெரும்பொருள் தந்து உதவி செய்துவருவதை ஈண்டுக் குறிப்பிட வேண்டும். எந்தச் சாதியில் பிறந்தாலும், தொண்டின்மூலம் சிவப்பேறு எய்தலாம் என்பதை விளக்கும் காப்பியமே பெரியபுராணம். அப்புராணத்தில் ஐந்தே இடங்களில்தாம் அய்யர் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றன. திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநாளைப் போவார் என்ற நந்தனார், கண்ணப்ப நாயனார் ஆகியோரைக் குறிப்பிடவே இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. உயர்ந்த குடியாகக் கருதப்படும் பிராமணக் குடியில் பிறந்த ஞான சம்பந்தரே தம் வாயால் திருநீலகண்ட யாழ்ப்பாணரை 'அய்யரே' என்று கூறும் அற்புதம் பெரிய புராணத்தில் காண்கிறோம். இருவரும் ஒன்றாகவே கோயில் களுக்குச் சென்று வழிபட்டதையும் சுவாமிகள் என்னிடம் ஒருமுறை குறிப்பிட்டு, தீண்டாமையின் தீமை குறித்துக் கட்டுரை எழுதுங்கள் என்றும் அருளாணையிட்டார்கள். கல்வெட்டுகளின் மூலம் பறையர் எனப்படும் ஆதிதிராவிடர் பெற்றிருந்த சிறப்புகளை அடியேன் சுவாமிகளிடம் குறிப்பிட்ட போது மிகவும் மகிழ்ந்து மேலும் ஆய்வு செய்யுங்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆயின், தற்பொழுது நடை பெறும் சாதிச் சண்டைகள் குறித்து வருந்துகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மதமாற்றம்

இந்துக்கள் மதம் மாறுவது தேவையில்லாத ஒன்று என்ற கருத்தினையுடைய சுவாமிகள், இந்து மதத்தில் இருந்து புறச்சமயங்களுக்குச் சென்று மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்பியவர்களுக்கு உரிய சடங்குகளின் மூலம் வரவேற்று வருகிறார்கள். நெல்லை மாவட்டம் பாபநாசம் அருகே மலைகளில் வாழும் மலைவாழ் மக்கள், தாய்மதமாம் இந்து மதத்திற்குத் தாங்களாகவே மீண்டும் வந்தபோது *(11.2.96)* அவர்களைப் பாராட்டியதுடன் ஒவ்வொரு பக்தருக்கும் தம் கையாலேயே திருநீறு அணிவித்து ஆசிர்வதித்தார்கள். அவ்விழாவில் அடியேன் பார்வையாளராக இருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன். மேலை நாடுகளில் இந்து சமயத்தின் கொள்கைகளை மக்கள் ஏற்றுவரும் இக்காலத்தில், புறச்சமயம் சென்ற நம் சகோதரர்கள் மீண்டும் தாய் மதம் வந்து சேர்வது எனக்கு வியப்பைத் தரவில்லை.

மதச்சார்பின்மை

திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான இடங்களில் இந்துக்கள் மட்டுமின்றி, முஸ்லீம்களும், கிறித்தவர்களும் குறைந்த வாடகையில் குடியிருந்து வர சுவாமிகள் அனுமதித்துள்ளார்கள். இவர்கள் மடத்தின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறார்கள். உதவி என்று கேட்டு, எச்சமயத்தவர் வந்தாலும் ஒல்லும் வகையில் எல்லாம் உதவி செய்யும் சுவாமிகள், ஏழைகளின் மீது மிகுந்த இரக்கம் காட்டுவார்கள்.

அயல்நாட்டுத் தமிழ் மக்கள்

கடல் கடந்து சென்ற மயிலாடுதுறைப் பகுதியைச் சேர்ந்த முஸ்லீம் தனவான்கள் சிலர், சுவாமிகளைத் தாங்கள் வாழும் சிங்கப்பூர், மலேயா நாடுகளுக்கு வருமாறு அழைப்பதுண்டு. 'தமிழகத்தில் ஆற்றவேண்டிய பணியே

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

மிகுதியாக உண்டு' என்று கூறி சுவாமிகள் தனவான்களின் விருப்பத்தைத் தவிர்த்து வருகிறார்கள். மாற்றுச் சமயங் களைச் சேர்ந்த அன்பர்கள், சுவாமிகளின் அருளுரை களையும், செயல்களையும் அறிந்து பாராட்டி வருகிறார்கள். திருவாவடுதுறை மடத்தின் மீது பெருமதிப்பு வைத்திருக்கும் மாற்றுச் சமயத்து அன்பர்களைக் குறிப்பிட்டு சுவாமிகள் பாராட்டுவதுண்டு.

தேவாரமும், திருவாவடுதுறையும்

திருவாவடுதுறை ஆதீனம் தொடங்கியது முதல் இன்றுவரை தமிழ்ப்பணி ஆற்றி வருவதை யாவரும் அறிவர். இப்பணியிலும் சுவாமிகள் பலரும் பாராட்டும் வண்ணம் தனித்து நிற்கிறார்கள். தமிழ் மக்கள் பெரிதும் மதிக்கும் தினமணி நாளிதழ் 2.2.1996 தலையங்கம் என்ற பகுதியில் திருவாவடுதுறை ஆதீனத்தின் தேவாரம் ஓதும் கருத்து குறித்த யோசனையைப் பாராட்டி உள்ளது. மாத ஊதியம் ஆயிரமாவது தந்து தேவாரம் ஓதுபவர்கள் நாள்தோறும் சுமார் இரண்டு மணி நேரமாவது திருக்கோயில்களில் பாடும் புதிய முறையை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்ட சுவாமிகளின் கருத்தினை அந்த நாளிதழ் குறிப்பிட்டு போற்றியுள்ளது. சுவாமிகளின் இக்கருத்தின் அடிப்படையில் தமிழக அரசு கோயில்களில் தேவாரம், திருவாசம் போன்ற பாடல்களை ஓதுவதற்காகத் தமிழ் இலக்கியம் கற்ற பட்டதாரிகளை நியமிக்க நாளிதழ்களில் விளம்பரம் செய்தது. சுவாமிகளின் ஆக்கபூர்வக் கருத்தை, அரசு ஏற்றுக் கொண்டது.

பொற்கிழியும், மோதிரமும்

சுவாமிகள் எதைச்சொன்னாலும் முதலில் தாம் செயல் படுத்திவிட்டே கூறுவது வழக்கமாகும். ஆதீனத்தில் உள்ள கோயில்களில் நாள்தோறும் தேவாரப் பாடல்கள் ஓதுவார் களால் ஓதப்பட்டு வருகின்றன. தவிர ஆண்டுதோறும் வயதில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மூத்த ஓதுவார் ஒருவருக்கு ரூ.2000 பொற்கிழியும், மோதிரமும் வழங்குவதுடன் சந்நிதானமே பட்டாடைப் போர்த்திக் கௌரவித்து வருகின்றது.

பட்டங்கள்

தமிழறிஞர்களுக்குப் பட்டங்கள் வழங்கிப் பெருமை படுத்தும் பணியிலும் சுவாமிகள் தனித்து நிற்கிறார். திருச்சியைச் சேர்ந்த ஆதிமுருகவேள், ஆறுமுகம், மதுரை தமிழண்ணல், கோவை மீனாட்சிசுந்தரம், பெருங்கவிக்கோ சேதுராமன், அ.ச. ஞானசம்பந்தம் போன்ற தமிழ் அறிஞர்கள் சுவாமிகளிடம் பொற்கிழியும், தங்க மோதிரமும் பெற்றுள்ளார்கள். ஆதீனத்தைச் சேர்ந்த சிலருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. திருமந்திரச் செம்மல், ஆதீன இசைத் தமிழ்ப் புலவர், ஆதீன மத்தள இசைப்புலவர், சிவஆகமப் புலவர் போன்ற பட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன. பட்டங்களுடன், பொற்கிழியும் பெற்ற சான்றோர்களைக் குறிப்பிட முயன்றால் அதுவே தனி நூலாகிவிடும்.

பழகு தமிழ்

சுவாமிகள் எங்குச் சென்றாலும் எளிய இனிய தமிழில் பேசுவார்கள். சொல்லுக்கும், செயலுக்கும் வேறுபாடு இல்லாதவர் என்பதால் பெருந்தலைவர் காமராசர் போலவே சுருக்கமாகப் பேசுவார்கள். தேவையில்லாமல் பிறமொழிச் சொற்களைக் கலந்து சுவாமிகள் பேசுவதில்லை. நெல்லை தாமிரபரணி மண்ணுக்கே உரிய இனிமை சுவாமிகளின் பேச்சில் இருக்கும். மறைந்த திருமுருக கிருபானந்த வாரியார் சொற்பொழிவு ஆற்றுங் காலங்களில் எதிரில் உள்ள சிறார்களிடம், திருக்குறள் கூறும்படி கேட்டு, சிறுசிறு நூல்களை வழங்கி, சிறார்களை ஊக்கப்படுத்துவார்கள். திருவாவடுதுறை குருமகானும் தம் சொற்பொழிவின் போது ஓரிரு குறட்பாக்களையாவது குறிப்பிடுவதோடு, திருக்குறள் கூறுமாறு மாணவர்களிடம் கேட்பார்கள். பணமோ,

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

புத்தகமோ தந்து மாணவர்களை உற்சாகப் படுத்துவார்கள். பாரதியாரின் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் மாணவர்களுக்கு நினைவு படுத்துவார்கள்.

நற்பண்புகள்

ஆதிதிராவிட மாணவர்கள் தமிழில் சிறந்து விளங்கு வதுடன் ஆங்கில மொழியிலும் அறிவியல் பாடத்திலும் சிறந்து விளங்கவேண்டுமெனச் சுவாமிகள் கூறி வருகிறார்கள். சுவாமிகள் பள்ளிப் பருவத்தில் கல்வி கற்றல், ஆன்மீகப் பெரியவர்களுடன் தொடர்பு கொள்ளல், எளிமையாக வாழ்தல், தந்தையார் மனங்கோணாமல் நடந்து கொள்ளுதல் என்று இருந்துள்ளார்கள். திரைப்படங்களுக்குச் செல்வதும் அதுபோன்ற கேளிக்கைகளில் ஈடுபடுவதும் தவிர்த்து வந்தார்கள் என்று விக்கிரமசிங்கபுரத்தில் வாழும் சில பெரியவர்கள் குறிப்பிடுகிறார்கள். தம்மைப் போலவே சிறார்களும், நல்லொழுக்கம் கடைபிடிக்க வேண்டும் என்று சுவாமிகள் உபதேசிக்கிறார்கள்.

'வேலையில்லா இளைஞர்கள் காலை, மாலை ஒருமணி நேரம் அவரவர் ஊரில் உள்ள கோயில்களில் தியானம், கூட்டுப்பிரார்த்தனை, பொதுத்தொண்டு போன்ற வற்றில் ஈடுபடுவது நல்லது. இதனால் அவர்களின் மனநலம் மேன்மை அடையும். வீண்சண்டை சச்சரவுகள் ஏற்படாது. இடவசதி உள்ள கோயில்களின் வளாகத்தில் மூலிகைகள் பயிரிடலாம்' போன்ற ஆக்கப்பூர்வமான கருத்துக்களைச் சுவாமிகள் கூறினார்கள் என்று 25.8.97 தினமலர், தினத்தந்தி போன்ற நாளிதழ்கள் குறிப்பிட்டுள்ளன.

சமபந்தி விருந்து

கோயில்களில் நடைபெற்றுவரும் சமபந்தி விருந்துகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் பெருமளவில் கலந்து கொள்வதில்லை. சேரிமக்கள் குடியிருக்கும் பகுதியில் சமபந்தி விருந்து நடத்துவதே சிறந்தது என்று கூறி சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே சமபந்தியினை நடத்தி வருகிறார்கள்.

போலிச்சாமியார்கள்

'மாயாஜால வித்தைகளைப்போல சிலர் விபூதி, லிங்கம், டாலர் எடுக்கும் கண்கட்டு வித்தைகளை மக்கள் நம்பி ஏமாந்து விடக் கூடாது. அறிவுப் பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். பாரம்பரியமான சமய நிறுவனங்களை அரசும் மக்களும் இனங்காண வேண்டும்' என்றும் சுவாமிகள் நிருபர்களிடம் குறிப்பிட்டுள்ளார்கள்.

அறங்காவலர்கள்

'சேவை மனப்பான்மை உடையவர்களை அறங் காவலர்களாக நியமிக்க வேண்டும். பக்தியில்லாதவர் களைப் பதவியில் நியமிக்க கூடாது. எல்லாக் கோவில் ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக அரசு பிரகடனம் செய்ய வேண்டும். 12 ஆண்டுகட்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்த வேண்டும். கோவில் உபரி நிதியிலிருந்து தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற நூல்களை மலிவுப் பதிப்பாக வெளியிட வேண்டும்' போன்ற கருத்துகளைச் சுவாமிகள் குமரிமுனையில் குறிப்பிட்டார்கள்.

சைவ, சமய நூல்கள்

திருவாவடுதுறை ஆதீனத்தில் இன்றுவரை மொத்தம் 463 வெளியீடுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. 23ஆவது சந்நிதானமாக 1983இல் பட்டத்திற்கு வந்தது முதல் இன்று வரை 131 புத்தகங்களைச் சுவாமிகள் வெளியிட்டுள்ளார்கள். நன்கொடையாக வழங்கப்படும் சிறுசிறு நூல்கள் இக்கணக்கில் இடம்பெற வில்லை.

சைவ சித்தாந்த நூல்கள் மட்டுமின்றித் தமிழர் கோயிற்கலை எல்லாரும் அறிய வேண்டி, தட்சிணாமூர்த்தி (இரு பாகங்கள்) சோமாஸ்கந்தர், இலிங்கோத்பவர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சரஸ்வதி, சண்டேசுவ்ரர், பைரவர், கல்யாணசுந்தரர் போன்ற ஆகம சிற்ப நூல்களை மிகுதியான நிழற்படங்களுடன் பதிப்பித்து அடக்க விலையில் விற்க, சுவாமிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

தமிழ்ப்பற்று

ஆகமம் தொடர்பான அரிய கருத்துகள் வடமொழியில் இருப்பதால் வடமொழி எழுதப் பயன்படும் தேவநாகரி அல்லது கிரந்த எழுத்துக்களைக் கொண்டு தொடக்கத்தில் வந்த சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி நூல்களில் ஆகமக் கருத்துகள் விளக்கப்பட்டிருந்தன. அடியேன், சுவாமிகளிடம் அரிய கருத்துக்கள் அருந்தமிழ் விளக்கத்துடன் தமிழ் எழுத்துக்களுடன் பதிப்பிப்பதே பலருக்கும் பயன்படும் என்று விண்ணப்பித்திருந்தேன். ஒரு சிலருக்கு மட்டும் பயன்படும் கிரந்த எழுத்துக்களை நீக்கி எல்லோருக்கும் பயன்படும் வண்ணம் பைரவர் நூலினைத் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு தமிழ் விளக்கத்துடன் வெளிவர சுவாமிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள். பைரவர் நூலிலும் அதற்குப்பின் வெளிவந்த கல்யாணசுந்தரர் நூலிலும் வடமொழி சுலோகங்கள் தமிழ் எழுத்தில் இருப்பதை அறிஞர்கள் காணலாம். சுவாமிகளின் தமிழ்ப்பற்றைச் சொல்லில் மட்டுமின்றிச் செயலிலும் காண்கிறோம். ஆடல் வல்லான், கணபதி போன்ற அரிய நூல்களை மீண்டும் பதிப்பித்ததுடன் ஆண்டுதோறும் திருமந்திரத்தின் சில பகுதிகளும் தேவாரத்தில் ஒரு திருமுறையும் அச்சிட அருளாணை வழங்கியுள்ளார்கள். 1999இல் வெளிவந்த 'சிவாலயத்திருமேனிகள்' என்ற நூலின் மதிப்புரையைத் தினமலர் நாளிதழில் அடியேன் எழுதினேன். ஆதீனத் தலைவர்கள் பலரும் ஸ்ரீலஸ்ரீ என்ற அடைமொழி அல்லது வடசொல்லில் கூடிய ஏதோ ஓர் அடைமொழியுடன் அழைக்கப்படுவதைக் காண்கிறோம். திருவாவடுதுறை ஆதீனத்தின் 23 ஆவது குருமகானாகிய சிவப்பிரகாச தேசிகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

அவர்கள் சீர்வளர் சீர் என்ற அழகு தமிழில் கூடிய அடை மொழியுடன் வழங்கப்படுகிறார். தமிழ் மீது சுவாமிகள் கொண்டுள்ள பற்றுக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு எனலாம். துவிதிய ஆசாரியர் என முன்பெல்லாம் வழங்கப் பட்ட இளையபட்டத்தில் கூடிய ஆசாரியரும் 'சீர்மிகு' என்ற அடைமொழியில் தற்போது அழைக்கப்படுவதற்குச் சுவாமிகளே காரண மாகும்.

சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

அறிஞர் பெருமக்கள் ஒரு சிலருக்கே பயன்பட்டு வந்த சைவ சித்தாந்த சாத்திரப் பேருண்மைகளை விளக்கும் மெய்கண்ட சாத்திர நூல் கருத்துக்கள் எல்லோரையும் சென்று அடைந்து நலம் விளைவிக்கவேண்டும் எனும் கருத்து கொண்ட சுவாமிகள், சைவ சித்தாந்த நேர்முகப்பயிற்சி மையம் தொடங்கி, சாதி சமய வேறுபாடின்றி எவரும் கலந்து கொள்ள அருளாணை வழங்கியுள்ளார்கள். குறைந்தக் கட்டணத்தில் பயிற்சி வழங்கப்படுகிறது. 25 சித்தாந்த சாத்திர நூற்களும், பயிற்சியில் பங்கு பெறுபவருக்கு நன்கொடை யாக வழங்கப்படுகின்றன. இது தவிர சிவஞான சுவாமிகள் அவதாரம் செய்த விக்கிரம சிங்கபுரத்தில் சைவநெறிக்கழகம் ஆண்டுதோறும் 15 நாட்கள் இலவச சைவ சித்தாந்த வகுப்பு நடத்தவும், உதவி செய்து வருகிறார்கள். உணவும், இருப்பிடமும் 15 நாட்களுக்கு வழங்கப்படுகின்றன. மாசி சிவராத்திரி அன்று சிவநாமம் எழுதிய அன்பர்களுக்கு நினைவுப் பரிசுகளும் ஆதீன வெளியீடுகளும் சுவாமிகள் வழங்கி வருகிறார்கள். தக்க அன்பர்களுக்குச் சிவதீட்சையும் செய்து வைக்கிறார்கள்.

திருமுறை ஒலிநாடாப் பேழை

தேவாரப் பாடல்களை ஒலி நாடாப்பேழைகளில் தயாரித்துக் குறைந்த விலையில் விற்கச் சுவாமிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

துறைசை மடத்தில் தினமும் திருமுறைகள் ஓதவும், சைவ இலக்கியங்களுக்குத் தகுதி வாய்ந்த புலவர்கள் மூலம் விளக்கவுரை வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

சிவஞான சுவாமிகள் ஆராய்ச்சி மையம்

சிவஞான சுவாமிகள் ஆராய்ச்சி மையம் ஒன்றை விக்கிரமசிங்கபுரத்தில் சீர்வளர் சீர் சிவப்பிரகாசர் ஏற்படுத்தியுள்ளார். இதற்கு ஓர் இயக்குநரும் நியமிக்கப் பட்டுள்ளார். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிப்பிற்குத் தேவை யான நூல்கள் மற்றும் ஒலிநாடாப் பேழைகளை இந்த ஆராய்ச்சிமையம் மூலமாகச் சிவஞான சுவாமிகள் நூலகத் திற்கு வழங்க சுவாமிகள் அருளாணை இட்டுள்ளார்கள். எளிய முறையில் ஆங்கிலம் பேசுவதற்கான பயிற்சியைக் குறைந்தக் கட்டணத்தில் நடத்த சுவாமிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள். ''ஸ்போக்கன் இங்கிலீஷ்'' கற்றுத் தருகிறோம் என்ற போர்வையில் நாடெங்கும் பணம் சம்பாதிக்கும் வியாபார நிறுவனங்கள் போலின்றி ஆராய்ச்சி மையம் செயல்படுகிறது.

கல்லிடைக்குறிச்சித் தளிகை மடத்தில் ஏழை மாணவர்கள் இலவசமாகத் தங்கிக் கொண்டு தங்கள் கல்வியைத் தொடரலாம். ஒருவேளை மட்டும் உணவும் இலவசமாக வழங்கப்படும். வங்கித் தேர்வில் கலந்து கொள்ள இருந்த மாணவர் ஒருவர் நான் சென்றிருந்தபோது கல்லிடைக் குறிச்சியில் இருந்தார்.

சுசீந்திரம் நூலகம்

சிவஞான முனிவர் பெயரில் சுசீந்திரத்தில் புதிய நூலகம் ஏற்படுத்தச் சுவாமிகள் அருளாணை இட்டுள்ளார்கள். இந்த நூல்நிலையத்தில் சமயநூல்கள் மட்டுமின்றி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்குப் பயன்படும் நூல்களும் வேலை வாய்ப்புக்குத் தேவையான நூல்களும் இடம்பெறும் என்றும் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள். சுசீந்திரத்தில் சனிக்கிழமை

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

தோறும் திருமந்திரத்தொடர் சொற்பொழிவு நடை பெறவும் மக நட்சத்திரத்தன்று திருவாசகம் முற்றோதல் நடைபெறவும் ஆயில்யம் நட்சத்திரத்தன்று சிறுவர்களுக்குத் தேவாரமும் சமயப்பாடமும் கற்றுத்தரவும் சுவாமிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். கந்தசாமி என்ற அன்பர் இவ்வூரில் குருமகான் ஆசியுடன் சமயப்பிரசாரம் செய்து வருவதை இங்கே குறிப்பிட வேண்டும்.

அருட்கொடைகள்

திருக்கோயில், மன்றம், கல்விநிலையம், சமுதாய நலப்பணிக்குழு என்று பல அமைப்புகளும் சீர்வளர் சீர் சிவப்பிரகாச சுவாமிகளிடம் அருட்கொடைகள் பெற்றுள்ளன. பெற்று வருகின்றன. ஆண்டுக்கு ஒருமுறை அன்ன தானத்திற்கு உதவி பெறும் நிறுவனங்கள் சென்னையில் தொடங்கி, குமரிவரை பத்து நிறுவனங்கள் உள்ளன. பிறமடங்கள், வேதபாட சாலைகள், தொண்டு நிறுவனங்கள் ஏறக்குறைய 11 உள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகம் சைவ சித்தாந்தத்தை வளர்க்க ரூ. 50,000 நன்கொடையைச் சுவாமிகள் வழங்கி யுள்ளார்கள். காசி தொடங்கி கன்னியாகுமரி வரை உள்ள திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடங்களில் (12 கிளை மடங்களில்) தினமும் நண்பகல் அன்னதானம் நடைபெற்று வர ஏற்பாடு செய்துள்ளார்கள். அக்கிளை மடங்கள், காசி, கன்னியாகுமரி, கல்லிடைக்குறிச்சி, சுசீந்திரம், நெல்லை, மதுரை, திருவானைக்காவல், திருவதிகை, சிதம்பரம், சிவந்திபுரம், மேக்கரை, திருச்செந்தூர் ஆகும்.

திருவாவடுதுறையில் மூன்று வேளையும் அன்ன தானம் வழங்கப்படுகிறது.

சுவாமிகள் உடல் ஊனமுற்றோர், வயதில் மூத்தவர் ஆகியோர்களுக்கு அவ்வப்போது வேட்டி, சேலைகள் வழங்கி வருகிறார்கள். அன்பளிப்புகளும் வழங்கி வருகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

எளிய மக்களின் நல்வாழ்வு கருதி இலவச மருத்துவமனைகளையும், தையல் பயிற்சி நிலையங்களையும், தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்களையும் மடத்தின் சார்பில் நடத்திவர சுவாமிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள். விக்கிரமசிங்கபுரம், சுசீந்திரம் ஆகிய ஊர்களில் தட்டெழுத்துப் பள்ளிகளும் இலவச நூலகங்களும் உள்ளன. திருவீழிமிழலையிலும் கல்லிடைக் குறிச்சியிலும் தையல் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கி நடத்தி வருகிறார்கள். திருவீழிமிழலை, திருவிடைமருதூர், திருவாவடுதுறை, விக்கிரமசிங்கபுரம், ஆவுடையார் கோயில், மயிலாடுதுறை ஆகிய இடங்களில் குறைந்த கட்டணத்தில் ஆங்கில போதனை மொழிப் பள்ளிகள் மடத்தின் சார்பாக நடைபெற்று வருகின்றன. திருவாவடுதுறை ஆதீனம் தவிர விக்கிரம சிங்கபுரத்திலும் சுசீந்திரத்திலும் செங்கோட்டையிலும் மூவலூரிலும் நூலகங்கள் செயல்படுகின்றன.

கோயில்களுக்கு வழங்கிய கொடைகள்

எத்தனையோ கோயில் கும்பாபிஷேகங்களுக்கு மருந்து சாத்தும் செலவுகளைச் சுவாமிகள் ஏற்றுள்ளார்கள். சுவாமிகள், குருமகான் ஆனபின் 13 ஆண்டுகளில் 49 கோயில்களின் குடமுழுக்குகளுக்கு உதவி புரிந்துள்ளார்கள். 1996 இல் விக்கிரமசிங்கபுரம் கோயில் கும்பாபிஷேகத்திற்கு ரூ. 5,00000 வழங்கினார். அண்மையில் (10.6.97 இல்) தஞ்சைக்கோயில் கும்பாபிஷேகத்திற்கு ரூ. 10,000 நன்கொடை வழங்கியதை இங்கே குறிப்பிட வேண்டும். கருவூரர் குறித்த நூலும் வெளியிட்டார்கள். யாகசாலை தீவிபத்தில் பாதிக்கப் பட்டு மருத்துவமனைகளில் இருந்தவர்களுக்கு இளைய சந்நிதானத்தை அனுப்பி ஆறுதல் கூறி, திருநீற்றுடன், பிஸ்கட், பழம் போன்றவை வழங்க ஏற்பாடு செய்தார்கள். ஆதீனம் சாராத பல கோயில்க ளுக்கும், சுவாமிகள் உதவி புரிந்துள்ளார்கள். திருவாரூர், மேலக்காவேரி போன்ற இடங்களில் நடைபெற்று வரும் தனியார் கருணை இல்லங்களுக்குச் சுவாமிகள் தாராளமாக உதவி செய்து வருகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

செப்பேடுகள்

தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான மடங்களுக்கு அரசர்களும், செல்வந்தர்களும் தானம் வழங்கியுள்ளார்கள். தானங்களைக் குறிப்பிடும் செப்பேடுகள் நூற்றுக்கணக்கில் உள்ளன. அவ்வகையில் பிற்காலப் பாண்டியர் காலம் தொடங்கி 1950ஆம் ஆண்டு வரை மொத்தம் 76 செப்பேடுகள் இங்கு உள்ளன. இச்செப்பேடுகளைத் தொல்லியல் ஆய்வாளர்களின் துணையுடன் வரலாற்றுலகம் அறியுமாறு செய்த பெருமை சுவாமிகளையே சாரும். தமிழ்ப் பல்கலைக்கழகம், மத்திய அரசு கல்வெட்டுத்துறை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மூன்றும் செப்பேடுகளைப் படியெடுத்துள்ளன.

தமிழ்ப்பல்கலைக்கழகம் சேதுபதி செப்பேடுகள், தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் என்ற இரு நூல்களிலும் ஆதீனச் செப்பேடுகளைப் பதிப்பித்துள்ளன. மத்திய அரசு கல்வெட்டுத்துறை, செப்பேடுகளின் சுருக்கத்தை ஆங்கிலத்தில் ஆண்டறிக்கையாக வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் சார்பாக அடியேன் மடத்தில் உள்ள செப்பேடுகளைப் படியெடுத்து ஆய்வு செய்தேன். மதுரை நாயக்க மன்னர்கள் வழங்கிய தெலுங்கு மொழியில் கூடிய செப்பேடுகளின் மைப்பிரதி களைக் கொண்டு ஆய்வு செய்ததில் சிரமம் இருந்ததால் செப்பேடுகளை வெளியில் கொண்டு சென்று ஆய்வு செய்ய சுவாமிகளிடம் வேண்டிக் கொண்டேன். சுவாமிகள் மனமுவந்து வெளியில் எடுத்துச் சென்று ஆய்வு செய்ய அனுமதித்தது மட்டுமின்றி, மெய்கண்டார் இதழ்களில் அச்செப்பேடுகள் குறித்த கட்டுரைகளையும் வெளியிட அருளாணை புரிந்தார்கள்.

தெலுங்குச் செப்பேடுகளைப் படித்தறியவும் செப்பேடுகளில் கண்ட ஊர்களைக் கண்டறியவும், அடியேன் நெல்லை, சிவந்திபுரம், சங்கரங்கோயில், திருச்செந்தூர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

வாசுதேவநல்லூர், புளியங்குடி, சென்னை, தஞ்சை ஆகிய ஊர்களுக்குச் செல்ல நேர்ந்தது. செப்பேட்டு வாசகங்களைத் தமிழில் கொண்டு வருவதற்கு அடியேன் எடுத்துக் கொண்ட முயற்சியினைச் சுவாமிகள் பாராட்டினார்கள். காசியில் இருந்தும் சில வரலாற்றுக் குறிப்புகளுக்காக ஜெராக்ஸ் பிரதிகளை எனக்குச் சுவாமிகள் அனுப்பி வைத்தார்கள். தமிழக வரலாற்றின் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகவே செப்பேடுகளை வெளியில் எடுத்துச் செல்லவும் சுவாமிகள் அனுமதித்தார்கள். சுவாமிகளின் உளப்பாங்கிற்கிணங்க 'திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள்' என்ற தலைப்பில் தனிநூலாக வெளியிட முயற்சி செய்து வருகிறேன்.

தொல்லியல் துறை சார்ந்த அலுவலர்கள் பலரும் மடத்தில் சொற்பொழிவு ஆற்ற சுவாமிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

மடத்தின் வரலாறு

'குருபரம்பரை விளக்கம்' என்ற நூலின் மூலம் திருவாவடுதுறை மடத்தின் வரலாற்றினை ஓரளவு அறிந்து கொள்ளலாம். எனினும், வரலாற்றுக் கோணத்தில் அறிவியல் முறைப்படி செப்பேடுகள், கல்வெட்டுகள், காகித ஆவணங்கள், சிற்பங்கள் துணையுடன் இதுவரை நூல் எழுதப் படவில்லை. இக்குறையைப் போக்க அடியேன் சிற்றறிவிற் கேற்ப மடத்தின் வரலாற்றினைத் தொகுத்துள்ளேன். முதற் கட்டமாக மெய்கண்டார் இதழ்களின் வாயிலாகக் கிளைமடங் களின் வரலாற்றினை எழுதி வருகிறேன். கல்லிடைக் குறிச்சிக் கலைக்கோயில்கள் என்ற நூலில் தளிகை மடம் குறித்து மிக விரிவாக எழுதியுள்ளதைச் சுவாமிகள் படித்து முடித்தபின் மடத்தின் வரலாற்றை வரலாற்று முறைப்படியும் அதேவேளை மடத்தின் சம்பிரதாயங்களுக்கு ஏற்பவும் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

உண்மையான இந்தியன்

சுவாமிகள் 1997ஆம் ஆண்டு காசிக்குச் செல்லும் முன் பலகோயில்களையும், ஆஸ்ரமங்களையும் தரிசிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கேரளாவில் இருந்து வந்து நெல்லையில் வணிகம் செய்துவரும் ஓர் அன்பர் செய்திருந்தார். எட்டுமானூர், வைக்கம், எர்ணாகுளம், பூங்குணம் போன்ற ஊர்களில் உள்ள கோயில்களுக்குச் சென்றதுடன் சமய, சாதி வேறுபாடு கருதாமல் இந்தியன் என்ற உணர்வில் கடமை, வழிபாடு இரண்டையும் மக்கள் செய்ய வேண்டும் என்று சுவாமிகள் சொற்பொழிவு ஆற்றினார்கள். ஒரு கிறித்தவ அன்பரும் சிவப்பிரகாச சுவாமி களின் யாத்திரையின்போது உடனிருந்தார். சுவாமிகள் தங்கு வதற்கும், பத்திரிகைப் பேட்டிக்கும் ஏற்பாடு செய்த நம்பூதிரிபாடும், ஆப்ரகாமும், சுவாமிகளைப் போன்று சமயவேறுபாடு கருதாதவர்கள் எனலாம். கோட்டயத்தில் உள்ள மலையாள மனோரமா பத்திரிகை, சுவாமிகளை வரவேற்று பேட்டி கண்டதுடன் ஆதிதிராவிடர் காலனி களுக்குச் சுவாமிகள் சென்று அருளுரை வழங்குவதைப் போற்றியது. மலையாள நாளிதழ்கள் சுவாமிகளின் மேடைப் பேச்சுகளைப் பதிப்பித்தன.

எர்ணாகுளம் பஸ் நிலையத்திற்கு எதிரில் ஆதிதிராவிடர் சேர்ந்துகட்டும் கோயில் உண்டு. திருப்பணி நடைபெற்று வரும் இடத்தில் சொற்பொழிவு ஆற்றியதுடன், சுவாமிகள் ஒவ்வொரு அரிஜன வீட்டுக்கும் சென்று திருநீறு வழங்கி ஆசிர்வதித்தார்கள். சுவாமிகள் எல்லோருக்கும் தாமே திருநீறு அணிவித்து மகிழ்ந்தார்கள். தமிழ் நாட்டில் சைவ அன்பர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் குருமகானைப் போற்றுவது போன்று கேரளாவிலும் போற்றியதை அடியேன் நேரில் கண்டேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சுவாமிகள் சிவன்கோயில் மட்டுமின்றி வேறு கோயில்களுக்கும் வருகை புரிந்தார்கள். மொழி, இனம், சமயம், மாநிலம் என்ற பாகுபாடுகளைக் கடந்து இந்தியனாகச் சுவாமிகள் கேரளாவில் யாத்திரை மேற்கொண்டார்கள். தமிழ்நாடு மட்டுமின்றிக் கருநாடகா, கேரளா, குஜராத், உத்தரப்பிரதேசம் எனப் பல மாநிலங்களில் இருந்தும் துறவிகள் சுவாமிகளைச் சந்திக்க வருகின்றனர். மொழி, இனம், மாநிலம் பாராது எல்லா துறவிகளுக்கும் வேண்டிய உதவிகளைச் சுவாமிகள் செய்கிறார்கள்.

கருத்து மாறுபாடு

திருவாவடுதுறை ஆதீனத்திற்கு எதிரான கருத்துகளைக் குறிப்பிட்ட அறிஞர்களையும், சுவாமிகள் மதித்தே வருகிறார்கள். சான்றாக அடியேன் அறிந்த ஒரு சம்பவம் காண்போம். காலஞ்சென்ற தமிழ் இலக்கிய வரலாற்றுப் பேரறிஞர் மு. அருணாசலம் பன்மொழிப் புலமையுடன் சைவ சித்தாந்தத்திலும் வல்லுநர் என்பது வெள்ளிடை மலையாகும். 'நூற்றாண்டு காலத்தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள்' எழுதித் தமிழுக்கு அளப்பரிய தொண்டு புரிந்த அவர் மடங்களுடன் தொடர்பு வைத்திருந்தார். மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதம் என்ற நூலுக்குச் சிவஞான சுவாமிகள் திராவிடமாபாடியம் என்ற அரிய நூல் எழுதி உள்ளார்கள். எனினும் சிவஞான போதம் என்ற நூல் வடமொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்ற கருத்தினைச் சிவஞான முனிவர் கொண்டிருந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தின் கருத்தும் இதுவேயாகும். பேராசிரியர். மு. அருணாசலம் இக்கருத்திற்கு மாறு பட்டவர். மெய்கண்டார் எழுதிய தமிழ் சிவஞான போதமே மூல நூலாகும் என்பது அவர் கருத்தாகும். பலரின் கருத்து மாகும். பேராசிரியர் மு. அருணாசலத்துடன் எனக்கு 1978 முதல் பழக்கமுண்டு. என்னுடைய கண்டுபிடிப்புகளை நேரிலும் கடிதம் மூலமும் பேராசிரியர் பலமுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

பாராட்டியுள்ளார். அச்சில் வராத ஓலைச் சுவடிகளை, நான் சேகரித்திருந்தால் முதலில் இவரின் கருத்தறிந்து பிறகே நகல் செய்வேன்.

பேராசிரியர் இறப்பதற்கு முன்பு என்னுடைய திருக்குறள் பழைய உரைக்கு அணிந்துரை, அளித்துள்ளார்கள். எழுத முடியாத நிலையில் பேராசிரியர் வாயில் சொல்ல நான் அவருடைய அணிந்துரையை எழுதினேன். இவ்வாறு என் வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய பேராசிரியர் திருவாவடுதுறை ஆதீனத்திடம் கருத்து மாறுபட்டிருந்ததை அறியாதிருந்த நான் திருவாவடுதுறை ஆதீன குருமகானிடம் 'ஒரு முறை பேசிக் கொண்டிருந்த போது, பேராசிரியரின் பெருமைகளைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தேன். குறிப்பாகச் சித்தாந்தக் கருத்துகளில் பேராசிரியரின் புலமையைப் பாராட்டி வந்தேன். பேசிக் கொண்டிருந்போது இடையில் சுவாமிகள் ஒரே ஒரு கருத்தினை மட்டும் குறிப்பிட்டார்கள். 'நம் மடத்தின் செயல்பாடுகளில் மு. அருணாசலத்திற்கு மாறுபட்ட கருத்துண்டு. எனினும் அவருடைய சைவ சித்தாந்தப் புலமையும் தமிழ்மொழி ஈடுபாடும் நம் பாராட்டுக்குரியவை' என்றார்கள். தம்முடைய மடத்தின் பெருமையைக் குறைத்து மதிப்பிட்டவரையும், அவருடைய திறமையைப் போற்றிய சுவாமிகளை எண்ணி வியக்கிறேன். பேராசிரியர் தம் இறுதிக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துடன் நல்லுறவு கொண்டிருந்தார் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

படித்தவரும், பாமரரும் போற்றும் தேசிகர்

மெத்தப்படித்த அறிஞர்கள் குருமகானைப் போற்றுகிறார்கள். தமிழகத்தில் புகழ்பெற்ற நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் குருமகானின் அரிய செயல்களைப் போற்றி வருகின்றன என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளேன். சாதாரணமக்களும் குருமகானின் சீரிய செயல்களைப் போற்றி மடல்கள் எழுதி வருகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

தேவாரப்பாடல்களின் சிறப்புகள் பலரும் அறியவே வானொலி, நாளிதழ்களுக்குச் சுவாமிகள் பேட்டி அளித்து வருகிறார்கள். கோட்டையம் 'மலையாள மனோரமா' என்ற பத்திரிகை உரிமையாளரும், பதிப்புப் பணியில் உள்ளவர்களும் சுவாமிகளின் செயற்கரிய செயல்களையும், எளிமையையும் கண்டு போற்றியுள்ளார்கள்.

ஆபத்துக்குப் பாவமில்லை

விக்கிரமசிங்கபுரம் கல்வெட்டு மற்றும் சிவந்திபுரம் செப்பேடு தொடர்பாகச் சுவாமிகளுடன் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது எனக்குத் திடீரென மூச்சுத் திணறிப் பேச முடியாத நிலை ஏற்பட்டது. அங்கே பணியாளர் ஒருவரும் இல்லாததால் தாம் அருந்துவதற்காக வைத்திருந்த நீரைச் (சீரகம் கலந்து காய்ச்சிய தண்ணீர்) சுவாமிகள் அருந்தும் தம்ளரிலேயே ஊற்றித் தந்து அருந்துமாறு வழங்கினார்கள். நான் தயக்கம் காட்டிய போது 'ஆபத்துக்குப் பாவமில்லை' என்றுகூறி நீர் அருந்துமாறு வற்புறுத்தினார்கள். 'நோய் நீங்கி நலம் பெறுவீர்' என்ற சிறு புத்தகத்தையும் அன்று என்னிடம் வழங்கினார்கள். என்னே சுவாமிகளின் மனிதநேயம்!

பணிவிடையின் சுற்றுப்பயணம்

சுவாமிகள் தலயாத்திரையாகக் கிளை மடங்களுக்குச் செல்லும் போது பணிவிடை உட்பட குறைந்தது மூன்று பேராவது உடன் இருப்பர். ஆயின் 1996 ஆகஸ்டு மாத இறுதியில் பணியாளர் ஒருவருமின்றிச் சுவாமிகள் வட இந்தியா புறப்பட்டார்கள். 10 நாள்கள் கழித்து நானும் மடத்தில் பணியாற்றும் இரு அன்பர்களும் காசிக்குச் சென்றோம். நாங்கள் சென்ற மறுநாள் காசிவந்த சுவாமிகள் அன்று வியாழக்கிழமை என்பதால் மௌனவிரதம் கடை பிடித்தார்கள். மறுநாள் 'காசியில் உள்ள கோயில்களைப் பார்த்து வாருங்கள்' என்று கூறியதுடன், கேதார்நாதம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

செல்வதற்கும் ஏற்பாடு செய்தார்கள். சுவாமிகளுக்குப் பணிவிடை செய்ய வந்த பணிவிடை பதவியில் உள்ள கண்ணன் என்ற இளைஞனையும் எங்களுடன் அனுப்பி வைத்தார்கள். 4 மாதங்களுக்கு மேலாக பணியாளர் உதவியின்றி இருந்தார்கள். எளிமையாக வாழும் போது பிறர் உதவி தேவையில்லை அன்றோ?

மடத்தின் தலைவர்களைச் சந்திக்க ஒருவர் வந்தால் உடனடியாகச் சந்தித்துவிட முடியாது. இதற்குப்பல காரணங்கள் உள்ளன. எனினும் திருவாவடுதுறை குருமகாளைச் சந்திக்க ஒருவர் வந்தால் சந்திப்பதில் கெடுபிடி ஏதும் இல்லை. உரிய நேரத்தில் வந்தால் எளிதில் சந்திக்கலாம்; நல்லாசி பெறலாம்.

மடங்களின் தற்போதைய நிலை

திருவாவடுதுறை ஆதீனத்தில் பணியாற்றும் பணியாளர் களுக்கு மாதஊதியம் குறைவாகும். இம்மடத்தில் மட்டு மன்று வேறு மடங்களிலும் இதே தன்மைதான் உள்ளது. இங்கு ஒன்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மடத்தின் சொத்துக்கள் ஆக்கிரமிப்பு அடாவடித்தன்மையால் போனது போக இருக்கும் நிலங்களுக்கும், அரசின் விதிப்படி 75% பயிரிடும் விவசாய மக்களுக்கும் 25% நில உரிமை யாளராகிய மடத்திற்கும் வழங்கும் நிலை உள்ளது. இந்த 25% தானியமும் எல்லா விவசாயிகளும் செலுத்துகிறார்களா? என்றால் அதுவும் இல்லை. மடத்திற்குச் சொந்தமான மனைகளில் வீடு கட்டிக்கொண்டு குடியிருப்பவர் குறைந்த வாடகையே செலுத்தி வருகின்றனர்; அதுவும் முழுமையாக வசூலாவதில்லை. பழங்காலத்தில் அரசர்களும், செல்வம் படைத்தவர்களும் பல்வேறு சாதி மக்களும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குப் பொன்னும், பொருளும் பூமியும் காணிக்கையாக வழங்கியுள்ளார்கள். இதற்கான ஆதாரங் களாகப் பல செப்பேடுகள் மடத்தில் இன்றுமுள்ளன. காகிதப் பிரதிகளும் உள்ளன. இப்போது மடத்திற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

இதுபோல நிலங்களும் பொன்னும் பொருளும் அரசு வழங்க வழியில்லை. செல்வம் படைத்தவர்களும் அபூர்வமாகவே காணிக்கை அளிக் கிறார்கள். ஆண்டுதோறும் ஏறிவரும் விலைவாசி உயர்வு காரணமாக, மடத்தின் நிருவாகச் செலவுகளும், கோயில் பூசை வழிபாட்டுச் செலவுகளும் கூடியுள்ளன. இந்த நிலையில் உயர்சம்பளம் எப்படி வழங்க இயலும்? எனவே ஓய்வு பெற்ற அலுவலர்களையும், பொதுத்துறைகளில் வேலை கிடைக்காத இளைஞர் களையுமே இங்கே பணியாளர்களாகக் காண்கிறோம். மாத ஊதியம் குறைவாக இருப்பினும் பணியாளர்களுக்கு மாதந் தோறும் நெல் அளிக்கப்படுகின்றது. விசேட நாள்களில் துணிகள் வழங்கப்படுகின்றன. மடத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் யாவும் மீண்டும் மடத்திற்குக் கிடைக்க வேண்டும். மடத்தின் நிலங்களைப் பயிரிடும் விவசாயப் பெருமக்களும், தவறாமல் உரிய பங்கினை வழங்கவேண்டும். இவ்விரண்டும் நிகழ்ந்தால் மடத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மேலும் ஊதியம் வழங்க இயலும். இவ்விரண்டிற்காக வேண்டி பலவழக்குகளை ஆதீனம் மேற்கொண்டு வருகிறது.

காசி கண்ணப்பசாமி மடத்தின் கட்டிடம் தனிநபர் ஒருவரின் ஆக்கிரமிப்புக் காரணமாக ஆதீனம் வழக்கு தொடுத்து நடத்தி வருகிறது. இதுபோல பல வழக்குகள் நடைபெற்று வருகின்றன. மடத்தின் வீண் செலவுகள் பலவும் தவிர்க்கப்பட வேண்டி, சுவாமிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனினும் குத்தகைக்கு நிலம் பெற்ற விவசாயிகள் குத்தகைச் செலுத்த மனம் மாறவேண்டும். சான்றாக மேக்கரைக்காடுகளில் குத்தகை எடுத்தவர்கள் ஏக்கருக்குப் பத்து ரூபாய் செலுத்தவும் மறுத்து வருகின்றனர். இதன் காரணமாக வழக்கு, விசாரணை என மடத்திற்கு வீண்செலவு ஏற்படுகிறது.

தனியார்களின் ஆக்கிரமிப்புகளில் இருந்த கோயில் நிலங்களைத் தமிழக அரசு மீட்டு வருகின்றன. அவ்வாறே

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

தனியார்களிடமிருந்து மடத்துக்கு வரவேண்டிய குத்தகையைப் பெற்றுத்தர அரசு முயலவேண்டும்.

பயனுள்ள விவாதம்

தம்மைச் சந்திக்க வரும் அன்பர்களிடத்தும் மடத்தின் பணியாளர்களிடத்தும் சுவாமிகள் பேரன்பு காட்டி வருகிறார்கள். குறிப்பாகக் கற்றறிந்தவர்களைப் பெரிதும் மதிக்கிறார்கள். ஆன்மீகம் தொடர்பாகவும், கோயில் வரலாறு தொடர்பாகவும் பலமணி நேரம் சுவாமிகள் அன்பர்களிடம் கலந்துரையாடுவதுண்டு. மடத்தின் வரலாறு தமிழ்ப்பண்பாடு தொடர்பாகப் பேசுவதென்றால் அடியேனை அமரச்செய்து பேசச் சொல்வார்கள். மடம் தொடர்பாக முக்கிய பேச்சு இல்லையெனில் ஆசிகூறி உடனே அனுப்பி விடுவார்கள்.

நெருக்கமானவர்

சுவாமிகளிடம் பணியாளர் சிலர் நெருக்கம் போல் இருப்பின் அவர்கள் சில நாட்களில் வேறு பணிக்கு மாற்றப்படுவர். சுவாமிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் எவரும் தன்னைச் சுவாமிகளுக்கு நெருக்கமானவர் என்று கூறமுடியாதபடி நடந்து கொள்வார்கள்.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்

சுவாமிகள் கல்லூரி சென்று உயர் கல்வி கற்காதவர் என்றாலும், பலதுறைகளில் ஞானம் உள்ளவராகக் காட்சியளிக்கிறார்கள். தமிழ்மொழியின் சிறப்பு, கட்டிட சிற்பக் கலைகளில் உயர்வு, வேதங்களின் ஆற்றல் போன்றவை சுவாமிகளின் எழுத்திலும், பேச்சிலும் காணலாம். சிவப்பிரகாச சுவாமிகளின் சொற்பொழிவின் தொடக்கத்தில் மணிவாசகர் பாடிய சிவபுராண வரிகள் தவறாது இடம் பெறும். பொதுமக்கள் மத்தியில் எளிமையாகவும், சுருக்கமாகவும் பேசும் சுவாமிகள் பள்ளிகளிலும் ஆன்றோர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

அவைகளிலும் விரிவாகவும், மேற்கோள்களுடனும் உரையாற்றுவார்கள். 1995 ஆம் ஆண்டு சிதம்பரம் ஆறுமுக நாவலர் பள்ளியில் நடைபெற்ற ஆறுமுகநாவலர் குருபூசையின் போது சுவாமிகள் நீண்ட நேரம் சுவை குன்றாமல் பல கதைகளைக் கூறி மாணவர்கள் மத்தியில் பேசினார்கள். அடியேனும் கூட்டத்தில் ஒருவனாக இருந்து பேச்சைக் கேட்டு வியந்தேன். சுவாமிகளின் வேறு பல சொற்பொழிவுகளையும், அடியேன் செவி மடுத்துள்ளேன்.

நாயன்மார்கள்

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுமாறு அன்பர்கள் வேண்டும் போது சுவாமிகள் நாயன்மார்களின் பெயர் களையே சூட்டுகிறார்கள். நாயன்மார்களின் பாடல்களை வேதங்களாகவே கருதி வருகிறார்கள். வாழ்க்கையில் துயர் நீங்கவும், நோய் நீங்கி நலம் பெறவும், நல்வாழ்க்கை அமையவும் நாயன்மார்கள் பாடிய சில பதிகங்களை நாள்தோறும் விடாமல் படிக்குமாறு அன்பர்களிடத்தில் குறிப்பிடுகிறார்கள். என்னிடம் 'விதியை வெல்வது எப்படி' என்ற நூலினையும் 'நோய் நீங்கி நலம் பெறுவீர்' என்ற நூலினையும், வழங்கி 'மருத்துவரிடம் உடம்பைக் காட்டுவ துடன் இந்நூல்களைத் தவறாது படியுங்கள். உங்களுக்குப் படிக்க நேரம் இல்லாதபோது உங்கள் வீட்டில் உள்ளவரிடம் தந்து படிக்கச் சொல்லுங்கள்' என்றார்கள்.

தேவாரப் பாடல்களின் ஆற்றல்

என் துணைவியாருக்கு 1981இல் குடும்பக் கட்டுப்பாடு செய்த பின் வயிற்றுவலி அடிக்கடி வரும். தஞ்சை, சேலம், தருமபுரி, செய்யாறு, சிதம்பரம் எனப் பல ஊர்களில் பல மருத்துவர்களிடம் காண்பித்தும் தொடர்ந்து மாத்திரை மருந்துகள் சாப்பிட்டும் பயனில்லாமல் இருந்தது. அவளுக்கு வலிவரும் போது உடல் வியர்ப்பதுடன் சொல்லொனாத வேதனை ஏற்படும். ஆம் அப்பர் பெருமானுக்கு வந்த சூலை

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

நோய் போன்ற அளவு துன்பம். மாத்திரை, மருந்து ஓரிரு நாட்களுக்குத்தான் நிவாரணம் தந்தன. சுவாமிகளின் சொற்படி ''நோய் நீங்கி நலம் பெறுவீர்'' என்ற நூலினையும், ''விதியை வெல்வது எப்படி'' என்ற நூலினையும் 1996 ஜனவரி தொடங்கி தினமும் என் மனைவி படித்து வந்தாள்.

கடந்த இரண்டு வருடமாக ஒருமுறை கூட வயிற்றுவலி ஏற்பட்டதில்லை. சுவாமிகளின் அருள்வாக்கும் அப்பர் பெருமானின் 'கூற்றாயினவாறு விலக்ககிலிர்' என்ற பதிகத்தின் மந்திர ஆற்றலுமே இதற்குக் காரணம் என்று நம்புகிறோம். நேரம் கிடைக்கும்போதெல்லாம் அப்பர் பெருமான் பதிகத்தினை அவள் படித்து வருகிறாள்.

சுவாமிகள் ஆசிர்வதித்து வழங்கிய திருநீற்று மகிமையால் பலமுறை இடுக்கண்களிடமிருந்து நான் மீண்டுள்ளேன். ஒரேயொரு சம்பவத்தை மட்டும் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். சுவாமிகள் கூறிய தற்கிணங்க பயணம் செய்யும் போது பொதுவாகச் சிவபுராணம் அல்லது தேவாரப் பாடல்களை மனதில் சொல்லிக் கொண்டே செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். காசி சென்றிருந்தபோது சுவாமிகள் எங்களை ஆசிர்வதித்து அனுப்பி வைத்தார்கள். நானும், நண்பர்களும் வடஇந்தியச் சுற்றுப்பயணம் முடித்து புது தில்லியிலிருந்து தமிழ்நாடு புறப்படுமுன் வீட்டிற்குத் தேவையான சில பொருட்கள் வாங்க அங்காடி சென்றோம். திடீரென ஓர் அன்பர் எங்களிடம் தமிழில் பேசினார். எங்களுக்குப் பெருமகிழ்ச்சி. அவர் நாகர்கோயில் அருகே யுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் சி.ஆர்.பி.எப்.இல் பணியாற்றுவதாகவும் குறிப்பிட்டார். சிறிது நேரத்திற்குப் பின் கூட்ட நெரிசலில் அவர் காணவில்லை. என்னுடன் வந்தவர்கள் பல பொருட்களை வாங்கிக் கொண்டனர். நீண்டதூரம் நடந்து ஆட்டோவில் ஏறுவதற்காக நாங்கள் வந்தபோது என்னுடைய தோல்பை பிளேடு போட்டு அறுத்திருந்தது தெரிந்தது. எனக்கு வியப்பு. உடனே

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

என்னுடன் வந்த மற்றவர்கள் கடைவீதியில் நம்மிடம் பேச்சு கொடுத்து மறைந்து விட்டாரே அவர் வேலையாகத்தான் இருக்கும் என்றனர். பையில் வைத்திருந்த கேமிரா பையிலேயே இருந்தது. எப்போதும் பையில் பணம் வைத்துச் செல்லும் நான் அன்றைய தினம் சட்டைப்பையில் பணம் வைத்திருந்துள்ளேன். எங்கள் கூட்டத்தில் நான் மட்டுமே பை வைத்திருந்ததால் நால்வருக்கும் சேர்த்து அதில் பணம் இருக்கும், என்று பிளேடு போட்ட நாகர் கோயில் நபர் கருதிவிட்டார் போலும். சுவாமிகள் வழங்கி யிருந்த கேமரா பையிலேயே இருந்தது. சுவாமிகள் அருளாசி யுடன் கூடிய விபூதியும் சுவாமிகளின் தூய உள்ளமும் பொருள் இழப்பிலிருந்து என்னைக் காப்பாற்றியது என்று கருதுகிறேன். இதேபோல் மிகப்பெரிய பஸ்விபத்து நேர்ந்த போது சிறிது கூட காயமின்றிச் சுவாமிகளின் திருநீற்றாலும் நாயன்மார் களின் மந்திர ஆற்றல்கொண்ட பாடல்களினாலும் நான் மீண்டுள்ளேன் என்பதையும் குறிப்பிடவேண்டும்.

மழையும், வெயிலும்

காசிக்கு யாத்திரை மேற்கொள்ளும் முன் 1.9.97 அன்று சுவாமிகள் மதுரை வந்திருந்தார்கள். ஒருவாரமாகக் கடும் வெயில். சுவாமிகள் வினாயகர், முருகர், நடராசர், மீனாட்சி, சொக்கநாதர் என ஐவருக்கும் அர்ச்சனை செய்ய ஏற்பாடு செய்திருந்தார். கோயில் ஊழியர்கள் பூரண கும்பமரியாதை யுடன் சுவாமிகளை வரவேற்றனர். சுவாமிகள் கோயிலில் இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கும்போது நல்ல மழை. அன்பர்களுக்கு வியப்பு கலந்த மகிழ்ச்சி. சாலை முழுவதும் வெள்ளக்காடு. துறைசை ஆதீனப் பன்னிரண்டாவது தேசிகர் காலத்தில் மழை வேண்டி இறைவனைப்பாட மழை வந்ததாக வரலாறு. துறைசை குருமகான் சிவப்பிரகாசர் இறைவனை மக்கள் நலம் பெற வழிபட்டதால் மழைபெய்தது எனலாம்.

2.9.97 அன்று குருமகான் கேரளா எல்லையருகே உள்ள குமுளி வருகை புரிந்தார். கடும் மழையால் மலைப்பாதை

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சரியில்லாமல் நான்கு நாட்களாக அங்குள்ள மக்கள் சிரமப்பட்டிருந்தனர். குருமகான் வந்த அன்று குமுளியில் கடும் வெயில், ஆஸ்ரமத்தில் இருந்த அன்பர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் அளவில்லை.

3.9.97 அன்று பொன்குன்றம் வந்த சுவாமிகள் இந்து மிஷின் மருத்துவமனை சென்று நோயாளி களுக்கு இனிப்பும் திருநீறும் வழங்கி மருத்துவர்களை ஆசீர்வதித்தார். அங்குள்ள துறவிகளுக்கு வஸ்திரமும் பணமும் வழங்கினார்கள். 4.9.97 வியாழக்கிழமை சுவாமிகள் மௌனவிரதம் எனினும் கூட்டத்தோடு கூட்டமாக நின்று எட்டுமானூர் கோயில் வழிபாட்டைக் கண்டுகளித்தார். 1/2 மணி நேரத்திற்கு மேல் நின்ற சுவாமிகள், குருக்கள் மற்றும் பணியாளர் அனை வருக்கும் அன்பளிப்பு வழங்கினார்கள். தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டுவரும் கேரள வழிபாட்டு முறையைச் சுவாமிகள் 5.9.97 அன்று பாராட்டிப் போற்றினார்கள்.

மௌனவிரதம் - சிவசிந்தனை

சுவாமிகளின் அருளாசியினால், துன்பம் நீங்கப் பெற்ற அடியார்ககள் பலர் உள்ளனர். 50 வயதை அடைந்த சுவாமிகள் இன்று இளைஞர் போல இருப்பதற்குக் காரணம் சுவாமிகள் மேற்கொள்ளும் யோகாசனமும், பிரணாயாமமும் ஆகும். வாரத்தில் ஒரு நாள் மௌனவிரதமும், இறைவனைத் தவிர எதன் மீதும் ஆசை இல்லாமையுமே என்று கருதுகிறேன். சுவாமிகள் அதிகாலையிலேயே எழுந்து விடுவார்கள். தினமும் யோகாசனமும் செய்வார்கள். சதா சிவசிந்தனையிலேயே இருப்பார்கள். எளிமையான உணவினையே அருந்துவார்கள்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக் கிணங்க பற்றற்றவராக சுவாமிகள் இருந்து வருகிறார். இயற்கைச் சீற்றங்களால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மக்கள் இறக்கும் போது மனித நேயத்துடன் வருந்துகிறார். தேவையான உதவிகள் புரிய ஆணை வழங்குகிறார்.

சுவாமிகள் ஒருமுறை பாபநாசம் மடத்தில் தங்கி யிருந்தபோது சுவாமிகளின் அண்ணன் மடத்திற்கு வந்திருந்தார். அண்ணன் வந்திருப்பதாக மடத்தின் பணியாளர் மூலம் சுவாமிகளுக்கு, அவர் தகவல் கூறி அனுப்பினார். சுவாமிகள் பற்றினை விட்டவர் என்பதால், 'பாபநாசம் வந்திருப்பதாகக் கூறுங்கள்' என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள். பிற அடியார்களைப் போலவே பாபநாசம் பிள்ளையையும் கருதுகிறார்கள்.

நாகேஸ்வர முடையார் கோயில்

கல்லிடைக்குறிச்சியில் மிகுதியான கல்வெட்டு களுடன் சிற்பநேர்த்தியும் கொண்ட கோயில் நாகேஸ்வர முடையார் கோயிலாகும். சிதைந்த நிலையில் வழிபாடின்றி இக்கலைக் கோயில் விளங்கி வருகிறது. இக்கோயில் குறித்து அடியேன் சுவாமிகளிடம் குறிப்பிட்டபோது கோயிலைப் பார்வையிடலாம் என்று குறிப்பிட்டார்கள். கோயிலுக்குச் செல்வதற்குச் சரியான பாதையும் இல்லை. தனியார் ஒருவர் வீட்டுவழியாகத்தான் செல்ல வேண்டும். கோயிலைச் சுற்றி முள்மரங்கள். இருப்பினும் சுவாமிகள் கோயிலைக்கண்டு சிற்பங்களின் சிறப்பினைக் கண்டு களித்தார்கள். கோயிலின் தற்போதய நிலை கண்டு வருந்தினார்கள்.

கல்வெட்டுகளைக் காத்தல்

கல்லிடைக்குறிச்சிக் கோட்டைத் தெருவில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் நாடார்களுக்கும் வேளாளர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனை குறித்தக் கல்வெட்டுள்ள பலகைக்கல் நிறுத்தப்பட்டுள்ளது. கல்லில் உள்ள எழுத்துக்கள் மறையுமாறு போஸ்டர்கள் எப்போதும் ஒட்டப்பட்டிருக்கும். என்னுடைய கல்லிடைக் குறிச்சிக் கலைக்கோயில்கள் என்ற நூலினை வாசித்திருந்த சுவாமிகள் இக்கல்வெட்டைப் பார்க்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

வேண்டும் என்று ஒருமுறை என்னிடம் கூறி அவ்விடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். கல்வெட்டுள்ள இடத்திற்கருகில் இருந்த தேநீர்க்கடை உரிமையாளரிடம் வரலாற்றுச்சிறப்புடைய இக்கல்வெட்டின் மீது போஸ்டர் ஒட்டாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு மடத்தில் பணியாற்றும் பணியாளர்களிடம் கல்வெட்டைப் பாதுகாக்க அரசு அதிகாரிகளுக்கு எழுதுங்கள் என்றார்கள். சுவாமிகள் தமிழகத்தின் கலைச்செல்வங்களைக் காப்பதில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். திருவீழிமிழலையில் உள்ள துறைசை ஆதீனத்திற்குச் சொந்தமான கோயிலைப் புதுப்பிக்கும் பணியை மேற்கொண்ட சுவாமிகள் 'சிற்பங்கள், மற்றும் கல்வெட்டுகள் சிதையாதவாறு பணிகளை மேற்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். புதிதாகக் கல்வெட்டுகளோ அரிய சிற்பங்களோ சுவாமிகளின் பார்வைக்கு வந்தால் அடியேனிடம் குறிப்பிட்டு ஆய்வு செய்யுமாறு அருளாணை இடுவார்கள். இவ்வாண்டு விருத்தாசலம் குமார தேவர் மடம் திருப்பணி நடந்து கொண்டிருந்தபோது புதிதாக இருகல்வெட்டுகள் இருப்பதைக் குமாரதேவர் மடத்தின் தலைவர் சிவப்பிரகாச தேசிகரிடம் பேச்சுவாக்கில் குறிப்பிட சுவாமிகள் என்னை ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

சுவடிகளைக் காத்தல்

அம்பாசமுத்திரத்தில் தனிநபர் ஒருவரிடம் ஆகமம் தொடர்பான சமஸ்கிருத சுவடிகள் இருப்பதை அறிந்த சுவாமிகள், அத்தனிநபரிடம் சுவடிகளைப் பாதுகாக்குமாறு கூறியதுடன் வேதங்களைக் கற்றுத்தரும் அவருக்குப் பொருளுதவியும் புரிந்தார்கள். சுவாமிகளுக்குத் திருமுறைகள் மீது எவ்வளவு ஈடுபாடோ அதே அளவு வேதங்களின் மீதும் உண்டு. காசி கண்ணப்பசாமி மடத்தில் பலமாதங்கள் தங்கியிருந்தபோது வேதம் ஓதும் ஒரு மாணவரை அழைத்து, தினமும் மடத்தில் ஓதுமாறு கூறியதுடன் அவருக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மிகுதியான சன்மானமும் வழங்கினார்கள். வேதநெறி தழைக்கவும் மிகு சைவம் ஓங்கவும் சுவாமிகள் விழைகிறார்கள்.

துறவிகளைப் பேணல்

துறவியர்கள் இந்தியாவில் எங்கிருந்து வந்தாலும் அவர்கள் தங்கவும், உணவிற்கும் சுவாமிகள் ஏற்பாடு செய்வார்ககள். காசியாத்திரை மேற்கொள்ளும்போது யாராவது ஒரு சாதுவை அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

வியாழக்கிழமை விரதம்

சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் ஒவ்வொரு வியாழக் கிழமையும் மௌனவிரதம் கடைபிடித்து வருகிறார். இதன் காரணமாக அன்று ஒருநாள் மாத்திரம் வெளியூர் அன்பர் களுக்குத் தேசிகரைச் சந்திக்கும் வாய்ப்பும் உரையாடும் வாய்ப்பும் குறைவாகும். இருப்பினும் மிக முக்கிய செய்தியிருப்பின் அன்பர்கள், சுவாமிகளிடம் சீக்கிரம் கூறிவிட்டு வந்து விடலாம். சுவாமிகள் மௌன விரதத்திற் கேற்ப மடத்தின் நிர்வாகிகள் நடவடிக்கையை மேற்கொள் வார்கள். சிறிதுகாலம் ஞாயிற்றுக் கிழமையும் சுவாமிகள் விரதமிருந்தாலும் பணிகள் தடைபடக்கூடாது என்பதற்காக ஞாயிற்றுக்கிழமையை விட்டு விட்டார்கள். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் போன்றே திருப்பனந்தாள் எஜமான் சுவாமி களும் வியாழக்கிழமை மௌனவிரதம் கடைப்பிடிப்பதால் அன்பர்கள் அந்தக்கிழமை தவிர்த்து வேறு நாட்களில் மேற்படி சுவாமிகளைத் தரிசிப்பதே ஏற்றதாகும்.

கடமையைச் செய்தல்

திருவாவடுதுறை ஆதீனத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் இளைய சந்நிதானத்திடம் வழங்கி விட்டு காசி, மேக்கரை போன்ற கிளை மடங்களில் நீண்ட நாள்கள் தங்கியிருந்த சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர், இளைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சந்நிதானத்திற்கு உடல் நிலை சரியில்லாமல் அறுவை சிகிச்சை நிகழ்ந்தபோது நிர்வாகம் தொய்வடையக் கூடாது என்பதற்காக மீண்டும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்கள். இளைய சந்நிதானம் முழுமையாகக் குணம் பெற்று நடமாட வேண்டி எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்தார்கள். இறை அருளால் சீர்மிகு இளைய சந்நிதானமும் அறுவை சிகிச்சை முடித்து நன்கு குணமடைந்து வருகிறார்கள். காஞ்சி சங்கரமடத்து ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் போன்று தமிழகம் மட்டுமின்றி பாரதநாடு முழுமையும் இவர்கள் புகழ்பெறவேண்டும் என்பது அடியேனுடைய உள்ளக்கிடக்கையாகும். பிறமடங் களைப் போன்று இங்கும் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை. ஆயினும் மடத்தின் வளர்ச்சியையே சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் மனதில் கொண்டுள்ளார் என்பது என் கருத்தாகும்.

உ.வே.சா.வும் தேசிகரும்

உ. வே. சாமிநாத அய்யர் தமது சுயசரிதத்தில் பதினாறாவது பட்டத்தில் இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரின் வரலாற்றினைச் சுவையாகவும் மிகவிரிவாகவும் குறிப் பிட்டுள்ளது போன்று அடியேனால் திருவாவடுதுறை ஆதினம் 23ஆவது தேசிகரின் வரலாற்றினைக் குறிப்பிட முடிந்ததே என்று மகிழ்கிறேன்.

முடிவுரை

பாரதநாட்டு மக்கள் நாட்டுப்பற்றுடன் வாழ்வாங்கு வாழவும், தமிழகக் கோயில் கலைச் செல்வங்கள் அழியாமல் இருக்கவும், சாதிப் பாகுபாடுகள் முற்றாக நீங்கவும், எல்லா மடங்களும் தங்களுடைய சொத்துக்களை ஆக்கிரமிப்பில் இருந்து மீண்டும் பெறவும் பாடுபட்டுவரும் சுவாமிகள் நீண்ட காலம் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

இளைய சந்நிதானத்தின் அறுவை சிகிச்சை வெற்றி பெற சிதம்பரம் நடராசப் பெருமானையே நம்பினேன். அவர் மீண்டும் முன்புபோல் சுறுசுறுப்பாக இயங்க, தேக ஆரோக்கியத்தை வழங்குமாறு நடராசப் பெருமானையே இறைஞ்சுகிறேன். ஆதீன குருமுதல்வர் நமசிவாயரையும் வேண்டுகிறேன்.

அடியேனுடைய அறியாமையைப்போக்கி, பக்தி நெறியில் பிறழாமல் ஒழுக எனக்கு வழிகாட்டிய சீர்வளர் சீர் சிவபிரகாச தேசிகரின் திருவடிகளைப் போற்றுகிறேன்.

'மாசில் மணியே மனிதருள் தெய்வமே
தேசு சிவமேநீ வாழ்க!
'தமிழும் சைவமும் தழைக்க பிறந்த
சிவசுப் பிரமணியே வாழ்க!

திருச்சிற்றம்பலம்.



திருவாவடுதுறை ஆதீனம் முகப்பு

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சொல்லடைவு

அகிலாண்டேஸ்வரி	135	ஆதீன பண்டாரு சந்நிதி	19
அச்சுத தேவமகாராயர்	4	ஆமரம்	78
அசுவதி நட்சத்திரம்	2	ஆயிரவைசியர் மண்டபம்	47
அஞ்சுக் கோட்டைப்பத்து	77	ஆயிலிய மகாராசா	127
அட்டநாக பந்தம்	74	ஆவுடையப்பபிள்ளை	133
அத்தாணி மண்டபம்	117	ஆளுடையபிள்ளை	100
அநப்பம் பாளையம்	109	ஆறுமுகத் தம்பிரான்	22, 116
அபிநவமங்கலம்	56	ஆறுமுகத்தா பிள்ளை	126
அம்பலத்தாடி பண்டாரம்	15	ஆறுமுகநேரி	46
அம்பலத்தாடும் பண்டாரம்	34, 45, 49	ஆறுமுக முதலியார்	105
அம்பலவாணத் தம்பிரான்	100	இந்திராகாந்தி	164
அம்பலவாண தேசிகர்	7	இரகுநாததேவர்	37
அம்பலவாணப் பண்டாரம்	93	இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவை	92
அம்பலவாண புரம்	113	இராசவல்லிபுரம்	99
அம்பலவாணர்	96	இராதாகிருஷ்ணன்	162
அம்மன்பேட்டை	56	இராமச்சந்திரன். எம்.ஜி.	163
அம்மாப்பேட்டை	96	இராமசாமி சிவன்	139
அமாம்பேட்டை	106	இராம தேவராயர்	40
அய்யாவய்யன்	46	இராமலிங்கத் தம்பிரான்	101, 116
அரதைப் பெரும்பாழி	95	இராமலிங்கப் பண்டாரச் சன்னதி	50
அரித்துவாரமங்கலம்	95	இராமலிங்கம் பிள்ளை	36
அருணகிரிநாதர்	107	இராயசம் குமாரசாமி பிள்ளை	92
அருணாசலத் தம்பிரான்	91,96	இராவணன் திருவாயில்	93
அருணாசலம்	140	இராவுத்தப் பண்டாரம்	32
அருணாசலம்.மு.	120,199	இலக்கணக்கொத்து	32
அருணாசலம் பிள்ளை	101	இலட்சுமி காந்தய்யன்	95
அரும்பாக்கம்	51	இலிங்கம்மன்	58
அருள் நமசிவாயம்	1	இலிங்கம நாயக்கர்	3,4,5
அருள்நிறைத்தேவர்	95	இலிங்கா ரெட்டி	55, 57
அருவாள்	93	ஈசானத் தம்பிரான்	17
அழகப்பத்தொண்டைமானார்	40	உடையான் பேரயன்	93, 95
அழகிய கன்னன்	94	உமாபதி சிவாசாரியார்	11, 175
அழுஞ்சியேந்தல்	57	உமுரிக் கோட்டை	90
அனுஷ நட்சத்திரம்	21	உயிரட்டவணை	14
ஆடிய பண்டாரம்	32	உலகுடைய நாயனார்	14
ஆத்மநாத சுவாமி	49	எட்டுமானூர்	200
ஆதிகைலாச மான்மியம்	76		

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

எர்ணாகுளம் 200
எஜமான் சுவாமிகள் 182, 213
ஏகாம்பரம் பிறைசூடும் பண்டாரம் 16
ஏழாயிரம் பண்ணை 41
ஏழுர்த் தட்டப்பாறை 90
ஐயாசாமிப்பிள்ளை 139
ஐயாபிள்ளை 70
கங்கை கொண்டசோழபுரம் 113
கட்டபொம்ம நாயக்கர் 92
கடம்பவனேசுவரர் 137
கடலூர் சீனிவாசாசாரியர் 8
கடையநல்லூர் 87
கன்னப்பசாமி மடம் 61
கன்னப்பத் தம்பிரான் 130
கன்னப்ப நாயனார் 187
கணக்குப்பிள்ளைமார் 91
கந்த சஷ்டி 163
கந்தப்ப முதலியார் 59, 60
கம்பனேரி புதுக்குடி 124
கயிலாயம் 80
கல்லிராய மேஸ்திரி 136
கலைக்கோவன். இரா. 169
களக்குடி 15
கஸ்தூரி ரங்கன் 94
கனக சுந்தரவடிவு 155
காக்கைக்குன்று 106
காசி ரகசியம் 132
காசி மடம் 57
காசி விசுவநாதத் தம்பிரான் 178
கானுகோ ரகுநாத ராவ் 124
கானுசாயுபு 95
காத்தியப்ப பிள்ளை 95
காரிசோரி 90
காவடிச் சிந்து 123
காளத்தி ஏந்தல் 62
காளாஞ்சிப் பண்டாரம் 85, 86
கிரி வி.வி. 162
கிருபானந்தவாரியார் 190
கிருஷ்ணமூர்த்தி 169
குடந்தைச் சிவப்பிரகாசர் 3
குமர குருபரர் 61
குமரேசன் 178
குமாரசாமித் தம்பிரான் 116, 152
குமாரசாமிப் பிள்ளை 31
குமாரதேவர் மடம் 56
குமுளி 173
குருசாமி 64
குருஞான சம்பந்தர் 182
குருநமசிவாயம் 35
குலசேகர ஆண்டுகொண்டார் 91
குலசேகர தேவ தீக்ஷிதர் 86
குலாந்தக நல்லூர் 94
குற்றாலக் குறவஞ்சி 114
குற்றாலம் 86
குற்றால லிங்கம் 110
கூனியூர் 78
கேதார்நாதம் 204
கைலாயப் பரம்பரை 83
கொம்பாடி 90
கோடிமங்கலம் 62
கோமதி அம்மாள் 166
கோமதி நாயகம் 166
கோவிந்தராசப் பெருமான் 3,4
கேனேரிராயர் 174
சங்கம்பட்டி 90
சங்கரங்கோவில் 18,19
சங்கரய்யன் 58
சங்கரலிங்கத் தம்பிரான் 95, 96, 125
சங்கரலிங்கர் உலா 39
சங்கரலிங்கம் 92
சங்காபிஷேகம் 31
சடை அம்பலத் தம்பிரான் 55
சண்பகக் குற்றாலக் கவிராயர் 122
சத்ரசால் 130
சதாசிவராயர் 2
சதுர்முலிங்கேசுவரர் 61
சந்திரகிரி கோட்டை 5
சந்தி விநாயகர் 7
சந்திரசேகர சங்கராச்சாரியார் 180
சப்தரிஷி ஈஸ்வரர் 137

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

சபாபதி நாவலர் 121
சர்க்கரைப் பண்டாரி 112
சர்கேல் 46
சர்வமான்யம் 80
சரஸ்வதி பண்டாரம் 47,48
சாந்தாப்பிள்ளை 77
சாமி கவிராயர் 102
சாமிநாத ஐயர் உ.வே. 214
சாமிநாத பிள்ளை 79
சாமிநாதம் 103
சாமிப் பிள்ளை 133
சாஸ்திரம் சாமிநாதர் 75
சிங்கத்தா குறிச்சி 90
சித்தலிங்கம். டி.பி. 24
சித்தாந்த மரபு 44
சித்தாமிர்த தீர்த்தம் 82
சிதம்பர நாதத் தம்பிரான் 102
சிதம்பர நாத முனிவர் 51
சிதம்பரம் நடராசர் கோயில் 96
சிந்தாமணி 122
சிந்திகாபட்டி 49
சிவக்கொழுந்து 29
சிவகாசி நாடார்கள் 62
சிவகாமியம்மன் கோயில் 91
சிவகிரி ஜமீன்தார் 125
சிவகுருநாதப் பிள்ளை 116
சிவசுப்பிரமணியர் 92
சிவசுப்பிரமணிய பிள்ளை 92, 133
சிவஞானசித்தி உரை 25
சிவஞான சுவாமிகள்
ஆராய்ச்சி மையம் 95
சிவதேசிகர் 83
சிவந்திபுரம் மடம் 18
சிவந்தியப்பர் கோயில் 7
சிவாக் கிரகயோகிகள் 2
சிறுகம்பையூர் 32
சிறுபனையூர் 49
சன்னையா முதலி 103
சீபண்டாரக் கணக்கு 98
சீவநல்லூர் சேகரம் 108
சுக்கிரவாரக் கட்டளை 163
சுசீந்திர மடம் 11
சுந்தரத்தோள் பிள்ளை 41
சுந்தரபாண்டியன் ஏறபாப்பநாயக்கர் 91
சுந்தரலிங்க முனிவர் 76
சுப்பிரமணியக் கவிராயர் 81, 152
சுப்பிரமணியத் தம்பிரான் 99
சுப்பிரமணிய விலாசம் 118
சுவாமி அய்யன் 95
சுவாமி நாதர் 27, 28
சூரியனார்கோயில் மடம் 104
செங்கடை வேதியர் 95
செங்கோல் ஆதீனம் 182
செப்பறை 38
செப்பறை கனகசபாபதி 28
செல்லன் சொக்கலிங்கம் 94
செல்லையா ஆசாரி 155
செல்வகுரு அம்பலம் 66
செவ்வப்ப நாயக்கர் 2
செவந்தி நாடான் 11
சென்டரல் தியேட்டர் 21
சேகரம் 90
சேமன் கோட்டை 45
சேற்றூர் ஜமீன்தார் 125
சேஷகிரி சாஸ்திரியார் 46
சைவசந்நியாச பத்ததி 1, 2
சைவ நெறிக்கழகம் 194
சொக்கப்ப முதலியார் 11, 40
சொக்கலிங்க நாயக்கர் 11, 28
சொக்கலிங்கம் பிள்ளை 100
சொக்கலிங்க முதலியார் 10
சொர்க்க விநாயகர் 106
சொரூபானந்த சுவாமிகள் 167
சோமசுந்தர குரு 51
தசகாரியம் 12
தட்சிணாமூர்த்தி தேசிகர் 7,16
தண்டபாணி தேசிகர் 157
தண்டல்காரர் 91
தணிகையாற்றுப்படை 70
தப்பாதான் வயல் 55

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

தம்பாப்பண்டாரக் கட்டளை 39
தம்பிரான் தெரு 137
தர்மராஜர் கோயில் 56
தருமபுர ஆதீனம் 44
தருமாதிகாரி 46
தரைக்கிழ்தளம் 108
தளவாத்தான் 88
தாண்டவராய சுவாமிகள் 114
தாண்டவராயர் 102
நாயக்கர் மடம் 7
தாயுமானவர் கோயில் 135
தானப்ப முதலியார் 10, 11
தானியப்ப கவுண்டர் 109
தியாகராச செட்டியார் 122
தியாகராச தேசிகர் 13
திரியுகம்கண்ட தேவிமாலை 102
திருக்கடலூர்ச் செப்பேடு 50
திருக்கன்னபுரம் 48
திருக்கழுக்குன்றப் பண்டாரச் சந்நிதி 143
திருக்களாஞ் செடியுடைய மகாதேவர் 171
திருக்காளத்தி 181
திருக்குறள் 110, 202
திருச்சினாப்பள்ளி 136
திருசிதம்பர சுவாமிகள் 59, 60
திருச்செந்தூர் 91
திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் 32
திருநள்ளாறு 48
திருநாளைப்போவார் 167
திருநீலகண்ட யாழ்ப்பாணர் 187
திருநெடுங்காடு 48
திருப்பக்கோட்டை 53
திருப்பறியலூர்ப் புராணம் 45
திருப்பனந்தாள் மடம் 113
திருப்புகலூர் 48
திருப்பூவணம் 25
திருப்பூர்க்கோட்டை 42
திருப்பெருந்துறைக் கலப்பகம் 43
திருப்பெருந்துறைப் புராணம் 43
திருப்பைஞ்ஞீலி 55, 95
திருமங்கலம் பேட்டை 47
திருமருகல் 48
திருமலை நாயக்கர் 3, 10
திருமழபாடி 138
திருவண்ணாமலை மடம் 33
திருவம்பர் 48
திருவரங்கம் ஜீயர் 5
திருவள்ளுவமாலை 110
திருவளர்சோலை 136
திருவாசி 136
திருவானைக்காவல் 69
திருவிடைமருதூர் 181
திருவிதாங்கூர் 108
திருவீழிமிழலைப் புராணம் 12
திருவெண்காடு 29, 48
திருவெண்ணெய் நல்லூர் 63, 96, 97
திருவேங்கடம் 95
திருவோத்தூர் 164
தில்லையாளி 46
தில்லைவாழ் அந்தணர் 5
திவ்வியந்தபுரம் 48
தினத்தந்தி 169
தினமணி 189
தினமலர் 169
திபநகர் 96
துளசா மகாராசா 95
துறையூர் பாளையக்காரர் 55
துறையூர் மடம் 6
தேப்பெருமா நல்லூர் 23
தேவ யாண்டு 92
தொட்டிக்கலைச் சுப்பிரமணியர் 64
நச்சாடலிங்கர் 117
நந்தனார் 47
நமசிவாயத் தம்பிரான் 24
நமசிவாய தேசிகர் 1,117
நரசப்பய்யன் 41
நரிப்பண்டாரச் சந்நிதிகள் 36
நன்னூல் சிவப்பிரகாச சுவாமிகள் 6
நாகசாமி. இரா. 168

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

நாகேஸ்வரமுடையார் கோயில் 217
நாட்டாண்மைக்காரர் 91
நாட்டுச்சேரி 35, 57
நாராயணப் பிள்ளை 31
நாலடியார் 110
நாவலர் 12, 13
நாவலர் நெடுஞ்செழியன் 174
நானாக்குடி 35
நீலக்குடி மகாத்மியம் 144
நீலிவனநாத சுவாமி 92
நெட்டிமாலை 77
நெல்லியடிமண்டபம் 89
நொச்சியம் 94
பக்கிரி மான்யம் 134
பக்தவச்சலனார் கோயில் 101
பகழிக்கூத்தன் சன்னதி மடம் 98
பகையணிபிராந்தனி 42
பங்கயச்செல்வி 134
பஞ்சந்தாங்கி வயல் 35
பஞ்சாக்கர தேசிகர் 82
பட்டினப் பிரவேசம் 174
படிகலிங்கம் 82
பரதேசி முத்திரை 36
பரிகலக் கிணறு 30
பல்லவராய திருவேங்கடம் 48
பழைய சிவப்பு 155
பழைய பச்சை 155
பழைய வைரம் 155
பன்னிருகை தம்பிரான் 125
பாச்சூர் 94
பாதாளி பிள்ளை 94, 95
பாப்பம்மாள் சத்திரம் 133
பாலைக்காட்டுச்சேரி 127
பாலைய நல்லூர் 94
பாளையக்காரர் 91
பாஸ்கர சேதுபதி 140
பிச்சாதேவர் கோயில் 31
பிமென்டோ 4
பிரதாபசிங் 77
பிராந்த நல்லூர் 93
பீமாஜிபண்டிதரய்யன் 45
பீர்மேடு 173
புடைமருதூர் மரபு 44
புத்தசாகர் 130
புல்லுக்குடி 36
புளியங்குடி 18
பூங்குணம் 200
பூப்பிள்ளை 14
பூமுகப்பு 65, 66
பூலித்தேவன் 38
பூலியப்ப தேவர் 108
பூவாணி 90
பெரிய காறுபாறு 50
பெரிய நமசிவாய அம்பலவாணர் 50
பெரியபூசை மடம் 81
பெரிய பெருமாள் 95
பெருந்தலைவர் காமராசர் 159
பேரளம் 48
பேரூர்ப் புராணம் 70
பேரூர் வேலப்ப தேசிகர் 39
பொக்கிச கணக்கு 88
பொன்னுச்சாமி செட்டியார் 138
பொன்னோதுவா மூர்த்தி 141
பைரவர் கோயில் 45
மகரத்தலைநாள் 82
மகாசனங்கள் 91
மகாலிங்க சுவாமி 104
மகாவைத்தியநாதர் 126
மங்கம்மாள் 41
மத்திஷம் 95
மயிலேறும் பிள்ளை 27, 28
மண்ணச்ச நல்லூர் 132
மண்வெட்டி 93
மதிகெட்டான் நாடகம் 107
மந்திரசித்தி 144
மருதபண்டாரம் 35
மருதுபாண்டியர் 78,79
மறைஞான தேசிகர் 6
மனோரமா 200
மாசிலாமணித் தம்பிரான் 27

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

மாணிக்கவாசக ஓதுவார் 64, 152
மான்படுமங்கலம் 94
மானேந்தியப்பர் கோயில் 67
மிழலைச் சதகம் 77
மீனாட்சி அகவல் 25
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 111
மீனாட்சி சுந்தரேஸ்வரர் கட்டளை 134
முக்களாலிங்கர் 37
முகவனூர் 56
முத்தம்பலவாணர் 27
முத்தய்ய கவுண்டர் 109
முத்தாலம்மன் கோயில் 134
முத்திரை மனுடர் 90
முத்துக்கருப்பன் 47
முத்துக்குமாரத் தம்பிரான் 96
முத்துக்குமாரசாமித் தம்பிரான் 125
முத்துச்சலாபம் 2
முத்துச்சாமி 126
முத்துப்பிரமன் 94, 95
முத்துவீரப்ப நாயக்கர் 16, 17
முத்தையா பிள்ளை 142
முதல் கட்டபொம்மன் 92
முதலாம் வேங்கடவன் 5
முதுகிருஷ்ணன் 23
முரம்பன் 90
முருகப்பன் மடம் 41, 42
மெய்கண்டார் இதழ் 165
மெய்கண்டார் கோயில் 64, 96, 112
மெய்கண்டார் தேசிகமாலை 98
மெய்கண்டார் பரம்பரை 83
மெய்ஞ்ஞான முனிவர் 12
மேக்கரை 107
மேகராகக் குறிஞ்சிப்பன் 51, 52
மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் 96
மொராஜ்ஜிதேசாய் 163
மோட்சதினம் 134
மௌனகுருசுவாமிகள் மடம் 171
மௌனப்பண்டாரம் 31
ராக்கி நாடான் 47
ராணிவார இதழ் 186
ராஜரத்தினம் பிள்ளை 152
ரெகுநாத வாத்தியார் 104
வங்காரு ஏறபாப்ப நாயக்கர் 91
வடமலையப்ப பிள்ளை 31
வடுகநாதப் பண்டாரம் 100
வணங்காமுடித் தொண்டைமான் 54
வணிதம் சூழ்ந்த கிராமத்தார் 90
வள்ளைக்குளம் 88
வாகைக்குளம் 90
வாசுதேவ நல்லூர் 18, 19
வாசுதேவ முதலியார் 84
வாசுதேவன் கட்டளை 39
வாணாதிராயர் 3
விக்கிரமசிங்கபுரம் 19
விசயரகுநாத வாளாச
கிருட்டினகோபாலர் 49
விசயரங்கசொக்க நாதர் 20
விசாகக் கட்டளை 163
விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் 214
வீரபத்திரபிள்ளை 111
வீழிநாதர் திருவுடல் 13
வெங்கடாசல செட்டி 96
வெங்கடாசல ரெட்டி 55
வெண்கடன் பத்திரம் 109
வெள்ளித்தேர் 153
வேங்கடபதி மகாராயர் 4
வேடசெந்தூர் ராவுத்தமார் 59
வேணுவன லிங்கர் 113, 125
வேதநாயகம் 138
வேலாயுத பத்தர் 88
வேலாயுதசாமி மடம் 167
வேலுச்சாமி 123
வேளூர் சுப்பிரமணிய தேசிகர் 97
வைத்தியநாதத் தம்பிரான் 109
வைத்தியநாத நமசிவாயம் 48
வைத்தியநாதலிங்கத் தம்பிரான் 61, 107
வையப்பகிருஷ்ணப்ப
கொண்டம நாயக்கர் 4
ஜாக்சன் துரை 92
ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் 214
ஜெவந்தியப்ப நாயக்கர் 17

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

ஆசிரியர் எழுதிய நூல்கள்

1. தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும்
2. திருவோத்தூர் (செய்யாறு)
   தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்.
3. திருக்குறள் பழைய உரை.
4. வரலாற்றில் வல்லம்.
5. கல்லிடைக் குறிச்சிக் கலைக்கோயில்கள்
6. விக்கிரம சிங்கபுர உலா.
7. சிவகீதையும் சித்தாந்தமரபும்.
8. சப்தஸ்தானம் என்னும் ஏழூர் வரலாறு.
9. திருக்கடந்தை வரலாறும் உரையும்.
10. திருவாவடுதுறை ஆதீன வரலாறு.
11. புஷ்பவிதி (உரையாசிரியர்)
12. எசாலம் வரலாற்றுப் புதையல் (இணையாசிரியர்)
13. திருக்கோயிலூர் அகழாய்வு
    (துணையாசிரியர், ஆங்கிலநூல்)

இனிவர இருப்பவை

1. நாலடியார் பழைய உரை
2. திருப்பெண்ணாகடம் கோயில்கள்
3. துர்க்கை வழிபாடும் வரலாறும்
4. செய்யாறு - கல்வெட்டுகள்
5. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள்.
6. திருப்பாம்புரம் தலவரலாறு
7. கடந்தை மாலை
8. பழனியாண்டவர் தாலாட்டு
9. மதிகெட்டான் நாடகம்
10. நெல்லை மாவட்ட வரலாறு
11. வரலாற்றில் முகாச பரூர்
12. கந்தசாமிக் குறவஞ்சி

Center for Shaiva Studies, Pondicherry Collection

). In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மாயூரத்திலே தேவி மயில் ரூ
பமாயி பூசை பண்ணுகிறது

உண்ணாமலை பதிப்பகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection